

# “எமது காணி, எமது உயிராகும்”

## மக்கள் காணி ஆணைக்குழு அறிக்கை

## 2019-2020

PARL
People's Alliance for Right to Land

ඉඩම් අයිතිය සඳහා වන ජනතා සන්ධානය காணி உரிமைக்கான மக்கள் கூட்டணி **People's Alliance for Right to Land**

# “எமது காணி, எமது உயிராகும்”

## மக்கள் காணி ஆணைக்குழு அறிக்கை

## 2019-2020


PARL
People's Alliance for Right to Land



















PARL
People's Alliance for Right to Land

# மக்கள் காணி ஆணைக்குழு அறிக்கை
2019-2020

# உள்ளடக்கம்


**07** நன்றி நவிலல்

**11** அறிக்கைச் சுருக்கம்

**18** முன்னுரை

1.1 நோக்கம்
1.2 செயன்முறை
1.3 வழிகாட்டல் விழுமியங்கள் மற்றும் கொள்கைகள்

**26** மக்களின் காணிப் பிரச்சனைகள்

2.1 காணிகளிலிருந்து வெளியேற்றப்படல்
2.2 வாழ்வாதார இழப்புக்களும் சமூகப் பாதுகாப்பும்
2.3 சுற்றுச்சூழல் சீரழிவு
2.4 இழந்த அடையாளங்கள
2.5 காணிகளை உடமையாக்கல், காணி உரிமை மற்றும் பாதுகாப்பு தொடர்பான பெண்களின் போராட்டங்கள்

**64** பரிந்துரைகள்

**88** இணைப்பு



# நன்றி நவிலல்

மக்கள் கருத்துக்கணிப்பு நிகழ்வுகளில் பங்குபற்றி தங்களது நேரத்தையும் சக்தியையும் வரலாற்றுக் கதைகளையும் எங்களுடன் பகிர்ந்துகொண்ட அனைத்து மக்களையும் பாதிக்கப்பட்டவர்களையும் “மக்கள் காணி ஆணைக்குழு அணியினர்” மனதாரப் பாராட்டுவதோடு அவர்களுக்கான நன்றியையும் தெரிவிக்கின்றனர்.

இவ்வணியானது சகுந்தலா கதிர்காமருக்கும், சட்டம் மற்றும் சமூக நமபிக்கைப்பொறுப்பின் (LST); பணிக்குழுவினருக்கும், கௌதமன் பாலச்சந்திரனுக்கும் - ஐடியா (IDEA) நிறுவனத்தின் பணிக்குழுவினருக்கும், மக்களுடனான கருத்துக்கணிப்பு நிகழ்வுகளை ஒழுங்கமைத்து அனைத்து விதத்திலும் உதவி செய்த அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றது. அத்துடன் நாங்கள் காணி உரிமைக்கான மக்கள் கூட்டமைப்பின் பங்காளர்களுக்கும், குறிப்பாக கீழே பெயர்குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களுக்கும், மக்கள் கருத்துக்கணிப்பு நிகழ்வுகளை நாடுபூராகவும் ஒழுங்கமைத்துத் தந்தமைக்காகவும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

- தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் (NAFSO)
- மன்னார் சமூகப் பொருளாதார அபிவிருத்தி நிறுவனம் (MSEDO)
- மனித எழுச்சி நிறுவனம் (HEO)
- காணி மற்றும் விவசாய மறுசீரமைப்பிற்கான இயக்கம் (MONLAR)
- அம்பாறை மாவட்ட காணி உரிமைகளுக்கான செயலணி (ADALR)
- மலையக மக்களின் காணி உரிமைக்கான இயக்கம் (MPPLR)
- வட மத்திய மாகாண மக்கள் திட்டமிடல் மன்றம்
- ஊவா மாகாண மக்கள் திட்டமிடல் மன்றம்
- மத்திய மாகாண மக்கள் திட்டமிடல் மன்றம்
- பாசப் பறவைகள் இளைஞர் யுவதிகளின் அமைப்பு, (LOVE BIRDS) கிளிநொச்சி

முன்னாள் சிரேட்ட ஆராய்ச்சியாளர் காலஞ்சென்ற விஜய் நாகராஜா அவர்களின் தொலைநோக்கு, கருத்தியல் மற்றும் அர்ப்பணிப்பானது இந் நிகழ்வின் கருத்துருவாக்கத்திற்கு பெருமளவில் உள்ளார்ந்த ரீதியாகப் பங்களிப்புச் செய்துள்ளது என்பதை நாங்கள் அன்புடன் அங்கீகரிக்கின்றோம்.

நாடு பூராகவும் காணி மற்றும் வீட்டு உரிமையின் நிமித்தம் போராடிக்கொண்டிருக்கின்ற அனைத்து மக்களுக்கும் இதன் நிமித்தம் மக்களை மையமாகக்கொண்ட காணி - வீடு தொடர்பான பிரச்சனைகளையும் குறைபாடுகளையும் தீர்ப்பதற்கென அர்ப்பணிப்புடன் செயற்பட்டுக்கொண்டிருக்கும் அனைவருக்கும் நாங்கள் இவ் அறிக்கையை சமர்ப்பிக்கின்றோம்

# மக்கள் காணி ஆணைக்குழு அணியினர்

## ஆணையாளர்கள்

- (1) **ஏர்மீசா (t)டீகல,** சட்டத்தரணி, கொழும்பு,
- **கணேசலிங்கம் கணேஸ்,** மஸ்கெலியாவிலுள்ள தோட்ட மக்களின் காணி உரிமையைப் பாதுகாக்கின்ற இயக்கத்தின் செயற்பாட்டாளர், சமூக சேவையாளர் மற்றும் தோட்ட மக்களின் உரிமை தொடர்பான சமூக செயற்பாட்டாளர்,
- **(G)கொட்ப்ரி மலர்நேசன்,** சமூச செயற்பாட்டாளர், மாற்றம் நிறுவனம், வவுனியா
- **இரோமி பெரேரா**, ஆராய்ச்சியாளர், கொழும்பு,
- **ஜன்சிலா மஜீட்,** பெண்கள் உரிமைக்கான சமூக செயற்பாட்டாளர், WAN, முல்லைத்தீவு,
- **கே.நிஹால் அகமட்,** சமூக செயற்பாட்டாளர், மனித எழுச்சி நிறுவனம் (HEO), அம்பாறை,
- **மகேந்திரன் திருவரங்கன்**, விரிவுரையாளர் யாழ் பல்கலைக்கழகம்,
- **பிரியலால் சிரிசேன,** சட்டத்தரணி, கொழும்பு,
- **பிரியங்கர கொஸ்டா,** சமூக செயற்பாட்டாளர் NAFSO, நீர்கொழும்பு,
- **சஜீவ சாமிக்கர,** சூழல் தொடர்பான சமூக செயற்பாட்டாளர், MONLAR, கொழும்பு,
- **சரளா இமானுவல்,** பெண்கள் உரிமை தொடர்பான சமூக செயற்பாட்டாளர், அனர்த்த முகாமைத்துவத்திற்கான பெண்கள் ஒன்றியம், மட்டக்களப்பு.

## மக்களின் காணி ஆணைக்குழுவின் ஒருங்கிணைப்பு அணி

- சந்துன் துடுகல
- நில்சான் பொன்சேகா
- மரிஸா டி சில்வா
- நடாஸா வன்கூவ்(f)

## அறிக்கை தயாரித்தல், தொகுப்பாக்கம் மற்றும் ஏனைய உதவிகள்

- கௌதமன் பாலசந்தின்
- சானக ஜயசிங்க
- டாரா குயின்
- லக்மாலி ஹேமசந்திர
- டினாலி அபேசேகர
- அனித்ரா வாரியா
- பினேந்த்ரி பெரேரா

## குறிப்பு எடுத்தவர்கள்

- லிட்யா கீதாஞ்சலி தியாகராஜா
- வித்யா முத்துலிங்கம்
- நெலுனி திலகரட்ண
- வினூசி போல்ராஜ்
- எம். மிருணாளன
- சாம் போள
- பீ.என். அருனந்தி பெரோரா
- ஆன் பிகுராடோ
- மாடசாமி விஜயகாந்
- எஸ்.எல். சுரேஸ்
- அநுராத கீத் பத்திரண

## உரைபெயர்ப்பாளர்கள்

- தம்பிராஜா நேசராஜ்குமார்
- அலிடீன் ஹமீர்
- அன்ரனி ஜேசுதாசன்

## நிகழ்ச்சி செயற்படுத்தல் ஆதரவு

- எஸ்.எச். வசந்த
- நலிந்த நந்தசிரி ஹன்வல்ல

**அட்டைப்பிரதி மற்றும் அறிக்கை வடிவமைப்பு -** துஸ்யந்த குமார



# அறிக்கைச் சுருக்கம்

காணி முகாமைத்துவம், காணிச் சட்டங்கள் மற்றும் தற்போது நடைமுறையிலுள்ள காணிக் கொள்கைகளின் காரணமாக மக்கள் எதிர் நோக்குகின்ற பிரச்சனைகள் மற்றும் தொடரச்சியான விளைவுகள் பற்றி அறிந்துகொள்ளும் நோக்கில் மக்களின் காணி ஆணைக்குழு உருவாக்கப்பட்டது. மேலும் இக் கலந்துரையாடற் செயற்பாடானது, அரச கொள்கை வகுத்தலில் மக்களது கருத்துக்கள் தொடர்ச்சியாக உள்வாங்கப்படுவதில்லை என்பதில் அவதானஞ் செலுத்துகின்றது.

**மக்களுக்கான காணி தொடர்பான ஆணைக்குழு (PLC),** பதினொறு (11) அனுபவம் வாய்ந்த சமூகச் செயற்பாட்டாளர்கள், கல்வித்துறை சார்ந்தவர்கள், ஆய்வாளர்கள் மற்றும் வழக்கறிஞர்களை உள்ளடக்கியுள்ளது இவ் ஆணைக்குழுவானது, 2019 மார்ச் தொடக்கம் ஆகஸ்ட் மாதம் வரையான காலப்பகுதியில் கள விஜயங்களை மேற்கொண்டு அம்பாறை, அநுராதபுரம், பதுளை, மட்டக்களப்பு, கொழும்பு, காலி, கம்பஹா, ஹம்பாந்தோட்டை, ஹட்டன், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், மொனராகலை, முல்லைத்தீவு, மாத்தறை, பொலன்னறுவை, திருகோணமலை மற்றும் வவுனியா ஆகிய 18 மாவட்டங்களில் பிரச்சனைக்குரிய பிரதேசங்களில் வாழும் பொதுமக்கள் மற்றும் பாதிக்கபட்ட மக்களிடமிருந்து கருத்துக்களைக் கேட்டறிந்தது. இவ் ஆணைக்குழுவானது மொத்தமாக 428 - பெண்கள், 452 - ஆண்கள், 5 - ஏனையோர் அடங்கலாக 885 பேருடன் உரையாடியது.. PARL வலையமைப்பின் பங்காளர்கள் இக் கலந்துரையாடல்களை ஒருங்கிணைப்பு செய்திருந்தனர். இப்பிரதேசங்கள் பூகோள ரீதியில் பல்வேறு பிரதேசங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் வகையில் அமைந்ததோடு பல்வேறுபட்ட இனங்கள், சமயங்கள், சமூகங்கள் மற்றும் பொருளாதார பின்புலங்களைக் கொண்டவர்கள் உள்வாங்கப்படுகின்ற நோக்கிலேயே தெரிவு செய்யப்பட்டது. ஆர்ப்பாட்ட அமைவிடங்கள், இடம்பெயர்ந்த மற்றும் காணிகளற்ற மக்கள், காணிகளிலிருந்து வெளியேற்றபட்ட அல்லது வேறு இடத்தில் குடியமர்த்தப்பட்ட, அபிவிருத்தி, நகர மயமாக்கல் மீள் உருவாக்கம் இடம்பெறுகின்ற மற்றும் திட்டமிடப்பட்டுள்ள பிரதேசங்கள் என்பவற்றிற்கு இவ் ஆணைக்குழுவானது விஜயம் செய்தது.

காலம், வளங்கள், பங்காளர்களை ஒழுங்குபடுத்தல் தொடர்பான தகவல்கள் மற்றும் ஏனைய நடைமுறைசார் சவால்கள் பற்றிய **மட்டுப்பாடுகள்** காரணமாக அனைத்து பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கும் ஆணைக்குழுவினால் விஜயம் செய்ய முடியவில்லை. காலவரையறையானது மக்களுடனான கலந்துரையாடல்களின் பூரணத்தன்மையில் தாக்கஞ் செலுத்தியுள்ளது. நீண்ட கால நீதியின்மையினால் பரம்பரை ரீதியாக மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களை விபரிப்பதற்கு அதிக காலந் தேவையானது என்பது வெளிப்படையானதும் எதிர்பார்க்கப்பட வேண்டியதுமாகும். அத்துடன் பால்நிலை சார்ந்த நீதியின்மை மற்றும் உரிமை மீறல்கள் தொடர்பில் ஆழமாக ஆராய்வதற்குப் போதுமான அளவு காலம் இருக்கவில்லை.

இலங்கையின் காணி தொடர்பான கொள்கைகள், சட்டங்கள் மற்றும் நிர்வாக விடயங்கள் தொடர்பான வழிகாட்டியாக செயற்படுவதே, இவ்வறிக்கையின் நோக்கமாகும். காணிப் பிரச்சனை காரணமாக அல்லற்பட்டுக் கொண்டிருக்கும் மக்களின் பிரச்சனைகளுக்கு பதிலளிக்கும் விதத்தில், தற்போது நடைமுறையிலுள்ள பொறிமுறைகளை மாற்றியமைப்பதன் மூலம் வாழ்க்கையை மேம்படுத்துவதோடு சூழலின் நிலைத்திருக்கும் தன்மை மற்றும் எதிர்கால சந்ததியினருக்காக சமூக பொறுப்புணர்வை மேம்படுத்தல்போன்ற விடயங்களை இவ்வறிக்கை மையப்படுத்தியதிள்ளது. இவ் அறிக்கையானது காணிப் போராட்டங்களுக்கு தீர்வை வழங்க மாட்டாது. மாறாக காணி மற்றும் மக்களுடன் தொடர்புபட்டு செயற்படுவதிலுள்ள சிறந்தநடைமுறைகள், பொறிமுறைகள், வழிகாட்டி விழுமியங்கள் மற்றும் முன்னுரிமையளிக்க வேண்டியவை போன்றவற்றை பரிந்துரை செய்கின்றது.

இவ் ஆணைக்குழுவும், காணி உரிமைக்கான மக்களின் கூட்டமைப்பும் (PARL) சேர்ந்து இந்த அறிக்கையையும் பரிந்துரைகளையும் பல்வேறுபட்ட அரச பங்குதாரர்களான அமைச்சுக்கள், காணி, இழப்பீடு, இடைக்கால நீதி, நல்லிணக்கம், பெண்களின் உரிமை, அபிவிருத்தி (ஒரு சில விடயங்கள் மாத்திரம் பெயரிடப்பட்டுள்ளது) ஆகியன தொடர்பில் சேவையாற்றுகின்ற அரச ஸ்தாபனங்களுக்கும் தொகுத்து வழங்க எதிர்பார்க்கின்றன. பாதிக்கப்பட்ட மக்கள் தாங்களே முன்னெடுக்கப்படவிருக்கின்ற முன்னெடுப்புக்களின் விளைவாக எதிர்பார்க்கப்படுகின்ற பல்வேறுபட்ட கொள்கைத் திருத்தங்கள், நிறுவன மற்றும் பொறிமுறை மறுசீராக்கங்கள், காணி மற்றும் காணி நிர்வாகத்தில் மக்களின் அர்த்தபூர்வமான பங்களிப்பு மற்றும் நிலைத்திருக்கத்தக்க கலந்துரையாடல்கள் மூலமான பரந்துபட்ட மறுசீரமைப்புகள் என்பன இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகின்ற பரிந்துரைகளில் உள்ளடங்குகின்றன. மேலும் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் இக் கலந்துரையாடல்களில் பங்குபற்றிய மக்களுடனும், நாடு பூராகவும் பல்வேறு காணி தொடர்பான போராட்டங்களை முன்னெடுக்கின்ற மக்களுடனும் இவ் அறிக்கையை பகிர்ந்துகொள்ள எதிர்பார்க்கின்றோம். பகிரப்பட்ட அனுபவங்களும் ஒருங்கிணைந்த பரிந்துரைகளும் தற்போது இம் மக்களால் முன்னெடுக்கப்படுகின்ற ஆதரித்துவாதாடல் மற்றும் பிரச்சாரங்களுக்கு பயன்படுத்துவதன் மூலம் இந்த நடவடிக்கைகள் கவரப்பட்டு மேலும் வலுப்பெற உதவுவதோடு மக்கள் தங்களது தேவைகருதி இந்த உள்ளடக்கங்களை தங்களது செயற்பாடுகளில் முன்னோக்கிக் கொண்டு செல்வர் என நாம் எதிர்பார்க்கப்படுகின்றோம்.

ஏற்கனவே காணப்படுகின்ற ஆவணங்களின் ஆய்வுகள், குறிப்பெடுப்பவர்களினால் பதிவுசெய்யப்பட்ட விரிவான குறிப்புக்கள் மற்றும் பதிவுகள், மக்களுடனான கருத்துக்கணிப்பு, அமர்வுகளின்போது ஆணையாளர்களினதும் ஆராய்ச்சியாளர்களினதும் அவதானிப்புக்கள் மற்றும் பகுப்பாய்வுகள், ஆகியவற்றின் ஒருங்கிணைந்த தொகுப்பே இவ்வறிக்கையாகும் ஆணைக்குழு உறுப்பினர்கள் சுருக்க அமர்வுகளை அடிக்கடி நடாத்தி, அவர்கள் சேகரித்த தகவல்களைச் சுருக்கி ஒருங்கமைத்து, அவற்றின் போக்குகள் குறித்து பகுப்பாய்வு செய்து, பகிர்ந்து கொண்டனர். இதில் சேகரிக்கப்பட்ட தகவல்கள் 4 பிரதான கருப்பொருட்களுக்கமைவாக அலகுகளாக பிரிக்கப்பட்டுள்ளன, அவையாவன, வெளியேற்றப்படல், வாழ்வாதாரம், சுற்றுச்சூழல் மற்றும் அடையாளம் என்பனவாகும்.

பாதிப்பிற்குள்ளாகிய மக்களுடனான கலந்துரையாடல்களிலிருந்து பெற்றுக்கொண்ட உள்ளீடுகளுக்கு அமைவாக வரையப்பட்ட பரிந்துரைகளே இவ் அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ளன.

## காணிப் பிரச்சனைகள் : நான்கு முக்கிய கருப்பொருட்கள்

**வெளியேற்றப்படல்:** காணியிலிருந்து வெளியேற்றப்படலானது வாழ்வாதாரம், சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக இயக்கங்கள், சுற்றுச்சூழல் சார்ந்த நீதி மற்றும் அடையாளம் ஆகியன தொடர்புபட்ட பன்முகப்படுத்தப்பட்ட ஒரு பிரச்சனையாகும். அதிக எண்ணிக்கையில் காணிகளிலிருந்து வெளியேற்றப்படுதல் இராணுவமயமாதல் மற்றும் நிறுவனமயப்படுத்தப்பட்ட வேரூன்றியுள்ள இன அடிப்படையிலான பாகுபாட்டுடன் தொடர்புபட்டது. இலங்கையின் பொருளாதார அபிவிருத்திப் பொறிமுறை, அதிகாரத் தோல்விகள், பொறிமுறையினூடான புறந்தள்ளுகைகள் குறிப்பாக மலையக மக்கள் அல்லது மலைநாட்டு மக்களின் காணிகளிலிருந்து வெளியேற்றப்படுதலினபோது பிரதான பங்களிக்கும் காரணிகளாகும்.

**வாழ்வாதார இழப்புக்களும் சமூகப் பாதுகாப்பும்:** மக்கள் தங்களது நிலங்களிலிருந்து வெளியேற்றப்படும்போது அவர்களது வாழ்வாதாரம் பல வழிகளில் பாதிப்படையக்கூடிய வழிவகைகள் ஏற்படுகின்றது. அறிக்கையின் இப்பகுதியானது பரந்த மட்டத்தில் மக்கள் தங்களது வாழ்வாதாரத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான அணுகுதலை இழத்தல் மற்றும் வாழ்வாதாரத்திற்குத் தேவையான வசதிகளை வழங்குகின்ற நிறுவனங்களுடனான தொடர்பை இழத்தல் காரணமாக மக்கள் எதிர்கொள்கின்ற சவால்கள் மற்றும் தடைகள் குறித்து விபரிக்கின்றன. மக்களின் வாழ்வாதாரத்தில் பாதிப்பை ஏற்படுகின்ற காரணிகள் 4 உப அலகுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. (1) யுத்தம், மோதல் மற்றும் இராணுவமயமாதல், (2) அதிகாரத்துவத் தோல்விகள், (3) பாரிய அபிவிருத்தித் திட்டங்கள், விவசாய அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களை உருவாக்குதல் (4) மலையக தோட்டத்துறையை மையப்படுத்தியதான மக்களின் வாழ்வாதாரத்திற்கும் அவர்களது காணி உரிமை தொடர்பான நிலைக்குமுள்ள தனித்துவமான தொடர்பு ஆகியனவாகும்.

**சுற்றுச்சூழல் சீரழிவு:** ஆணைக்குழுவின் கருத்துக்கணிப்பின் போது பங்குபற்றிய அநேக மக்களுக்கு தங்களுடைய வாழ்வாதாரமானது சுற்றியுள்ள சூழல் அமைப்புடன் தொடர்புபட்டதோடு சுற்றியுள்ள இயற்கை வளங்களிலும் தங்கியுள்ளது என்பதனை அறிந்திருந்தனர். ஆணைக்குழுவானது பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் அரச கொள்கைகள், அரச முதலீட்டு அபிவிருத்தித் திட்டங்கள், அரச சார்பற்ற அமைப்புக்களின் செயற்பாடுகள் மற்றும் மக்களின் காணி பாவிக்கப்படுகின்ற முறைமை போன்றவை சுற்றுச்சூழல் அமைப்பினை எதிர்மறையாகப் பாதிக்கின்றது என்பதனை அறிந்து கொண்டனர். ஆணைக்குழுவின் கருத்துக்கணிப்பிற்கிணங்க கீழ்வரும் பிரதான காணிப்பாவனையானது சுற்றுச்சூழலை பெரிதும் பாதிப்பதாகத் தெரியவந்தது. (1) பாரிய நீர்ப்பாசன மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டு வேலைத்திட்டங்கள், (2) சுற்றுலாத்துறை, (3) பாரிய அளவிலான வியாபார வேளாண்மை (4) இராணுவமயமாதல்.

**இழந்த அடையாளங்கள்:** கொள்கைகள் உருவாக்கப்படும் போதும் அல்லது நீதியின் கண்ணோட்டத்திலும் நிலத்துடனான தொடர்பு - உறுதி, அனுமதிப்பத்திரங்கள், உறுதிப்படுத்தல் படிவம். கட்டணங்கள் மற்றும் வரிப்பணம் ஆகிய ஆவணங்களுக்கூடாகவே மதிக்கப்படுகின்றது. இருப்பினும் நாடுபூராவும் மேற்கொள்ளப்பட்ட மக்களுடனான கருத்துக்கணிப்பு செயற்பாடுகளில் மக்கள் பல்வேறுபட்ட வழிகளில் காணிகளுடனான தொடர்பை தெளிவாக விபரித்திருந்ததோடு, இது எவ்வாறு தங்களது அடையாளத்தையும் சமூகங்களையும் வடிவமைத்துக் காட்டுகின்றது என்பதனையும் வெளிப்படுத்தியிருந்தனர். அவர்களது காணிப் பிரச்சனைகளைத் தீர்க்கின்ற பொறிமுறைகள் தனிப்பட்ட மற்றும் சமூகச் சூழலினால் உருவகிக்கப்பட்ட மக்களது கதைகளை செவிமடுப்பதோடு அவர்களது எதிர்பார்ப்புக்களையும் அடையாளப்படுத்தி ஒப்புக்கொண்டு நடைமுறைப்படுத்த வேண்டும். இப்பிணைப்புக்கள் (1) குடும்ப அடையாளம், (2) சமய மற்றும் சமூகஞ்சார் அடையாளங்கள், (3) வாழ்வாதார அடையாளம் (4) வெளியேற்றப்பட்டவர்களின் அடையாளம் என 4 வகையாகப் பிரிக்கப்படுகின்றது.

ஆனாலும் நிலத்துடனான மக்களின் தொடர்புகள் எப்பொழுதும் தாங்கள் குடியிருந்த காணிகளிலேயே தாங்கள் வாழவேண்டும் என்ற கோரிக்கையாக அர்த்தப்படவில்லை. மக்கள் வாழ்க்கையின் முன்னேற்றங்கள் குறித்தும் பிள்ளைகளுக்கான சிறந்த எதிர்காலத்தை அமைத்தல் பற்றியும், எதிர்காலத்திற்கென சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டும் என்பது குறித்தும் அதனுடன் முன்கூட்டிய எச்சரிக்கைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய பொறிமுறைகளின்றி இருப்பதனால் இயற்கை அனர்த்தங்களிலிருந்து பாதுகாப்புப் பெறுதலை நோக்கி முன்னேற்றமடைதல் ஆகியன பற்றிப் பேசியிருந்தனர்.

**வெளியேற்றங்கள், காணி உரிமை மற்றும் பாதுகாப்பு தொடர்பான பெண்களின் போராட்டங்கள்:**
மக்கள் காணி ஆணைக்குழுவின் அமர்வுகளில் அனைத்து மாவட்டங்களிலுமுள்ள பல பெண்களுடன் கலந்துரையாடியிருந்தோம். பெண்கள் காணிப் போராட்டங்களில் பங்காளிகளாகவும் பல்வேறுபட்ட காணிப்போராட்டங்களில் தலைவர்களாகவும் இருந்துவந்துள்ளனர், குறிப்பாக இராணுவத்திடமிருந்து காணிகளை மீளப்பெற்றுக்கொள்வதற்கு முல்லைத்தீவிலுள்ள கேப்பாப்பிளவு மக்கள் போராட்டத்திலிருந்து அக்கரைப்பற்று நுரைச்சோலை முஸ்லீம் மக்களின் சுனாமி மீள்குடியேற்ற வீட்டுத்திட்டம் தொடர்பான போராட்டங்கள் வரை. தங்களது சமூகத்தின் காணி உரிமை தொடர்பான பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான வாய்ப்பையும் பலத்தையும் பெற்றுக்கொள்ளும் நோக்கில் சில வேளைகளில் பெண்கள் அரசியலிலும் இணைந்துள்ளனர். காணி பெண்களின் அடையாளத்திலும் சமூக பொருளாதார பாதுகாப்பிலும் நெருக்கமாகத் தொடர்புபட்டுள்ளது என்பது ஆணைக்குழுவுடனான கலந்துரையாடல்களின் மூலம் தெளிவாகின்றது. பல்வேறுபட்ட அமர்வுகளில் ஆணையாளர்கள் பெண்களுடன் தனியாகக் கலந்துரையாடியதால் அவர்கள் பயமின்றி சரளமாகக் கலந்துரையாடக்கூடியதாக இருந்தது. காணிகளிலிருந்து வெளியேற்றப்படலானது பால்நிலை சார்ந்த அனுபவமாக இலங்கையில் மாத்திரமல்ல ஏனைய நாடுகளிலும் வரலாற்றுப் பதிவுகளிலும் கல்வியியல் ஆவணங்களிலும் குறிப்பிடப்படுகின்றன. பொது மக்கள் கருத்துக்கணிப்பு நடைமுறைப்படுத்தப்பட்ட விதமானது ஆழமாக விசாரணை ஆவணப்படுத்தல், பால்நிலை-சார் பகுப்பாய்வு ஆகியவற்றின் மூலம் பூரணமான தகவல்களைப் பெற்றுக்கெள்ளும் விதத்தில் நடைமுறைப்படுத்தப்படாவிட்டாலும் பெண்களின் சாட்சியங்கள் அநேகமாக வெளிப்படாமல் இருக்கின்ற சொந்த அனுபவங்களை வெளிக்கொண்டுவர உதவியது. பெண்களின் போராட்டங்கள் மற்றும் பிரச்சனைகள் (1) வெளியேற்றப்படல், இடப்பெயர்வு மற்றும் அடையாளங்கள் (2) திருமணம் மற்றும் சீதனம், (3) காணி மற்றும் வீட்டு வேலைகள் (4) பெண்களின் பாதுகாப்பு மற்றும் கண்ணியம் சார்ந்த கருத்துருவாக்கம் ஆகியவற்றினூடாக முன்வைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் அனைத்து மாவட்டங்களிலும் காணிப் பிரச்சனைகளால் பாதிக்கப்பட்ட மக்களின் கருத்துக்களும் கோரிக்கைகளும் பரிந்துரைகளாக முன்வைக்கப்பட்டுள்ளன. எப்போதுமே தங்களது கருத்துக்கள் கொள்கை வகுப்பாளர்களினாலும் தீர்மானமெடுப்பவர்களினாலும் கருத்திற்கொள்ளப்படுவதில்லை என எண்ணுகின்றவர்களினதும், தங்களுடைய சொந்தக் காணிப்பிரச்சனை காரணமாக பாதிக்கப்பட்டவர்களும். காணிக்கொள்கைகளை வகுக்கும்போது எப்போதுமே கருத்துக்களை வழங்கமுடியாமல் போனவர்கள் ஆகியோரின் குரல்கள் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன. சில பரிந்துரைகள் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மக்கள் கலந்துரையாடல்களின் உள்ளடக்கங்களாக இருப்பதோடு நன்கு நிறுவப்பட்ட தரநிலைகளையும் உள்வாங்கியதான கலந்துரையாடல்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தனித்துவமான விடயங்களையும் உள்ளடக்கியுள்ளோம்.

## பரிந்துரையின் சுருக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

### 1. காணியை அணுகி, பெற்றுக்கொண்டு பாவிப்பதற்கான உரிமை

இப் பரிந்துரையானது மக்கள் எவ்வாறு காணியை அணுகி, பாவித்து தங்களுடையதாக்கிக் கொள்வது என்பதுடன் காணியின்மை மற்றும் வீடின்மையை இலங்கையில் நிவர்த்தி செய்தல் போன்றவற்றில் சட்ட மற்றும் நிர்வாக ரீதியான செயற்பாடுகள் குறித்த அடையாளப்படுத்தலின் முக்கியத்துவத்தை ஆதரித்து வாதாடுதலாகும். சில பரிந்துரைகளாவன, மக்களுக்கு விரும்பிய வாழ்வாதார நடவடிக்கைகளின் அடிப்படையில் அவர்களுக்கும் காணிக்குமிடையிலான தொடர்பை அடையாளப்படுத்தி மதித்தல், நாட்டின் சில பகுதிகளில் காணப்படுகின்ற பரம்பரை ரீதியான நடைமுறைகள், காணிகளின் உடைமை பரம்பரை ரீதியாக இருப்பதோடு சில காணிகளின் சமய காலச்சார பின்னணிகள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. அத்துடன் அது மேலும் மக்கள் மையப்படுத்தப்பட்ட வரைவிலக்கணங்களை பொதுவான காணிகள், தளங்கள், மற்றும் மக்களின் சொத்துக்களுக்கான பொதுவான விளக்கக்கருத்துக்கள் மற்றும் பால்நிலை பாகுபாட்டைக்கொண்ட அரச காணிச் சட்டமூலத்தை திருத்தியமைத்தல் ஆகியவற்றை இலக்குவைத்துள்ளது.

### 2. காணி ஆளுகை

காணியின் ஆளுகை (காணிகள் தொடர்பில் தீர்மானமெடுத்தல்) செயற்பாடானது புவியியல் ரீதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அருகாமையிலுள்ள பரந்துபட்ட நிறுவனங்களின் மூலம் வினைத்திறனான செயற்பாடுகளைக் கொண்டிருக்க வேண்டும். தேசிய காணி ஆணைக்குழுவும் அதற்கான தெளிவான செயற்பாட்டு வழிகாட்டிகள் மற்றும் நடைமுறைப்படுத்தல் ஆகியன உள்ளடங்கலாக பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளது.

### 3. காணி நிர்வாகம்

காணி தொடர்பில் செயற்படுகின்ற அரச உத்தியோகத்தர்களுக்கென ஒரு நடத்தை விதிமுறையும் குறைந்தபட்ச தகைமைகளையும் கொண்ட அலகு பரிந்துரையாக உள்ளடக்கப்பட்டுள்ளது, ஏனெனில் அரச உத்தியோகத்தர்களிடமிருந்து காணி தொடர்பான சேவைகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்கள் கணிசமான அளவு புகார்களை மேற்கொள்ளப்பட்டுள்ளனர். அர்த்தபூர்வமான வினைத்திறன் வாய்ந்த மக்களுடனான கலந்துரையாடல்கள், பொது விடயங்களுக்காக காணிகளைப் பெற்றுக்கொள்ளும் போது முன்கூட்டியே அறிவுறுத்தல்களை வழங்குதல் உதாரணமாக தற்போது நடைமுறையில்லாத ஒரு முறையாக, அறிவித்தல் வழங்கும் நேரத்தில் காணியைப் பெற இருக்கின்ற பொது நோக்கம் என்னவென்பதை குறிப்பிடல் ஆகியன ஏனைய முக்கிய பரிந்துரைகளாகும். அத்துடன் இலஞ்சம் மற்றும் ஊழலைத் தவிர்ப்பதற்கும் காணி தொடர்பான தகவல்களை முன்கூட்டியே தெரியப்படுத்துவதற்கான வழிகாட்டிகளையும் உள்ளடக்கியுள்ளது.

### 4. சச்சரவுகளை தீர்த்து வைத்தல் மற்றும் நஷ்ட ஈடு வழங்குதல்

தற்போது காணப்படுகின்ற நியாயஸ்தல வழக்கு பொறிமுறைகள், தரமான சட்ட உதவிகள் மற்றும் மத்தியஸ்த சேவைகளை அணுகுதல், அபகரிக்கப்பட்ட காணிகள் தொடர்பில் சுயாதீனப் பொறிமுறையொன்றை அமைத்தல் ஆகியன இப் பகுதியின் பரிந்துரைகளாகும்.

## 5. இடமாற்றம்

மக்களை காணிகளிலிருந்து இடமாற்றும் செய்யும் செயற்பாட்டை இறுதியான தீர்வாக வைத்துக்கொண்டு திட்டத்தின் நடைமுறைப்படுத்தலுக்கு முன்னரே இடமாற்றம் தொடர்பான மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு தீர்மானங்கள் எட்டப்பட வேண்டும் என்ற பரிந்துரையை இப்பகுதி முன்வைக்கின்றது. மேலும் பாதிக்கபட்ட மக்கள் மற்றும் சமூகங்களுடன் போதுமான அளவு கலந்துரையாடல்கள் மற்றும் கருத்துக்கணிப்புகள் போன்றவற்றை மேற்கொள்ளல், போதுமான அளவு விழிப்புணர்வை ஏற்படுத்தல் போன்றவற்றின் தேவைப்பாடு குறித்து தர்க்க ரீதியாக விபரிக்கின்றது. அத்துடன் பொதுவான தேவைகளுடன் உள்ளக சட்டவாக்கத்துடன் உலகளாவிய தரத்துடனான இடமாற்ற நடைமுறைகளைக் கடைப்பிடிப்பதோடு குறைந்தது தேசிய தன்னிச்சையான மீள் குடியேற்றக் கொள்கையைப் பின்பற்றல் வேண்டும்.

## 6. இராணுவமயமாக்கலை இல்லாமலாக்கலும் மனிதப் பாதுகாப்பும்

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இராணுவமயமாக்கலை அரசு உடனடியாக நிறுத்தவேண்டும். அத்துடன் மக்களிடமிருந்து பெற்றுக்கொண்ட காணிகளை மீள வழங்கி, அவர்களுக்கான இழப்பீடுகளையும் வழங்கி நட்டத்தை ஈடு செய்வதற்கான சமாந்தரமான பொறிமுறையொன்றும் உருவாக்கப்படுவதோடு, இராணுவத்தினரால் முன்னெடுக்கப்படுகின்ற வர்த்தக நடவடிக்கைகளான சுற்றுலா விடுதிகள், பண்ணைகள், ஏனைய அனைத்து வர்த்தகம் சார்ந்த நடவடிக்கைகளையும் உடனடியாக நிறுத்த வேண்டுமென்பது இராணுவமயமாதலால் பல்வேறுபட்ட பாதகமான பாதிப்புக்களை எதிர்கொண்ட மக்களுடனான கருத்துக்கணிப்பின் பரிந்துரைகளாகும்.

## 7. காணி மற்றும் அடையாளம்

இப் பகுதியானது மக்களுக்கும் காணி மற்றும் வாழ்வாதாரத்திற்குமிடையிலுள்ள தொடர்பு மற்றும் அவர்களின் பிணைப்பு, உறுப்புரிமை குறித்தும் பரிந்துரைகளை மேற்கொள்கின்றது. தொல்பொருளியல் சான்றுகள் காரணங்களாக முன்வைத்து அல்லது வனவிலங்கு பாதுகாப்பு மற்றும் வனப்பகுதி போன்ற காரணங்களை முன்வைத்து மக்களை இடம்பெயரச் செய்து வெளியேற்றலிலிருந்து பாதுகாத்தல் குறித்தும் கவனஞ் செலுத்துகின்றது. அத்துடன், எல்லைகள், மற்றும் நீர்நிலைகள் போன்றவற்றிற்கான உரிமைப் போட்டியில் வேற்று இன, சமயங்களைச் சேர்ந்த மக்களுடன் கலந்துரையாடல் மற்றும் உரையாடல்கள் மூலம் அப்பகுதிகளில் இன ரீதியான முரண்பாடுகள் எற்படாத விதத்திலும், சாதிப் பாகுபாட்டின் அடிப்படையில் காணிகள் வழங்கப்படாதவர்களுக்கு காணிகளை வழங்குதல் போன்ற பரிந்துரைகளை முன்வைக்கின்றது.

## 8. காணி மற்றும் வாழ்வாதாரம்

இலங்கையிலுள்ள 80% ஆன விவசாயக் காணிகள் சிறிய அளவிலான உற்பத்தியாளர்களால் பாவிக்கப்படுகின்றது. ஆகவே, காணிக் கொள்கைகள் இதனை உறுதிசெய்து அவர்களது வாழ்வாதாரத்தை நிலைத்திருக்கத்தக்கதாக மாற்றவேண்டும். இவ்வாறான விவசாயம் மற்றும் மீன்படி தொடர்பான கொள்கைகள் காணிக் கொள்கைளை முழுமையாக்குவதோடு அதன் நடைமுறைப்படுத்தலுக்கும் உதவவேண்டும். அத்துடன் கொள்கைகள் பெண்களை பிரதான உற்பத்தியாளர்களாக அடையாளப்படுத்துவதோடு அவர்களுக்கு காணி மற்றும் நீர் வளங்களுடன் காணப்படும் வாழ்வாதார ரீதியான தொடர்பை அடையாளப்படுத்தி அவர்கள் அதன் மூலம் தங்களது தேவைகளைப் பூர்த்தி செய்வதை உறுதிசெய்ய வேண்டும்.

### 9. மக்கள் மயப்படுத்தப்பட்ட பொருளாதார அபிவிருத்தி

இலங்கையைச் சேர்ந்தவர்கள் அதிலும் குறிப்பாக திட்டங்கள் முன்வைக்கப்படுகின்ற பிரதேசத்தில் வாழ்கின்ற மக்கள் முன்னுரிமைப்படுத்தப்பட்டு இத் திட்டங்களின் மூலம் அனுகூலங்களைப் பெற்றுக்கொள்வதை உறுதிசெய்ய வேண்டும். மக்களின் அடிப்படை அனுகூலங்களை இல்லாதொழிக்கும் விதத்தில் தனியார் நிறுவனங்கள், கைத்தொழில் பேட்டைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் (தனியர் - மக்கள் மயப்படுத்தப்பட்ட முன்னெடுப்புக்கள்) செயற்படக்கூடாது. அத்துடன் இவ் அலகானது மதிப்பீடுகள் மற்றும் மூலோபாயத்தந்திரங்கள் குறித்து கவனஞ் செலுத்துவதோடு, மனித சூழல் முகாமைத்துவ தந்திரோபாயம்., மனித உரிமை மதிப்பீடு, சுயாதீன சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீடு போன்றன அபிவிருத்தித் திட்டங்களுக்கு உதவக்கூடியவற்றில் சிலவாகும்.

### 10. பெருந்தோட்டக்காணிகள் : வரலாற்று ரீதியான குறைபாடுகளும் தரமிழக்கும் தொழிலாளர் நடவடிக்கைகளும்

இப்பகுதியானது மலையக மக்களுக்கான குறிப்பான பரிந்துரைகளான பெருந்தோட்டத்தில் வேலை புரிகின்றமைக்கென குறைந்தது 20 பேர்ச் காணியாவது வழங்கப்படவேண்டும் மற்றும் வேலையாட்களுக்கு தங்களது விருப்பத்திற்கேற்ப காணியை எதற்காகப் பாவிக்கவேண்டும் என்பது தொடர்பில் எழுத்து மூலமான தீர்மானமெடுக்கும் சுதந்திரம் வழங்கப்படல் ஆகியவற்றுடன் பெருந்தோட்டங்களில் வாழ்கின்ற முகாமைத்துவம் உட்பட்ட அனைத்து மக்களினதும் தொழிலாளர் உரிமைகளும் உள்ளடக்கியுள்ளது.

### 11. சுற்றுச் சூழல் பாதுகாப்பு

அநேகமான கலந்துரையாடல்களில் பங்குபற்றியவர்கள் தங்களது வாழ்வாதாரத்திற்கும் சூழலுக்குமான பிணைப்புக் குறித்து தெளிவு பெற்றிருந்ததோடு ஒன்றின் தாக்கம் மற்றொன்றை எவ்வாறு பாதிக்கும் என்பது குறித்தும் அறிந்திருந்தனர். இவை குறிப்பாக மனித-யானை மோதல்கள் மற்றும் காலநிலைப் பாங்கு குறித்த கலந்துரையாடல்களில் தெரியவந்தன. மக்கள் தீர்மானமெடுத்தல் பொறிமுறைகளிலிருந்து அந்நியப்படுத்தப்படலின் காரணமாக ஏற்படுகின்ற மத்திய மற்றும் உள்ளூர் அரசின் தொடர்பாடல் பிரச்சனைகள் குறித்தும் அநேகமான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. காணிக் கொள்கைகள் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்போது அவற்றில் குறைந்தபட்ச சூழல் தரநிலைகள் உருவாக்கப்படல் தொடர்பிலும் பரிந்துரைகள் கவனஞ் செலுத்தியுள்ளது.

# 1. முன்னுரை

காணி உரிமைக்கான மக்களின் கூட்டமைப்பானது (ஒண்றிணைவு) (PARL) வறுமைக்கோட்டிற்கு கீழே வாழ்கின்ற மற்றும் ஒதுக்கப்பட்ட மக்களின் வீடு, காணி மற்றும் சொத்துக்களின் உரிமை தொடர்பில் பரிந்துரை செய்கின்ற சிவில் சமூக அமைப்புக்களின் ஒரு வலையமைப்பாகும். பரிந்துரையினூடான காணி தொடர்பாக கொள்கை ரீதியான மாற்றங்களைக் கொண்டு வருவதற்கும், அவை தொடர்பாக பூரணமாக அறிந்து கொள்வதற்கும், விரிவான மற்றும் ஆழமான கலந்துரையாடல்கள் அவசியமென PARL அடையாளப்படுத்தியுள்ளது. மக்களின் காணி ஆணைக்குழு காணி முகாமைத்துவம், காணிச் சட்டங்கள் மற்றும் தற்போது வழக்கத்திலுள்ள காணிக் கொள்கைகளின் காரணமாக மக்கள் எதிர் நோக்குகின்ற பிரச்சனைகள் மற்றும் தொடர்ச்சியான விளைவுகள் பற்றி அறிந்துகொள்ளும் நோக்கில் உருவாக்கப்பட்ட அமைப்பாகும் மேலும் இக் கலந்துரையாடற் செயற்பாடானது, அரச கொள்கை வகுத்தலில் மக்களது கருத்துக்கள் தொடர்ச்சியாக உள்வாக்கப்படுவதில்லை என்பதில் அவதானஞ் செலுத்துகின்றது.

காணி தொடர்பான மக்களின் ஆணைக்குழு (PLC) அனுபவம் வாய்ந்த 11 சமூகச் செயற்பாட்டாளர்கள், கல்வித்துறை சார்ந்தவர்கள், ஆய்வாளர்கள் மற்றும் வழக்கறிஞர்களைக் கொண்டுள்ளது.[1] இவ் ஆணைக்குழுவானது, 2019 மார்ச் தொடக்கம் ஆகஸ்ட் மாதம் வரையான காலப்பகுதியில் கள விஜயங்களை மேற்கொண்டு அம்பாறை, அனுராதபுரம், பதுளை, மட்டக்களப்பு, கொழும்பு, காலி, கம்பஹா, ஹம்பாந்தோட்டை, ஹட்டன், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், மொனராகலை, முல்லைத்தீவு, மாத்தறை, பொலன்னறுவை, திருகோணமலை மற்றும் வவுனியா ஆகிய 18 மாவட்டங்களில் பிரச்சனைக்குரிய பிரதேசங்களுக்கு விஜயங்களை மேற்கொண்டு பொதுமக்கள் மற்றும் பாதிக்கபட்ட மக்களிடமிருந்து கருத்துக்களைக் கேட்டறிந்தது. இவ் ஆணைக்குழுவானது மொத்தமாக 428 - பெண்கள், 452 - ஆண்கள், 5 - ஏனையோர் அடங்கலாக 885 பேருடன் பேசியிருந்தது. PARL; வலையமைப்பின் பங்காளர்கள் இக் கலந்துரையாடல்களை ஒருங்கிணைப்பு செய்திருந்தனர். இப்பிரதேசங்களானது பூகோள ரீதியில் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் விதத்தில் இருப்பதோடு பல்வேறுபட்ட இனங்கள், சமயங்கள், சமூகங்கள் மற்றும் பொருளாதார பின்புலங்களைக் கொண்டவர்கள் உள்வாங்கப்படுகின்ற நோக்கிலேயே தெரிவு செய்யப்பட்டது. நீண்ட கால நீதியின்மையினால் பரம்பரை ரீதியாக மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களை விபரிப்பதற்கு அதிக காலந் தேவையானது என்பது வெளிப்படையானதும் எதிர்பார்க்கப்பட வேண்டியதுமாகும். அத்துடன் பால்நிலை சார்ந்த நீதியின்மை மற்றும் உரிமை மீறல்கள் தொடர்பில் ஆழமாக ஆராய்வதற்கு போதுமான அளவு காலம் இருக்கவில்லை.

இவ் ஆணைக்குழுவும், காணி உரிமைக்கான மக்களின் கூட்டமைப்பும் (PARL) சேர்ந்து இந்த அறிக்கையையும் பரிந்துரைகளையும் பல்வேறுபட்ட அரச பங்குதாரர்களான அமைச்சுக்கள், காணி, இழப்பீடு, இடைக்கால நீதி, நல்லிணக்கம், பெண்களின் உரிமை, அபிவிருத்தி (ஒரு சில விடயங்கள் மாத்திரம் பெயரிடப்பட்டுள்ளது) ஆகியன தொடர்பில் சேவையாற்றுகின்ற அரச ஸ்தாபனங்களுக்கும் தொகுத்து வழங்க எதிர்பார்க்கின்றன. இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகின்ற பரிந்துரைகளில் உள்ளடங்குவன, பாதிக்கப்பட்ட மக்கள் தாங்களே முன்னெடுக்கப்படவிருக்கின்ற முன்னெடுப்புக்களின் விளைவாக எதிர்பார்க்கப்படுகின்ற பல்வேறுபட்ட கொள்கைத் திருத்தங்கள், நிறுவன மற்றும் பொறிமுறை மறுசீராக்கங்களும், காணி மற்றும் காணி நிர்வாகத்தில் மக்களின் அர்த்தபூர்வமான பங்களிப்பு மற்றும் நிலைத்திருக்கத்தக்க கலந்துரையாடல்கள்

1. See page 2 for full list of Commissioners

மூலமான பரந்துபட்ட மறுசீரமைப்பாகும். மேலும் இவ் அறிக்கையானது சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் இக் கலந்துரையாடல்களில் பங்குபற்றிய மக்களுக்கும், நாடு பூராகவும் பல்வேறு காணி தொடர்பான போராட்டங்களை முன்னெடுக்கின்ற மக்களுடனும் பகிர்ந்துகொள்ள எதிர்பார்க்கின்றோம். பகிரப்பட்ட அனுபவங்களும் ஒருங்கிணைந்த பரிந்துரைகளும் தற்போது மேற்கொள்ளப்படுகின்ற ஆதரித்துவாதாடல் மற்றும் பிரச்சாரங்களுக்கு பயன்படுத்துவதன் மூலம் இந்த நடவடிக்கைகள் கவரப்பட்டு மேலும் வலுப்பெற உதவுவதோடு மக்கள் தங்களது தேவைகருதி இந்த உள்ளடக்கங்களை முன்னோக்கிக் கொண்டு செல்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## 1.1 நோக்கம்

இவ் அறிக்கையின் நோக்கானது, இலங்கையின் காணி தொடர்பான கொள்கைகள், சட்டங்கள் மற்றும் முகாமைத்துவ விடயங்களை தெரியப்படுத்தி செயற்படுவதோடு காணிப் பிரச்சனை காரணமாக அல்லற்பட்டுக் கொண்டிருக்கும் மக்களின் பிரச்சனைகளுக்கு பதிலளிக்கும் விதத்தில் பொறிமுறை மாற்றியமைப்பது, வாழ்க்கையை மேம்படுத்தல், சூழலின் நிலைத்திருக்கும் தன்மையை உறுதி செய்தல் மற்றும் எதிர்கால சந்ததியினருக்காக சமூக பொறுப்புணர்வுடன் செயற்படல் போன்ற விடயங்களை மையப்படுத்தியதாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. இவ் அறிக்கையானது காணிப் போராட்டங்களுக்கு தீர்வை வழங்காது மாறாக காணி மற்றும் மக்களுடன் தொடர்புபட்டு செயற்படுவதிலுள்ள நன் நடைமுறைகள், பொறிமுறைகள், வழிகாட்டி விழுமியங்கள் மற்றும் முன்னுரிமை அளிக்க வேண்டியவை போன்றவற்றை பரிந்துரை செய்கின்றது.

## 1.2 செயன்முறை

மக்களின் காணி ஆணைக்குழுவானது மக்களின் இனத்துவம் சார்ந்த பண்பு வகை சார்ந்த கற்கை அணுகுமுறையைப் பின்பற்றி தரவுகளைத் கீழ்வரும் வினாக்களுக்கமைய கேட்டு அறிந்துகொண்டனர், காணியின் உரிமை மற்றும் காணியை உடமையாக்கிக்கொள்ளல் என்பது பற்றியும் இலங்கையில் காணியின் பாவனை என்பதன் அனுபவங்கள் மற்றும் எதிர்பார்ப்புக்கள் யாவை?. காணிப் பிரச்சனை தொடர்பில் பல்வேறு மட்டங்களில் சேவையாற்றி கணிசமான அளவு அனுபவத்தைக் கொண்டுள்ளவர்களே ஆணைக்குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டு தரவுகளைச் சேகரிப்பதற்கும் அவற்றைப் பகுப்பாய்வு செய்வதற்கும் உபயோகிக்கப்பட்டனர். இரண்டு முதன்மை நிலையான தகவல் சேகரிப்புப் பொறிமுறைகளான (1) பொதுமக்களுடனான கலந்துரையாடல் மற்றும் (2) பாதிக்கப்பட்ட மக்களுடன் மேற்கொள்ளப்பட்ட தெரிவு செய்யப்பட்ட குழுக்களுடனான கலந்துரையாடல்கள் ஆகியன நடைமுறைப்படுத்தப்பட்டன.

அரச, சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்களினால் மேற்கொள்ளப்பட்ட இதேபோன்ற கற்கைகளிலிருந்து கற்றுக்கொண்ட முந்தைய தகவல் (ஆவணங்கள்) பகுப்பாய்வுகளின் அடிப்படையில் ஆய்வு செய்யும் முறை ஆணைக்குழு உறுப்பினர்களால் வடிவமைக்கப்பட்டது. ஒரு ஆய்வுக்குழுவானது தற்போதைய நிலைமையில் காணப்படுகின்ற பொருத்தமான காணி குறித்த அனைத்து தரவுகளையும் ஒன்று சேர்த்து கண்டுபிடிப்புக்களை சாராம்ச வடிவில் முன்வைத்தனர். முந்தைய தகவல் இலக்கிய ஆய்வின் அடிப்படையிலும் ஆணைக்குழு உறுப்பினர்களின் நிபுணத்துவங்களின் அடிப்படையிலும் தேவையேற்படின் முக்கிய தகவல்களை வழங்குபவர்களின் வழிகாட்டல்களையும் பெற்றுக்கொண்டு களவேலைகள் முன்னெடுக்கப்பட்டன. காணிப்பிரச்சனைகள் மற்றும் களத்தில் இடம்பெறுகின்ற காணிப்போராட்டங்கள் தொடர்பான அனைத்துப் பலதரப்பட்ட காரணிகளும் கீழ்வருமாறு: இராணுவமயமாதல், சுற்றுலாத்துறை, அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள், வர்த்தக வேளாண்மை, பெருந்தோட்டங்கள், வனப

பாதுகாப்புத் திணைக்களம், தொல்லியல் திணைக்களம் மற்றும் வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற காணி அபகரிப்பு, பாரிய நகரமயமாதல் வேலைத்திட்டங்கள் இயற்கை அனர்த்தங்களினால் மக்கள் இடம்பெயர்தல், என்பனவாகும்.


ஏப்ரல் 2018 இலிருந்து பெப்ரவரி 2019 வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகள், கட்டமைப்புக்கள் மற்றும் செய்முறைகளாக பயிற்சிச் செயலமர்வுகள் மற்றும் தொடர்ச்சியான கூட்டங்கள் ஆகியன மேற்கொள்ளப்பட்டன. வினாக்கொத்தொன்று தயாரிக்கப்பட்டு முறைப்படியாக கலந்துரையாடலை வழிகாட்டவும் தரவுகளை சேகரிக்கவும் பயன்படுத்தப்பட்டது. கலந்துரையாடல்கள் முன்கூட்டியே தெரிவுசெய்யப்பட்ட பிரதேசங்களில் குறிப்பிட்ட பிரச்சனைகளை மையப்படுத்தியதான இலக்குவைக்கப்பட்ட குழுக் கலந்துரையாடல் மற்றும் பொதுவான இடங்களில் மேற்கொள்ளப்பட்ட திறந்த மக்கள் கருத்துக்கணிப்பும் கலப்பு முறைகளில் மேற்கொள்ளப்பட்டது. திறந்த மக்கள் கருத்துக்கணிப்பு தொடர்பான விபரங்கள் பல்வேறுபட்ட சிவில் சமூக அமைப்புக்கள், சமூக செயற்பாட்டாளர்கள் உள்ள மாவட்டங்களிலுள்ள வலையமைப்பினூடான பகிரப்பட்டது ஒழுங்குபடுத்தப்பட்டது. காணி அபகரிப்பினால் மற்றும் வெளியேற்றங்களினால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள், இடம்பெயர்ந்தவர்கள், கட்டுமானம் மற்றும் ஏனைய வேலைத்திட்டங்களால் பாதிக்கப்பட்டவர்கள், பெருந்தோட்ட மக்கள் மற்றும் பெண்கள் ஆகியோருடன் குறித்த விடயங்கள் தொடர்பில் சேவைபுரிகின்ற நிறுவனங்களினூடாக இலக்குவைக்கப்பட்ட குழுக் கலந்துரையாடல்கள் ஒழுங்கமைக்கப்பட்டன. இலக்கு வைக்கப்பட்ட குழுக் கலந்துரையாடல்கள் தெரிவு செய்யப்பட்ட குழுக்களின் கருத்துக்களை வெளிக்கொண்டுவந்தாலும் ஆழமான நேர்முகக் கலந்துரையாடல்கள் மேலும் தெளிவான பரந்துபட்ட புரிந்துணர்வை பெண்கள் மற்றும் பாதிக்கப்பட்ட குழுக்களிடமிருந்து பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்பினும் இது சவாலான விடயமாகக் காணப்பட்டது. ஆகவே, இவ் அறிக்கையில் கலந்துரையாடப்பட்ட பிரச்சனைகள் பரிபூரணமானவையெனக் கூறமுடியாது.

மக்களின் காணி ஆணைக்குழு தங்களுடைய மக்கள் கருத்துக்கணிப்புக்களை மார்ச் தொடக்கம் ஆகஸ்ட் 2019 வரையான காலப்பகுதியில் பாதிப்பிற்குள்ளாகக்கூடிய ஏனைய மக்களை 18 மாவட்டங்களுக்குச் சென்று சந்தித்திருந்தனர். அவர்கள் சந்தித்து கருத்துக்கணிப்பு மேற்கொண்ட பிரதேசங்களின் விபரங்கள் கீழே பட்டியலிட்டுக் காட்டப்பட்டுள்ளது,



| மாவட்டங்கள் | இடங்கள் | திகதி | மாவட்டங்கள் | இடங்கள் | திகதி |
|---|---|---|---|---|---|
| மன்னார் | முள்ளிக்குளம் | | ஹட்டன் | ஹட்டன் நகரம (PH)* | |
| | பள்ளிமுனை | | | பரந்தா பகுதி, போகில் தோட்டம், கெட்டபுல (B) | |
| | காயாக்குழி | | கிளிநொச்சி | பனங்கண்டி | |
| | சிலாவத்துறை | | | செஞ்சோலை மாதிரிக் கிராமம் | |
| | சன்னார் | | | கிளிநொச்சி நகரம் (PH) | |
| | மன்னார் நகரம் (PH) | | | பரந்தன | |
| அநுராதபுரம் | அநுராதபுரம் நகரம் (PH) | | யாழ்ப்பாணம | பலாலி (PH) | |
| பொலன்னறுவை | ஹிங்குராகொட (PH) | | | நீதவன் நற்பணி (இடம்பெயர்வு) நிலையம் | |
| அம்பாறை | அஸ்ரப் நகர் | | | மயிலிட்டி | |
| | சம்மாந்துறை | | | தயிட்டி | |
| | பொத்துவில் | | கொழும்பு | தெமட்டகொ | |
| | அட்டாளைச்சேனை | | கம்பஹா | நீர்கொழும்பு | |
| மொனராகலை | மொனராகலை நகரம் (PH) | | | கட்டுநாயக்க | |
| | பெல்வத்தை | | காலி | ரத்கம | |
| முல்லைத்தீவு | கொக்குதொடுவாய் | | மாத்தறை | டிக்வல்ல | |
| | கொக்கிளாய் | | ஹம்பாந்தோட்டை | கொன்னொறுவ | |
| | நீராவிப்பிட்டி | | | ஹம்பாந்தோட்டை நகரம் (PH) | |
| | கேப்பாபிளவு | | மட்டக்களப்பு | மட்டக்களப்பு நகரம் (PH) | |
| | பிள்ளைக்குடியிருப்பு | | | கல்குடா | |
| | வட்டுவால் | | | வாகரை இல்மனைட் பிரதேசம் | |
| | முறிப்பு | | திருகோணமலை | திருகோணமலை நகரம் (PH) | |
| | முல்லைத்தீவு நகரம் (PH) | | | சம்பூர் | |
| வவுனியா | வவுனியா நகரம் (PH) | | | குச்சவெளி | |
| பதுளை | பதுளை (PH) | | | | |
| | சோவலன்ஸ் தோட்டம், லுணுகல, பசறை | | | | |

*PH – Public Hearing


Public Hearing - PH
Focus group discussion
பலாலி
கிளிநொச்சி
முல்லைத்தீவு
மன்னார் நகரம்
வவுனியா
திருகோணமலை
அநுராதபுரம்
ஹிங்குராகொட
மட்டக்களப்பு
பதுளை
மொனராகலை
ஹட்டன்
ஹம்பாந்தோட்டை

பிரதானமாக இலங்கையில் காணப்படுகின்ற காணி உரிமை தொடர்பான பிரச்சனைகளை பிரதிநிதிததுவப்படுத்தும் விதத்தில் குறிப்பிடப்பட்டு விஜயம் செய்வதற்கென பிரதேசங்கள் தெரிவு செய்யப்பட்டன. இப்பிரதேசங்களானது பூகோள ரீதியில் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் விதத்தில் இருப்பதோடு பல்வேறுபட்ட இனங்கள், சமயங்கள், சமூகங்கள் மற்றும் பொருளாதார பின்புலங்களைக் கொண்டவர்கள் உள்வாங்கப்படுகின்ற நோக்கிலேயே தெரிவுகள் மேற்கொள்ளப்பட்டது. இராணுவத்தினராலும் ஏனைய அரச நிறுவனங்களினாலும் காணிகள் கையகப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்கள், இடம்பெயர்வு இடம்பெற்ற பிரதேசங்கள், பாதுகாக்கப்பட்ட பிரதேசங்கள், யுத்தத்திற்கு பின்னரான மீளக்குடியமர்த்தப்பட்ட பிரதேசங்கள், வர்த்தக வேளாண்மை, ஏனைய பாரிய வேலைத்திட்டங்கள், பொருந்தோட்டங்கள், சூழல் உணர்திறன் கூடிய பிரதேசங்கள் அல்லது உயிரியல் பல்வகைமைத்துவம் பாதிக்கப்பட்டுள்ள அல்லது ஆபத்திற்குள்ளாகியுள்ளமை போன்ற காரணங்களால் பாதிக்கப்பட்ட மக்கள் வாழுகின்ற பிரதேசங்கள், நகர மீள் உருவாக்கம் மற்றும் ஏனைய நகரமயமாக்கலுடன் தொடர்புபட்ட வேலைத்திட்டங்கள் காரணமாக வெளியேற்றப்பட்ட மற்றும் வேறு இடங்களில் குடியேற்றப்பட்ட மக்கள் வாழும் பிரதேசங்கள் ஆகியன உள்ளடங்குகின்றன. மக்களின் கருத்துக் கணிப்புகள் 18 மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டன, அவையாவன: அம்பாறை, அநுராதபுரம், பதுளை, மட்டக்களப்பு, கொழும்பு, காலி, கம்பஹா, ஹம்பாந்தோட்டை, ஹட்டன், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், மொனராகலை, முல்லைத்தீவு, மாத்தறை, பொலன்னறுவை, திருகோணமலை மற்றும் வவுனியா. இவ் ஆணைக்குழுவானது மொத்தமாக 428 - பெண்கள், 452 - ஆண்கள், 5 - ஏனையோர் அடங்கலாக 885 பேருடன் பேசியிருந்தனர்.

அனைத்து கருத்துக்கணிப்பு நிகழ்வுகளுக்கு முன்னரும் ஆணைக்குழு உறுப்பினர்கள் தாங்கள் விஜயம் செய்ய எதிர்பார்த்த பிரதேசங்களிலிருந்து முன்னரே பெற்றுக்கொண்ட சாராம்சப்படுத்தப்பட்ட ஆவணங்களின் மூலம் முன்கூட்டியே ஆவணப்படுத்தப்பட்ட தகவல்கள் மற்றும் பிரச்சனைகளைத் தெரிந்துகொண்டதன் அடிப்படையில் கருத்துக்கணிப்பு நேரத்தினை தகவல்களை மேலும் உள்வாங்கி, தெளிவுபடுத்தி பூரணப்படுத்துவதற்குப் பயன்படுத்தியதுடன் மக்களுடன் கலந்துரையாடுவதற்கு அதிக முக்கியத்துவத்தை வழங்கி குறிப்பாக காணிப்பிரச்சனைகள் தொடர்பிலும் காணிக் கொள்கை திருத்தத்திலும் மக்கள் எதிர்பார்க்கின்ற தீர்வுகள் மற்றும் பரிந்துரைகள் பற்றி கவனஞ் செலுத்தினர். காணி தொடர்பான போராட்டங்களில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு அவர்கள் முகங்கொடுக்கின்ற பிரச்சனைகள் பாரியதானதாகும் சில வேளைகளில் அவற்றிற்கான பரிந்துரைகளை மேற்கொள்வது கடினமானதாகவும் காணப்பட்டது.

இவ்வறிக்கையானது கருத்துக்கணிப்பு அமர்வுகளில் குறிப்பெடுப்பவர்களினால் எடுக்கப்பட்ட விரிவான குறிப்புக்கள் மற்றும் பதிவுகள், ஆணையாளர்களினதும் ஆராய்ச்சியாளர்களினதும் அவதானிப்புக்கள் மற்றும் பகுப்பாய்வுகள், ஏற்கனவே காணப்படுகின்ற இலக்கிய ஆய்வு ஆகியவற்றின் ஒருங்கிணைந்த தொகுப்பாகும். ஆணைக்குழு உறுப்பினர்கள் சுருக்க அமர்வுகளை அடிக்கடி நடத்தி அவர்கள் சேகரித்த தகவல்களை சுருக்கி ஒருங்கமைத்து அவற்றின் போக்குகள் குறித்து பகுப்பாய்வு செய்து பகிர்ந்து கொண்டனர். இதில் சேகரிக்கப்பட்ட தகவல்கள் 4 பிரதான கருப்பொருட்களுக்கமைவாக அலகுகளாக பிரிக்கப்பட்டுள்ளன, அவையாவன, வெளியேற்றப்படல், வாழ்வாதாரம், சுற்றுச்சூழல் மற்றும் அடையாளம். பால்நிலையானது ஏற்கவே கூறப்பட்ட 4 விடயங்களின் தாக்கங்களிலும் செல்வாக்குச் செலுத்துகின்ற காரணியாதலால் அது அனைத்தையும் ஊடறுத்து தாக்கஞ் செலுத்தும் பொதுவான காரணியாகக் கொள்ளப்பட்டது. கருத்துக்கணிப்புகளின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட அனைத்து தரவுகள் மற்றும் ஆணைக்குழு உறுப்பினர்களின் அபிப்பிராயங்கள் ஆகியன மேலே குறிப்பிட்ட 4 பிரதான அலகுகளின் அடிப்படையில் பிரிக்கப்பட்டதோடு பால்நிலை சார்ந்த தாக்கங்கள் குறித்து விஷேட கவனஞ்

செலுத்தப்பட்டது. இவ்வாறு தரவுகளை சேகரிப்பிலிருந்து முன்வைப்புக்களை ஒழுங்குபடுத்தல் வரை இதனடிப்படையிலேயே கட்டமைக்கப்பட்டுள்ளது.

சேகரிக்கப்பட்ட தரவுகள் மற்றும் தகவல்கள் தொடர்ச்சியான பட்டறைகளிகளின் மூலம் ஒன்றிணைக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டு ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் மற்றும் ஆய்வு உதவியாளர்கள் மத்தியில் பிரித்து வழங்கப்பட்டு இறுதி அறிக்கை வரையப்பட்டது. இங்கு குறிப்பிடப்படுகின்ற அனைத்து பரிந்துரைகளும் பாதிக்கப்பட்ட மக்களுடனான கலந்துரையாடல்களின் அடிப்படையில் பெறப்பட்டவையாகும்.

**வரையறைகள்**

திட்டமிடல் நிலமையில் கருத்துக்கணிப்பு கலந்துரையாடல்கள் மூலம் சேகரிக்கப்படும் தரவுகள் அனைத்தும் தனிப்பட்ட ஒருவரின் நேரடியான தனிப்பட்ட அனுபவத்தினூடான வெளிப்பாடுகளும் எண்ணங்களும் மற்றும் மூன்றாம் நபர்களிடமிருந்து பெறப்படுகின்ற தகவல்கள்களையும் உள்ளடக்கியுள்ளது என்பது அடையாளப்படுத்தட்டது. சேகரிக்கப்ட்ட தகவல்கள் கலந்துரையாடப்பட்டவர்களின் எண்ணங்களாக இருந்தபோதிலும் சில தகவல்கள் மாத்திரம் உறுதிப்படுத்தப்பட்டும், ஏனையவை ஆவணங்களின் மூலமோ அல்லது வேறு வழிகளில் உறுதிப்படுத்த முடியாமற் போனது. கருத்துக்கணிப்பு கலந்துரையாடல்களின் முக்கிய அம்சங்களாக மக்கள் நீண்டகால வரலாற்றுப் பதிவுகளின் முலம் முன்வைத்த எண்ணங்களாகும். சேகரிக்கப்பட்ட அநேகமான தகவல்கள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஆவணப்படுத்தலுடன் ஒன்றித்துப்போவதால் இது மீள் உறுதிசெய்தல் செயற்பாட்டை இலகுபடுத்தியது. அனுபவங்களின் விபரங்கள், வழங்கப்பட்டுள்ள தீர்வுகளுக்கான பிரயோக நடைமுறைகள், சுற்றுசசூழல் மற்றும் எதிர்கால சந்ததியினர் தொடர்பான விடயங்கள் ஆகியன பரந்துபட்ட அனுபவத்திற்கு மேலும் உள்ளீடுகளை வழங்க உதவியது.

இரண்டாவது, ஒவ்வொரு கருத்துக்கணிப்பு கலந்துரையாடல்களுக்குமென செலவளிக்கப்பட்ட காலம் தொடர்பான வரையறையாகும். முன்கூட்டியே ஆணைக்குழு உறுப்பினர்கள் தாங்கள் விஜயம் செய்யவுள்ள இடங்கள் குறித்த தகவல்களைக் கொண்டிருந்தாலும் பங்குபற்றுநர்கள் தங்களது அனுபவங்களை விபரமாக சிலவேளைகளில் எவ்வாறு இக்காணிகள் உடமையாக்கபட்டன என்பது குறித்தான வரலாற்று சம்பவங்களையும் தொடர்புபடுத்தி விபரிக்க வேண்டியிருந்தது. ஆகவே இக் கலந்துரையாடல்களானது நேர முகாமைத்துவம் தொடர்பில் மக்களுக்கு போதுமானளவு நேரத்தை அவர்களது அனுபவத்தைப் பகிர்ந்து கொள்வதற்கு வழங்குவதோடு பெற்றுக்கொள்ளக்கூடிய தீர்வுகள் குறித்தான கலந்துரையாடல்களையும் மேற்கொள்ள வேண்டி இருந்தமையையும் கருத்திற்கொள்ள வேண்டியிருந்தது. அத்துடன் பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் மக்கள் தொடர்ச்சியான போராட்டங்களினால் களைப்படைந்தும் தங்களுடைய நிலைகுறித்து நம்பிக்கையிழந்தும் காணப்பட்டமை அவர்களால் விளைதிறன் கொண்ட வினைத்திறனான தீர்வுகளை முன்வைக்கமுடியாமலிருந்நது. பங்குபற்றுநர்களால் முன்வைக்கப்பட்ட எதிர்மறையான விடயங்களை நேர்மயமானதாக மீள் வடிவமைப்பு செய்து தீர்வுகள் தொடர்பில் மக்களுடன் கலந்துரையாடி பெற்றுக்கொண்டனர். பங்குபற்றுநர்கள் இம்முறைக்கு கூடுதலான ஆர்வத்தைக் காண்பித்து, பரிந்துரைகளை வரைந்து கொள்வதற்கான உள்ளீடுகளை காத்திரமாக வழங்கினர்.

அனைத்து இடங்களிலும் பால்நிலை சார்ந்த தனித்துவமான கலந்துரையாடல்களை மேற்கொள்ள முடியாமல் போனது மூன்றாவது வரையறையாகக் காணப்படுகின்றது. இருப்பினும் பால்நிலை சார் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்ட இடங்களில் காணிப் போராட்டங்களிலுள்ள பால்நிலை சார்ந்த அனுபவங்கள் தொடர்பான சில விபரங்கள் பெறப்பட்டன. இருப்பினும் குறிப்பாக அவை கேட்கப்படும் பட்சத்தில் மாத்திரம் வெளிவந்ததோடு அநேகமான நேரங்களில்

பங்குபற்றுநர்களாலேயே அவை முன்னிலைப்படுத்தப்படாத நிலைகள் காணப்பட்டது. பால்நிலை சார்ந்த தகவல்களை சாத்தியமான இடங்களில் பெற்றுக்கொண்டு ஆவணப்படுத்தும் நோக்கில் மக்கள் தூண்டப்பட்டு விபரங்கள் சேகரிக்கப்பட்டதோடு அறிக்கையில் இவ்விடயங்கள் குறித்து குறிப்பிட்ட பிரச்சனைகள் தனியாகவும் பால்நிலை சார் கண்ணோட்டத்திலும் என இரு வழிகளிலும் முன்வைக்கப்பட்டுள்ளன.

### கருத்திற்கொள்ளப்பட்ட நெறிமுறைகள்

இப்பொறிமுறைகளின் ஒரு பகுதியாக ஒவ்வொரு மக்கள் கருத்துக்கணிப்பு அமர்வுகளிலும் பங்குபற்றுநர்களுக்கு செயற்பாடு தொடர்பான விளக்கங்கள் தெளிவாக குறிப்பிடப்பட்டதோடு மக்களின் காணி ஆணைக்குழுவில் பங்குபற்றுகின்ற நிறுவனங்கள் தொடர்பிலும் தெளிவுபடுத்தப்பட்டது. இந்த ஆணைக்குழுவிற்கு மக்கள் எதிர்கொள்கின்ற காணிப் பிரச்சனைகளுக்கு நேரடியான தீர்வைப் பெற்றுத்தருகின்ற அதிகாரம் இல்லையென குறிப்பிட்டுக் கூறப்பட்டது. கலந்துரையாடல்களின் போது புகைப்படங்கள் மற்றும் தகவல்களைத் திரட்டுவதற்கான அனுமதி பெறப்பட்டது. சேகரிக்கபட்ட அனைத்துத் தகவல்களும் ரகசியமாகப் பேணப்படுவதோடு, சேகரிக்கப்பட்ட தகவல்கள் இவ் அறிக்கையினைத் தயாரிப்பதற்கு மாத்திரமே பயன்படுத்தப்படும் என்பதனையும் மேற்கோள்கள் பெயர் குறிப்பிடப்படாமல் உள்வாங்கப்படும் என்றும் தெளிவுபடுத்தப்பட்டது.



## 1.3 வழிகாட்டல் விழுமியங்கள் மற்றும் கொள்கைகள்

காணிக் கொள்கை, காணிப் பாவனை, காணி உரிமை, மக்களின் காணியைப் பாதிக்கும் அபிவிருத்திகள் அல்லது இலங்கையின் காணிப் பாவனை ஆகியன கீழ்வரும் வழிகாட்டல் கொள்கைகளின் அடிப்படையில் அபிவிருத்தி செய்யப்பட்டு நிர்வகிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்பட வேண்டும் என பிரிந்துரைக்கப்பட்டுள்ளது.

- மக்களை மரியாதையுடனும் கண்ணியத்துடனும் நடத்துதல்
- காணியுடன் மக்களுக்குள்ள பிணைப்பை குறிப்பாக பிணைப்பின் பால்நிலை சார் தன்மையையும் விளங்கி மதிப்பளித்தல்.
- உள்ளூர் மக்களுடன் மதிப்பளித்து ஒன்றிணைதல்
- உள்ளூர் மற்றும் பிராந்தியங்களில் ஏற்படக்கூடிய காலநிலை மற்றும் சூழல் ரீதியான குறுகிய கால, நீண்ட கால சாத்தியமான பாதிப்புக்கள் தொடர்பில் விளங்கிக்கொண்டு தகவலறிந்த முடிவுகளை எடுத்தல்
- பாதிக்கப்பட்ட மக்களை தகவலறிந்த பங்குபற்றுதலுடன் கூடிய விதத்தில் தீர்மானமெடுத்தல் பங்குபெறச்செய்வதோடு பெண்கள் மற்றும் ஒதுக்கப்பட்ட மக்கள் குழுக்களின் வினைத்திறனுடன் கூடியதான பங்குபற்றுதலையும் உறுதிசெய்தல்.
- காணி தொடர்பில் அனைத்து மட்டங்களிலும் எடுக்கப்படுகின்ற முடிவுகள் நியாயமானதாகவும் சமத்துவமானதாகவும் இருக்கவேண்டும்.
- அனைத்து நடவடிக்கைகளிலும் சமத்துவத்தையும் பாகுபாடற்ற நிலைமையையும் ஏற்படுத்தல்.
- காணி ஒரு வரையறுக்கப்பட்ட தேசிய சொத்து என்பதனை அடையாளப்படுத்துவதோடு தற்போதுள்ள இலங்கையர் மற்றும் எதிர்காலத்தில் வரவிருக்கின்ற இலங்கையர் அனைவருக்கும் முக்கியமானது என்பதை மதித்தல்.
- மனிதப் பாதுகாப்பை உறுதி செய்தல், பொறுப்புக்கூறக்கூடிய, வெளிப்படையான, மக்கள் மயப்படுத்தப்பட்ட பொது நிறுவனங்கள் மற்றும் மக்கள் சேவைப் பொறிமுறைகள் இருத்தலை உறுதி செய்தல்.

மேற்கூறப்பட்ட விழுமியங்களையே மக்கள் தங்கள் அனுபவங்கள் மற்றும் எதிர்பார்ப்புக்கள் பற்றிக் கலந்துரையாடும்போது முன்வைத்தனர். மக்கள் பொதுவாக எதிர்நோக்கிய எதிர்மறையான தாக்கங்களில் ஒற்றுமைத்தன்மை காணப்பட்டமை பிரயோசனமான காரணியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல் மக்கள் வெளிப்படுத்திய நேர்மையான விடயங்களிலும் ஒற்றுமைத் தன்மைகள் காணப்பட்டதையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது, இத் தெளிவானது ஒரே மாதிரியான பிரச்சனைகள் பல்வேறு வரலாற்று, சமூக, சுற்றுச்சூழல், அரசியல் மற்றும் ஏனைய சூழல் அடிப்படையில் கையாளப்படும்போது பல்வேறுபட்ட தீர்வுகள் எட்டப்படும் என்ற புரிதலை ஏற்படுத்த உதவுகின்றது. தீர்வுகளானது உள்ளூர் மக்களின் வாழ்க்கையின் அடிப்படையிலும் உள்ளூர் சூழலுக்கு ஏற்றவிதத்திலும் பெறப்படும். இதன் காரணமாகத்தான் மக்கள் எதிர்கொள்கின்ற பிரச்சனைகள் ஒரேமாதிரியானதாக இருந்தபோதிலும் மக்கள் முன்வைக்கின்ற தீர்வுகள் மற்றும் எதிர்பார்ப்புக்கள் வேறுபட்டதாக இருப்பதோடு இடத்திற்கு இடம் மாறுபட்டுக் காணப்படுகின்றது.



# 2. மக்களின் காணிப் பிரச்சனைகள்

## 2.1 காணிகளிலிருந்து வெளியேற்றப்படல்

காணியிலிருந்து வெளியேற்றப்படலானது வாழ்வாதாரம், சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக இயக்கங்கள், சுற்றுச்சூழல் சார்ந்த நீதி மற்றும் அடையாளம் ஆகியன தொடர்பான பன்முகப்படுத்தப்பட்ட ஒரு பிரச்சனையாகும். அதிக எண்ணிக்கையான காணியிலிருந்து வெளியேற்றப்படலானது இராணுவமயமாதல் மற்றும் நிறுவனமயப்படுத்தப்பட்ட வேறூன்றியுள்ள இன அடிப்படையிலான பாகுபாட்டுடன் தொடர்புபட்டது. இலங்கையின் பொருளாதார அபிவிருத்திப் பொறிமுறை, அதிகாரத் தோல்விகள், குறிப்பாக மலையக மக்கள் அல்லது மலைநாட்டு மக்களின் பொறிமுறை சார்ந்த புறந்தள்ளுகைகள் ஆகியன காணியிலிருந்து வெளியேற்றப்படலின் பிரதான பங்களிக்கும் காரணிகளாகும்.

2.1.1

**"நாங்கள் இப்போது காட்டில் சேலை ஒன்றை திரையைப் போன்று பயன்படுத்திக் கொண்டிருக்கின்றோம். இக் காணி எங்களது பரம்பரைக் காணியாகும். கடற்படையினர் தங்களது குடும்பத்தினைக் கொண்டுவந்து குடியமர்த்தி இங்கு வாழ்கின்றனர். அவர்களைக் காட்டில் வீட்டைக் கட்டிவிட்டு எங்களை வாங்கும்படி கூறுகின்றனர், இருப்பினும் எங்களது தேவையெல்லாம் எங்களது சொந்தக் காணி மீளளிக்கப்பட வேண்டும் என்பதேயாகும்"**

- முள்ளிக்குளத்தைச் சேர்ந்த ஒரு பங்குபற்றுநர்

யுத்தத்தின் காரணமாக கையகப்படுத்தபட்ட வடக்கு கிழக்கிலுள்ள காணிகள் இன்னமும் இராணுவத்தினரினதும் பொலிஸாரினதும் கட்டுப்பாட்டில் உள்ளது. அதன் காரணமாக அநேகமான இப் பிரதேசத்தில் முன்னர் வாழ்ந்துவந்த மக்கள் தங்களுடைய சொந்தக் காணிகளுக்கு திரும்பமுடியாத நிலைமை காணப்படுகிறது. முள்ளிக்குளம், கேப்பாப்பிளவு, யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி பிரதேசத்திலுள்ள இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகள் தமிழ் மக்களுக்கு உரித்தானது ஆகையால் காணிகள் மறுக்கப்படுவது இனஞ் சார்ந்த பாகுபாட்டுடன் அநேகம் தொடர்புபட்டது.

**"அரச அதிகாரிகள் இராணுவத்தினருக்கு பயந்து வேலைசெய்கின்றனர். இராணுவத்தினரை காணிகளிலிருந்து வெளியேறும்படி கூறாமல் 0.5 ஏக்கர் ஆக்கிரமிப்பிலுள்ள 8 குடும்பங்களுக்கு தலா 20 பேர்ச் காணி வீதம் தருவதாக உறுதியளிக்கப்பட்ட போதிலும் இன்னமும் அந்த உறுதி மொழியை பூர்த்தி செய்வதற்கான செயற்பாடுகளில் முன்னேற்றகரமான நிலையைக் காணமுடியவில்லை"**

- முல்லைத்தீவு பள்ளிக்குடியிருப்பைச் சேர்ந்த பங்குபற்றுநர்கள்.

**"எம்மை எல்லைகளிலுள்ள ஆபத்துக்களிலிருந்து காப்பாற்றவே இராணுவத்தினர் தேவையே அன்றி மாறாக எங்களுடைய சிறிய கிராமங்களை எடுத்துக்கொள்வதற்கல்ல"**

- கேப்பாப்பிளவைச் சேர்ந்த பங்குபற்றுநர்கள்

2.1.2

**“அரசாங்கமானது எங்களுடைய வணக்கத்தலங்கள், பாடசாலைகள் மற்றும் விவசாய நிலங்கள் உள்ளடங்கலான பிரதேசத்தை தேசிய பூங்கா என அறிவித்திருக்கின்றது. நாங்கள் எங்களுடைய விவசாய நிலங்களுக்கு செல்லும்போது பொலிஸார் கைது செய்கின்றனர் எனினும் ஒரு சிங்களவர் சென்று மரம் ஒன்றினை வெட்டும்போது அவர்களுக்கு காவல்துறை பாதுகாப்பு வழங்குகின்றது”**

- யாழ்ப்பாணம் பலாலி பிரதேசத்தைச் சேர்ந்த பங்குபற்றுநர்கள்.

**“நாங்கள் 40 வருட காலமாக இங்கு வாழ்கின்றோம் எனினும் தமிழர்கள் தற்போது ஒவ்வொருவரும் வந்து காணிகளைக் கேட்கின்றனர். கிராம சேவையாளர் மற்றும் பிரதேச செயலாளர்கள் சிங்களவர்களாக இருந்தால் இப் பிரச்சனைகள் முடிவுக்குவரும்”**

- முல்லைத்தீவிலுள்ள நீண்ட கால குடியிருப்பாளர்.

பிரதேச நிர்வாகத்தின் பெரும்பான்மை சிங்களவராக இருக்கும் போது சிங்களவர்களுக்கு சலுகைகளும், பிரதேச நிர்வாகத்தின் பெரும்பான்மை தமிழராக இருக்கும்போது தமிழர்களுக்கு சலுகைகளும், பிரதேச நிர்வாகப் பெரும்பான்மை முஸ்லீம்களாக இருக்கும்போது முஸ்லீம்களுக்கு சலுகைகள் வழங்கப்படுகின்றமை இலங்கையின் இனவாத சமூக அமைப்பின் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றது. இன ரீதியான பக்கச்சார்புடைய மீள் குடியேற்றம் மற்றும் இடமாற்றக் கொள்கைகளானது சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும், சிங்களவர்களுக்கும் முஸ்லீம்களுக்குமிடையில் முரண்பாடுகளை தோற்றிவிப்பதாகவே இருக்கின்றது. (உதாரணமாக கல்ஓயா திட்டம், மகாவலி அபிவிருத்தித் திட்டம், தீகவாபி மற்றும் அம்பாறையிலுள்ள நுரைச்சோலை சுனாமி வீட்டுத்திட்டம்). இவ்வாறாக நடைமுறைப்படுத்தப்பட்ட குடியேற்றங்கள் செயன்முறைகளில் காணப்பட்ட வெளிப்படைத்தன்மையின்மை காரணமாக சிறுபான்மைச் சமூகங்கள் மத்தியில் நம்பிக்கையற்ற நிலமையை தோற்றுவித்துள்ளது. அதிகாரிகளின் உள்ளக நோக்கானது புள்ளிவிபரங்களை முறையின்றிக் கையாளுவதன் மூலம் தங்களது வாக்களிப்புப் பலத்தை குறைப்பதற்கு முயற்சிக்கின்றனர் என எண்ணுகின்றனர்.

**“எங்களிடம் காணி அனுமதிப்பத்திரங்களும் பற்றுச்சீட்டுகளும் இருந்தபோதிலும் நாங்கள் மீண்டும் எமது இடங்களுக்குத் திரும்பும்போது வனத் திணைக்களத்தினர் கற்களைப் பதித்திருந்தனர். 3 வருடங்களாகியும் இன்னமும் காணிக்குள் நுழையமுடியாதுள்ளது”**

- மதுரன்வெளியைச் சேர்ந்த பங்குபற்றுநர்கள்

நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் எழுந்தவாரியாக திடீரென வனப் பாதுகாப்பு திணைக்களத்தினால் தனியார் காணிகளை வனவிலங்கு பாதுகாப்பு மற்றும் தொல்லியலுக்குரிய வனக் காணிகளாக எல்லை நிர்ணயம் செய்தல் மற்றுமொரு பிரச்சனையாகும். இச் செயற்பாடானது இன ரீதியாக மேற்கொள்ளப்படுகின்ற ஒரு செயற்பாடாகப் பார்க்கப்படுகின்றது. ஏனெனில் சிறுபான்மையினரை மையப்படுத்தியதான காணி அபகரிப்பு இடம்பெறுகின்றது. சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் தொல்லியல் பாதுகாப்பு போன்றவற்றை முன்னிலைப்படுத்தி மேற்கொள்ளப்படுகின்ற இனம் சார்ந்த முன்னெடுப்புக்கள் அநேகமாக சிறுபான்மையினரை காணிகளிலிருந்து வெளியேற்றுவதற்கு

வழிவகுக்கின்றது. இவ்வாறான விசாரணைக்குரிய விடயங்கள், உதாரணமாக முல்லைத்தீவு பிரதேசத்தில் தங்கள் காணிகளை இழந்த சிறுபாண்மை முஸ்லீம்கள் ஆணைக்குழுவின் கவனத்திற்கு கொண்டுவந்தனர். இதே மாதிரியான புகார்களை வில்பத்து மற்றும் திருகோணமலையிலுள்ள மக்களும் முன்வைத்தனர்

### 2.1.3 இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி மாதிரி

**"சீனித் தொழிற்சாலையை அமைப்பதற்காக எங்களுடைய வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டன. எங்களுக்கு வேறு காணிகளோ இழப்பீட்டுத் தொகையோ வழங்கப்படவில்லை. காணிகளுடன் வாழ்ந்த விவசாயிகளாகவிருந்து காணிகளற்ற விவசாயக் கூலி வேலையாட்களாக மாறியுள்ளோம்."**

-அம்பாறை வர்ணாத்துவட்டை பிரதேசத்தைச் சேர்ந்த பங்குபற்றுநர்கள்.

புதிய தாராள மயப்படுத்தப்பட்ட பொருளாதார மூலோபாயத்தந்திரமானது பரந்துபட்ட விதத்தில் கிராமப்புறங்களிலிருந்து மக்களை வெளியேற்றுதல் மூலம் தொழிற்துறை நடவடிக்கைகளுக்கு அக் காணிகளைப் பயன்படுத்தமுடியுமென்ற அடிப்படையற்ற நம்பிக்கையில் மேற்கொள்ளப்பட்டது. இதன் விளைவாக புதிதாக உருவாக்கப்பட்ட தொழிற்துறைகளில் மற்றும் வணிக பொருளாதார நடவடிக்கைகளில் காணிகளிலிருந்து வெளியேற்றப்பட்ட சமூகங்களிலிருந்து தொழிலாளர்கள் பாரிய அளவில் உருவாக்கப்படலாம் என எதிர்பார்க்கப்பட்டது. மொனராகலை, ஹம்பாந்தோட்டை, அநுராதபுரம் ஆகிய பிரதேசங்களில் அரசினால் ஏராளமான காணிகள் பல்தேசிய விவசாய தொழிற்துறைகளை ஏற்படுத்துவதற்கென வழங்கப்பட்டபோது, ஏழை விவசாயிகளின் காணிப் பங்கானது காலப்போக்கில் குறைவடைய ஆரம்பித்தது. காணிகளை காணிகளற்றவர்களுக்கு மீள வழங்குவதற்கான காணிக் கச்சேரிகள் அரிதாகவே கூடியதால் குடும்ப உறுப்பினர்கள் மத்தியில் ஏற்கனவே வழங்கப்பட்ட காணிகளே பங்கிடப்பட்டது.

அத்துடன், நகர மையக் காணிகள் மிகவும் தேடப்படுகின்ற சந்தைப் பொருளாக மாற்றமடைந்த நிலையில் நகரத்தில் வாழ்ந்துவந்த ஏழை மக்கள் தங்களது நிலங்களை விடுத்து வெளிநகர எல்லைகளுக்கு அல்லது நகர எல்லையில் உருவாக்கப்பட்ட தொடர்மாடி கட்டிடத்தொகுதிகளுக்கு பலவந்தமாக நகர்த்தப்பட்டனர். காணி விலை மற்றும் வாடகை அதிகரிப்பானது காணியற்றவர்களுக்கும் வீடுகளற்றவர்களுக்கும் பாரிய பிரச்சனையை ஏற்படுத்தியதோடு அவர்கள் நகரங்களிலிருந்து வெளியேறுவதற்கு உந்துகையாக அமைந்தது. (கொழும்பு மற்றும் நீர்கொழும்பு ஆகிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட சம்பவக்கற்கைகள்). நகரத்திலிருந்த ஏழை மக்களை தங்களது குடியேற்றங்களிலிருந்து தொடர்மாடி வீட்டுத் தொகுதிகளுக்கு நகர்த்தியதானது வெறுமனே அவர்களது காணி இழப்பினை மாத்திரமன்றி அவர்களது வாழ்வாதாரம் மற்றும் பராமரிப்பு வலையமைப்பையும் பாதித்துள்ளது

இவ்வாறாக நாடு பூராகவும் அபகரிக்கப்பட்ட காணிகள், சுற்றுலாத்துறை சார்ந்த கட்டுமானத்திற்கும் பாரிய அபிவிருத்தித் திட்டங்களுக்குமென வழங்கப்பட்டது. சுற்றுலாத்துறை சார்ந்த வெளியேற்றங்களானது குறிப்பாக மல்வத்து ஓயா பிரதேசங்களில் ஆற்றின் கீழ்மட்டத்திலுள்ள கிராமங்களில் வாழ்ந்துவந்த மக்கள் வெளியேற்றப்பட்டு வளர்ந்து வருகின்ற சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கென காணிகள் வழங்கப்பட்டது. இப்பிரதேசத்தில் வாழ்ந்த மக்களுக்கு உத்தியோகபூர்வ அறிவிப்பாக வெள்ள அபாயம் குறிப்பிடப்பட்டிருந்தது. பண்டாரவளை,

ஹம்பாந்தோட்டை, கொழும்பு, நீர்கொழும்பு, சம்பூர், அறுவைக்காடு(2) பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட வெளியேற்றங்களானது அதிவேக நெடுஞ்சாலை, துறைமுகங்கள், நீர்ப்பாசன வசதிகள் போன்ற இன்னோரென்ன பாரிய அபிவிருத்தித் திட்டங்களுடன் தொடர்புபட்டது. இவ்வாறான பாரிய அபிவிருத்தித் திட்டங்களானது அரசின் உயர்மட்ட மையப்படுத்தப்பட்ட அலகினால் தீர்மானிக்கப்பட்டு முன்னெடுக்கப்படுவதால் பிரதேச மக்களுக்கு தீர்மானமெடுக்கும் பொறிமுறையில் பங்குபற்றுவதற்கான வாய்ப்புக்கள் கிடைப்பதில்லை.

### 2.1.4 அதிகாரத்துவத் தோல்விகள்

**"அரசாங்கத்தின் பல்வேறுபட்ட திணைக்களங்கள் காணி அபகரிப்பு மற்றும் தொடர்புபட்ட விடயங்களில் ஈடுபட்டுள்ளது" ஒரு நபர் தனது காணிப்பிரச்சனை தொடர்பாக ஒரு திணைக்களத்தை தீர்வைப்பெறுகின்ற நோக்கில் அணுகும்போது அவர்கள் ஏனைய திணைக்களங்களுக்கு அனுப்பப்படும்போது, அவர்கள் யாருக்கும் தமிழ் மொழியில் பேசமுடியாது. காணிப்பிரச்சனைகளைக் கையாளுவதற்கு அனைத்து திணைக்களங்களும் ஒன்றிணைக்கப்பட்ட ஒருவரை நியமித்தல் வேண்டும்"**

- கிளிநொச்சியைச் சேர்ந்த ஒரு பங்குபற்றுநர்.

நிர்வாக அலகுகளின் வினைத்திறனின்மை மற்றும் அலட்சியத்தின் காரணமாக தங்களது குறைகளை புறக்கணிப்பதோடு பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் பலம் பொருந்தியவர்களுடைய தேவைகளை முன்னிலைப்படுத்துவதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். காணி தொடர்பாக பல்வேறுபட்ட விடயங்களுடன் தொடர்புடைய திணைக்களங்களுக்கிடையில் ஒருங்கிணைப்பு இல்லை என மக்கள் முறைப்பாடு செய்கின்றனர். இதன் விளைவாக ஒரு பிரதேச செயலகம் காணி அனுமதிப்பத்திரத்தை வழங்கும்போது மற்றைய திணைக்களம் அக் காணிக்குள் நுழைவதைத் தடைசெய்கின்றது. மக்களின் காணிப்பிரச்சனைக்கான தீர்வானது இத் திணைக்களங்களுக்கிடையில் காணப்படுகின்ற முரண்பாடுகள் காரணமாக பெரியளவில் பாதிப்பிற்குள்ளாகின்றது. சிக்கலானதும் குழப்பத்தை ஏற்படுத்துவதுமான அதிகாரத்துவ நடவடிக்கைகள் காரணமாக காணியற்ற மக்கள் காணி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்கும், தங்களது உரிமைகளை அனுபவிப்பதிலிருந்தும் பிழையாக வழிநடத்தப்படுகின்றனர்.

**"அரச ஊழியர்கள் தங்களது கடமைகளை சரிவர செய்வார்களாயின் மக்களாகிய எங்களுக்கு எவ்விதப் பிரச்சனைகளும் இல்லை"**

- முல்லைத்தீவு பிள்ளைக்குடியிருப்பைச் சேர்ந்த பங்குபற்றுநர்கள்.

நிர்வாகம், மக்கள் தங்களது காணி உரிமையை அனுபவிப்பதற்கான உரிமையை சரியான ஆவணப்படுத்தலின்மை அல்லது அவர்களுடைய ஆவணங்கள் தொலைந்துவிட்டன போன்ற சாக்குப் போக்குகளைக் கூறி மறுதலிக்கின்றனர். மேலும் உரிமையாளர் இல்லாத நிலையிலும் காணி அனுமதிப்பத்திரங்கள் மற்றும் மானியக் காணிகள் சட்டவிரோதமாக மாற்றப்படக் கூடியதென்பதால். ஒவ்வொரு வருடமும் காணி அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பிக்கவேண்டும் என்ற விடயம் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பிலான மக்களின் தெளிவின்மையை நிர்வாகத்தினர் சாதகமாகப் பாவிக்கின்றனர் முல்லைத்தீவிலுள்ள மக்கள் தங்களது தற்காலிகக் காணி அனுமதிப்பத்திரங்களை நிரந்தரமான அனுமதிப்பத்திரமாக மாற்றமுடியாமல் உள்ளனர்.

“அரசு தற்போதுள்ள சட்டங்களை சரிவர நடைமுறைப்படுத்துமானால் 80% த்திற்கு அதிகமான காணிப்பிரச்சனைகள் தீர்க்கப்படும்.”

- வவுனியா அமைதியகத்தைச் சேர்ந்த பங்குபற்றுநர்கள்

1935 இல் அறிமுகப்படுத்தப்பட்ட காணி மேம்பாட்டு கட்டளைச் சட்டமூலமானது காணிகளற்ற விவசாயிகளின் பிரச்சனைகளை வரையறுக்கப்பட்ட விதத்தில் நிலக்கால அமைப்பு முறைமை மூலம் தீர்ப்பதற்கென உருவாக்கப்பட்டது. இச் சட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு முதற்கட்டமாக அனுமதிப்பத்திரத்தின் மூலமும் அடுத்தகட்டமாக மானியங்கள் மூலமும் வழங்கப்பட்டது. இக் கட்டளைச் சட்டமூலமானது காணி அனுமதிப்பத்திரங்கள் ஆண் வழியில் மாத்திரம் மாற்றப்படமுடியும் என்ற காரணத்தினால் பெண்களை நேரடியாக பாகுபடுத்திக் காண்பிப்பதோடு நடைமுறைப்படுத்தலின் மூலம் இதனை மேலும் உறுதிசெய்கின்றது. காணி மேம்பாட்டு உத்தியோகத்தருக்குக் கீழ் வழங்கப்பட்ட காணி அனுமதிப்பத்திரங்கள், ரத்து செய்யப்படக்கூடியதும் அந்நியப்படுத்த முடியாததுமாகும். மானியக் காணிகள் அந்நியப்படுத்தக்கூடியதாக இருந்த போதிலும் அவை கடுமையான நிபந்தனைக்கு உட்படுத்தப்படுகின்றது. இவ்வாறான காணிகள் மாவட்ட செயலகங்களுக்

கூடாகவே வழங்கப்படுகின்றது. இருப்பினும் இப் பொறிமுறையானது தொடங்கிய காலத்திலிருந்து பல்வேறுபட்ட நிர்வாகப் பிரச்சனைக்குள்ளாகி வருகின்றது. மக்களின் கருத்துக்கணிப்பு ஆணைக்குழுவில் இனரீதியான பக்கச்சார்புடைய காணி வழங்கல் மற்றும் குடியிருப்பு கொள்கைகளின் உருவாக்கம், அதிகாரத்துவ சிவப்புப்பட்டி நடைமுறைகள், இலஞ்சம், காணிச் சட்டத்திற்குட்பட்ட காணிகளின் சட்டவிரோத உரிமை மாற்றங்கள், தொடர்ச்சியான மற்றும் எழுந்தமானதான காணிக்கச்சேரி நடைமுறைகள் ஆகியன முன்வைக்கப்பட்ட பிரதான பிரச்சனைகளாகும்.



### 2.1.5. மலையக மக்கள் அல்லது மலை நாட்டு மக்களின் புறந்தள்ளுகை

**“எனக்கு ஒரு காணி உறுதி வழங்கப்பட்டது. நான் தோட்ட உரிமையாளரிடம் சென்று உறுதியைக் காட்டி எனக்காக ஒதுக்கபட்ட காணியைக் கேட்ட போது”அவ்வாறான உங்களுடைய காணியை நீங்களே தேடிக்கொள்ள வேண்டும் “என அவர் கிண்டலாகக் கூறினார். நாங்கள் அமைச்சரிடம் வீடுகளைக் கேட்டபோது உங்களுக்கு தேயிலையும் கழிப்பறைகளும் வழங்கப்பட்டுள்ளது, உங்களுக்கு எதற்காக வீடுகள் தேவை?”**

- ஹட்டன் (டி) பகரந்த தோட்டத்தைச் சேர்ந்த ஒரு பங்குபற்றுநர்

தோட்ட மக்களின் வாழ்க்கை தொடர்பில் தீர்மானமெடுக்கும் செயன்முறைகளிலிருந்து பொறிமுறை ரீதியான புறந்தள்ளுகை மற்றும் உரிமை மறுக்கப்பட்டு மதிப்பளிக்காமையின் காரணமாகவும் அவர்களது வாழ்க்கைத்தரம் பெருமளவில் பாதிப்பிற்குள்ளாகியது. கொள்கை ரீதியாக தோட்ட மக்களுக்கு காணிகளை வழங்குவதற்கான தீர்வுகள் முன்வைக்கப்பட்டாலும் அதிகாரத்துவத் தோல்விகள் மக்களுக்கான காணியற்ற நிலைமையை மேலும் உறுதிப்படுத்தியது. தோட்ட மக்களின் பிரதான பாரிய பிரச்சனையான பிணைக்கப்பட்ட தொழிலாளித்துவம் மற்றும் காணிகளற்ற தன்மையுடன் இணைக்கப்பட்டிருந்தாலும் தோட்டத்தை விட்டு வெளியேறி மாற்று வாழ்வாதாரத்தை தேடிச்சென்றவர்களுக்கு காணிகள் இல்லாமலிருப்பினும் கூட இத்திட்டத்திற்கான அனுகுகை கிடைக்கப்பெறமாட்டாது. இத்திட்டத்தினூடாக தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட காணிகள் மண் சரிவு மற்றும் ஏனைய இயற்கை அனர்த்த அபாயங்கள் நிறைந்த மக்கள் குடியிருக்க முடியாத பிரதேசங்களிலேயே வழங்கப்பட்டுள்ளது என கருத்துக்கணிப்பு ஆணைக்குழுவிடம் மக்கள் தெரிவித்தனர். முதலாவதாக ஆரம்பிக்கப்பட்ட **லூல்கண்டுர** தேயிலைத் தோட்டத்தின் உரிமையை தொழிலாளர்களிடம் கையளித்து காணிகள் அவர்களுக்கிடையில் பிரித்து வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்துகின்றனர்.



### 2.1.6 சாதி அடிப்படையிலான பொறிமுறை ரீதியான புறந்தள்ளுகை

**“இக் காணிகள் தொகுதிகளாக வழங்கப்பட்டது. காணிகள் சாதி அடிப்படையில் வழங்கப்பட்டது. வெளிப்பிரதேசம் தாழ்ந்த சாதியைச் சேர்ந்தவர்களுக்கும் அதன் பின்னர் முஸ்லீம்களுக்கும் வழங்கப்பட்டன”**

- முல்லைத்தீவு முறிப்பைச் சேர்ந்த பங்குபற்றுநர்கள்.

உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்கென மாங்குளம் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ளது நீதவன் நலன்புரி நிலையம். அங்கு 61 குடும்பங்கள் தற்போது வசித்துவருகின்றனர். வலிகாமம் வடக்கு பல்வேறு கிராமங்களிலிருந்து 1990 இல் இடம்பெயர்ந்த 25 குடும்பங்கள் தற்போதுவரை இந் நிலையத்தில் வாழ்ந்துவருகின்றனர். இந்த நலன்புரி நிலையங்களில் இடம்பெயர்ந்து வாழ்கின்ற அனேகமான குடும்பங்கள் ஒடுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்த சமூகத்தினராவர். மழைக் காலங்களில் இந் நலன்புரி நிலையம் அமைந்துள்ள நிலப்பரப்பு வெள்ளப்பெருக்கிற்குள்ளாகின்றது. கழிப்பறை வசதிகள் தேவையான அளவைவிடக் குறைவாகவே இந் நிலையங்களில் காணப்படுகின்றன. நலன்புரி நிலையங்களில் வாழ்கின்ற சில முன்னாள் பெண் போராளிகள் கருத்துக்களை முன்வைக்கும்போது ஏனைய பெண்கள் தங்களது தலையைக் குனிந்துகொண்டதன் மூலம் அவர்கள் கிராமத்தவர்களால் தங்களுடைய சாதி காரணமாக களங்கத்திற்குள்ளாகின்றனர் என்பது வெளிப்பட்டது. சில வேளைகளில் இந் நிலையங்களில் வாழும் குழந்தைகள் தங்களது சாதிக் குறைபாடு காரணமாக கிராமத்தவர்களால் இழிவுபடுத்தப்படுகின்றனர்.

சாதி அடிப்படையிலான காணி உரிமை தொடர்பான புறக்கணிப்புக்கள் நூற்றாண்டு கால வரலாற்றைக் கொண்டிருப்பதோடு இன மோதல் மற்றும் இராணுவமயமாதலுக்கு இது முற்பட்டதாகும். இராணுவத்தின் கட்டுப்பாட்டில் காணப்படுகின்ற காணிகளை அவர்கள் விடுவித்தாலும் கூட நீதவன் நலன்புரி நிலையங்களில் வாழுகின்ற மக்கள் மீளச் சென்று அவர்கள் ஏற்கனவே வாழ்ந்த அக்காணிகளைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்புது உறுதியற்றதாகவே காணப்படுகின்றது காரணம் அப்பிரதேசங்களிலுள்ள காணிகள் இம் மக்களுக்கு சொந்தமானவையல்ல. தங்கேஸ் பரஞ்சோதி அவர்கள் எழுதியுள்ள “யாழ்ப்பாணத்திலுள்ள சாதிகளும் முகாம்களிலுள்ள மக்களும்” என்ற ஆய்வுக்கட்டுரையில் இவ்விபரங்கள் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.[2] இவ் ஆய்வுக் கட்டுரையானது 2015 இல் எழுதப்பட்டிருந்தாலும் முகாம்களில் இடம்பெயர்ந்து வாழும் இம்மக்களின் நிலையானது பெருமளவில் மாற்றமடையவில்லை.

தங்கேஸ் பரஞ்சோதி இவ் ஆய்வுக்கட்டுரையில் அவதானித்ததற்கிணங்க தமிழ் தேசிய அரசியல்வாதிகள் தொடர்ச்சியாக இடம்பெயர்ந்து வாழும் மக்களின் காணியின்மைப் பிரச்சனைக்கு சாதிப் பின்புலமே காரணமென்று தெரிந்தும் அதனை முன்னுரிமைப்படுத்தாமலிருக்கின்றனர். வடக்கில் வாழும் சாதி குறைந்த மக்களின் காணியின்மையானது அவர்களது சமூக, பொருளாதார கலாச்சார இருப்புக்களை இன்னமும் ஆபத்தான நிலமைக்குள்ளாக்குகின்றது. சாதியானது தமிழ் மக்களின் உள்ளகப் போர், உள்நாட்டு இடப்பெயர்வுகள் மற்றும் பல்வகைப்படுத்தப்பட்ட இராணுவமயமாதல் போன்றவற்றின் விடயங்களில் முக்கிய பங்கினை வகிக்கின்றது.. இராணுவமயமாதலை இல்லாதொழித்தல் வட மாகாணத்தின் இன நல்லிணக்கம் மற்றும் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கு அவசியமானதாக இருக்கின்ற போதிலும் இது மாத்திரம்

---

2. Thanges, Paramsothy. “Caste and Camp People in Jaffna: Land Ownership and Landlessness.” Colombo Telegraph, 8 Dec. 2015, https://www.colombotelegraph.com/index.php/caste-camp-people-in-jaffna-landownership-landlessness/

வடக்கிலுள்ள சாதி குறைவான மக்களின் காணியின்மைப் பிரச்சனையை தீர்க்கப்போவதில்லை. குறைந்த சாதிகளைச் சேர்ந்த இடம்பெயர்ந்த மக்கள் தொகையானது இடம்பெயர்வு ஆரம்பித்த காலத்தோடு ஒப்பிடுகையில் தற்போது அதிகரித்துள்ள நிலையில் காணப்படுகின்றது. 1990 களுடன் ஒப்பிடுகையில் இன்று அதிகமான மக்கள் காணிகளுக்கான தேவைப்பாட்டுடன் உள்ளனர்.

முகாமிலிருந்த சிலர் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள கிராமப்புறங்களிலுள்ள காணிகளில் தங்களது உரித்து இல்லையென்பதன் மூலம் அவர்கள் தற்போது வாழ்கின்ற பிரதேசங்களில் அல்லது சிறந்த கல்விக்கான அணுகுகை, சுகாதார சேவைகள் மற்றும் போக்குவரத்து சேவைகள் திறம்படக்காணப்படுகின்ற பிரதேசங்களில் வழங்கப்படவேண்டுமென எதிர்பார்க்கின்றனர். தங்களது குழந்தைகளுக்கு நல்ல கல்வியை வழங்குவதற்கு சிறந்த பாடசாலைகள் காணப்படுகின்ற பிரதேசங்களில் வாழ விரும்புகின்றனர். இவ் எதிர்பார்ப்பானது இடம்பெயர்ந்து வாழ்கின்ற அனைத்து குடும்பங்களும் தாங்கள் ஏற்கனவே வாழ்ந்த பிரதேசங்களுக்கு இடம்பெயர்ந்த காலத்திலிருந்து திரும்புவதை தீர:வாக எப்பொழுதும் எண்ணவில்லை. மேலும் குறைந்த சாதியைச் சேர்ந்த இடம்பெயர்ந்து வாழும் மக்களின் கோரிக்கைகளானது அவர்களுக்கான காணிப் பகிர்ந்தளிப்பானது தங்களது சமூக பொருளாதார முன்னெடுப்புக்களை எதிர்காலத்தில் பாதிப்பிற்குள்ளாக்கக்கூடும் என்பதனை வெளிக்கொண்டுவந்தனர்.



## 2.2 வாழ்வாதார இழப்புக்களும் சமூகப் பாதுகாப்பும்

அறிக்கையின் இப்பகுதியானது சமூகங்கள் தங்களது நிலத்திலிருந்து அகற்றப்படும்போது அவர்களது வாழ்வாதாரத்தில் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் குறித்து கவனஞ் செலுத்துகின்றது. அத்துடன் இவ் அறிக்கையானது பரந்த மட்டத்தில் மக்கள் தங்களது வாழ்வாதாரத்தை நடைமுறைப்படுத்தும் போது அணுகுகையை இழத்தல் மற்றும் வாழ்வாதாரத்திற்குத் தேவையான வசதிகளை வழங்குகின்ற நிறுவனங்களுடனான தொடர்பை இழத்தல் இதற்கான காரணங்களாகும்.

இப்பகுதியானது மக்களின் வாழ்வாதாரத்தில் ஏற்படுகின்ற பாதிப்புக்களுடன் தொடர்புட்டதாக 4 உப அலகுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. யுத்தம், போராட்டம் மற்றும் இராணுவமயமாதல், அதிகாரத்துவத் தோல்விகள், பாரிய அபிவிருத்தித் திட்டங்கள், விவசாய அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களை உருவாக்குதல் போன்றவையாகும். 4 வது உப அலகானது மலையக தோட்டத்துறையை மையப்படுத்தியதான மக்களின் வாழ்வாதாரத்திற்கும் அவர்களது காணி உரிமை தொடர்பான நிலைக்குமுள்ள தனித்துவமான தொடர்பினையும் வெளிப்படுத்திக் காண்பிக்கின்றது.

### 2.2.1 யுத்தம், போராட்டம் மற்றும் இராணுவமயமாதல்

இப்பகுதியானது போராட்டத்தினால் ஏற்படுகின்ற பிரச்சனைகள் மற்றும் அதிகரித்துவரும் இராணுவமயமாதலினால் உருவாகின்ற பிரச்சனைகள், நேரடியாக வாழ்வாதாரத்தில் தாக்கஞ் செலுத்துவதை அல்லது வாழ்வாதாரத்தைப் பாதிக்கின்ற காரணிகளின் முன்னோடியாக செயற்படுவதை விரிவாகக் கூறுகின்றது.

**“தற்போது யுத்தம் இல்லாத நிலையில் எங்களுக்கு காணிகளை வழங்குவதைத் தவிர்க்க முடியாது”**

- கேப்பாபிளவு பீரதேசத்தைச் சேர்ந்த பங்குபற்றுநர்கள்.

இராணுவம் மக்களின் கணிசமான அளவு காணிகளை அவர்கள் போரின் காரணமாக இடம்பெயர்ந்த போது தம்வசப்படுத்தி வைத்துள்ளனர். இராணுவத்தின் ஆக்கிரமிப்பானது மக்கள் தங்களது பாரம்பரிய காணிகள் மற்றும் காணியோடு தொடர்புபட்ட வாழ்வாதாரத்தை மேற்கொள்வதற்கு மறுக்கப்படுகின்றனர். வட்டுவால் (முல்லைத்தீவு) பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் இடப்பெயர்வு காரணமாக தங்களது காணி அனுமதிப்பத்திரங்களை இழந்துள்ளனர். அத்துடன் கடற்படையினரும் இக்காணிகளை தம்வசப்படுத்தியுள்ளனர். (குறிப்பாக மக்கள் தங்கி வாழ்ந்த ஐஸ் தொழிற்சாலை). காணி கையகப்படுத்தல்களின் காரணமாக மக்கள் தங்களது காணிகளுக்குச் சென்று கடற்படையினரின் அனுமதியின்றி தங்களது மீன்பிடி வாழ்வாதாரத்தை முன்னெடுக்க முடியாமல் உள்ளனர்.

சிலாவத்துறையைச் சேர்ந்த மீன்பிடித் தொழிலை மேற்கொள்கின்ற மக்களும் வட்டுவால் மக்களின் வரலாற்றைப் போலவே தமது அனுபவங்களை முன்வைத்தனர். கிளிநொச்சியைச் சேர்ந்த மலையாளர்குளம் அல்லது ஐயர்குளம் மக்கள் தாங்கள் மீனபிடியை வாழ்வாதாரமாகக் கொண்டு செயற்பட்டுவந்த பிரதேசத்திலிருந்து போரினால் இடம்பெயர்நதனர். முள்ளிக்குளத்திலும் கரையோரக் கிராமமாக காயாக்குழியிலும் இராணுவத்தின் காணி ஆக்கிரமிப்புக் காரணமாக கிராமத்திலிருந்தவர்கள் காடுகளை நோக்கி நகரவேண்டி ஏற்பட்டதோடு தங்களது வாழ்வாதாரமான மீன்பிடியிலும் ஈடுபடமுடியாமற்போனது. மேலும் அண்மையில் அமைக்கப்பட்ட ஒரு ஆடைத்

தொழிற்சாலையானது மாற்று வாழ்வாதாரமொன்றை வழங்கினாலும் கூட அது அதிக தொலைவிலிருக்கின்றது.

இராணுவம் மக்களது காணிகளுக்குச் சென்று தங்களது வாழ்வாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதித்தாலும் மக்களுக்கான பல்வேறுபட்ட நிபந்தனைகளின் அடிப்படையிலேயே அனுமதிக்கின்றனர். சன்னாரில் (மன்னார்) பிடிக்கப்பட்டிருந்த ஒரு பகுதிக் காணி விடுவிக்கப்பட்டு ஒரு மீன்பிடிக்குழு அவற்றிற்கான அனுமதிப்பத்திரங்களைப் பெற்று கடற்படையினரின் நிபந்தனைகளுக்குக் கட்டுப்படுவதாக இணங்கி மீன்பிடியை மேற்கொள்கின்றனர்.

பள்ளிமுனையில் (மன்னார்) ஒரு சமூகத்தினரது காணிகளை கடற்படையினரும் பொலிஸாரும் 1990 இலிருந்து ஆக்கிரமித்துள்ள நிலையில் இவ்விரு நிறுவனங்களும் அவ்விடங்களிலிருந்து வெளியேறமாட்டார்கள் ஏன்ற பய எண்ணத்தில் அவர்கள் வாடகை வழங்குவதாகக் கூறியும் அவற்றை மக்கள் பெற்றுக்கொள்ளாதிருக்கின்றனர். எனினும் இவ்வாறு வாடகையைப் பெறமறுப்பதனால் தங்களது காணி உரிமையை உறுதிப்படுத்த முடியாத நிலையில் நலன்புரி வேலைத்திட்டங்களில் உள்வாங்கப்பட்டு சமூக வரப்பிரசாதங்களைப் பெற முடியாதவர்களாயுள்ளனர். தங்களது சொந்தக் காணிகளை அணுகமுடியாத நிலையில் தங்களது உறவினர்களுடன் தங்கியிருக்கவேண்டிய கட்டாயத்தின் காரணமாக தாங்கள் விரும்பிய வாழ்வாதாரச் செயற்பாடுகளை முன்னெடுக்கமுடியாத நிலையிலுள்ளனர். அவர்களுக்கான கரையோர நிலப்பகுதியானது அவர்களுக்குரிய மீன்படி வசதியைப் பெற்றுத்தந்தது. எனவே மாற்றீட்டு காணிகளை ஏற்றுக்கொள்வதென்பது அவர்கள் தொழிலுக்காக பிரயாணஞ் செய்யவேண்டிய தூரத்தை அதிகரிக்கின்றது.

இராணுவத்தினர் மாத்திரமன்றி யுத்தத்தின் போது பல்வேறுபட்ட செயற்பாடுகளில் ஈடுபட்ட ஏனைய ஆயுதக்குழுக்களும் மக்களை அவர்களது காணிகளிலிருந்து வெளியேற்றியதால் மக்கள் தங்களது பாரம்பரிய வாழ்வாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தடையாக அமைந்தது. முறிப்பு மற்றும் குட்டியாக்கும்பம் கிராமத்தில் கிராமத்தவர்கள் இந்திய அமைதி காக்கும் படையின் செயற்பாடுகள் காரணமாக வெளியேறி மீண்டும் இரண்டாவது கிராமத்தின் காணிக்கு வந்த முஸ்லீம் மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளினால் வெளியேற்றப்பட்டு தமிழ் மக்களை அக்காணிகளில் குடியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. இது முஸ்லீம் தலைவர்களின் தலையீடு காரணமாகத் தடுத்து நிறுத்தப்பட்டது. அவர்களுடைய மீள் குடியேற்றத்தின் பின்னரும் மக்கள் பல்வேறுபட்ட சிக்கல்களை அனுபவித்ததோடு அரசியல்வாதிகள் மேற்கொண்ட புகாரின் அடிப்படையிலே அவர்கள் வாழுகின்ற காணிகள் வனத்திணைக்களத்திற்குச் சொந்தமானதென உரிமை கோரப்பட்டது.. வவுனியாவில் தமிழீழ விடுதலை இயக்கம் (TELO) 1998 முஸ்லீம் மக்களிடமிருந்து காணிகளை பலவந்தமாக பெற்றுக்கொண்டு வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த தமிழ் மக்களுக்கு முகாம்களை அமைப்பதற்குப் பாவித்தனர். இவ்வாறு இடம்பெயர்ந்த முஸ்லீம் மக்கள் இன்னமும் தங்களது காணிகளிலிருந்து வெளியேறிக் காணப்படுகின்ற நிலையில் அவர்கள் குடியிருந்த போதில் தென்னை மற்றும் மாங்காய் மரங்களை நாட்டிய அவர்கள் தற்போது வேறொரு இன மக்கள் அக்காணிகளில் வசித்தல் மூலம் தங்களுக்கு இழைக்கபட்டுள்ள அநீதி தொடர்பில் கருத்துத் தெரிவித்தனர்.

இராணுவத்தின் தற்போதைய காணி ஆக்கிரமிப்பானது மக்களது வாழ்வாதாரத்தைப் பாதிப்பிற்குள்ளாக்குவதோடு, தற்போது யுத்தத்திற்குப்[3] பின்னரும் அவை விஸ்தரிக்கப்பட்டு வருகின்றன.. இது முல்லைத்தீவு, திருகோணமலை மற்றும் கேப்பாபிளவு ஆகிய பிரதேசங்களில்

3. Human Rights Watch, "Why can't we go home?" - Military occupation of land in Sri Lanka - pg. 37 - https://www.hrw.org/sites/default/files/report_pdf/srilanka1018_web2.pdf

அவதானிக்கப்பட்டது. முல்லைத்தீவில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள சில பிரதேசங்கள் சிறந்த மீன்பிடி பிரதேசங்களாக இருந்தபோதிலும் அவற்றிற்குச் செல்வதற்கான அனுமதி மறுக்கப்படுகின்றது. முல்லைத்தீவைச் சேர்ந்த தமிழ் மக்கள் இராணுவம் தங்களது காணிகளை ஆக்கிரமித்துள்ளதோடு அக்காணிகள் கடற்கரையில் மீன் கூடுகளைக் கொண்டுள்ளதோடு வளமான மீன்பிடி பிரதேசங்களுக்கான அனுகுதலும் உள்ளவையாகும். காலப்போக்கில் இக்காணிகளின் உரிமையானது சிங்களவர்களுக்கு மாற்றி வழங்கப்பட்டுள்ளது. இந்த சிங்கள மீன்பிடிப்பாளர்கள் சட்டவிரோதமான மீன்படி முறைகளை இரகசியமாகப் பின்பற்றுவதாக இப்பிரதேச மக்கள் நம்புகின்றனர். மீள் குடியேற்றங்களுக்குப் பாதுகாப்பற்ற காணிகளென முன்னர் மக்கள் வாழ்ந்த காணிகள் வரையறுக்கப்பட்டு பின்னர் அவை இராணுவ முகாங்களாக மாற்றப்பட்டுள்ளமை தொடர்பில் யாழ்ப்பாணத்திலுள்ள சில எழுத்துருவாக்கங்கள் பேசுகின்றன. மயிலிட்டி பகுதியில் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்தில் ஐஸ் தொழிற்சாலை ஒன்றும் காணப்படுகின்றது.

பாணம பிரதேசத்தில் இராணுவம் பலவந்தமாக காணிகளை மூன்று கிராமங்களிலிருந்து கையகப்படுத்தியுள்ளது. இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதத்தில் மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்ட நிலையில் ஒரு பகுதிக் காணி விடுவிக்கப்பட்டது. மற்றைய பகுதி கடற்படை மற்றும் விமானப்படைத் தளங்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது, எனினும் தற்போது அந்த இடத்தில் இராணுவம் ஒரு சுற்றுலா விடுதியை அமைத்துள்ளது.

**"கடற்படையினர் எங்களது காணிகளில் பயிர்ச்செய்கைகளை மேற்கொண்டு அவற்றை எங்களுக்கே விற்கின்றனர். அவர்கள் சம்பளத்துடன் வியாபாரத்தின் மூலமும் ஆதாயத்தினைப் பெற்றுக்கொள்கின்றனர் ஆனால் எங்களுக்கு இரு வழிமுறைகளுமில்லை"**

- சிலாவத்துறையிலிருந்து வந்த பங்குபற்றுனர்.

இராணுவத்தினர் உள்ளூர் பொருளாதார நடவடிக்கைகளில் பங்குபற்றுவதன் மூலம் பனை மரம் போன்ற உள்ளூர் வளங்களை பெற்றுக்கொள்வதைத் தடுத்து தங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்றனர் என்ற புகாரை முல்லைத்தீவில் வாழ்கின்ற மக்களும் கூறியிருந்தனர். அத்துடன் இராணுவத்தினர் மாடுகளை விற்பது தொடர்பிலும் பங்குபற்றுநர் கருத்துத் தெரிவித்திருந்தனர். நெல் சேமிப்பு நிலையமும் மக்கள் படகுகளை தரித்து வைக்கும் கரையோரப் பிரதேசத்தையும் இணைத்து தற்போது இராணுவத்தினரால் ஒரு சுற்றுலா விடுதி நடாத்தப்படுகின்றது. சிலாவத்துறையிலும் முள்ளிக்குளத்திலும் இராணுவத்தினர் விவசாயத்தில் ஈடுபட்டு அவற்றின் உற்பத்திகளை சந்தையில் ஒரு நிரந்தரமான இடத்தை வைத்துக்கொண்டு விற்பனை செய்வதன் மூலம் உள்ளூர் பொருளாதாரத்தில் பங்குபற்றிவருவதாக மக்கள் விசனம் தெரிவித்தனர். கிளிநொச்சியில் இடம்பெற்ற கருத்துக்கணிப்பு நிகழ்வில் கலந்துகொண்ட மக்கள் அங்கும் இராணுவத்தினர் மக்களின் காணிகளில் புதிய சுற்றுலா விடுதிகளை அமைத்து உள்ளூர் பொருளாதாரத்திலும் பங்குபற்றுகின்றனர் என தெரிவிக்கப்பட்டது.

### 2.2.2 அதிகாரத்துவத் தோல்விகள்

அதிகாரத்துவத்திலுள்ள பல்வேறு ஒழுங்கீனங்கள் காரணமாக மக்கள் தங்களது காணிகளைப் பெற்று வாழ்வாதாரத்தில் ஈடுபடுவது தடுக்கப்படுகின்றது. மேலும் அதிகாரத்துவ நடைமுறைகள் காரணமாக பாதுகாப்பின்மை உறுதி செய்யப்படுவதோடு காணியின் உரிமை மற்றும் உடைமை தொடர்பில் உறுதியற்ற தன்மைகள் காணப்படுகின்றன.

**பற்றாக்குறையான அறிவைப் பாவித்து சுரண்டுதல்**

அரச காணியை வைத்திருப்பது தொடர்பில் மக்கள் மத்தியில் காணப்படுகின்ற தொழில்நுட்ப அறிவுக் குறைவினை பாவித்து அநேகமான நிர்வாக அமைப்புக்கள் அவர்களை சுரண்டுவதாகத் தெரியவருகின்றது. வாய்மூல வார்த்தைகளின் மூலம் வழங்கப்படுகின்ற உறுதி மொழி மக்களை பிழையாக வழிநடத்துவதோடு பின்னர் அவர்களால் அவற்றை நிரூபிக்க முடியாதுள்ளது. மக்கள் தங்களது பாரம்பரிய நிலங்களை மீளப் பெற்றுக்கொள்வதனை உறுதி செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போதும் இவ்வாறான பிரச்சனைகளுக்கு முகங் கொடுக்கின்றனர்.

நாச்சதூவ, வெள்ளவாய, மொனராகலை மற்றும் திருகோணமலையைச் சேர்ந்த மக்களும் அவர்கள் தொழில்புரிந்து வந்த காணிகளை சட்டரீதியாகப் பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையவர்களா என்பது தொடர்பில் தெளிவு குறைவாகக் காணப்படுவதாகக் கூறியிருந்தனர். 2004 இடம்பெயர்ந்த மன்னார் மக்களில் ஒரு பகுதியினருக்கு காணி மீட்புக் குழுவின் காணிகளும் பயிர்ச்செய்கை விதைகளும் வழங்கபட்டு அவற்றை பயிரிட்டு அறுவடை செய்வதற்கு உதவிகள் வழங்கப்பட்டது. இருப்பினும் அவர்கள் காணி மீட்புக் குழுவின் காணிகளில் இருப்பதன் அடிப்படையில் அவர்களுக்கான வீட்டுத்திட்டங்கள் வழங்கப்படவில்லை. எனினும் அவர்கள் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வேண்டுகோளிற்கிணங்க காணி மீட்புக் குழுவிற்கு அதற்கான கொடுப்பனவுகளை வழங்கி தற்போது அதிகாரத்துவ பொறிமுறைகளின் மூலம் தங்களது காணிகளின் உரிமைப் பிரச்சனைகளைத் தீர்த்து அவற்றினை எவ்வாறு தமது பெயரில் பெற்றுக்கொள்வது குறித்து திடமற்ற தன்மையுடன் காணப்படுகின்றனர்.

**பக்கச்சார்பு**

உத்தியோகத்தர்கள் தங்களது உறவினர்கள் தொடர்பில் பக்கச்சார்புடனும் காணிகள் பிரச்சனைகள் தொடர்பில் அறிமுகமானவர்களுக்கு சார்பாகவும் நடந்துகொள்கின்றனர் என்று குற்றஞ் சாட்டப்படுகின்றனர். அத்துடன் அவர்கள் வியாபார மற்றும் கம்பனிகளின் காணித்தேவைகளை மக்களது விண்ணப்பங்களுக்குப் பதிலீடாக மேற்கொள்கின்றனர் என்ற குற்றச்சாட்டும் மேற்கொள்ளப்பட்டது. வன இலாக திணைக்களத்திற்கும் தொல்லியல் திணைக்களங்களின் கீழ் இருக்கவேண்டிய காணிகளும், மகாவலி திட்டத்தின் கீழ் உள்ள காணிகளும் வெளிப்படைத் தன்மையின்றியும் சரியான வழிமுறைகளைப் பின்பற்றாமலும் பொருளாதார சுரண்டல்களுக்காக பாவிக்கப்படுகின்றன. மீன்பிடி கைத்தொழிலோடு ஒப்பிடுகையில் சுற்றுலாத்துறைக்கு கரையோரக் காணிகளை வழங்குவதில் நிர்வாகத் துறையானது முன்னிற்கின்றது. அத்துடன் மீன்பிடி சமூகத்திற்கு கரையோரப் பிரதேசங்கள் மற்றும் துறைமுகங்களுக்குச் செல்ல அனுமதிக்காமையும் காணப்படுகின்றது. காணி ஆக்கிரமிப்பானது சரியான வழிமுறைகளினூடக நடைமுறைப்படுத்தப்படாமலிருப்பதோடு அவ்வாறான வழிமுறைகளில் மக்களின் வினைத்திறனான பங்குபற்றுகைக்கு சில வாய்ப்புக்கள் மாத்திரமே வழங்கப்படுவதாக மக்களின் கண்ணோட்டம் காணப்படுகின்றது.

**உரிமைகளில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக உருவாகின்ற பிரச்சனைகள் (நிறுவனம் சார்ந்து)**

கோரளைப்பற்று, ஏறாவூர்பற்று, வவுனதீவு, மண்முனை தெற்கு (மட்டக்களப்பு) ஆகிய பரதேசங்களில் மக்களுக்கு மேய்ச்சல் தரைக்கென பிரதேச செயலாளரினால் அல்லது மாவட்ட செயலாளரினால் வழங்கப்பட்ட காணிகளில் பிரச்சனைகள் காணப்படுவதோடு இக் காணிகளை வனப் பாதுகாப்பு திணைக்களம், மகாவலி திட்டங்கள் ஆகிய ஏனைய நிறுவனங்களால் உரிமை கோரப்படுகின்றது. பள்ளிமுனை, தலைமன்னார் மற்றும் சன்னார் ஆகிய பிரதேசங்களில் மக்கள் ஏற்கனவே விவசாயத்திற்கும் மாடு வளப்பிற்கும் பாவித்த காணிகளுக்கு செல்லும்போது வனபாதுகாப்புத் திணைக்களம் அபராதம் அறவிடுகின்றது.

இந்த விவகாரம் காரணமாக மட்டக்களப்பு பிரதேசங்களிலுள்ள கால்நடை வளர்ப்பு விவசாயிகள் கால்நடைகளை மேயவிடல், கால்நடைகளின் குடிசைகள் மற்றும் கொட்டகைகளை அமைத்தல், நடைபாதைகளை உரிய நிறுவனங்களின் அனுமதியின்றிப் பாவித்தல் போன்ற காரணங்களுக்காக கைது செய்யப்படுகின்றனர். இந்த கால்நடைகளை மேயவிடல் பிரச்சனையானது மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லையிலுள்ள மந்தளை ஆறு உட்பட்ட அயல் மாவட்டத்திற்கும் விஸ்தரிக்கப்பட்டு பொலன்னறுவை மற்றும் அம்பாறை மாவட்டங்களிலுள்ள கால்நடை விவசாயிகளும் கைது செய்யப்படுகின்றனர். அத்துடன் கம்பஹா பிரதேசத்தைச் சேர்ந்த கால்நடை விவசாயிகளும் அவற்றை மேயவிடல் தொடர்பில் பிரச்சனைகள் உருவாக்கம் பெற்றுள்ளது. மேலும் நீர்ப்பாசனத் திணைக்களம் ரூகம் கித்துள் நிகழ்ச்சித்திட்டமானது[4] மேய்ச்சல் தரைகளுக்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கின்றனர். வெளிநாட்டு வகை கால்நடைகளின் அறிமுகங் காரணமாக தங்களது கால்நடைகளுக்கு புதியவகை நோய்கள் தோற்றுவிப்பதோடு தமிழ் பேசும் விவசாயிகளுக்கும் சிங்கள மொழி பேசுகின்ற கால்நடை வைத்தியர்களுக்குமிடையில் தொடர்பாடல் பிரச்சனைகளும் கூட காணப்படுகின்றது.

வறட்சி என்பது கால்நடை விவசாயிகள் எதிர்கொள்கின்ற பிரதான பிரச்சனையாக இருந்துவருகின்றது ஆகவே, கால்நடை விவசாயிகள் எதிர்கொள்கின்ற வறட்சி போன்ற இயற்கை அனர்த்தங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான பொறிமுறைகளுக்கான தேவைகள் காணப்படுகின்றன. 2013 இலிருந்து இப்பிரதேசத்திற்கு இரண்டு நீர்த்தேக்கங்களுக்கான தேவைப்பாடு இருந்துவருகின்றது. (இது தொடர்பில் விவசாயிகள் அதிகாரிகளிடம் முன்னரே கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர்).

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாயிலிருந்து யுத்தகாலத்தில் இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் தங்களது விவசாய நிலங்கள் கன்னிவெடி காரணமாக அபாயகரமான இடமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதை 2012 இல் மீண்டும் தங்கள் இடங்களுக்குத் திரும்பியபோது அறிந்துகொண்டனர். இக்காணிகள் காலப்போக்கில் வனத் திணைக்களத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இந்த 25 ஏக்கர் காணிகளை வனத்திணைக்களம் கைவிட்டபோது அவை ஒரு சிங்கள நபருக்கு உரிமை மாற்றஞ் செய்யப்பட்டுள்ளது. சுனாமி மற்றும் யுத்தத்தினால் காணி அனுமதிப்பத்திரங்களை இழந்த நிலையில் (பிரதேச செயலகத்திலும் இல்லாத நிலையில்) அவர்கள் இந்த நிலமை தொடர்பில் நடவடிக்கையெடுக்க முடியாத நிலையிலுள்ளனர்.

---

4. This multi-million Euro river basin project is designed to increase water storage capacity for irrigation and drinking purposes, to increase and improve irrigation and drainage schemes and, to provide the tools and capacity building to improve practices in water resources' management and to promote climate smart agriculture in the watershed. - https://www.hydropower-dams.com/news/design-and-supervision-contract-tendered-for-sri-lankan-river-basin-project/

சம்பூர் மேற்கிலுள்ள ஒரு சமூகம் யுத்தத்தின்போது தங்களது காணியிலிருந்து இடம்பெயர்ந்தனர். 2015 இல் அவர்கள் தங்களது சொந்த இடத்திற்கு மீண்டும் வரும் போது அவர்களது காணிகளை இராணுவம் ஆக்கிரமித்திருந்ததை கண்டறிந்தனர் அத்துடன் அவர்கள் தங்களுடைய கால்நடைகள் அனைத்தையும் யுத்தத்தின்போது இழந்தனர். வாழ்வாரதாரமற்ற நிலையில் வீட்டுவேலைகளுக்கு உதவியாளர்களாகப் பெண்கள் தங்களது கிராமங்களிலிருந்து அருகிலிருக்கும் நகரங்களுக்கு சென்ற வேலைசெய்ய வேண்டி ஏற்பட்டது. இம் மக்களுக்கு மாற்றீட்டு விவசாயத்திற்கான காணிகளுக்கும் வீட்டுத் திட்டங்களுக்கான ஆவணங்கள் பிரதேச செயலகத்தினால் சேகரிக்கப்பட்டாலும் கூட பின்னர் இவை நடைமுறைப்படுத்தப்படமாட்டாது என தெரிவிக்கப்பட்டது.

**உரிமை கோரலிலுள்ள முரண்பாடுகள்**

யுத்தத்தின் காரணமாகவும் முரண்பாட்டு வன்முறைகளின் காரணமாகவும் காணிகளிலிருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் தங்களது காணி உரிமைகளைக் கோரும் போதும் முரண்பாடுகள் ஏற்படுகின்றன. கிளிநொச்சியின் செஞ்சோலைபுரத்தில் மக்கள் தமிழீழ வீடுதலைப் புலிகளிடமிருந்து காணிகளை வாங்கியதாகக் கூறும் போது, மற்றொரு பகுதியினர் அது தங்களுக்குரித்தானது என தெரிவிக்கின்றனர். தமிழீழ வீடுதலைப் புலிகளும் இம்மக்களிடமிருந்து பலாத்காரமாக அபகரித்த காணியில் ஒரு சிறுவர் இல்லத்தை நிறுவியிருந்தனர். இதற்குப் பின்னர் இதனை இராணுவத்தினர் கைப்பற்றியதையடுத்து சிறுவர் இல்லம் கடந்த ஆண்டுவரை காணப்பட்ட நிலையில் இக் காணியின் உரிமையாளர் அதனை தனக்கு வழங்குமாறு கோரிக்கைவிட ஆரம்பித்துள்ளார்.

திருகோணமலையில் மக்கள் தங்களது காணிகளிலிருந்து யுத்தம் காரணமாக வெளியேறித் தப்பிச்சென்ற பின்னர் அவர்களுடைய உறவினர்கள் அக்காணிகள் தங்களுக்கு சொந்தமானதென கோரும் போது, ஆவணங்கள் இன்றி ஒன்றிற்கு மேற்பட்ட நபர்கள் காணிக்கான உரிமையை கோரும்போது, முரண்பாடுகள் ஏற்பட்டன. அரசு சரியான உரிமையாளருக்கு காணிகளின் உத்தியோகபூர்வ உரிமையை வழங்காததால், அவர்கள் அகதி முகாம்களில் தங்கி வாழவேண்டிய கட்டாயத்திற்குள்ளாகினர். மாவட்டச் செயலகத்தில் மக்களின் ஆவணங்கள் எரிந்து போனதால் வேவெல்லியைச் ( திருகோணமலை) சேர்ந்த மக்கள் 1983 இல் இருந்து தங்களது சொந்தக் காணிகளுக்குத் திரும்ப முடியாத நிலையிலுள்ளனர். அவர்களிடம் உத்திபோகபூர்வ ஆவணங்களை முன்வைக்குமாறு கோரப்பட்டபோது அவை அவர்களிடம் இல்லாத காரணத்தினால் காணிகள் வனசீவராசிகள் பாதுகாப்பு தேவைகளுக்காக ஒதுக்கப்பட்டது.

ஆணைக்குழு கலந்துரையாடிய மக்களின் கருத்திற்கமைய, பனங்கண்டி (கிளிநொச்சி) கிராமமானது 1987 இல் மக்கள் வீடுதலை முன்னணியினால் ஏற்படுத்தப்பட்ட வன்முறைக் கட்டவிழ்ப்பில் இடம்பெயர்ந்துவந்த கண்டி. கேகாலை, இரத்தினபுரி மற்றும் ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்த மக்களைக் குடியமர்த்துவதற்கென தமிழீழ விடுதலைப் புலிகளினால் உருவாக்கப்பட்ட யுத்தத்தின் பின்னர், காணியின் உண்மையான உரிமையாளர் காணிகளை கேட்டபோது, சில மக்கள் அவற்றிற்கான தொகையை தங்களது நகைகளை விற்பனை செய்தும் அடகு வைத்தும் (கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கான வழிவகைகள் இல்லாதநிலையில்) வழங்கினர். .

கொக்கிளாய் (முல்லைத்தீவு) பிரதேசத்தில் வாழுகின்ற சிங்கள மக்கள் அந்தக் காணிகளில் உத்தியோகபூர்வமான உரிமைகள் இல்லாவிடினும் யுத்தத்தின் போதும் ஒவ்வொரு வருடமும் கிறிஸ்மஸ் காலங்களுக்கு நீர்கொழும்பிற்கு செல்வதைத் தவிர ஏனைய காலங்களில் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் சுனாமியின் போது தங்களது மீன்பிடி அனுமதிப்பத்திரங்களை இழந்ததோடு,

அனேகமான காணி உரிமையாளர்களும் தங்களது காணி உறுதிகளை இழந்திருப்பதோடு பிரதேச செயலகத்திலிருந்த பிரதி ஆவணங்களும் அழிந்து விட்டதாகத் தெரிவித்திருந்தனர்.

**"எவ்வளவு கொள்கைகளும் சட்டங்களும் கொண்டுவரப்பட்டாலும் கூட அவற்றின் நடைமுறைப்படுத்தலிலே அனைத்தும் தங்கியுள்ளது"**

- முல்லைத்தீவைச் சேர்ந்த பங்குபற்றுநர்கள்.

கிளிநொச்சி - மறிப்பு பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் ஏற்கனவே தீர்க்கப்பட்டுவிட்டது என நம்புகின்ற துறைசார் பிரச்சனைகளை அரச அதிகாரிகள் மீண்டும் முன்வைக்கின்றனர். (மக்களிடம் காணப்படுகின்ற காணி அனுமதிப்பத்திரத்திற்கமைவாக காணித் துண்டினை உரிமை மாற்றஞ் செய்ய முன்னர் அடையாளப்படுத்தல்). உள்ளூர் தமிழ் அரசியல்வாதிகள் வனப் பாதுகாப்பு திணைக்களத்திற்கு உதவுவதன் மூலம் மக்களின் மீள் குடியேற்றத்தை தடைசெய்வதாகக் குறிப்பிடப்பட்டது. அத்துடன் 25-30 கிணறுகள் வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தில் முஸ்லீம் மக்களுக்கு எதிராக நடைபெற்ற நீதிக்குப் புறம்பான செயலாக மறிப்பு பிரதேசத்தில் ஒரு முஸ்லீம் நபருக்குக்கூட கிணறு வழங்கப்படவில்லை என்ற உதாரணம் முன்வைக்கப்பட்டதோடு இவ்வாறான தொடர்ச்சியான பாகுபாட்டு நடைமுறைகள் இடம்பெறுவதாகவும் யுத்த காலத்திலும் கூட தமிழீழ விடுதலைப் புலிகளினாலும் இம் மக்கள் பாகுபடுத்திப் பார்க்கப்பட்டதாகவும் குறிப்பிட்டனர்.

மட்டக்களப்பில் இந்திய அமைதிப்படையின் செயற்பாடுகள் காரணமாக யுத்த காலத்தில் மற்றும் சுனாமியின் காரணமாக இடம்பெயர்ந்த மக்களது காணிகளை வேற்று சமூகத்திற்கு வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. அம்பாறை மாவட்டத்திலும் சம்மாந்துறைப் பிரதேசதத்தில் கல்ஓயா உறுதிகளைக் கொண்டு காணப்பட்ட மக்கள் இடம் பெயர்ந்து மீண்டும் குடியேறும் போது அவர்களது விவசாயக் காணிகள் சிங்களவர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததாக குறிப்பிட்டனர். அதே போன்று, அம்பாறை பொன்னம்வெளி பிரதேசத்தில் 1990 இல் ஏற்பட்ட யுத்தத்தின் இடப்பெயர்வு காரணமாக மீஸ்லீம் மக்களுக்கு சொந்தமாகவிருந்த பாரிய பல்வேறு ஏக்கர்களைக் கொண்ட விவசாயக் காணிகள், அந்த மக்கள் மீண்டும் திரும்பும்போது அவை சிங்கள மக்களுக்கு உறுதிகள் மற்றும் கல்ஓயா காணி அனுமதிப்பத்திரங்கள் மூலமும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

அநுராதபுரத்தில் மீளக்குடியேறிய சில சமூகங்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட காணிகள் உற்பத்தித்திறன் இல்லாதவையென விசனம் தெரிவித்தனர். யாழ்ப்பாணம் - தையிட்டியைச் சேர்ந்த மீளக்குடியேறிய மக்களுக்கு வாழ்வாதார வசதிகள் இன்மையால் அவர்கள் தினக்கூலி வேலைகளுக்கு செல்ல வேண்டியுள்ளது.

சுனாமிக்குப் பின்னர் மட்டக்களப்பைச் சேர்ந்த மீன்பிடி சமூகம் கடற்கரையிலிருந்து 500அ இற்கு அப்பால் செல்லவேண்டி ஏற்பட்டதால் ஒரு சிலர் தங்களது தொழிலை மேசன் போன்ற தொழில்களுக்கு மாற்றிக்கொண்டதோடு ஏனையோர் பல்வேறுபட்ட சவால்களுக்கு மத்தியிலும் மீன்பிடித் தொழிலை செய்து வருகின்றனர். இதற்குக் காரணம் குறிப்பாக மீன்பிடிக் கைத்தொழிலை கரையோரத்தை அண்டி செய்துவருகின்ற மீனவர்களுக்கு அப்பிரதேசங்களில மாற்று வாழ்வாதாரம் காணப்படாமையாகும்.

மலையாளர்குளம் மற்றும் ஐயர்குளம் (கிளிநொச்சி) ஆகிய பிரதேசங்களில் யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர்வதற்கென ஒதுக்கப்பட்ட காணி முல்லைத்தீவு வன பாதுகாப்புத் திணைக்களத்தினால் அவை தங்களுடைய எல்லைக்குட்பட்டவை எனக்கூறி மீளக்குடியமர்வு செயற்பாட்டை தடை செய்துள்ளனர். இதே போன்று பலாலி பிரதேசத்தில் மக்களுக்கென ஒதுக்கப்பட்ட காணிகளில் மீளக்குடியமர்வதற்கு சென்றபோது தனிபட்டவர்களது

உரிமைகளை உறுதிசெய்ய மறுத்து அவர்களது உரிமை தொடர்பான விண்ணப்பங்களை நிராகரித்து அவை வனப்பாதுகாப்பு திணைக்களத்திற்கு சொந்தமானதென தெரிவித்தனர்.

**மக்களுக்கு எவ்விதமான நட்டஈடுகளுமின்றி இயற்கை வளங்கள் பிரதேசங்களிலிருந்து வெளிக்கொண்டு செல்லல்.**

**மக்களுக்குரித்தான இயற்கை வளங்களை அவர்களது சமூகங்களிலிருந்து எடுத்துச்** செல்லப்படல் என்ற புகார் அநேகமான கருத்துக்கணிப்பு அமர்வுகளில் முன்வைக்கப்பட்ட விடயமாகும். முசலி பிரதேசத்திலிருந்து சட்டவிரோதமாக மண் அகழப்பட்டு கொழும்பிற்கு அனுப்பப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் வேறு பிரதேச மீனவர்கள் சட்டவிரோத இழுவைப்படகுகளைப் பாவித்து தங்களுக்கான கடற்பரப்பில் மீன்பிடிப்பதாக மீனவர்கள் புகார் செய்திருந்தனர். முசலி பிரதேசத்தில் மீன்பிடி மற்றும் வவுனியாவிலுள்ள தொழிற்சாலையில் வேலை செய்வது தவிர வேறு வாழ்வாதார நடவடிக்கைகள் காணப்படாமை குறித்து புகார் செய்தனர். அத்துடன் அவர்கள் தங்களது சமூகத்திலில்லாத மீனவர்களும் இங்கு வந்து மீனபிடிப்பதாக குறிப்பிட்டிருந்தனர். மயிலிட்டியைச் சேர்ந்த தமிழ் மீனவர்கள் பெரிய படகுகள் மற்றும் புதிய வகை வலைகளைக் கொண்டு பெரிய மீன்களைப் பிடிக்கக்கூடிய சிங்கள மீனவர்களுடன் போட்டிபோடுவது குறித்து தங்களது ஏக்கத்தைத் தெரிவித்திருந்தனர்.

> “சிலாவத்துறையிலிருந்து ஒருவர் சமுர்த்திப் பயனைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் பிரதேச செயலாளருக்கு கடிதமொன்றை சமர்ப்பித்தபோது “நீங்கள் சிலாவத்துறையைச் சேர்ந்தவர் தானே? அங்கிருக்கும் மக்கள் அழகாக இருப்பதோடு நன்றாகவும் வாழ்கின்றனர். நான் சுத்தமாக ஆடை அணிந்து கண்ணாடியும் அணிந்திருந்தால் நான் வசதியாக இருக்கின்றேன் என்று அர்த்தப்படுமா?”
>
> - சிலாவத்துறையைச் சேர்ந்த ஒரு பங்குபற்றுனர்

இணுவில் கிழக்கில் (யாழ்ப்பாணம்) இடம்பெயர் முகாம்களிலுள்ள மக்கள் மத்தியில் காணப்படுகின்ற தெளிவின்மை காரணமாக தேவை இருந்தும் அவர்கள் சமுர்த்தி போன்ற பயன்களைப் பெற்றுக்கொள்ள விண்ணப்பிக்கவில்லை. இருப்பினும் சமுர்த்தி போன்ற நலன்புரி வேலைத்திட்டங்களைப் பெற்றுக்கொள்வதற்கு நிரந்தர முகவரி அவசியமானதென்பது இவ்வாறான திட்டங்களை மக்கள் பெற்றுக்கொள்வதில் ஒரு சவாலாக இருந்துவருகின்றது. அரச அதிகாரிகள் தேவையுள்ள மக்களின் வாழ்க்கைத்தரத்தை பற்றிப் பூரணமாக அறிந்துகொள்ள ஆர்வங் காட்டாமையும் சமுர்த்தி போன்ற திட்டங்களிலுள்ள மற்றுமொரு பிரச்சனையாகும். விண்ணப்பப்பத்திரங்கள் செயலாக்கத்திற்கு உட்பட்டாலும் கூட அவை மிகவும் மந்த கதியிலேயே இடம்பெறுகின்றது குறிப்பாக இவை 5 வருடங்கள் கூட சில நேரங்களில் எடுக்கின்றது. பொதுவாக சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படலில் பல்வேறுபட்ட விமர்சனங்கள் முன்வைக்கப்படுவதோடு மேலதிக முயற்சிகள் எடுக்கப்பட்டு உண்மையாகத் தேவையுடையவர்களை அடையாளப்படுத்தி அவர்களுக்கான உதவிகள் வழங்கப்படவேண்டுமென மக்கள் நம்புகின்றனர். பல்கலைக்கழகங்களில் கல்வி கற்பவர்கள் வாழ்கின்ற வீடுகளை அரச அதிகாரிகள் உறுதிசெய்தலானது அவர்கள் கடன் வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கும் அரச சலுகைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் அவசியமானதாக இருப்பதோடு அவற்றைப் புரிவதற்கு அரச அதிகாரிகள் தயக்கங்காட்டுவதுாக அறிக்கையிடப்பட்டது. பிராந்தியங்களில் நடைமுறைப்படுத்தப்படும் வாழ்வாதார நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது அவற்றின் பொறுப்புக்கூறும் தன்மையில் சிக்கல்கள் காணப்படுவதோடு இலஞ்சம் வழங்கப்படுகின்ற

சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றது. அத்துடன் இத் திட்டங்களானது மக்களது தேவைகளோடு ஒப்பிடுகையில் வித்தியாசப்பட்டுக் காணப்படுவதால் அவற்றை மக்கள் நிராகரிக்கின்ற சந்தர்ப்பங்களும் ஏற்படுகின்றன.

### 2.2.3 பாரிய அளவிலான அபிவிருத்தி, விவசாயத் திட்டங்கள் மற்றும் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களை உருவாக்குதல்

அநுராதபுரம், பொலன்னறுவை மற்றும் மட்டக்களப்பு பிரதேசங்களில் நகரமயமாதல், தனியார் கைத்தொழில்களுக்கு விவசாயக் காணிகளை வழங்குதல் மற்றும் கட்டாயப்படுத்தி காணிகளை பல்வேறு அமைச்சுக்கள் ஆக்கிரமிப்பது, விவசாயிகளிடமிருந்த விளைச்சல் நிலம் குறைவடைவதாக மக்கள் விசனம் தெரிவித்தனர். இது பாரம்பரிய முறைகளில் விவசாயத்தை மேற்கொள்வதற்குத் தடையாக அமைவதாகவும் தெரிவித்திருந்தனர்.(தொடர்ச்சியான பருவ காலத்தில் வேறுபட்ட காணித் துண்டங்களில் பயிரிடல்). இதுவும் மக்களின் வாழ்வாதார நடைமுறைகளில் பாதிப்பை ஏற்படுத்தியதோடு சிலர் விவசாயத்தை கைவிட்டு சிறிய சில்லறைக் கடைகளை ஆரம்பித்துள்ளனர். அநுராதபுரம் போன்ற பிரதேசங்களில் சுற்றுலாத் துறையானது பாரியளவில் வளர்ச்சி பெற்றுள்ள நிலையிலும் கிராமப்புற மக்கள் தங்களுடைய நிலங்களை வர்த்தக நடவடிக்கைகளுக்கு வழங்குவதைவிடுத்து விவசாயத்திற்கு பாவிக்கவே விரும்புகின்றனர். பொலன்னறுவையைச் சேர்ந்த மக்கள் தங்களது காணிகள் தொடர்பில் அவற்றை விற்பதற்கு அல்லது அடகு வைப்பதற்கான சுயாட்சி உரிமை தங்களுக்கு தரப்படவேண்டும் என்பதோடு அவர்களது கண்ணோட்டத்தில் விவசாயமானது இன்னும் இலாபமளிக்கின்ற நடைமுறையாக மாற்றமடையவேண்டும். ஏனெனில், இந் நிலை அன்றாடக் கூலி வேலை செய்யும் மற்றும் முச்சக்கரவண்டி செலுத்துகின்ற இளைஞர்களைக் கவருவதற்கான வாய்ப்புக்களை அதிகரிக்கும்.

பல்வேறுபட்ட தனியார் நிறுவனங்கள் மக்களது வாழ்வாதாரத்திற்கு முக்கியமாகத் தேவையான காணிகளை வாங்கியுள்ள நிலையில். ரியு (சுரை) சுற்றுலா விடுதி காலியிலுள்ள கடற்கரையில் ஒரு பகுதியையும், (டீ)பார் விலேஜ் சுற்றுலா விடுதி ஹம்பாந்தோட்டைப் பகுதியிலுள்ள வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட காணியையும், வாழைப்பழம் மற்றும் மாம்பழ உற்பத்தி நிறுவனங்கள் ஹம்பாந்தோட்டையிலும் குடா ஓயாவை பாதித்து அந்தரவெவ காட்டுபகுதிக்கு உரித்தான பிரதேசத்தில் அமைத்துள்ள பொரெஸ்ட் றொக் (Forest Rock) சுற்றுலா விடுதி, கொஸ்கொட பிரதேசத்திலுள்ள விவசாய நிலங்களைப் பெற்று அமைக்கப்பட்டுள்ள கழிவு முகாமைத்துவ நிலையம், திருகோணமலையில் சுற்றுலா விடுதிகளும் தனியார் வியாபாரங்களும் இவற்றினுள் அடங்கும். மட்டக்களப்பில் சுற்றுலா விடுதிகள் தங்களது கடற்கரைப் புகுதிக்கு மீனவர்கள் செல்வதைத் தடுத்தாலும் ஒரு பகுதி மீனவர்கள் அவர்களை வாடிக்கையாளர்களாக எண்ணி தங்களது பிடிக்கப்பட்ட பொருட்களை விற்கக்கூடிய தளமாகப் பார்த்தாலும் மற்றுமொரு பகுதியினர் அதனை தங்களுடைய வாழ்வாதாரத்தைப் பாதிக்கின்ற ஊடுருவிகளாகப் பார்க்கின்றனர். (திருகோணமலையிலிருந்து வருகை தருகின்ற மீனவர்கள் கடற்படையினரின் உதவியுடன் பாவிக்கின்ற மீன்பிடி உபகரணங்கள் தங்களது வாழ்வாதாரத்திற்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றது. பாணம (அம்பாறை) பிரதேசத்தில் வர்த்தக ஸ்தாபனங்களும் சுற்றுலா விடுதிகளும் கடற்கரைப் பகுதியை கைப்பற்றியுள்ள நிலையில் கரை வலை மூலம் மீன்பிடித்தலில் குறுக்கீடு ஏற்படுகின்றது. (மிலேனியம் அபிவிருத்தி இலக்கு மற்றும் உலக வங்கியின் கொள்கைகள்[5] காரணமாகவே சுற்றுலாத்துறை இப் பிரதேசங்களில் பெருகுகின்றது

5. Society for Threatened People, Dark clouds over the Sunshine Paradise - Tourism and Human Rights in Sri Lanka, Pg. 55 - https://www.gfbv.ch/wp-content/uploads/pdf-e.pdf

சீ.ஐ.சி நிறுவனத்திற்கு 50 வருட குத்தகைக்கு 2000 ஏக்கர் காணிகள் விதை ஆராய்ச்சிக்கென அரசினால் வழங்கப்பட்ட போதிலும் அருகிலுள்ள விவசாயிகளின் கருத்துப்படி அவர்கள் அக்காணியில் பயிர்ச்செய்கைகளையும் மேற்கொள்வதாக தெரிவிக்கின்றனர். சீ.ஐ.சி நிறுவனம் கூடுதலான கிருமி நாசினிகளைப் பாவிப்பதோடு அந்நிறுவனமானது சூழலுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் பற்றிப் பெருமளவில் பொருட்படுத்துவதில்லை என மக்கள் தெரிவித்திருந்தனர்.

தனியாரினால் மேற்கொள்ளப்படுகின்ற சட்டவிரோத காணி ஆக்கிரமிப்புக்களால் மக்களின் வாழ்வாதாரங்கள் பாதிக்கப்படுகின்றமையும் அரசு மக்களின் நலன்களைப் பாதுகாக்கத் தவறியமையும் சுட்டிக்காட்டப்பட்டது. உதாரணமாக வவுனியாவிலுள்ள மகா ரம்பைக்குளம் கிராமத்திலுள்ள உதய ரம்பைக் குளமானது ஒரு தனியாரால் கையகப்படுத்தப்பட்டது, அவர் ஒரு விவசாய சேவைகள் அலுவலராவார். இது 25 ஏக்கர் காணியில் நடைபெற்று வந்த விவசாயத்தைப் பாதிப்பதோடு இப் பிரதேச மக்களின் குடிநீர் வசதிக்கும் பங்கம் விளைவிக்கப்பட்டது. ஏனைய ஏரிகளான நெலுங்குளம், கிள்வில் குளம், பண்டாரிக்குளம், திரிநூநாவக்குளம், தரணிக்குளம், ரம்பைக்குளம், சமணம் குளம், கல்நாட்டின குளம் ஆகியனவும் மக்களால் விவசாய நிலங்களாக மாற்றப்பட்டு அல்லது அழிக்கப்பட்டும் விட்டன

கொக்கிளாயிலுள்ள (முல்லைத்தீவு) தமிழ் மக்கள் யுத்தம், மகாவலி டு திட்டம் மற்றும் வனவிலங்கு பாதுகாப்பு நடவடிக்கைகளின் காரணமாகவும் இடம்பெயர்ந்தும் காணிகளிலிருந்து வெளியேற்றப்பட்டதன் காரணமாகவும் அவர்கள் சமுர்த்தி நன்மைகளைப் பெறுவதற்கு விண்ணப்பிக்க முடியாமலுள்ளனர். கொக்குத்தொடுவாயைச் (முல்லைத்தீவு) சேர்ந்த மக்கள் மகாவலி டு திட்டத்தினால் பாதிக்கப்பட்டதோடு சமுர்த்தி குறித்து அவர்கள் எவ்விதமான விபரங்களையும் அறிந்திருக்கவில்லை. கொக்குத்தொடுவாய் மற்றும் மணலாறு பிரதேச மக்களும் பறவைகள் சரணாலயம் அமைத்ததன் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பெரியமடு (மன்னார்) கிராமத்தில் விவசாயிகள் தங்களது உற்பத்திகளைப் பெருக்கிக் கொள்வதற்கு போதுமான அளவு வளங்கள் கிடைப்பதில்லையென விசனம் தெரிவித்தனர்.

கல்முனையில் முன்னெடுக்கபடவிருந்த துறைமுக அபிவிருத்தியானது இப் பிரதேச மக்களின் மீன்பிடி தொழிலுக்கும் தேவையான கரையோரப் பிரதேசம் அற்றுப்போகக்கூடும் என்ற பயத்தின் காரணமாக. இத் திட்டம் அவர்களது கவனத்தை ஈர்த்தது.

வனப்பாதுகாப்புத் திணைக்களம் கிரான், கோமாரி, மஜீத்புரம், கனகார் கிராமம் (பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவு), பாலன்டவட்டை (அம்பாறை இறக்காமம் பிரதேச செயலாளர் பிரிவு) ஆகிய பிரதேசங்களிலுள்ள காணிகளை ஆக்கிரமித்ததோடு முன்னர் இக் காணிகளை காணி அனுமதிப்பத்திரம் பெற்ற விவசாயிகளிடமிருந்து இராணுவத்தினர் கையகப்படுத்தியிருந்தனர். வேகாமம் (பொத்துவில்) அம்பாறையில் 1990 இல் விவசாய சமூகம் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து 2010-2011 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் மீண்டும் குடியேறும்போது அக்காணிகள் லாகுகல தேசிய வனவிலங்குக்கென சுற்றிவளைக்கப்பட்டிருந்தது. இதயபுரம், கரங்கோவை மேற்கு, அமவேட்டன், மதுரன்வெளி (அம்பாறை) ஆகிய பிரதேசங்களிலிருந்து யுத்தத்தின் காரணமாக 1987 இல் இடம்பெயர்ந்து மீண்டும் குடியேறும் போது அவற்றை வனப்பாதுகப்புத் திணைக்களத்தினால் கையகப்படுத்தியிருந்ததை அறிந்துகொண்டனர். வனபாதுகாப்புத் திணைக்களத்தினால் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலையில் பொத்துவில் பிரதேசச் செயலாளர் பிரிவின் தூக்குவெல்ல, செம்புவெளி மற்றும் வெல்வேரி (திருகோணமலை) கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தங்களது விவசாய வாழ்வாதார நடவடிக்கைகளை மேற்கொள்வது சிரமமாகியுள்ளது. அம்பாறை மாவட்ட தோணிக்கல் தெற்கு கண்டம் (திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவு) வட்டமடு (திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவு) மற்றும் கோமாரி (பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவு) ஆகிய பிரதேசங்களில் 80 வருட காலமாக யுத்தத்தின் போது கூட விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டுவந்த மக்களை வனப்பாதுகாப்புத் திணைக்களத்தினரும் பொலிஸாரும் ஒன்றிணைந்து காணிகளிலிருந்து

வெளியேற்றி அவர்களுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். சுண்டிக்குளம் பிரதேசத்தில் உருவாக்கப்படுகின்ற தேசியப் பூங்காவினால் அப்பிரதேசத்தில் விவசாயம் செய்துவந்த மக்களுக்கு தற்போது அப்பிரதேசத்திற்கு செல்லமுடியாத நிலமை ஏற்பட்டுள்ளது.

உமா ஓயா திட்டத்தின் காரணமாக இடம்பெயர்ந்த மக்களுக்கு 2 ஏக்கர் காணி வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டிருந்தது. எனினும் வெலிமட, ஊவா மற்றும் பண்டாரவளைப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் தங்கள் காணிகள் இத்திட்டத்தின் மூலம் துறைகளில் ஏற்படுகின்ற வீழ்ச்சி மற்றும் கணிசமாக நிலக்கீழ் நீரின் குறைவினால் கிணறுகள் வற்றுவதன் மூலம் பாதிக்கப்படுமென அறிந்துகொண்டனர். அத்துடன் பண்டாரவளை பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள புவியியல் மாற்றங் காரணமாக சொத்துக்களுக்கும் சேதங்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

உமா ஓயா திட்டத்தின் மூலம் மக்களுக்கு வழங்கப்பட்ட நட்டஈடானது ஒதுக்கப்பட்டதிலிருந்து ஒரு பகுதி மாத்திரமே வழங்கப்பட்டதோடு, வீதி அபிவிருத்தி வேலைத்திட்டங்களும் தோட்டங்களிலிருந்து காணிகளைப் பெற்று தோட்டத்திற்கு நட்ட ஈட்டை வழங்கினாலும், அவற்றினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எதையும் வழங்கவில்லை. அதிலும் அரசியலில் தொடர்புகளைப் பேணிவருகின்ற ஒரு சாரார் அப்பிரதேச சமூகத்தின் பகுதியாக இல்லாதபோதிலும் தாங்கள் கடைகளை அமைத்து பிரதேச வர்த்தக நிலையங்களுக்கு சவாலாக செயற்பட்டு வருகின்றனர். மண் சரிவினால் பாதிக்கப்பட்ட மக்கள் காணி உறுதிப் பத்திரங்கள் இல்லாத காரணத்தினால் அவர்களுக்கு நட்டஈடு வழங்கப்படவில்லை. உமா ஓயா திட்டத்தின் நட்டஈட்டுப் பொறிமுறையானது நீண்ட காலம் எடுக்கின்ற கடினமான அதிகாரத்துவம்மிக்க ஒரு முறையாகக் காணப்படுவதால் மக்கள் அவற்றினைப் பெற்றுக்கொள்வதற்கு அதிக நேரத்தையும் பணத்தையும் செலவளிக்க வேண்டியுள்ளது. இப்பகுதி மக்களுக்கான மாற்று நிலங்கள் குருள்பொல (Kuhulpola) என்ற இடத்தில் வழங்கப்பட்ட போது செல்வாக்குள்ளவர்கள் பெரிய காணிகளைப் பெற்றுக்கொண்டனர்.

நகர அபிவிருத்தி அதிகார சபையினால் கொழும்பு நகர மீள் உருவாக்கம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தெமட்டகொடையில் அமைக்கப்பட்ட சிசிர உயன அடுக்குமாடி வீட்டுத் தொகுதியில் வாழ்ந்து வருகின்ற நகரப்புற ஏழை மக்களுக்கு உத்தியோகபூர்வமற்ற விதத்தில் அவர்களது வீட்டில் வாழ்வாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. ஆரம்பத்தில் முகாமைத்துவம் அடுக்குமாடி வீட்டுத் தொகுதியினுள் வாழ்வாதார நடவடிக்கைகளுக்கு முற்றாகத் தடை விதித்திருந்தாலும், காலப்போக்கில் குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு தங்களது தொழில்களுக்கான இடவசதி இன்மையால் இவ்விதிமுறைகள் மாற்றியமைக்கப்பட்டது. சில குடியிருப்பாளர்கள் இத் தொடர்மாடி வீட்டுத் தொகுதியில் குடியேறுவதற்கு முன்னர் பல்வேறுபட்ட உத்தியோகபூர்வமற்ற வாழ்வாதார நடவடிக்கைகளை மேற்கொண்டாலும் தற்போது அவர்கள் தொலைவிலிருப்பதனால் அதே வாழ்வாதார நடவடிக்கைகளை மேற்கொள்வது அதிக செலவாகுமெனக் குறிப்பிட்டருந்தனர். (உதாரணமாக கடைகளுக்கு உணவு சமைத்து வழங்கல்).

### 2.2.4 பெருந்தோட்டங்கள்

தேயிலைச் செய்கை மற்றும் கரும்புச் செய்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற பெருந்தோட்டங்களில் வாழ்கின்ற மக்களிடமிருந்து ஆணைக்குழுவினர் கருத்துக்களைக் கேட்டறிந்தனர். பிரித்தானியர்களால் கூலித் தொழிலின் நிமித்தம் தென் இந்நியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த தமிழ் மக்களே தேயிலைத் தோட்டங்களில் குடியிருக்கின்றனர். அவர்கள் பரந்துபட்ட பாகுபாடு, சுரண்டல்கள் மற்றும் வன்முறைகளுக்கு முகங்கொடுப்பவர்கள். இச் சமூகத்தினரில் பெரும்பாலானோர் 1948 இல் கொண்டுவரப்பட்ட குடியுரிமைச் சட்டத்தின் கீழ் குடியுரிமையை இழந்ததோடு உரிமையற்றவர்களாகவும் ஆக்கப்பட்டனர், பின்னர் 2009 இலே் குடியுரிமையை இவர்கள மீளப் பெற்றுக்கொண்டனர். நாட்டின் முக்கிய பிரதானமான ஒரு பொருளாதார உற்பத்தித் துறையில் பங்காளர்களாக இருந்தபோதிலும் இவர்கள் பரம்பரையாக ஏழைகளாகவும் ஒதுக்கப்பட்டவர்களாகவும் வாழ்ந்து வருகின்றனர்.

ஹிங்குராணை மற்றும் பெல்வத்தையிலுள்ள கரும்புத் தோட்டங்கள் அரசிற்கு சொந்தமானவை. இங்குள்ள காணிகளிலிருந்து அரசினால் மக்கள் வெளியேற்றப்பட்டதோடு ஒரு சில பகுதி அரச சீனிக் கூட்டுத்தாபனத்தினால் மக்களுக்கு பயிர்செய்யவும் வாழவும் அனுமதி வழங்கப்பட்டது. இம்மக்கள் தங்களது வாழ்க்கை எவ்வாறு கூட்டுத்தாபனத்தினால் கட்டுப்படுத்தப்பட்டு ஆளப்படுகின்றது என்பது பற்றியும், எவ்வாறு தங்களின் குடியுரிமை அனுகூலங்களை அபகரித்துள்ளது என்பது பற்றியும் கருத்துக்களை முன்வைத்தனர்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வீடொன்றைப் பெற்றுக்கொள்ளலானது அவர்கள் தொழில்புரியும் தோட்டத்திலே தங்கியுள்ளது என்பது ஒரு பொதுப்படையான விடயமாகும். வருமானம் குறைந்த நிலையில் வறுமைப் பிடிக்குள் சிக்குண்டு கம்பனிகளில் தங்கியிருக்கின்ற நிலையில் தனியார் கம்பனிகள் அல்லது அரசாங்கமே காணிகளை முகாமைத்துவம் செய்கின்றன. தனியார் கம்பனிகள் அரசிடமிருந்து நீண்ட கால குத்தகைக்கு காணிகளைப் பெற்றுக்கொள்கின்றன. சுய-தொழில், ஏனைய வருமானமீட்டும் தொழில்களில் சிலவேளைகளில் பயிரிடல் போன்ற தனிப்பட்ட பாவனைக்காக காணி மற்றும் வீடுகளைப் பாவிப்பது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் இக்காணிகளை கடனுக்கான பாதுகாப்பாக பாவிப்பது சாத்தியமற்றதாகக் காணப்படுகின்றன காரணம் இக்காணிகள் உத்தியோகபூர்வமாக மக்களுக்கு உரித்துடையதல்ல.

இச் சமுகங்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சனைகள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

#### சமூகப்பாதுகாப்பு அனுகூலங்களை அணுகுதலிலுள்ள சவால்கள்

பெருந்தோட்டங்களில் மக்கள் வாழுகின்ற பகுதிகள் பெருந்தோட்டங்களின் வியாபார அலகின் தனிப்பட்ட காணிகளாகவே கருதப்படுவதால் உள்ளூராட்சி சபைகள் எவ்வாறு இப்பிரதேசங்களில் செயற்படவேண்டும் என்பது தொடர்பில் தெளிவான வழிகாட்டல்கள் இல்லை. அத்துடன் உள்ளூராட்சி சபைகளுக்கு இப்பிரதேசங்களில் வாழ்கின்ற தோட்ட மக்களிடமிருந்து மற்றும் அங்குள்ள குடியிருப்புக்கள், சொத்துக்கள் பொருந்தோட்டத்தின் வியாபாரத்தின் பகுதிகளாக் கணிக்கப்படுவதால் அவற்றிலிருந்து வரிகளை அறவிடுவதற்கான ஆணையற்ற நிலையில் காணப்படுகின்றன. இருப்பினும் தோட்டங்களில் வாழ்கின்ற மக்கள் காணி வரி மற்றும் நீதிமன்றக் கட்டணங்களின் மூலமாக தங்களது பங்களிப்பை வழங்குகின்றனர்.

துற்போது நடைமுறையிலுள்ள உள்ளூராட்சி சட்டமானது 1871 இல் முன்வைக்கப்பட்ட முந்தைய கிராம சபை சட்டத்தைப் போன்றே அதன் நிதியிலிருந்து தோட்ட மக்களுக்கு

சேவைகளை வழங்கப்படமுடியாத நிலை காணப்படுவதோடு தற்போதும் கூட இவர்கள் உள்ளூராட்சி சபைகளிலிருந்து பல்வேறுபட்ட அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ள முடியாத வெறுமனே வாக்காளர்களாகப் பார்க்கப்படுகின்றனர்.

**காணியை கையகப்படுத்தல் மற்றும் அனுகூலங்களின்றி சுரண்டுதல்**

பெல்வத்த சீனிக் கூட்டுத்தாபனத்திற்கென மொனராகலை பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயிகள் கரும்புகளை வளர்க்கும் போது அவர்கள் நிறுவனத்தினால் சுகாதார சேவைகள் உட்பட்ட பல்வேறு அனுகூலங்களைத் தருவதாகக் கூறினாலும் அவை இவர்களுக்கு வழங்கப்படாமல் சுரண்டப்படுவதாக புகார் செய்தனர். மேலும் விவசாயிகளை இயற்கை அனர்த்தங்களின் போதும் அவர்களது பயிர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களையும் கருத்திற்கொள்ளாமல் அவர்களைத் தண்டிக்கின்றனர்.

அம்பாறைப் பிரதேசங்களில் கல்லோயா காணி அனுமதிப்பத்திரங்களை வைத்திருந்த மக்களின் காணிகளை ஹிங்குராணை சீனிக் கூட்டுத்தாபனத்தினால், இத்திட்டமானது வெற்றிபெறாத பட்சத்தில் இக்காணிகள் மீள வழங்கப்படும் என்ற உறுதியுரையின் கீழ் பெறப்பட்டது. வெள்ளைக்கல்தோட்டம் மற்றும் வண்ணாத்துவெட்டை ஆகியனவே இவ்வாறாகப் பெறப்பட்ட பிரதேசங்களாகும். வெள்ளைக்கல்தோட்டத்தில் பறிமுதல் செய்யப்பட்ட காணிகள் விவசாயத்தில் ஈடுபடுகின்ற சிங்கள விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. கனட்டியன் முன்மாரி (அம்பாறை) Kanattiyan Munmari (Ampara), அங்கு வாழ்ந்துவந்த மக்களின் விவசாய நடவடிக்கைகளுக்குத் தேவையான நீரை தடுத்து கட்டாயமாக அவர்களை காணிகளிலிருந்து வெளியேற்றி ஆக்கிரமிக்கப்பட்டது. சீனிக் கூட்டுத்தாபனம் தற்போதைய நிலமையில் அநேகமான காணிகளில் அவர்களே கரும்புச் செய்கையை மேற்கொள்வதோடு ஏனைய பகுதியின் உரிமையை பல்வேறு விவசாயக் குழுக்களுக்கிடையில் பிரித்து வழங்கியுள்ளனர். பெல்வத்த சீனிக் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்ட அனுகூலங்களான இலவச போக்குவரத்து வசதி, வாழ்வாதாரக் கொடுப்பனவுகள், கரும்புச் செய்கை தொடர்பான பயிற்சி, மானிய விலையில் உரம் ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் மக்கள் சென்று தோட்டங்களில் வேலை செய்வதற்கு ஒத்துக்கொண்டனர் இருப்பினும் அவர்களுக்கு வழங்கப்பட்ட உறுதிமொழிகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை.

பெருந்தோட்ட மக்கள் தாங்கள் வாழுகின்ற காணியின் உரித்தினை உறுதி செய்வதற்கு நிர்வாகக் கட்டமைப்பின்படி மாகாண சபையிலிருந்தும் பெருந்தோட்டக் கம்பனிகளிலிருந்தும் அனுமதி பெறவேண்டியுள்ளது. பேருந்தோட்டத் தொழிலாளர்கள் கம்பனிக்கு உரித்தான தாங்கள் வாழுகின்ற காணிகளில் அபிவிருத்திகளை மேற்கொள்வது வரவேற்கப்படாமலும் தோட்ட கம்பனிகளின் முகாமைத்துவ நடைமுறையானது சர்வாதிகாரத்துவமானதாகவும் காணப்படுகின்றது. குறிப்பாக காணியை அளவீடு செய்வதாயினும் கம்பனியிடமிருந்து அனுமதி பெற்ற கடிதத்தில் நில மீட்பு உத்தியோகத்தரின் பரிந்துரைக்குப் பின்னரே காணி அளவீட்டை நடைமுறைப்படுத்த முடியும். தோட்டக் கம்பனிகள் மக்கள் வாழ்கின்ற காணிகள் மற்றும் வாழ்க்கை தொடர்பில் கட்டுப்பாட்டையும் பலத்தையும் கொண்டுள்ளது. தோட்டத்தின் முகாமையாளர்களே மக்கள் காணி தொடர்பிலான அனுகூலங்களைப் பெற்றுத்தருவதில் முக்கிய வகிபங்கைக் கொண்டிருத்தல் இதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும்.

## பெருந்தோட்டத் தொழிலாளர்களின் தொழில்நிமித்த ஆளுமையின் ( நிறுவனத்தின்) மேலதிக வரையறைகள்

கிடைக்கப்பெற்றிருக்கும் நிலத்தின் அளவு பதுளையிலுள்ள மக்களுக்கு பயிர்ச்செய்கைக்கு போதுமானதாக இல்லாமல் இருக்கின்ற நிலையில், பாரிய தனியார் நிறுவனங்கள் தங்களுடைய வர்த்தக நடவடிக்கைகளுக்காக காணிகளைப் பெற்றுக்கொள்கின்றனர். கருத்துக்கணிப்பு செவிமடுப்பில் பங்குபற்றிய மக்கள், மரங்கள் போன்ற வளங்கள் வெட்டப்பட்டு எவ்வாறு கொழும்பை நோக்கி நகர்த்தப்படுகின்றது என்பதனையும் இதனால் இப்பிரதேசங்களில் ஏற்படக்கூடிய மண் சரிவு அபாயம் பற்றியும் குறிப்பிட்டனர்.

பெருந்தோட்டக் காணி ஒன்றின் உரிமை தொடர்பான நீதிமன்ற வழக்குகளில் பெருந்தோட்ட தொழிலாளர்களின் கூற்றுக்கள் அல்லது கருத்துகள் கருத்திற்கொள்ளப்படுவதில்லை. உதாரணமாக காணி உரிமையாளரின் பேரப்பிள்ளைகளினால் முன்வைக்கப்பட்ட உரிமைகோரல் தொடர்பில் நாவலப்பிட்டிய பகரண்ட தோட்டத்திற்கும் அரசிற்குமிடையில் இடம்பெற்ற வழக்கானது அங்குள்ள மக்களுக்குத் தெரியாமலே நடைபெற்றது. தீர்ப்பு சாதகமானதாக அமைந்தபோது பிரதிவாதிகள் இராணுவத்தின் பங்குபற்றுகையுடன் ஒழுங்குப் பத்திரத்தின் மூலமும் கட்டாயமாக காணியிலிருந்து வெளியேற்றப்பட்டனர். இருப்பினும் குடியிருப்பாளர்கள் இந்தத் தீர்ப்பை எதிர்த்து வழக்குத் தாக்கல் செய்தபோதும், தோட்டத்திலுள்ள ஒரு பகுதியினர் மாத்திரம் தோட்டத்தில் வேலைசெய்வதால் அவர்களது இருப்பு உறுதியற்றதாக இருந்ததோடு அவர்கள் காணி உறுதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு காணிக் கச்சேரியை நம்பியிருக்கு வேண்டியவர்களாகின்றனர்.

லுனுகல செசவலன்ஸ் தோட்டத்திலுள்ள பத்தினி அம்மன் கோவிலுக்கும் லுணுகலவிலுள்ள பஸ்நாயக்க நிலமேக்குமிடையில் ஏற்பட்ட காணி உரிமை கோரும் பிரச்சனை ஏற்பட்டது. கோவில் தோட்டத்தொழிலாளர்களை அணுகி அவர்கள் உண்மையில் கோயிலுக்காக வேலை செய்யவேண்டும் எனக்கூறினர். அத்துடன் அவர்களுக்குத் தெரியும் கோவிலின் கோரிக்கையானது ஏற்றுக்கொள்ளப்படுமாயின் தங்களுக்கு கம்பனியினால் வழங்கப்படுகின்ற அனைத்து சேவைகளும் இல்லாமல் போய்விடுமென்று அறிந்திருந்தனர். இருப்பினும் தோட்டத்தில் தொழில் புரிகின்ற மக்களது வாழ்வாதாரமானது பாரிய சுரண்டலுக்குள்ளாகின்றது என்பது குறிப்பிடப்படவேண்டியதொன்றாகும் ஏனெனில் களத்தில் குறைந்தளவு தொழிலாளர்களுடன் வேலைகளைச் செய்வதுடன் அநேகமானோர் தற்காலிக அடிப்படையிலேயே வேலை புரிவதோடு அவர்களுக்கு ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி, விபத்துக்கள் ஏற்படின் அவற்றிற்கான நட்டஈடு ஆகியன வழங்கப்படுவதில்லை. இதிலும் கூட தங்களது நிலங்களில் தாங்கள் என்ன செய்யவேண்டும் என்ற தீர்மானத்தை மேற்கொள்வதற்கான நிறுவன ஆளுமையின்றிக் காணப்படுவதாக விசனம் தெரிவித்தனர். ஒரு மின்சார இணைப்பைப் பெறுவதாயினும் அவர்கள் கம்பனியின் அனுமதியைப் பெறவேண்டியவர்களாக இருக்கின்றனர். அத்துடன் இந்த சொவலன்ஸ் தோட்டத்தைச் சேர்ந்த மக்கள் சுமுதுகமவைச் சேர்ந்த மக்கள் எவ்வாறு தங்களுடைய காணிகளை அபகரித்தனர் என்று விபரித்தனர். லுனுகலவிலிருந்து கலந்துகொண்ட மக்கள் எவ்வாறு பல மனிதவள நிறுவனங்களில் அநேகமான தொழில் புரிகின்றனர் என்பதனைத் தெரிவித்திருந்தனர். மேலும் தேயிலை கம்பனிகள் தங்களது இலாபத்தை குறைப்பதற்கு ஒரு பகுதி நிலத்தை சுற்றுலா அல்லது விவசாயத்திற்கு வழங்கமுடியும். இதனால் மக்களது வாழ்வாதாரமானது அபாயகரமான நிலைக்குத் தள்ளப்படுகின்றது.

## 2.3 சுற்றுச்சூழல் சீரழிவு

ஆணைக்குழுவின் கருத்துக்கணிப்பின்போது பங்குபற்றிய அநேகமான மக்களுக்கு தங்களுடைய வாழ்வாதாரமானது சுற்றியுள்ள சூழல் அமைப்புடன் தொடர்புபட்டதோடு, தங்களைச் சுற்றியுள்ள இயற்கை வளங்களிலும் தங்கியுள்ளது என்பதனை அறிந்திருந்தனர். ஆணைக்குழுவானது பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் அரச கொள்கைகள், அரச முதலீட்டு அபிவிருத்தித் திட்டங்கள், அரச சார்பற்ற அமைப்புக்களின் செயற்பாடுகள் மற்றும் மக்களின் காணி பாவிக்கப்படுகின்ற முறைமை போன்றவை சுற்றுச்சூழல் அமைப்பினை எதிர்மறையாகப் பாதிக்கின்றது என்பதனை அறிந்துகொண்டனர். ஆணைக்குழுவின் செவிமடுத்தலிற்கிணங்க கீழ்வரும் பிரதான காணிப்பாவனையானது சுற்றுச்சூழலை பெரிதும் பாதிப்பதாகத் தெரியவந்தது.

### 2.3.1 பாரிய அளவிலான கருத்திட்டங்கள்

தற்போதைய நிலையில் நீர்ப்பாசனத் திட்டங்கள் மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டு வேலைத்திட்டங்கள் அடங்கலான பல்வேறுபட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள், நகரம் மற்றும் கிராமம் ஆகிய இரண்டு பிரதேசங்களிலும் முன்னெடுக்கப்படுகின்றன. அநேகமான வேலைத்திட்டங்களால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் குறித்து கருத்திற்கொள்வதில்லை. மக்கள் தற்போது நடைமுறையிலுள்ள சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீட்டுப் பொறிமுறை குறித்து கடுமையான விமர்சனங்களை தெரிவித்தனர். மேலும் மக்களின் கருத்துக்கள் நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடப்பட்ட பின்னரே கருத்திற்கொள்வதாக குறிப்பிட்டிருந்தனர்.

நானாவித பிரதேசங்களில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பல்வேறுபட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் தன்மைகளுக்கு அமைவாக பாதிப்பு மதிப்பீட்டுப் பொறிமுறையின் அளவும் அடிப்படையும் மாற்றமடைய முடியும். துறைமுக நகரம் மற்றும் திருகோணமலையிலுள்ள கனியப்பொருள் அகழ்வு ஆகிய திட்டங்கள் கரையோர மற்றும் சுற்றுப்புற கடற்கரையை பாதித்திருக்கின்றது. அதே போன்று நிலப்பரப்பு சுற்றுச் சூழலானது 600 ஏக்கர் காணிப்பரப்பைக் கொண்ட சூரிய கல வேலைத்திட்டமானது ஹம்பாந்தோட்டையைச் சேர்ந்த திஸ்ஸபுர மற்றும் புறுத்தன்கந்த (Thissapura and Buruthankanda) யானைகள் முகாமைத்துவ சரணாலயத்திற்கென ஒதுக்கப்பட்ட காணியில் நடைமுறைப்படுத்தப்புடுகின்றது.

ஆணைக்குழு பதுளைக்கும், திட்டத்தினால் பாதிப்பிற்குள்ளாகிய ஏனைய சுற்றுப்புற பிரதேசங்களுக்கும் விஜயம் மேற்கொண்டபோது உமா ஓயா திட்டத்தின் எதிர்மறையான விளைவுகள் பற்றி அறிந்துகொள்ளக்கூடியதாக இருந்தது. விவசாய நிலங்களுக்கு அத்தியாசியமான ஒரு தொகை நீர்நிலைகள் சுரங்கப்பாதை அமைத்த செயற்பாடு காரணமாக வற்றிப்போன நிலமைகள் உருவானது. விவசாய சீர்திருத்தம் மற்றும் காணிகள் தொடர்பிலான முன்னெடுப்புக்களை மேற்கொள்கின்ற (MONLAR) நிறுவனத்தினால் பதுளையிலுள்ள 37 கிராம சேவகர் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் இத் திட்டத்தின் காரணமாக, 3090 கிணறுகளும் 45 நீர்நிலைகளும் முற்றாக வற்றிப்போயுள்ளமை தெரியவந்தது[6]. இவ்வாறான நீர்ப்பாசனத் திட்டங்கள் (யான் ஓயா, மொறகஹகந்த மற்றும் களு கங்கைத் திட்டங்கள்) உயிர்ப் பல்வகைமைத்தன்மையை அழிப்பதற்கும் காரணமாகின்றது.

6. Uma Oya, yesterday, today and tomorrow by Sajeewa Chamikara available at: https://monlar.lk/umaoya-disaster-Eng.html

“என்னுடைய வீடு உமா ஓயா திட்டத்தின் காரணமாக முற்றாக சேதமடைந்தது. நிலம் வெடித்து வயல்நிலங்களும் கூட தாழ்ந்துவிட்டன. கடந்த 3 வருடங்களாக நாங்கள் நெற்செய்கையை மேற்கொள்ளவில்லை. தமிழர், சிங்களவர் அல்லது முஸ்லீம் ஆகிய நாங்கள் அனைவரும் மனிதர்கள் இவ்வாறான அநீதி யாருக்கும் நடைபெறக்கூடாது. அவர்கள் எங்களை வீடுகளிலிருந்து வெளியேற்றி வாடகை வீட்டில் வாழுமாறு பணித்திருந்தனர் ஒரு வருடம் கடந்த நிலையிலும் எங்களது வீடுகளைப் பார்வையிட வரவில்லை. அத்துடன் மழைக் காலங்களில் வீட்டினுள் நீர் கசிந்து முற்றாக நனைவதனால் எங்களால் அங்கு வாழமுடியாது”

- பதுளையிருந்து பங்குபற்றிய ஒரு பங்குபற்றுநர்

இதற்கிடையில் ஹம்பாந்தோட்டை கரையோரப் பிரதேசங்களில் வாழுகின்ற விவசாயிகள் புதிதாகக் கட்டப்பட்ட துறைமுகத்தின் காரணமாக உவர் நீர் ஊடுருவல் பிரச்சனைக்கு முகங் கொடுத்துவருகின்றனர். ஒலுவிலில் கட்டப்பட்ட துறைமுகத்தின் காரணமாக அம்பாறை நிந்தவூர் மேட்டுப்பள்ளை கிராமத்தைச் சேர்ந்த வண்ணான்சேனை மற்றும் கடற்கரை வெட்டை ஆகிய பிரதேசங்களில் கடலரிப்பு ஏற்படுகின்றது.



2.3.2 சுற்றுலாத்துறை

**"சூழல் பாதிப்புக்கள் அதிகரிக்கின்றன. கடற்கரையிலிருந்து 300 மீட்டர் தூரத்திற்குள் உள்ள நிலங்களை விற்கமுடியாது இருப்பினும் அவை பின்பற்றப்படாமல் சுற்றுலா விடுதிகள் அமைப்பதற்கு விற்கப்படுகின்றன. சுற்றுச்சூழல் அதிகாரசபை இவற்றிற்கு அனுமதி வழங்கியுள்ளது."**

- மாத்தறையைச் சேர்ந்த பங்குபற்றுநர் ஒருவர்.

சுற்றுலாத்துறையின் அதீத வளர்ச்சி காரணமாக பல்வேறுபட்ட பெரிய அளவிலான கட்டுமான நிகழ்ச்சித்திட்டங்களும் பெருமளவான பாரிய காணிகளை எதிர்கால சுற்றுலா சார்ந்த வேலைத்திட்டங்களுக்காக ஒதுக்கப்படுவது அவதானிக்கப்பட்டது. இருப்பினும் பெரிய அளவிலான சுற்றுலா வேலைத்திட்டங்கள் நாட்டின் கரையோர சூழல் அமைப்பினை பாதிக்கின்றது குறிப்பாக கற்பிட்டி, நிலாவெளி, குச்சவெளி ஆகிய பிரதேசங்களில் கண்டல், முருகைக்கல் மற்றும் மணல்மேடு போன்ற ஏனைய சூழல் அமைப்புக்களையும் பாதிக்கின்றது. மேலும் அநுராதபுரத்தில் ஆற்றிற்கென ஒதுக்கப்பட்டுள்ள காணிகளையும் அவற்றிற்கு அருகிலுள்ள காணிகளையும் கைப்பற்றியிருப்பதனால் வெள்ளம் ஏற்படுவதோடு விலங்குகளுக்கான இயற்கை வாழிடங்களும் அழிக்கப்படுகின்றன.

அநுராதபுரத்திலுள்ள போரெஸ்ட் றொக் காடின் ரிசோட்டினால் ஏற்படுகின்ற சூழல் பாதிப்புக்கள் பற்றி மக்கள் கருத்துக்கணிப்பு செயற்பாட்டில் தெரிவித்திருந்தனர். இவ்விடுதியானது உத்தியோகபூர்வமான சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீடு ஒன்றினை மேற்கொள்ளாமல் கட்டுமானப் பணிகளை மேற்கொண்டது மாத்திரமன்றி கட்டுமான செயற்பாடுகளின் போது குறைந்தது 1 ஏக்கர் காடுகள் அழிக்கப்பட்டது[7] எனவே இதற்கு முன்னதாக இது தொடர்பில் கவனஞ் செலுத்தியிருக்கவேண்டும். இக்கட்டுமானப் பணிகளுக்குப் பின்னர் மனிதருக்கும் யானைகளுக்குமிடையிலான மோதல் வலுப்பெற்றதாகக் கூறப்பட்டது. யானைகள் கருவலகஸ்வாவவிற்கும் வில்பத்து தேசிய பூங்காவிற்குமிடையில் பயணிக்கின்ற பாதையிலே விடுதி அமைக்கப்பட்டுள்ளமை இதனை மேலும் வலுப்பெறச் செய்கின்றது.



7. Uma Oya, yesterday, today and tomorrow by Sajeewa Chamikara available at: https://monlar.lk/umaoya-disaster-Eng.html

### 2.3.3 பாரிய அளவிலான வர்த்தக வேளாண்மை

உலர்வலயத்தில் பாரிய அளவிலான வேளாண்மைக் கம்பனிகளான டோல் லங்கா (தனியார்) நிறுவனம், பிறவுண் மற்றும் கம்பனி பீ.எல்.சீ. சீ.ஐ.சீ ஹோல்டிங்ஸ் பீ.எல்.சீ மேற்கொள்கின்ற நடவடிக்கைகள் மூலமும் ஈர வலயத்தில் பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகள் மேற்கொள்கின்ற நடவடிக்கைகள் அங்குள்ள சுற்றுச்சூழல் அமைப்பின் அழிவிற்கு பங்களிப்புச் செய்கின்றது. கூடுதலான நிலக்கீழ் நீரை உறிஞ்சுதல், மற்றும் வணிக நோக்கான வேளாண்மைக்காக காடுகளை அழித்தல் போன்ற நடவடிக்கைகள் நிலத்தடி நீர்நிலைகளை கணிசமாகக் குறைக்கின்றது. மேலும் மாணிக்க கங்கை மற்றும் கிரிந்தி கங்கை ஆகியவற்றிலிருந்து மேற்படி கம்பனிகள் பாரியளவு நீரைப் பெற்றுக்கொள்வதால் லுனுகம்வெகெர மற்றும் யால ஆகிய பகுதிகளில் வாழுகின்ற யானைகள் உட்பட்ட மிருகங்கள் பாரிய நீர்த்தட்டுப்பாட்டை எதிர்கொள்கின்றன. பொலன்னறுவை மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களில் விவசாயத்திற்கென அதிகளவான கிருமிநாசினிகள் பாவிக்கப்படுவதால் உயிரியல் பல்வகைமைத்தன்மைக்கு தீங்கு விளைவிப்பதோடு மண் வளத்தைக் குறைத்து நீர்நிலைகளையும் மாசுபடுத்துகின்றன. டோல் லங்கா (தனியார்) நிறுவனம் பயிர்ச்செய்கைகளின் மூலம் யானைகளின வருகையை ஊக்குவித்ததாலும் வேலியிடப்பட்டுள்ள காரணத்தினால் யானைகள் கிராமங்களுக்குள் நுழைவதாக வெள்ளவாய பிரதேசத்தில் வாழுகின்ற மக்கள் விசனம் தெரிவித்தனர். அத்துடன் இக் கம்பனியானது அதிகளவிலான விவசாய இரசாயனங்களைப் பாவிப்பதாகவும் குறை கூறப்பட்டது.



#### 2.3.4. இராணுவமயமாதல்

காணிகள் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலையில் பல்வேறு எதிர்மாறான சூழல் பிரச்சனைகளை ஏற்படுத்துவதாக ஆணைக்குழுவிற்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் தெரியவந்தது. அவர்கள் மக்களுக்குப் பயன்படக்கூடிய பற்றாக்குறையான வளங்களை ஏகபோக சூழல் வளங்களாக மாற்றியமைத்துள்ளமை தெரியவந்தது. உதாரணமாக காயான்குழி மற்றும் முள்ளிக்குளம் பிரதேசங்களில் நன்னீர் ஊற்று கடற்படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள நிலையிம் இந்தியாவிலிருந்து மீள்குடியேறிய மக்கள் அவர்களில் தங்கியிருக்க வேண்டியுள்ளது. இதன் விளைவாக அவர்கள் தினமும் 20 லீட்டர் நீரைக் கொள்வனவு செய்யவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியுள்ளனர். முள்ளிக்குளம் மற்றும் பாணம ஆகிய பிரதேசங்களில் இராணுவம் சட்ட விரோதமாக காணிகளை கையகப்படுத்தி அதில் தற்போது சுற்றுலா விடுதியொன்றை அமைத்து வருவதோடு அப்பிரதேசத்திலுள்ள கண்டல் காடுகளை அழித்து உவர் நீர்நிலைகளின் சூழல் அமைப்புக்களைப் பாதிப்பிற்குள்ளாக்குகின்றனர். அத்துடன் சுண்டிக்குளம் சரணாலயமும் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்தில் அமைந்துள்ளதால் பிரயோசனமற்றதாகக் கருதப்படுகின்றது.

## 2.4 இழந்த அடையாளங்கள

**"என்னுடைய தேசிய அடையாள அட்டை எனது அடையாளத்திற்கு அவசியமானது போல என்னுடைய நிலமும் எனது அடையாளமாகும். இதுதான் நான் என்று அடையாளப்படுத்தல்."**

- வட்டுவாலைச் சேர்ந்த ஒரு பங்குபற்றுநர்.

கொள்கைகள் உருவாக்கப்படும் போதும் அல்லது நீதியின் கண்ணோட்டத்திலும் நிலத்துடனான தொடர்பு உறுதி, அனுமதிப்பத்திரங்கள், உறுதிப்படுத்தல் படிவம். தொகைகள் மற்றும் வரிப்பணம் ஆகிய ஆவணங்களுக்கூடாகவே மதிக்கப்படுகின்றது. இருப்பினும் நாடுபூராகவும் மேற்கொள்ளப்பட்ட மக்களுடனான கருத்துக்கணிப்பு செயற்பாடுகளில் மக்கள் பல்வேறுபட்ட வழிகளில் காணிகளுடனான தொடர்பை தெளிவாக விபரித்திருந்ததோடு, இது எவ்வாறு தங்களது அடையாளத்தையும் சமூகங்களையும் வடிவமைத்துக் காட்டுகின்றது என்பதனையும் வெளிப்படுத்தியிருந்தனர். அவர்களது காணிப் பிரச்சனைகளைத் தீர்க்கின்ற பொறிமுறைகள் தனிப்பட்ட மற்றும் சமூகச் சூழலினால் உருவகிக்கப்பட்ட மக்களது கதைகளை செவிமடுப்பதோடு அவர்களது எதிர்பார்ப்புக்களையும் அடையாளப்படுத்து ஒப்புக்கொண்டு நடைமுறைப்படுத்த வேண்டும்.

இருப்பினும் நிலத்துடனான மக்களின் தொடர்புகள் எப்பொழுதும் தாங்கள் குடியிருந்த காணிகளிலேயே வாழவேண்டும் என்ற கோரிக்கையாக அர்த்தப்படவில்லை. மக்கள் வாழ்க்கையின் முன்னேற்றங்கள் குறித்தும் பிள்ளைகளுக்கான சிறந்த எதிர்காலத்தை அமைத்தல், எதிர்காலத்திற்கென சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் மற்றும் முன்கூட்டிய எச்சரிக்கைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய பொறிமுறைகளின்றி இருப்பதால் இயற்கை அனர்த்தங்களிலிருந்து பாதுகாப்புப் பெறுதலை நோக்கி முன்னேறுதல் போன்றன பற்றிப் பேசியிருந்தனர்.

### 2.4.1 குடும்ப அடையாளம்

"30 வருட காலமாக காணிகளைப் பாவித்த சிங்கள குடியிருப்பாளர்கள் எங்களது 300 வருட காணிப் பாவனை பற்றிச் சிந்திக்கவேண்டும்"

- முல்லைத்தீவு கொக்குத்தொடுவாயைச் சேர்ந்த பங்குபற்றுநர்கள்.

**"காணிகளிலிருந்து இடம்பெயர்ந்து வயதாகி இறந்த பின்னர் இரண்டாவது தலைமுறை அதற்காகப் போராட வேண்டுமென்ற நம்பிக்கையையும் இலக்கையும் கொண்டிருக்காது என அரசாங்கம் நம்புகின்றது"**

- யாழ்ப்பாணம் பலாலியைச் சேர்ந்த பங்குபற்றுநர்கள் கிண்டலாக தெரிவித்திருந்தனர்.

மக்கள் பரம்பரை பரம்பரையாகக் நிலங்களில் வாழ்ந்து அவற்றுடன் வலுவான பிணைப்பை ஏற்படுத்திக்கொண்டமை தொடர்பில் பேசினார்கள். உதாரணமாக கல்லோயாவில் அவர்களது முதாதையர்கள் காடுகளை அழித்து காணிகளில் வீடுகளை அமைத்தனர் என்பதை நினைவபடுத்தியதோடு அவர்கள் அல்லது அவர்களது பெற்றோர்கள் நட்ட மரங்கள் தொடர்பிலும் தெரியப்படுத்தினர்.

நிலத்துடன் தொடர்புபட்டதான பல்வேறு அங்கீகாரங்களின் அடிப்படையில் மக்கள் முக்கியமான வாழ்க்கைத் தீர்மானங்களையும் முதலீட்டுத் தீர்மானங்களையும் மேற்கொள்கின்றனர். கொழும்பில் பல்வேறு நகரப்புற ஏழைகள் மக்கள் தாங்கள் பரம்பரை காலமாக வாழ்ந்துவந்த தங்களது காணிகளுடன் காணப்படுகின்ற உணர்ச்சிபூர்வமான மற்றும் நிதி முதலீட்டுப் பிணைப்பானது உறுதிகள் இல்லாத நிலமையைக் காட்டிலும் வலுவானது எனக் குறிப்பிட்டிருந்தனர். அத்துடன் இத் தொடர்பானது அரச அங்கீகாரத்துடனான பயன்பாட்டு (மின்சாரம், நீர்) இணைப்புக்களைப் பெறல், வாக்காளர் பதிவுகள் மற்றும் சிறுவர்கள் பாடசாலைகளில் அனுமதிக்கப்படல் ஆகியவற்றின் மூலம் மேலும் வலுப்பெற்றது. இந்த அங்கீகாரமானது காலப்போக்கில் வலுவடைந்து மக்கள் தங்களது வீடுகளை மேம்படுத்தி கணிசமான அளவு மாற்றங்களையும் ஏற்படுத்தியிருந்தனர். இதேபோன்ற தொடர்புகள் அநுராதபுர மாவட்டத்தில் அரச காணிகளில் வாழ்ந்துவரும் மக்களிடத்திலும் காணப்பட்டது.



### 2.4.2 சமய மற்றும் இன அடையாளங்கள்

**“இராணுவத்தினர் இடம்பெயர்ந்து மீளக்குடியேறிய மக்களை அப்பிரதேசத்திலுள்ள அவர்களது வணக்கத்தலங்களுக்கு செல்ல அனுமதித்தல் அவர்களைத் சமாதானப்புடுத்துவதற்குப் பாவிக்கின்ற தந்திரோபாயமாகும், அத்துடன் இந் நடவடிக்கைகளானது காணி விடுவிப்பில் முன்னேற்றங்கள் காணப்படுவதாக உலகிற்குக் காட்டுவதற்கேயாகும்”**

- யாழ்ப்பாணம், பலாலியைச் சேர்ந்த பங்குபற்றுநர்கள்.

காணி அமைந்துள்ள அப்பிரதேசத்தின் புனிதத்தன்மை காரணமாக மக்களுக்கும் அவர்கள் குடியிருக்கும் அல்லது குடியிருந்த காணிகளுக்குமிடையில் நல்ல பிணைப்பொன்று காணப்படுகின்றது. வழிபாடுகளுக்கான அணுகுதல், வழிபாட்டு முறைமைகள் மற்றும் சடங்குகள் ஆகியன மக்களை அவர்கள் வாழும் பூமியுடன் பிணைப்பதோடு அவற்றின் இழப்பானது மக்களிடைய குழப்பகரமான நிலையை ஏற்படுத்துவதோடு ஏற்கனவே காணப்படுகின்ற காணிப்பிரச்சனைகளை மேலும் விரிவுபெறச் செய்கின்றது.

உதாரணமாக பொத்துவிலிலுள்ள புட்டம்பை-ஜலால்டீன்புரம் என்ற ஒரு பழைய முஸ்லீம் கிராமம் தமிழீழ விடுதலைப் புலிகளினால்[8] 15ந் திகதி ஏப்ரல் மாதம் 1985 இல் மேற்கொள்ளப்பட்ட குழப்பத்தின் காரணமாக கைவிடப்பட்டது. அதன் பின்னா அவர்கள் காணிகளை குறைந்த விலைக்கு விற்றும் சிலர் பல்வேறு வழிகளில் அவற்றை இழந்தும் விட்டனர். 3 வருடங்களுக்கு முன்னதாக அவர்கள் மீண்டும் குடியேறி பள்ளிவாசல் ஒன்றை அமைத்ததன் பின்னர் அது இனந்தெரியாத சிலரால் உடைக்கப்பட்டது. அவர்கள் ஆரம்பத்தில் இடம்பெயரும்போது நட்டஈடு எதுவும் வழங்கப்படவில்லை, அத்துடன் அவர்களது உடமைகளும் பாதிக்கப்பட்டன. தற்போதைய நிலமையில் தமிழ் மக்கள் விவசாயம் செய்துகொண்டு சுற்றுவட்டாரத்தில் வாழ்ந்து வருகின்றனர். இனம் சார்ந்த வெளியேற்றல்கள், பாகுபாடுகள், குழப்பங்களின் விளைவாகத் தோன்றி மக்களின் அடையாளத்தை இழக்கின்றனர், குறிப்பாக புட்டம்பை-ஜலால்டீன்புரம், சிலாவத்துறை, முல்லைத்தீவு(மறிப்பு) மற்றும் வவுனியா. யான் ஓயா திட்டத்திலும் மக்கள் மீள்குடியேற்றப்பட்ட பிரதேசங்களில் எவ்விதமான வசதிகளுமில்லையென புகார் செய்தனர்.

### 2.4.3 வாழ்வாதார அடையாளம்

**“எங்களது நெல்லை, குத்தகைக்குப் பெற்றுக்கொண்ட நிலங்களில் மழையை நம்பி 3 போகமும் பயிர்செய்த நாங்கள் ஒரே தடவையில் அனைத்தையும் இழந்து காணியை விட்டு வயிற்றில் பசியுடன் வெளியேறும்போது மனதில் ஏற்படக்கூடிய உணர்வுகள் எவ்வாறிருக்கும்”**

- முல்லைத்தீவு கொக்குத்தொடுவாயைச் சேர்ந்த பங்குபற்றுநர்கள்

அநுராதபுரத்திலுள்ள தமிழ் சமூகம் காணியிலிருந்து வெளியேற்றப்பட்டு பாடசாலை வசதிகள் கூட இல்லாத மிகக் குறைவான வசதிகள் கொண்ட இடத்தில் மீளக்குடியமர்த்தப்பட்டது தொடர்பில் கருத்துத் தெரிவித்தனர். இதன் காரணமாக பிள்ளைகளின் பாடசாலை இடைவிலகல்கள் அதிகரித்ததோடு காலப்போக்கில் இவர்களுக்கு நாளாந்த கூலி

8. கிராமத்தவர்கள் கூறியதற்கிணற்க 15ந் திகதி ஏப்ரல் மாதம் 1985 இல் த.வி.பு தங்களது கிராமத்தை எரித்து 4 வரைக் கொன்றதோடு அதன் பின்னர் அக்கிராமம் கைவிடப்பட்டது

உதவித் தொழில்களை மாத்திரமே பெற்றுக்கொள்ள முடிந்தது. இந்த காணிகளிலிருந்து வெளியேற்றப்படல் செயற்பாடானது, நேரடியாக ஒரு குறிப்பிட்ட வகைத் தொழிலுடன் அவர்களின் அடையாளத்தைத் தொடர்புபடுத்துவதற்கான ஒரு சிறந்த உதாரணமாகும். பலாலியில் பாரம்பரிய தொழில்களான பனம்பொருள் உற்பத்திகள், மீன்பிடி, விவசாயம் ஆகியன இளைஞர்களின் விருப்பமின்மை காரணமாக குறைவடைந்து அற்றுப்போகின்ற நிலமைக்குள்ளாகின்றமை குறித்து பொதுமக்களுடனான கருத்துக்கணிப்பின்போது தெரியவந்தது.

### 2.4.4 அடையாளங்கள் அகற்றப்பட்டமை

ஒருவருடைய காணியிலிருந்து அடையாளத்தின் நிமித்தம் வன்முறையினால் வெளியேற்றல் அல்லது ஒருவருடைய காணியை அவரிடமிருந்து வேறோரு அடையாளத்தைக் கொண்ட ஒரு குழுவினரால் அடையாளத்தின் நிமித்தம் விலக்கி வைத்திருத்தலின் விளைவாக காணியுடன் தொடர்புபட்ட அடையாளத்தை மையப்படுத்தியதான ஒரு நியாயமற்ற குழப்பகரமான நிலமை உருவாகும். இந் நியாயமற்ற நிலமையானது காணிப் பிரச்சனையுடன் பிரிக்கமுடியாத அளவுக்கு இணைக்கப்பட்டு அவை காணி இழப்பின்போதும் பேசப்படும். பாதிப்பிற்குள்ளாக்கூடிய நிலமையிலுள்ள மக்கள், அந்நியமானவர்கள் மற்றும் உரிமையற்றவர்களையும் பல்வேறு பெயர்களைக் கொண்டு அழைக்கின்றனர். அதாவது ஆதிவாசி, போடிங் ஆட்கள், வேற்றுகிராம வாசிகள், பயங்கரவாதிகள், அந்த புலோக் பிள்ளைகள'block lamai'.போன்ற பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றனர்.

இடத்தின் வெளிப்புறப் (பௌதீகப்) பண்புகளை மாற்றியமைப்பதற்கு முயற்சித்து அவற்றின் அடையாளங்கள் மாற்றப்பட்டமை குறித்து மக்கள் காயப்படுத்தப்பட்டு விரக்தியும் அடைந்துள்ளனர். இது அவர்களது நிலத்துடனான உறவை பாதிப்பதோடு அவர்கள் வெளியேற்றப்பட்ட உணர்வைப் பெற்றதோடு 'தங்களுக்குரியதல்ல' அல்லது 'தங்களுக்கு வேண்டாம்' என்ற நிலைக்குள்ளாகின்றனர். புதிதாக வணக்கத்தலங்கள் உருவாதல் அல்லது சமயம் சார் கட்டிடங்கள், சமயஞ் சார்ந்த சிலைகள் மற்றும் வீதி மற்றும் இடங்களுக்கு தமிழிலிருந்து சிங்களத்திற்கு அல்லது தொடர்பே இல்லாத நபர்களின் பெயர்கள் கொண்டு மாற்றப்படல் குறித்து மக்கள் அதிருப்தியை வெளிப்படுத்தினர்.

நாட்டின் கிழக்குப் பகுதியில் நிர்வாக அலகுகள் வெளிப்படையாகவே தமிழிலும் சிங்களத்திலும் பிரித்துப் பெயரிடப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவித்தனர். இந் நடைமுறையானது ஏனைய சமூகங்களிடையேயும் பரவி அவர்கள் குறிப்பிட்ட பிரதேசங்களில் மாத்திரம் குடியிருப்பதற்கு அனுமதி இருப்பது போன்றதான நம்பிக்கையுடன் காணப்படுகின்றனர். முஸ்லீம் சமூகத்தின் சனத்தொகையைக் கருத்திற்கொள்ளாதது நிர்வாக ரீதியாக அவர்களை எல்லைப்படுத்தலுக்குள்ளாக்கியுள்ளது என உணரப்படுகின்றது. உதாரணம் : காத்தான்குடி

### 2.4.5 அரச நிதியுதவியுடன் கொண்டுவரப்படுகின்ற காலனித்துவம் மற்றும் அடையாளம்

அரச நிதியுதவியுடன் கொண்டுவரப்படுகின்ற காலனித்துவமானது அரசின் இனவாத நிகழ்ச்சி நிரல்களை வலுப்படுத்தும் எண்ணத்தில் முக்கியமாக தமிழ் மற்றும் முஸ்லீம் பகுதிகளின் சனத்தொகைப் பரம்பலை மாற்றி அமைப்பதற்கென வரலாற்று ரீதியாக முன்வைக்கப்படுகின்ற மேம்படுத்தப்பட்ட பொறிமுறையாகும். குறிப்பாக வெலி ஓயா[9] (முதலில் "மணலாறு"[10] என்ற பெயர் கொண்டு அழைக்கப்பட்டது) மற்றும் கல் ஓயா. ஆகியன இன்றுவரை காலனித்துவம் இடம்பெற்றுவருகின்ற சில பழங்கால திட்டங்களாகும். இன்று வரை சரியாகத் தீர்க்கப்படாமல் இருக்கின்ற இலங்கையின் 30 வருட இனப் போராட்டத்திற்கு ஒரு மூல காரணமாக அமைந்த காணிப்பிரச்சனை, ஒரு நீண்ட கால சர்ச்சைக்குரிய[11] விடயமாகக் காணப்படுகின்றது. (பாரம்பரிய தாயகக் கருத்துக்கள்)

காணி உள்ளாந்த ரீதியில் அடையாளத்துடன் பிணைந்துள்ளதோடு நாட்டிற்கு சொந்தமானதுமாகும். ஆகவே பல்வேறுபட்ட நகர அல்லது நகர்ப்புற குடியிருப்பாளர்கள் காணி மற்றும் அதன் உரிமை தொடர்பில் கொண்டிருக்கும் பிணைப்பு கிராமத்தவர்களின் எண்ணப்பாட்டிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகக் காணப்படுகின்றது. குறிப்பாக சிறுபான்மை சமூகத்தினரிடையில் காணி என்பது அவர்களது ஒருங்கிணைக்கப்பட்ட வரலாறு மற்றும் அடையாளங்களுடன் ஒன்றிணைந்த ஒரு விடயமாகக் காணப்படுகின்றது. அதனால் தேசிய காணிக் கொள்கையை வரையும் போது மிக முக்கியமான சில கருத்துள்ளீடுகள் அவசியமானதாகும்.

எதிர்கால நீர்ப்பாசன வேலைத்திட்டங்களை வடிவமைத்து திட்டமிடும் போது முக்கியமான தெளிவை அதிகரிக்கின்ற வழிகாட்டல்களாவன,

கேள்விக்குறியிலுள்ள மக்கள் கலந்தாலோசிக்கப்பட்டு அவர்களது உள்ளீடுகள் முன்னெடுக்கப்பட்விருக்கின்ற அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் மீள் குடியேற்றத் திட்டங்கள் குறித்து பெறப்படவேண்டும்.

மீள் குடியேற்றத்திட்டங்களில் வெளியிடத்திலுள்ள திட்டத்திற்கான அளவுகோல்களை திருப்தி செய்கின்ற மக்களைக் காட்டிலும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற உள்ளூரிலுள்ள காணியற்ற வறிய மக்களுக்கு, முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

குறிப்பிட்ட பிரதேசத்திற்கு வெளியே உள்ள பிரதேசங்களைச் சேர்ந்த (குறிப்பாக அருகிலுள்ள மாவட்டங்களிலிருந்து) மக்களைக் கொண்டுவரும்போதும் இன விகிதாசாரம் குறித்து முக்கிய கவனஞ் செலுத்தப்படவேண்டியதோடு குடியிருப்பாளர்களுக்கும் ஏற்கனவே உள்ள மக்களுக்குமிடையில் குழப்பங்கள் ஏற்படாமலும், அப்பிரதேசத்தின் இன விகிதாசாரத்தில் குழப்பம் ஏற்படாத விதத்திலும் நடைமுறைப்படுத்தவேண்டும்.

---

9. Ajit Kanagasundram, The Gal Oya Project 60 years on - Part II - http://www.island.lk/index.php?page_cat=article-details&page=article-details&code_title=152657

10. University Teachers for Huma Rights Jaffna (UTHR(J)), Special Report 5 - From Manal Aaru to Weli Oya and the Spirit of July 1983, 15th September, 1993 - http://www.uthr.org/SpecialReports/spreport5.htm#_Toc512569422

11. University Teachers for Huma Rights Jaffna (UTHR(J)), Report 11, APPENDIX II - Colonisation & Demographic Changes in the Trincomalee District and its effects on the Tamil Speaking People - http://www.uthr.org/Reports/Report11/appendix2.htm

உள்ளூர் அல்லது மாகாண அரச திணைக்களங்களினதும் மத்திய அல்லது தேசிய அரச திணைக்களங்களினதும் வகிபங்குகளை தெளிவாக வரையறை செய்து அவர்களது பொறுப்புக்கள் அதற்கேற்ப வழங்கப்படவேண்டும். (மீள் குடியேற்றம் செய்யப்படுகின்ற சமூகங்களுக்கிணங்க தீர்மானங்கள் எடுக்கப்படவேண்டும்.)

1990 களில் த.வி.பு களால் வட மாகாணத்திலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லீம் குடியிருப்பாளர்கள் 10 வருடங்களுக்குப் பின்னரும் அவர்களின் பாதங்கள் இடம்பெயர்ந்துள்ள இடத்திற்கும் சொந்த நிலத்திற்குமிடையீல் காணப்படுவதோடு அவர்களுக்கு வாக்களிக்கும் உரிமையும் இன்றி இருப்பது குறிப்பிடத்தக்க பிரச்சனையாகும். அவர்கள் வாக்களிப்பதற்கான விசேட பொறிமுறைகள் காணப்பட்டபோதிலும் ஒவ்வொரு தடவையும் புத்தளத்திலிருந்து பேருந்துகள் மூலம் அவர்களது சொந்த இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு வாக்களித்தனர். ஒன்று அல்லது மற்றைய அரசியற் கட்சிகளின் குண்டர்களால் அநேகம் கல் வீச்சிற்கும் உள்ளாகியுள்ளனர். மன்னார் மற்றும் முல்லைத்தீவைச் சேர்ந்த முஸ்லீம்கள் இடம்பெயர்வின் பின்னர் புத்தளத்தில் அனைத்தையும் முதலிலிருந்து ஆரம்பிக்கவேண்டியிருந்தது. இருப்பினும் யுத்தத்தின் பின்னர் தங்களது சொந்தக் காணிகளுக்கு மீளும் போது தமிழ் மக்கள் அவற்றில் வாழ்ந்து வருகின்றனர். தங்களது சொந்த இடங்களிலிருந்து அனைத்தும் இழக்கபட்ட நிலையில் முஸ்லீம்கள் வெளியேற்றப்பட்டதோடு, அவர்கள் குடியேறிய இடங்களில் அப்பகுதி மக்களால் "அகதி நாய்கள்" என்ற அவதூறான பெயர்கொண்டு அழைக்கப்பட்டனர். இவ்வாறாக நீண்ட காலமாக இடம்பெயர்ந்து வாழ்ந்துவந்த முஸ்லீம்களுக்கு அரசாங்கத்தினால் வீடுகள் வழங்கப்படாமலும் எவ்விதமான உதவிகளுமின்றி தாங்களே தங்களால் முடிந்த அளவிற்கு காணிகளைக் கொள்வனவு செய்துள்ளனர்.

காணிச் சட்டங்களானது இவ்வாறாக இடம்பெயர்ந்த முஸ்லீம் மக்களுக்கு அவர்களது காணிகளுக்கு மீண்டும் செல்ல அனுமதி வழங்கவேண்டும் இல்லாவிடின் அவர்களுக்கான நட்ட ஈட்டுத் தொகையுடன் மாற்று இடத்தில் அவர்களுக்குப் பொருத்தமான காணிகளை பெற்றுக்கொள்ள வழிவகுக்கவேண்டும்.



## 2.5 காணிகளை உடமையாக்கல், காணி உரிமை மற்றும் பாதுகாப்பு தொடர்பான பெண்களின் போராட்டங்கள்

மக்களின் காணி ஆணைக்குழுவின் அமர்வுகளில் அனைத்து மாவட்டங்களிலுமுள்ள பல பெண்களுடன் கலந்துரையாடியிருந்தோம். பெண்கள் காணிப் போராட்டங்களின் பங்காளிகளாகவும் பல்வேறுபட்ட காணிப்போராட்டங்களில் தலைவர்களாகவும் இருந்துவந்துள்ளனர், குறிப்பாக இராணுவத்திடமிருந்து காணிகளை மீளப்பெற்றுக்கொள்வதற்கு முல்லைத்தீவிலுள்ள கேப்பாப்பிளவு மக்கள் போராட்டத்திலிருந்து அக்கரைப்பற்று நுரைச்சோலை முஸ்லீம் மக்களின் சுனாமி மீள்குடியேற்ற வீட்டுத்திட்டம் தொடர்பான போராட்டங்கள் வரை. தங்களது சமூகத்தின் காணி உரிமை தொடர்பான பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான வாய்ப்பையும் பலத்தையும் பெற்றுக்கொள்ளும் நோக்கில் சில வேளைகளில் பெண்கள் அரசியலிலும் இணைந்துள்ளனர். காணி பெண்களின் அடையாளத்திலும் சமூக பொருளாதார பாதுகாப்பிலும் நெருக்கமாகத் தொடர்புபட்டுள்ளது எனத் தெளிவாகின்றது. பல்வேறுபட்ட அமர்வுகளில் ஆணையாளர்கள் பெண்களுடன் வேறாகக் கலந்துரையாடியதால் அவர்கள் பயமின்றி சரளமாகக் கலந்துரையாடக்கூடியதாக இருந்தது. காணிகளிலிருந்து வெளியேற்றப்படலானது பால்நிலை சார்ந்த அனுபவமாக இலங்கையில் மாத்திரமல்ல ஏனைய நாடுகளிலும்[12] வரலாற்றுப் பதிவுகளிலும் கல்வியியல் ஆவணங்களிலும் குறிப்பிடப்படுகின்றன. மக்கள் கருத்துக்கணிப்புக்கள் நடைமுறைப்படுத்தப்பட்ட விதமானது ஆழமான விசாரணை மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படாவிட்டாலும் ஆவணப்படுத்தல், பால்நிலைசார் பகுப்பாய்வு, பெண்களின் சாட்சியங்கள் ஆகிய வெளிப்படையான இந்த அனுபவங்கள் பெற்றுத்தந்தது.

### 2.5.1 இடம்பெயர்வு வெளியேற்றம் மற்றும் அடையாளம்

பெண்கள் தங்கள் இடம்பெயர்வ மற்றும் வெளியேற்றப்படல் குறித்த அனுபவங்களைப் பகிரும் போது அந்நியமானவர்களைப் போன்று கணிக்கப்படுகின்ற களங்கப்பட்ட தன்மை குறித்து அதிகம் பேசினர். இடம்பெயர்ந்த அல்லது வெளியேற்றப்பட்ட மக்கள் ‘அகதி’ அதாவது இடம்பெயர்ந்தவர்கள் போன்ற தரங்குறைந்த பெயர்கள் கொண்டு அழைக்கப்பட்டனர். பெண்கள் அரச சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் போதும், உள்ளூர் சமூகத்துடன் பழகும் போதும் சமூகத்தின் இகழ்ச்சிக் கண்ணோட்டத்தின் காரணமாக பாதிக்கப்படுவதோடு, பாடசாலைகளில் பாகுபாடுகளை எதிர்நோக்குகின்ற தங்களது குழந்தைகளாலும் காயப்படுத்தப்படுகின்றனர். யாழ்ப்பாணத்தில் ஒரு இளம் பெண் தனது அனுபவத்தைப் பகிரும் போது. எவ்வாறு அவரது சக மாணவர்கள் பாடசாலைக்காலம் முடியும் வரைக்கும் தனது வீடு துப்பரவற்றது, சுகாதாரமற்றது மற்றும் குப்பை கூழங்கள் எங்கும் காணப்படுகின்றன என எண்ணி தன்னுடைய பிறந்த நாளிற்குக்கூட வராமலிருந்தமை குறித்துக் கூறினார். இந்த சமூகமானது இடம்பெயர்ந்து 30 வருட காலமாக இவ்வாறான தற்காலிகக் குடியிருப்புக்களில் வாழ்ந்துவந்தனர். ஒரு பரம்பரையே இவ்வாறான அமைப்பில் வளர்ந்துள்ளனர். வகுப்பறைகளில் இடம்பெயர்நத குடும்பங்களைச்

12. A study on Women's Land Rights in the Post-Tsunami Resettlement Process in Batticaloa documents through in depth case studies, women's experience of domestic violence in relation to loss of land and property in the post tsunami rettlemment process. Not only did women lose their claims to dowry land in the resettlement process but women spoke of violence in the home as they were trying to negotiate the power relations in the households as the new post-tsunami housing were given in the man's name. Maunaguru, Sitralega & Emmanuel Sarala (2010), in Penkalin Nilam: A study on Women's Land Rights in the Post-Tsunami Resettlement Process in Batticaloa, published by Suriya Women's Development Centre Batticaloa.

சேர்ந்த பிள்ளைகள் தனியாக அமர்த்தப்பட்டமை குறித்தும் தெரிவித்தனர். இடம்பெயர்ந்த அல்லது அகதியாக வாழும் மக்களைத் திருமணம் செய்வது குறித்து இகழ்ச்சிக் கண்ணோட்டம் காணப்படுகின்றது அதுவும் குறிப்பாக பெண்களுக்கு இந் நிலமை அதிகமாகக் காணப்படுவதாக அக்கரைப்பற்று பிரதேசத்தைச் சேர்ந்த பெண்கள் தெரிவித்திருந்தனர். இகழ்ச்சிக் கண்ணோட்டம் சாதி அடிப்படையிலான மற்றும் இன அடிப்படையிலான அடையாளம் சார்ந்த பாகுபாட்டுடன் தொடர்புட்டதென்பதை நேரடியாகவும் வெளிப்படையாகவும் குறிப்பிடாவிட்டாலும் அவை தெளிவாகத் தென்பட்டது. ஆணாதிக்க சமுதாயத்தில் பெண்கள் தங்களது சமூகஞ்சார்ந்த அடையாளங்களை இயல்பாகவே தாங்கிக்கொள்வதால் சமுதாயத்தில் ஏற்படும் இகழ்ச்சியின் பாதிப்பினையும் தாங்கிக்கொள்ள வேண்டியவர்களாகின்றனர். இந்த இகழ்ச்சித் தன்மையானது சிலவேளை வன்முறையாகத் தோற்றம்பெற்று பெண்களில் வெளிப்படையான மற்றும் தனிப்பட்ட உடற்பகுதிகளின் மீது பிரயோகிக்கப்படுகின்றது.

### 2.5.2 திருமணம் மற்றும் சீதனம்

**"கதவு உடைந்து அசைகின்றது, நான் அதனைக் கட்டவேண்டும். என்னிடம் எந்தவொரு ஆவணமும் இல்லாததால் என்னால் வீட்டை திருத்தமுடியாது. நான் ரூ 18,000 வழங்கியே என்னுடைய காணி அனுமதிப்பத்திரத்தைப் பெறவேண்டும் எனினும் என்னிடம் பணம் கிடையாது. நான் இந்த வீட்டை என்னுடைய பெரிய மகளுக்கு சீதனமாக வழங்கிவிட்டேன் இருப்பினும் என்னிடம் எந்த ஆவணமும் கிடையாது".**

- கண்ணகிபுரம் பிரதேத்தில் 1983 இல் பிரேமதாஸ வீட்டுத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட வீட்டிலுள்ள ஒரு பங்குபற்றுநர்.

ஆணாதிக்க சமூகத்தில் சீதனமென்பது குடும்பத்திலுள்ள அனைத்து அங்கத்தவர்களுக்கும் பாதிப்பான ஒன்றாக இருக்கின்ற போதிலும் ஆண்கள் அரிதாகவே சீதனம் பற்றிய பிரச்சனைகளை முன்வைத்தனர் எனினும் பெண்கள் தங்களுடைய குழந்தைகளுக்கு திருமணத்திற்கு வழங்கவேண்டிய சீதனம் பற்றிய விளக்கம், சமூக அந்தஸ்து மற்றும் அதனால் ஏற்படுகின்ற தாக்கங்கள் குறித்தும் பரவலாகக் கருத்துத் தெரிவித்திருந்தார்கள். இந் நிலமையானது குறிப்பாக இலங்கையில் வடக்கு மற்றும் கிழக்குப் புகிதிகளில் பெண்கள் நிலத்தை சீதனமாகக் கொண்டிருக்க வேண்டும் என்ற பொதுவான நடைமுறைகள் காணப்படுகின்றன. பாதுகாப்பு மற்றும் கண்ணியம் போன்றவற்றை தங்களது பெண் பிள்ளைகளுக்கு வழங்கமுடியாத நிலையில் திருமணப் பேச்சுக்களின் போது தேவையான அளவு சீதனத்தை வழங்குதல் ஒரு திறவுகோலாக அமைகின்றதென்பது கவலைக்குரிய விடயமாகும்.

இடம்பெயர்ந்த மக்களுக்கும் அரச காணிகளே வழங்கப்படுகின்ற சூழ்நிலையில், புதிதாக வழங்கப்படுகின்ற காணிகள் சிறியதாகக் காணப்படுவதோடு அவை ஒரு குடும்பத்திற்கே போதுமானதாகும். அத்துடன் இது ஒரு குழந்தைக்கு மாத்திரமே வழங்கப்படக்கூடியது எனவே ஏனையவர்களுக்கான தரமான திருமணப் பேச்சுக்கள் ஆபத்தானதாக மாறுகின்றது. மேலும் அரச காணிகளானது காணி அபிவிருத்தி சட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்ற நிலையில் அது ஆண் குடும்பத் தலைவரை மாத்திரம் அங்கீகரிப்பதோடு அடுத்ததாக அது மூத்த மகனுக்கே வழங்கப்படும். இவ்வாறான அனைத்து விடயங்களும் முக்கியமாகக் கருத்திற்கொள்ளப்பட வேண்டியுள்ளது காரணம் இக் குடும்பங்கள் விசாலமாக காணித் துண்டங்களையும் வயற் காணிகளையும் கொண்டிருந்த போதிலும் இடம்பெயர்வு மற்றும் வெளியேற்றப்படலின் போது அவர்கள் அவற்றை இழந்துள்ளனர்.

**“என்னுடைய தகப்பன் மீள் திருமணம் செய்துகொண்டார், நாங்கள் அவரின் முதற் குழந்தைகள் ஆனாலும் பெண்கள். அவருடைய இரண்டாவது திருமணத்தில் அவருக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது ஆகவே சட்ட ரீதியாக காணி அவருக்கே செல்லும்”**

- முள்ளிக்குளத்தைச் சேர்ந்த ஒரு பங்குபற்றுநர்.

**“ஒரு ஆணின் இறப்பிற்குப் பின்னர் அந்தக் காணி தானாகவே மூத்த ஆண் பிள்ளைக்கு மாற்றப்பட்டு விடும். அது தாய்க்கு வழங்கப்படவேண்டும். இறப்பின் பின்னர் முக்கிய குடியிருப்பாளரால் உரிமை கோரலானது மிகவும் சிக்கலானது. இந்த அதிகாரத்துவமானது வினைத்திறனற்றது”**

- அநுராதபுரத்தைச் சேர்ந்த ஒரு பங்குபற்றுநர்.

காணி உரிமை தொடர்பான ஆணாதிக்க நடைமுறைகள் பற்றி மத்தியஸ்தம் செய்யும்போது, முல்லைத்தீவில் நடாத்தப்பட்ட பொது மக்கள் விசாரணையில், ஒரு பெண் பிள்ளைக்கு உரித்தான அனைத்து சொத்துக்களும் திருமணத்தின் போது வழங்கப்படுகின்றது. அதன் பின்னர் குடும்ப சொத்துக்களில் அல்லது காணியில் அவரால் எவ்விதமான கோரிக்கைகளையும் முன்வைக்க முடியாது. குழுவிற்கிடையில் சில கலந்துரையாடல்கள் இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டாலும் இதுவே பொதுவான நடைமுறையென்ற தெளிவு ஏற்படுத்தப்பட்டது. ஆகவே இராணுவத்திற்கெதிரான மற்றும் மக்களால் முன்னெடுக்கப்படுகின்ற வலுவான காணி உரிமைப் போராட்டங்களுக்கு மத்தியிலும் காணி உரிமை தொடர்பான பால்நிலை சார்ந்த பாகுபாட்டு நடைமுறைகள் வீடுகளிலும் சமூகங்களிலும் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட்டுக்கொண்டே இருக்கின்றன. இப் பாகுபாடுகளானது பரந்துபட்ட காணி உரிமை தொடர்பான போராட்டங்களில் அடையாளப்படுத்தப்படாமல் காணப்படுகின்றது.

திருகோணமலையைச் சேர்ந்த பெண் ஒருவர் தனது அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளும்போது, தன்னுடைய மகளின் கணவர் காணியை தன்னுடைய பெயருக்கு மாற்றஞ்செய்யாவிடின் திருமணத்தை முடித்துக்கொள்வதாகக்கூறி பயமுறுத்தி அக்காணியையும் வீட்டையும் தனது பெயருக்கு மாற்றி எழுதுமாறு கேட்டதாகக் கூறியிருந்தார். இது ஒரு உதாரணம் மாத்திரமே மாறாக பல்வேறு சந்தர்ப்பங்களில் சொந்தவீடுகளில் காணி தொடர்பான பிரச்சனைகள் காரணமாகப் பெண்கள் பயமுறுத்தப்பட்டும் வன்முறைகளுக்குள்ளாகிய சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றது.

ஒக்டோபர் 2019 இல் சட்டம் மற்றும் சமூக நிறுவகம் மற்றும் பார்ல் வலையமைப்பும் இணைந்து “10 வருட மக்களின் காணிப் போராட்டங்கள்: பிரதிபலிப்புக்கள் மற்றும் அடுத்தகட்ட நடவடிக்கைகள்” என்ற தலைப்பில் கொழும்பில் நடாத்திய பொதுமக்கள் கருத்தரங்கில் வட பகுதியிலிருந்து வந்த மக்கள் காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் தாங்கள் வாழ்ந்து வருகின்ற காணியை தேசவழமைச்சட்டத்தின் காரணமாக கணவர் இறந்தாலேயன்றி காணி தொடர்பில் பெண்கள் சுயாதீனமாக தீர்மானங்களை எடுக்க முடியாத நிலையில், அடகு வைக்கக்கூட முடியாத சிக்கலான நிலைக்குள்ளாகியுள்ளமை குறித்து கருத்து வெளியிட்டனர்.

இதனால் சட்டரீதியாகவும் சமூக ரீதியாகவும் பெண்களின் காணி உரிமையானது துரதிர்ஷ்டவசமாக அநீதியான நடைமுறையான சீதனம் மற்றும் திருமணத்துடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. இந்த நடைமுறையானது திருமணவீடுகளில் பாதுகாப்பிற்கான ஆதாரமாக கணிக்கப்பட்டு பெண்களினால் உணரப்படுகின்றது. இந்த சிக்கலான நிலமையானது பெண்களின் வாழ்க்கையில் காணி உரிமையானது முக்கிய பங்கு வகிக்கின்றது. திருமணத்தை மையப்படுத்தியதான காணி மற்றும் சொத்து தொடர்பிலான கலந்துரையாடல்களில் சமூகத்தில் காணி உரிமையின் தாக்கத்தைக் கருத்திற்கொள்வது இன்றியமையாததாகும்.

### 2.5.3 காணி மற்றும் குடும்பநல செயற்பாடுகள்

அநேகமான பெண்கள் நிலத்திற்கான இழப்பீடு தொடர்பில் அவர்களின் பார்வையில் அடிப்படைத் தேவைகளின் முக்கியத்துவம் பற்றிப் பேசினர். அது வெறுமனே தங்களது காணிகளைத் திருப்பித்தரவேண்டும் என்ற அழைப்பு மாத்திரமன்றி அவர்களின் பாதுகாப்பு, வீதிகள், தரமான கல்வி வசதிகள் மற்றும் சுகாதாரப் பராமரிப்பு சேவைகள் அருகிலிருக்கவேண்டும் என்ற பரந்துபட்ட விடயங்களைக் கொண்டதாக இருந்தது. மேலும் பெண்கள் தங்களது பொருளாதார நடவடிக்கைகளின் நிமித்தம் தங்களது வீட்டு வேலை மற்றும் பராமரிப்பு வேலைகளுடன் தொடர்புபட்டதான செயற்படக்கூடிய தங்களுக்கான இட ஒதுக்கீட்டை கோருகின்றனர். சிலவேளைகளில் பெண்கள் தாங்கள் மேலதிக வகுப்புக்கள், சந்தை மற்றும் ஏனைய சேவைகளை இலகுவாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் நகரத்திற்கு அருகாமையில் இருக்கவேண்டும் என்ற முன்வைப்பை மேற்கொண்டனர். அவர்கள் தங்களுடைய சொந்தக் காணிகளை மீளப்பெறுகின்ற பாரிய போராட்டங்களில் பங்காளர்களாக இருந்த போதிலும் நிலத்தை மையப்படுத்தியதான தங்களது வாழ்க்கை தொடர்பில் அமைதியாகவும் திடமாகவும் பேசினர்.

கொழும்பில் பலவந்நதமாக அடுக்குமாடித் தொகுதிகளில் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் மீள்குடியமர்த்தப்பட்ட பெண்கள் தாங்கள் வீடு சார்ந்து உணவு தயாரித்து விற்றல் மற்றும் தையல் போன்ற வாழ்வாதாரங்களை இழந்துள்ளதாகக் கூறினர். இதன் காரணமாக அவர்களது குடும்ப வருமானங் குறைவடைந்ததோடு அவர்களது வாழ்க்கைச் செலவும் அதிகரித்தது. துணிகளை துவைப்பதிலிருந்து பிள்ளைகளைப் பராமரித்தல் வரையான வேலைகளை முன்னர் பகிர்ந்து செய்தபோதிலும் தற்போதுள்ள சூழ்நிலை மாற்றங்கள் காரணமாக சமூக வலையமைப்புக்களை இழந்துள்ள நிலையில் தனித்து செய்யவேண்டியுள்ளதாகத் தெரிவித்தனர். இதனால் அவர்களது பொறுப்புக்கள் அதிகரித்துள்ளதோடு அவர்கள் அதிகளவான நேரத்தையும் செலவழிக்க வேண்டியதாகவுள்ளது. மக்கள் பல்வேறு வீட்டுத்தொகுதிகளுக்கிடையில் பிரிந்து சென்றுள்ளதால் தங்களது அயலவர்கள் அறிமுகமற்றவர்களாக இருக்கின்ற நிலமையில் வீட்டு வேலைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் குழந்தை பாராமரிப்பு தொடர்பில் முன்னரை விட மேலதிக சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியவர்களாகியுள்ளனர். மேலும் அடுக்குமாடிக் குடியிருப்புக்களில் பிள்ளைகளின் ஆடைகளைத் துவைத்து அவற்றை பாதுகாப்பாக உலர்த்தி அவர்களைப் பாடசாலைக்கு பாதுகாப்பாக அனுப்புதல் போன்ற தேவைகளுக்கு தாங்களே தீர்வுகளைத் தேடிக்கொள்ள வேண்டிய சவாலான நிலமைகளை அங்கிருந்தபடியே சமாளித்துக் கொள்ளவேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாவதோடு, குழந்தைகளின் பாடசாலையின் பின்னரான நேரத்தில் அவர்களைக் கண்காணிக்க வேண்டியவர்களாகவும் இருக்கின்றனர்.

வீட்டில் மேற்கொள்ளப்படுகின்ற பராமரிப்பு செயற்பாடானது அரசின் சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் ஆழமாகத் தொடர்புபட்டுள்ளது. பெண்கள் சமுர்த்தி போன்ற சமூகப்பாதுகாப்பு நிகழ்ச்சிகளுக்கு பதிவை மேற்கொள்ளமுடியாமற் போனதற்கான காரணம் காணியிலிருந்து இடப்பெயர்வு, மற்றும் வெளியேற்றப்படல் போன்றவற்றின் விளைவாகவே என்ற கருத்தை ஆச்சரியமற்ற விதத்தில் சுட்டிக் காண்பித்திருந்தனர். அரச மற்றும் சமூகத்தின் அங்கத்தவர்கள் மத்தியில் தங்களது உரிமைகளை வலியுறுத்தும் போது பொருள் ரீதியான விளைவாக சமூகப் பாதுகாப்பு காரணிகளின் அனுகுகையில் சிக்கல்கள் ஏற்படுவதோடு சமூகத்தில் களங்கப்படுவதும் மேலதிக சுமையாக ஏற்படுகின்றது. வயதுவந்தவர்கள், குழந்தைகள் மற்றும் நோயாளிகளைப் பராமரித்தல் பெண்களின் பிரதான பொறுப்பாகும். பெண்களின் சமூகப் பாதுகாப்பு தொடர்பான கேள்வி எழுப்புகின்ற தன்மையானது வீட்டில் தங்கி வாழ்கின்ற அதிகம் பாதிப்பிற்குள்ளாகக்கூடியவர்களை பாரிய அளவில் பாதிக்கும். ஆகவே, ஒருவர் தங்களது சொந்த நிலத்திலிருந்து வெளியேறும் பட்சத்தில் குழந்தைகள், முதியவர்கள் மற்றும் குடும்ப

உறுப்பினர்களை கவனித்துக் கொள்வதற்கு ஒரு முக்கியஸ்தர் இல்லையெனில் அவர்கள் அனைவரும் பாதிப்பிற்குள்ளாகக்கூடிய நிலமையிலே உள்ளனர்.

உமா ஓயா திட்டத்தினால் பாதிக்கப்பட்ட பெண்கள் நீர் பற்றாக்குறை காரணமாக தங்களது சொந்த அமைவிடங்கள் மற்றும் சமுதாயங்களிலிருந்து வெளியே சென்று தொழிலைப் பெறவேண்டிய கட்டாயத்திற்குள்ளாகியதாகத் தெரிவித்திருந்தனர். இது அவர்களது சுய பாதுகாப்பை பெருமளவில் குறைத்து மதிப்பிடுகின்ற விடயமாகும்.. பதுளையிலிருந்து பங்குபற்றிய ஒரு பெண் குறிப்பிடும் போது பெண்களின் பாதுகாப்பானது பிரச்சனைகளின் போது இரண்டாம் பட்சமாகவே கணிக்கப்படுகின்றது. அவர்கள் தங்களது கவனம், பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு தொடர்பில் பேசுவது தொடர்பாகக் காணப்படுகின்ற சவால்கள் குறித்து தெளிவுபடுத்தினர். மலையகப் பிரதேசங்களில் காணிகளைப் பெற்றுக்கொள்வதிலுள்ள ஆபத்தான நிலமைகள் மற்றும் இடைத்தரகர்களின் வகிபங்கு காரணமாக பெண் தொழிலாளர்கள் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்கின்றதோடு அவர்கள் எதிர்நோக்குகின்ற துன்புறுத்தல்கள் மற்றும் இன்னோரென்ன வன்முறைகள் குறித்து புகார் அளிப்பதுவும் சாத்தியமற்றதாகக் காணப்படுகின்றது. இவ்வாறான பிரச்சனைகள் தங்களது சமூகத்திலும் காணி தொடர்பான போராட்டங்களிலும் இரண்டாம் பட்சமாகவே கருதப்படுவது இப் பெண்களின் பாதுகாப்பற்ற தன்மையை மேலும் வலுப்படுத்துகின்றது. காணி தொடர்பான பிரச்சனைகளுக்கும் வீட்டு வன்முறைக்குமுள்ள தொடர்பு மற்றும் காணி. இடப்பெயர்வு மற்றும் வேலைத்தளங்களிலுள்ள பாலியல் வன்முறைகளுக்குமிடையிலான தொடர்புகள் போன்றன பெண்களைப் பொறுத்தவரையில் யதார்த்தபூர்வமானதாக இருக்கின்றன.

எனினும் காணி மற்றும் இடம்பெயர்வு தொடர்பான பிரச்சனையென்பது வெறுமனே பௌதீகக் காணி தொடர்பில் மாத்திரமன்றி அவர்களது நிலத்தை மையப்படுத்தியதான பூரணமான வாழ்க்கையின் அடிப்படையிலானது. வாழ்வாதாரம் தொடர்பான கலந்துரையாடல்களில் பொதுவாக வெளிவராத பெண்களின் வகிபங்கு குறிப்பாக பராமரிப்பு செயற்பாடுகள் தொடர்பில் நாங்கள் கேட்டறிந்தோம். குழந்தைப் பராமரிப்பின் சவால்கள் மற்றும் போராட்டங்களுக்கு மேலதிகமாக குழந்தைகளின் கல்வி, வயதானவர்கள் மற்றும் விஷேட தேவையுடையவர்களைப் பராமரித்தல், சமைத்தல். நீரை சேமித்துவைத்தல் போன்றவை. பெண்கள் தங்களது போராட்டங்களுக்கு தாங்களே பராமரிப்பாளர்களாக செயற்படுகின்றனர். நீண்டகால நிலைபேறானதன்மைக்குத் தேவையான பராமரிப்பு மற்றும் உணவுகளை தாங்களே வழங்கி வருகின்றனர். பெண்களின் இவ் வாழ்க்கை முறையில் பராமரிப்பு மற்றும் உயிர்வாழ்தலில் தங்களது வகிபங்கினைக் கருத்திற்கொண்டு இவ் வாழ்க்கை முறைமையை மீளப்பெற்றுக்கொள்வதற்கு வீட்டிலும் பொது இடங்களிலும் காணி உரிமை தொடர்பான போராட்டங்களில் ஈடுபடுகின்றமை தொடர்பான எண்ணப்பாடு மிகத் தெளிவாகக் வெளிக்கொணரப்பட்டது.

இவற்றிற்கு மேலதிகமாக, நாங்கள் சந்தித்த அனேகமான மக்கள் பல வருட காலமாக தங்கள் காணி உரிமை தொடர்பில் போராடிக்கொண்டிருக்கின்றனர். அநேகமாக பெண்கள் மற்றும் ஆண்கள் களைத்துப்போய் நோய்வாய்ப்பட்டுள்ளனர். பெண்கள் தாங்கள் முதிர்ச்சியடைதல் மற்றும் பிள்ளைகளில் தங்கியிருத்தல் தொடர்பில் தங்களது கவலையை வெளியிட்டனர். அவர்கள் தங்களது சொந்தக்காணிகளை மீள்பபெறுவதென்ற ஆசையென்பது, தாங்கள் இறக்கும் பொது கண்ணியத்துடன் யாரிலும் தங்கியிருக்காமல் இறப்பதற்காகும். அநுராதபுரத்தில் வாழ்கின்ற வயதான பெண்கள் அரச காணிகளில் வாழ்வதற்கான உரிமையை இழந்ததோடு தங்களுடைய ஆண் பிள்ளைகளின் கைகளுக்கு காணிகள் சென்றதாலும் வயோதிப நிலையங்களுக்கு செல்லவேண்டிய கட்டாயத்திற்குள்ளாகியுள்ளனர். ஆணாதிக்க சமூகக் கட்டமைப்புக்களில் பெண்களின் காணி தொடர்பான உரிமையில் அவர்களின் கண்ணியம், மரியாதை மற்றும் பாதுகாப்பு உறுதி செய்யப்படாத நிலையில், வயது முதிர்ந்த நிலையிலும் இறப்பிலும் கண்ணியத்தை உறுதிசெய்யும் ஓரே வழியாக வாழ்க்கை பூராகவும் அவர்கள் போராடுவதைக் கைக்கொள்கின்றனர்.

2.5.4 பெண்களின் பாதுகாப்பு மற்றும் கண்ணியம் தொடர்பான கருத்துருவாக்கம்

**“எங்களுக்கு எங்களது உறவினர்கள் அருகிலிருக்க வேண்டும். நாங்கள் நோய்வாய்ப்படும் போது எங்களுக்கு உதவவேண்டும். எங்களைச் சூழவுள்ள சுற்றுச்சூழல் பாதுகாப்பானதாகவும் வாழ்வாதாரத்திற்கு உதவுவதாகவும் அமைய வேண்டும். எங்களது சமூக உறவுகளை நாங்கள் பேணிப் பாதுகாக்க வேண்டும்”**

- அக்கரைப்பற்றிலிருந்து பங்குபற்றிய ஒருவர்

பெண்கள் மீள்குடியேற்றப்படும் போதும் தங்களது சொந்த நிலங்களுக்கு மீண்டும் செல்லும்போது எவ்வாறான பாதுகாப்பு நடவடிக்கைகள் முக்கியமானது என்று தெளிவாக பரிந்துரைகளில் காணப்பட்டன. மக்களது காணிகளை அபகரித்தது மற்றும் இராணுவத்தினரின் இருப்பு போன்றவற்றிற்கெதிராக முல்லைத்தீவில் பெண்கள் திடமாகக் கருத்துக்களை முன்வைத்தனர்.

**“நாங்கள் பாதுகாப்பாக இருப்பதற்கு இராணுவத்தினர் இருக்கவேண்டுமென்று அவசியமில்லை. தேசிய பாதுகாப்பானது இராணுவத்திற்கு சமமாகாது. அதாவது இலவசக் கல்வியைப் பெற்றுக்கொள்ளல், எங்களது காணிகளை நாங்கள் கொண்டிருத்தல், ஒரு நாளில் எந்நேரத்திலும் பெண்கள் வெளியில் செல்லக்கூடியதாக இருப்பதோடு அவர்கள் சுதந்திரமாக வாழவும் வேண்டும். இதுதான் தேசிய பாதுகாப்பென்பதன் அர்த்தமாகும்”**

இராணுவத்தினரின் இருப்பு, கண்காணிப்பு மற்றும் அன்றாட வாழ்க்கையில் கட்டுப்பாடுகள் போன்றவை பாதுகாப்பென்று பொருட்படாது, மாறாக பெண்களின் பாதுகாப்பென்பது கண்ணியத்துடன் சுதந்திரமாக வாழ்வதென நிச்சயமற்ற விதத்தில் வெளிப்படுத்தினர். கிளிநொச்சி செஞ்சோலையில் முன்னாள் விடுதலைப்புலிகளின் பெண் போராளிகளுடன் இடம்பெற்ற ஊக்கமளிக்கும் கலந்துரையாடலில் சுதந்திரம் மற்றும் கண்ணியம் தொடர்பில் துல்லியமான வெளிப்படுத்துகை மேற்கொள்ளப்பட்டது. குடும்பங்கள் இல்லாத நிலையில் சிறுவர் இல்லங்களில் வாழ்ந்துவந்த இந்தப் பெண்கள் தங்களது நிலங்களுக்கு மீளும் போது தங்களது காணிகளை மீளப்பெறுவதில் பிரச்சனைகள் இருந்த காரணத்தினால் அவர்கள் ஒன்றிணைந்து தங்களது காணி உரிமைகளையும் வீடுகளையும் பெற்றுக்கொள்வதற்கு வேலை செய்கின்றனர். இந்த இளம் பெண்களின் தன்நம்பிக்கை மாத்திரமல்ல அவர்களுக்கு இவ் வீட்டைத்தவிர வேறு குடியிருக்கும் வசதிகள் இல்லை என்பதால் அவர்கள் இதற்காக முன்னிற்பது உற்சாகமூட்டக்கூடிய செயற்பாடாக இருந்தது. இவை வம்சாவளி, உறவுகள், சாதி மற்றும் சமூகம் ஆகியவற்றின் மூலம் கிடைக்கப்பெற்ற ஒன்றல்ல மாறாக அவ்விடத்தில் பிறந்து வளர்ந்து வாழ்ந்த ஆழமான பிணைப்பின் மூலம் கிடைக்கப்பெற்றதாகும்.

பெண்களைப் பொறுத்தவரையில் காணி என்பது வெறுமனே ஒரு சொத்து அல்லது உடமை என்ற ஒரு பௌதீக பொருள் மாத்திரமில்லையென்பது தெளிவாகின்றது. அத்துடன் இது பரம்பரைக்குரியது அல்லது கலாச்சார வேறொன்றலுடன் தொடர்புபட்டது என்றும் சுருக்கக் கருத்துப்படக் கூறமுடியாது. காணி உரிமை வழக்கங்களில் இது ஆண்களுக்கு முக்கிய காரணியாக இல்லாதிருந்த போதிலும் பெண்களைப் பொறுத்தவரையில் இவ்விரு காரணிகளும் அத்தியாவசியமானதாகும். பெண்கள் இயல்பாகவே காணி உரிமை பற்றிப் பேசும்போது பரந்துபட்ட கண்ணோட்டத்தில் பேசுவதோடு அது வாழ்க்கையின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியதாகவுள்ளது. பெண்கள் காணி இழப்பை இனம் அல்லது சமூகஞ் சார்ந்த முரண்பாடு மற்றும் பாகுபாட்டின் காரணமாக மாத்திரம் இழக்கின்றனர் எனக் கூறமுடியாது.

அவர்கள் சட்டங்களிலுள்ள நெறியற்ற தன்மை மற்றும் பாரம்பரிய சமூக நடவடிக்கைகளின் மூலமும் பாதிப்பை எதிர்கொள்கின்றனர் என்பதை இவற்றுடன் சேர்த்துக் கொள்ள வேண்டும். பெண்களின் காணி உரிமையானது பன்முகப்படுத்தப்பட்ட மாற்றமின்றிய முன்னோக்குடன் கூடிய ஒருங்கிணைக்கப்பட்ட பிரச்சனையையும் எடுத்துக்காட்டுகின்றது.

**சமூகப்பாதுகாப்பை வழங்கல்**

- சமூகப் பாதுகாப்பு மற்றும் சமுர்த்தி போன்ற ஏனைய நலன்புரி நிகழ்வுகளுக்கான விண்ணப்பிக்கும் பொறிமுறைகள் பொதுப்படையாகவும் உள்வாங்கக்கூடியதாகவும் இருக்கவேண்டும். இது தொடர்பான தகவல்கள் மக்களுக்கு இலகுவாகப் பெற்றுக்கொள்ளும் விதத்தில் ஒழுங்குபடுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

- நிரந்தர முகவரியை இழத்தல் போன்ற கட்டமைப்பு ரீதியான சவால்களை எதிர்கொள்கின்ற பாதிப்பிற்குள்ளாகக்கூடிய மக்களுக்கு அரசினால் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலன்புரி செயற்திட்டங்களில் இணைவதற்கு ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படவேண்டும். இடப்பெயர்வு மற்றும் காணிகளிலிருந்து வெளியேற்றப்பட்டமை போன்ற காரணங்களை சுட்டிக்காட்டி நிரந்தர முகவரியுடன் தொடர்புபட்ட சமூகப் பாதுகாப்பு செயற்திட்டங்களிலிருந்து இம்மக்களை நீக்கிவிட முடியாது.

- சமூகப் பாதுகாப்பென்பது காணிப்பிரச்சனைகளுக்கு தீர்வைப்பெறல் மற்றும் வாழ்க்கையை மீளக்கட்டியெழுப்புதல் போன்ற விடயங்களில் பெண்களையும் அவர்களது குடும்பங்களிலும் நிலைத்திருக்கத்தக்க மாற்றத்தை உருவாக்குகின்ற வேலைத்திட்டங்களாகும். சமூகப் பாதுகாப்பு மற்றும் நலன்புரி செயற்திட்டங்களானது, யுத்தம் மற்றும் இழப்புக்கள் அதாவது மக்களின் காணி மற்றும் வாழ்வாதார இழப்புக்களின் நீண்ட காலப்பாதிப்பை கருத்திற்கொண்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்..

- மேலும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களானது யுத்தத்தினால் பாதிக்கபட்ட மக்களின் குடும்பங்களை ஒருங்கிணைத்து வைத்தல் மற்றும் காணிகளிலிருந்து வெளியேற்றப்பட்டோருக்கு பராமரிப்பு செயற்பாட்டின் மூலமான பெண்களினால் வழங்கப்படுகின்ற பங்களிப்பை கருத்திற்கொள்ள வேண்டும்.



# பரிந்துரைகள்

**வழிகாட்டல் கோட்பாடுகள்:**

இலங்கையில் காணிக் கொள்கை, காணிப் பாவனை, காணி உரித்தாண்மை, மக்களின் காணி அல்லது காணிப் பாவனையினைப் பாதிக்கும் அபிவிருத்தி ஆகியவை பின்வரும் வழிகாட்டல் கோட்பாடுகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டு, நிர்வகிக்கப்பட்டுத் தீர்மானிக்கப்படவேண்டும்

- உள்ளூர் மக்களின் காணி உரிமை தொடர்பிலும் இயற்கையான சூழல் அமைப்பின் நல்வாழ்வு குறித்தும் காணிக்கொள்கையானது முன்னிலைப்படுத்த வேண்டும்.
- மக்களைக் கௌரவத்துடனும் மரியாதையுடனும் நடத்தல்.
- காணிகளுடனான மக்களின் உறவினை மதித்தல், குறிப்பாக இந்த உறவுகளின் பால்நிலையாக்கப்பட்ட தன்மைகள்
- உள்ளூர் சமுதாயங்களை மதித்து அவற்றுடன் ஒத்துழைத்தல்
- உள்நாட்டு மற்றும் பிராந்திய மட்டத்தில் சாத்தியமான குறுகிய கால மற்றும் நீண்டகாலக் காலநிலை மற்றும் சுற்றாடல் தாக்கங்களைப் பற்றிய புரிதலைக் கொண்டு தீர்மானங்களை வகுத்தல்.
- காணி தொடர்பில் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து முதலீடுகளும் காணி மற்றும் சூழல் அமைப்பின் மீள் உருவாக்கத்திற்கு துணைபோகக் கூடியதாக இருத்தலை உறுதிசெய்தல்.
- தீர்மானம் வகுத்தலில் பெண்கள் மற்றும் ஏனைய பாதிப்பின் விளிம்புநிலைக் குழுக்களின் முனைப்பான பங்குபற்றலை உறுதிப்படுத்தல்
- நீதியான மற்றும் ஒப்புரவான தீர்மானம் வகுத்தலை இயலுமாக்கல்
- சகல நடவடிக்கைகளிலும் பாகுபாடின்மை மற்றும் சமத்துவத்தையும் இயலுமாக்கல்.
- சகல இலங்கையர்களும் தற்கால மற்றும் எதிர்கால அக்கறையினைக் கொண்டுள்ள இலங்கையில் காணியினை ஒரு வரையறைக்கப்பட்டுள்ள தேசிய வளமாக அங்கீகரித்தல்
- மனிதப் பாதுகாப்பினை மதித்தல்
- பொறுப்புக்கூறக்கூடிய வெளிப்படைத்தன்மை கொண்ட மக்களை மையப்படுத்தியதுமான அரச நிறுவனங்கள் மற்றும் அரசசேவைகள் இருப்பதனை உறுதிப்படுத்தல்

இவையே மக்கள் அவர்களின் அனுபவங்களையும் எதிர்பார்ப்புக்களையும் பற்றிக் கலந்துரையாடியபோது பேசிய விடயங்களாகும். மக்கள் கொண்டுள்ள எதிர்மறையான அனுபவங்களினூடாக பல ஒத்த விடயங்கள் காணப்பட்டமையினை அவதானிப்பது பயன்மிக்கதாகும். மக்கள் வெளிப்படுத்திய சாதகமான எதிர்பார்ப்புக்களிலும் ஒத்த தன்மைகள் காணப்பட்டன. ஒரே பிரச்சினை வித்தியாசமான வரலாற்று, சமூக, சுற்றாடல், அரசியல் மற்றும் ஏனைய சூழமைவில் கையாளப்படுகையில் வெவ்வேறு தீர்வுகள் எழுவதைப் புரிந்துகொள்வதற்கு இது எமக்கு உதவுகின்றது. தீர்வுகள் உள்ளூர் சூழலிற்கு அமைவாக உள்ளூர் யதார்த்தங்களிற்கும் தனித்துவமானவையாகும். பிரச்சினைகள் ஒன்றாக இருப்பினும் மக்களின் கோரிக்கைகள் அல்லது முன்மொழியப்படும் தீர்வுகள் இடத்திற்கிடம் ஏன் முரண்படுகின்றன என்பதை இது விளக்குகின்றது.

### பொது மக்களின் பரிந்துரைகள்

இந்தப் பரிந்துரைகள் மாவட்டங்கள் முழுவதிலும் காணிப் பிரச்சினையால் பாதிக்கப்பட்ட இலங்கையர்களின் கருத்துக்களையும் கோரிக்கைகளையும் பிரதிபலிக்கின்றன. இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள குரல்கள் காணிக் கொள்கைகள் தொடர்பாக ஒருபோதுமே கலந்துரையாடப்படாதவர்களின் குரலாக இருக்கின்றது. தங்களது சொந்தக் காணிகள் நேரடியாக பாதிக்கப்பட்டபோதும் கூட இவர்களது கருத்துக்கள் கொள்கை வகுப்போரினாலும், தீர்மானம் வகுப்போரினாலும் போதியளவு கவனத்தில் கொள்ளப்படவில்லை[13]. சில பரிந்துரைகள் முன்பு மக்களை மையப்படுத்திய கலந்தாலோசிப்புக்களின் போது வழங்கப்பட்ட பரிந்துரைகளிலிருந்து தகவமைக்கப்பட்டுள்ளதுடன் ஏனையவை இந்த கருத்துக்கணிப்பின் மூலம் பெறப்பட்ட தனித்துவமானவையாகும்.

### 1. காணியினை அணுகுவதற்காக, உடைமையாக வைத்திருப்பதற்கான, பயன்படுத்துவதற்கான மற்றும் சொந்தமாகக் கொண்டிருப்பதற்கான உரிமை

காணியினைச் சொந்தமாகக் கொண்டிருப்பதற்கும் அணுகுவதற்கும் வாழக்கூடிய மற்றும் பாதுகாப்பான வீடமைப்பினைக் கொண்டிருப்பதற்குமான மக்களின் உரிமை இராணுவமயமாக்கம், அபிவிருத்தி மற்றும் செல்வந்தர்களினதும் சக்திமிக்கவர்களதும் நலன்களை மட்டும் பாதுகாக்கும் முறைமைகள் உள்ளிட்ட பல காரணிகளினால் அச்சுறுத்தப்பட்டுவருகின்றன. தாம் காணியற்றவர்களாகவும் வீடற்றவர்களாகவும் ஆக்கப்பட்ட பல வழிகளைப் பற்றி மக்கள் விபரித்தனர். தமது சொந்த நிதி மற்றும் பௌதிகப் பாதுகாப்பு மற்றும் தமது குடும்பங்களின் பாதுகாப்புப் பற்றி மக்கள் அச்சத்தினையும் விரக்தியினையும் வெளிப்படுத்தினர். சிறந்த எதிர்காலத்தினை அவர்களினால் அபிலாசை கொள்ள முடியவில்லை. காணி அபிவிருத்தி அனுமதிப் பத்திரங்களை அடுத்த சந்ததியினருக்கு மாற்றி வழங்கும் பொறிமுறையில் பெண்களுக்கு எதிராகக் காட்டப்படும் பாகுபாடு ஒரு பொதுவான முறைப்பாடாகக் காணப்பட்டது. சிலர் ஊடுருவிச் செல்லும் வறுமை பற்றியும் வேறாக்கப்படும் ஆழமான உணர்வு பற்றியும் பேசினர். அமுலிலுள்ள முறைமை மக்கள் தமது காணிகளில் குடியிருந்த மற்றும் இடையீடு மேற்கொண்ட வெவ்வேறு வழிகளை அங்கீகரிக்கத் தவறிவிட்டது என்பது ஆணைக்குழுவுக்குத் தெளிவாகத் தெரிந்தது. மக்கள் எவ்வாறு காணியினை அணுகுகின்றனர், பயன்படுத்துகின்றனர் மற்றும் சொந்தமாகக் கொண்டிருக்கின்றனர் மற்றும் எவ்வாறு சிறந்த முறையில் இலங்கையில் காணியின்மை மற்றும் வீடின்மை ஆகியவை தீர்க்கப்படுகின்றன என்பதற்கான சட்ட மற்றும் நிர்வாக அங்கீகாரத்திற்காகப் பின்வரும் பரந்த கொள்கைப் பரிந்துரைகள் ஆதரித்து வாதாடுகின்றன

1. மக்கள் அவர்களின் தெரிவுக்குரிய வாழ்வாதாரங்களில் ஈடுபடுவதற்கான அவர்களின் உரிமைகள், நாட்டின் சில பாகங்களில் நிலவும் தாய்வழி வாரிசுரிமை நடைமுறைகள், தலைமுறை தலைமுறையாக வரலாற்று ரீதியாகக் காணிகளை உடைமையாக வைத்திருத்தல், சில குறிப்பிட்ட காணிகளின் சமய மற்றும் கலாசார முக்கியத்துவம் ஆகியவற்றின் அடிப்படையில் காணிகளுடனான மக்களின் பிணைப்பை அங்கீகரித்து அவற்றினை மதித்தல்

13. 2016 நவம்பரில் நல்லிணக்கப் பொறிமுறைகள் பற்றிய கலந்தாலோசிப்புச் செயலணியின் இறுதி அறிக்கையின் அறிக்கை, மே 2016 இன் அரசியலமைப்பு மறுசீராக்கல்களைப் பரிசீலிக்கும் பொதுமக்கள் பிரதிநிதித்துவக் குழு, 20110 நவம்பரின் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் பற்றிய விசாரணைக் குழுவின் அறிக்கை

2. காணிகளை உடைமையாகக் கொண்டு பயன்படுத்துவதற்கான உரிமை பல்வேறு வழிகளில் நிலைநாட்டப்படலாம் என்பதை அங்கீகரித்தல். சட்டரீதியான ஆவணங்கள் என்பவை காணிக்கான உரிமையினைக் கோருவதற்கான மற்றும் காணியினைப் பயன்படுத்துவதற்கான ஒரு வடிவம் மாத்திரமே என்பதனை அங்கீகரித்து, மக்கள் காணிக்கான சட்டபூர்வமான தன்மையினை ஏனைய வழிகளில் பெற்றுக்கொள்கின்றனர் என்பதை அங்கீகரித்தல். சில கட்டளைச் சட்டங்களில் இது அங்கீகரிக்கப்பட்டுள்ள போதிலும் நடைமுறையில் காணிகள் மீதான மக்களின் பாரம்பரிய உடைமைக்கும் அதன் பாவணைக்கும் இடமளிக்கப்படுவதில்லை என்பதுடன் சில சந்தர்ப்பங்களில் இது வேண்டுமென்றே மறுக்கப்படுகின்றது (உதாரணமாக சுதேச குழுக்களின் காணிக் கோரிக்கையினைப் பார்க்க)

3. சாதி மற்றும் பால்நிலை போன்ற காரணங்களினால் சமூகரீதியாகப் பாகுபாடு காட்டப்படும் நடைமுறைகளினால் காணியற்றவர்களாக்கப்பட்டு விளிம்புநிலைக்குத் தள்ளப்பட்டுள்ள இச்சமுதாயங்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு முன்னுரிமை வழங்கவும்.

4. பொதுவான காணிகள் மற்றும் சமுதாயச் சொத்து (பாரம்பரிய மற்றும் வரலாற்று ரீதியான உடைமை மற்றும் பாவனை ஆகியவற்றின் அடிப்படையில் சமுதாயங்கள் உடைமையாகக் கொண்டிருத்தல்) ஆகியவற்றுக்காக மக்களை மையப்படுத்திய வரைவிலக்கணங்களை உருவாக்கவும்.

5. காணியற்ற மக்களுக்கு அரச காணிகளின் சமத்துவமான விநியோகத்தினை அரசு தன்முனைப்புடன் உறுதிப்படுத்தி முன்னுரிமைப்படுத்தவேண்டும்.

6. அரச காணிகளின் உரித்தாண்மை மற்றும் அரச காணிகளின் விநியோகச் செயன்முறை தொடர்பாகப் பால் ரீதியாக வேறாக்கப்பட்ட தரவுகளை அரசு அறிமுகப்படுத்தவேண்டும்.

7. தற்போது அரச காணி விநியோகத்தில் நிலவுகின்ற பால்நிலை ரீதியாகப் பாகுபாடுமிக்க நடைமுறைகள் பூரணமாக அகற்றப்படுவதனை அரசு தன்முனைப்புடன் உறுதிப்படுத்தவேண்டும்.

8. பால்நிலைப் பாகுபாடுமிக்க வாசகங்களை அகற்றுவதற்காகக் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தினை அரசு உடனடியாகத் திருத்தவேண்டும்.

9. உள்ளூர் மக்களையும் சுதேச மக்களையும் அடக்கும் விதத்தில் அல்லது கட்டுப்படுத்தும் விதத்தில் குடியேற்றங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் அரச அதிகாரிகளும் அரசாங்க அமைப்புக்களும் காணி விநியோகக் கொள்கைகளைத் தவறாகப் பயன்படுத்தக்கூடாது. கடந்த அரசாங்கங்கள் எவ்வாறு அரசியல் மற்றும் இனவாத நிகழ்ச்சிநிரலுடன் குடியேற்றங்களை முன்னெடுத்தன என்பது பற்றி அதிக கவனம் செலுத்தப்படவேண்டும்.

10. பொருத்தமற்ற கொள்கைள், சட்டங்கள் மற்றும் அபிவிருத்திக் கருத்திட்டங்களினால் ஏற்படுத்தப்படும் வீடற்றநிலையில் இருந்து அரசாங்கம் மக்களைப் பாதுகாக்கவேண்டும்.

“எனது தந்தை மீண்டும் திருமணம் செய்துள்ளார். நாங்கள் அவரின் முதல் திருமணத்தில் பிறந்த மகள்மார்கள். அவரது இரண்டாவது திருமணத்தில் அவருக்கொரு மகன் இருக்கின்றார். சட்டத்தின்படி மகனுக்கே காணி உரித்துடையதாகும்.”

- முள்ளிக்குளத்தைச் சேர்ந்த பங்குபற்றுனர்

“நாம் எமது உறவினர்களுக்கு அருகில் வாழ விரும்புகின்றோம். எனது சுகயீனத்தின் போது எனக்கு உதவி தேவை. எங்களைச் சுற்றியுள்ள சூழல் பாதுகாப்பானதாகவும், எமது வாழ்வாதாரத்துக்கு உதவி வழங்குவதாகவும் இருக்க வேண்டும். நாங்கள் எங்களது சமூக உறவுகளைப் பேணக்கூடியவர்களாக இருக்க விரும்புகின்றோம்.”

- அக்கரைப்பற்றைச் சேர்ந்த பங்குபற்றுனர்

“சுவர்ணபூமி அல்லது ஜயபூமி காணிகளாக இருக்கலாம், இந்த உறுதிகள் எந்த சக்தியும் அற்றவை. அது மயானத்திற்கு செல்லக்கூடிய ஓர் உறுதியாகக்கூட இருக்க முடியும். ஏன் பெண்களினால் காணிகளைப் பெற முடியாது? பிரேமதாசவின் காலத்தில் மாத்திரமே பெண்களுக்குக் காணிகள் கிடைத்தன. பெண்களின் பெயர்களில் காணிகள் இல்லாத காரணத்தினால் அவர்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர்”

- பொலன்னறுவையைச் சேர்ந்த பங்குபற்றுனர்



“காணியினை உரித்தாகப் பெற்றுக்கொள்வதற்கு சில குறிப்பிட்ட தெரிவடிப்படைகளை நாங்கள் பூர்த்திசெய்ய வேண்டும் - அதில் வாழவேண்டும், அதை விருத்தி செய்ய வேண்டும், திருமணம் முடித்திருக்க வேண்டும் ஆனால் பெருநிறுவனங்களுக்கோ இலவசமாகக் காணிகள் வழங்கப்படுகின்றன. அவர்கள் என்ன தெரிவடிப்படையினைப் பூர்த்திசெய்கின்றார்கள்? குடும்பங்கள் விரிவடைகின்றன. ஆனால் காணிகள் விரிவடைவதில்லை. காணிகள் பெருநிறுவனங்களுக்கு விற்கப்படுவதற்கு முன்னர் எங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்.”

- மொனராகலை வெள்ளவாயவைச் சேர்ந்த பங்குபற்றுனர்

“காணி உரித்தாண்மை என்றால் என்ன? எங்களது பெயரில் காணி அனுமதிப்பத்திரம் இருந்தால் அது போதும். நாங்கள் இங்கே வாழ்ந்தமைக்கு எமது தோட்டங்களே சாட்சிகளாக இருக்கின்றன. எங்களது காணிகளுக்காக நாங்கள் எதிர்ப்புத் தெரிவித்தபோது நாங்கள் இங்கே ஒரு போதுமே வாழவில்லையென அவர்கள் கூறினர் (இராணுவம்). நாங்கள் அவர்களுடன் வாதிட்டு இங்கேயுள்ள மரங்கள் எல்லாம் நாங்கள் நட்டவை எனக் கூறினோம்.”

- முல்லைத்தீவு புதுக்குடியிருப்பினை சேர்ந்த பங்குபற்றுனர்



## 2. காணி ஆளுகை

1. புவியியல் ரீதியாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நெருக்கமாக உள்ள நிறுவனங்களில் காணி ஆளுகை (காணி தொடர்பாகத் தீர்மானம் வகுத்தல்) செயற்திறன்மிகு முறையில் கிடைக்கக்கூடியதாக இருக்கவேண்டும் என்பதுடன் இயலுமாக்கப்படவும் வேண்டும்.

2. அரச காணி, காணி வேறாக்கல், காணிப் பாவனை, மனிதக் குடியேற்றங்கள் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட விடயங்கள் உள்ளடங்கிய காணி பற்றிய தேசிய கொள்கையினை உருவாக்குவதற்கான அதிகாரத்தினைக் கொண்ட தேசிய காணி ஆணைக்குழு உருவாக்கப்படல் வேண்டும் (NLC). காணிப் பாவனை, குடியேற்றம் மற்றும் இடம்மாற்றல் பற்றிய கொள்கைகள் உள்ளூர் மக்களின் தேவைகள் மற்றும் அனுபவங்களை முன்னுரிமைப்படுத்த வேண்டும். NLC தற்போதைய அரசியலமைப்பின் பிற்சேர்க்கை 2 இல் உள்ள கோட்பாடுகள் 2.4 மற்றும் 2..5 ற்கு இயைபுறவேண்டும். NLC காணி வேறாக்கல் பற்றிய தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் மாகாண சபைகள் மற்றும் அரசாங்க நிறுவனங்களின் காணிப்பாவனை பற்றித் தீர்மானிப்பதற்குமான அதிகாரங்களைக் கொண்டதாக இருக்கவேண்டும். மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண சபைகளுக்கும் இடையிலான எவ்வித பிணக்குகளும் NLC யினால் தீர்க்கப்படல் வேண்டும் NLC யின் தீர்மானங்கள் தொடர்பாக திருப்திப்படாத எத்தரப்பும் மேல் நீதிமன்றத்தின் அரசியலமைப்பு நீதிமன்றத்திற்கோ அல்லது அரசியலமைப்பு நீதிபதிகள் குழாமிற்கோ மேன்முறையீடு செய்யமுடியும். அரச காணிகளைப் பொறுத்தவரையில் அரசாங்கத்தின் ஏனைய மட்டங்களிற்கு உட்படுகின்ற உள்ளூராட்சி அதிகாரசபைகள் அவர்களின் செயற்பாடுகளுக்கு காணிகளை பெற்றுக்கொள்ளக்கூடிய நிலையில் இருக்க வேண்டும்.[14]



3. காணி நிர்வாகம்

1. காணி நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள்,

a. வழிகாட்டல் கோட்பாடுகளை உன்னிப்பாகப் பின்பற்றவேண்டும் (மேலே பார்க்க)

b. அவர்களின் பொறுப்புக்களுக்காகப் பொருத்தமான தகைமை பெற்றிருக்க வேண்டும்

c. மக்களுடன் மரியாதையுடன் நடந்துகொள்வதற்காக போதிய பயிற்சியினைப் பெற்றிருக்க வேண்டும்.

d. காணி தொடர்பான சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் கொள்கைகள் தொடர்பாக போதியளவு பயிற்சி பெற்றிருக்கவேண்டும்

e. சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் தகைமை பெற்றிருக்கவேண்டும்

f. இறைமையானது மக்களிடமே உள்ளது மற்றும் தாங்கள் சுமூகமான வகைபொறுப்பு மிக்க மற்றும் திருப்தியான செயல்விதிகளை உறுதிப்படுத்துவதற்காக இலங்கை மக்களுக்குச் சேவையாற்றுகின்றோம் என்கின்ற உணர்வுடன் தமது பொறுப்புக்களை நிறைவேற்றவேண்டும்

g. ஊழலின் விளைவாக அரசியல்வாதிகளின், அரசியல் கட்சிகளின் அல்லது வேறு மூன்றாம் தரப்பின் நன்மைக்காகச் செயற்படாமை, செயற்படத்தவறுகின்றமை அல்லது தீர்மானம் எடுக்காமை. அவ்வாறான செயற்பாடுகள் அல்லது கடமை புறக்கணிப்புக்கள் நிறைவேற்றப்பட்டால் சட்டத்தினால் குற்றவியல் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கான ஏற்பாடுகள் வழங்கப்படல் வேண்டும்.

2. அரசாங்க உத்தியோகத்தர்களுக்குத் தொழில் பாதுகாப்பு இருக்கவேண்டுமென்பதுடன் அவர்களுக்குப் போதிய சம்பளம் வழங்கப்படல் வேண்டும். மேலும் எவ்வித பாகுபாடுமின்றி ஏனைய தொழில் வாய்ப்பு நலன்களையும் அவர்களால் அணுகக்கூடியதாக இருக்கவேண்டும். காணி விடயங்களில் சட்டரீதியாகவும் நியாயமான முறையிலும் நடக்கின்ற அரசாங்க உத்தியோகத்தர்களைத் துன்புறுத்துதல், அல்லது அவர்களைத் தன்னிச்சையாக மாற்றம் செய்தல், அல்லது வேறுவிதமாக மோசமாக நடத்துதல் குற்றவியல் தவறாகக் கருதப்படவேண்டும்.

3. காணியின் உத்தேச அபிவிருத்தி (காணியினை அரசு கையகப்படுத்திக்கொள்ளல்) தொடர்பாக பொதுமக்களின் கலந்தாலோசிப்புக்கு முன்னதாக அரசாங்க நிறுவனங்களும் அதிகாரிகளும் தகவல்களை வழங்கவேண்டும். மேலும் கலந்தாலோசிப்புக்களில் மக்களும் சமுதாயங்களும் ஈடுபடுவதற்கு போதிய நேரம் வழங்கப்படல் வேண்டும். நேரடியாக அல்லது மறைமுகமாகப் பாதிக்கப்படுகின்ற மக்களின் வாழ்க்கையில் அல்லது சுற்றுச்சூழலில் ஏற்படுகின்ற தாக்கங்களை மதிப்பீடு செய்யாமல் வேலைத்திட்டங்களும் செயற்பாடுகளும் அவசர அவசரமாக மேற்கொள்ளப்படலாகாது.

4. நியாயமானதும் நியாயப்படுத்தப்படக்கூடியதுமான பொதுநோக்கம் அடையாளம் காணப்படும்போது மாத்திரமே காணி பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும். அவ்வாறான காணியானது அரசினால் பெற்றுக்கொள்ளப்படும் போது அவ்வாறுபெற்றுக்கொண்டமைக்கான மிகச்சரியான நோக்கம் வர்த்தமானியில் குறிப்பிடப்படவேண்டும். அரசாங்க நிறுவனங்களோ அல்லது அதிகாரிகளோ அவ்வாறான பொதுநோக்கம் தொடர்பான சகல அவசியமான

தகவல்களையும் நியாயப்படுத்தல்களையும் வழங்கவேண்டும். பாதிக்கப்பட்ட அனைவருடனும் அவர்கள் உண்மையான நோக்கம் பற்றித் தெளிவாகத் தொடர்பாடல் செய்ய வேண்டும். காணியைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் மீள்குடியேற்றத்திற்கான திட்டங்கள் மற்றும் நட்டஈடு தொடர்பாகப் பொதுமக்களிடமிருந்து எழுகின்ற கேள்விகளுக்கு பதிலளிப்பதற்கென ஒரு அதிகாரி நியமிக்கப்படல் வேண்டும். அரச காணிகளைப் பெற்றுக்கொள்ளலினால் பாதிக்கப்படக்கூடிய பொதுமக்கள் நிச்சயமற்றதன்மைக்கு முகம்கொடுக்கலாகாது. செயன்முறையின் ஒவ்வொரு கட்டத்தின் போதும் அவர்களுக்கு உதவி வழங்கவேண்டும்.

5. அரசினால் மேற்கொள்ளப்படும் ஏனைய காணியைப் பெற்றுக்கொள்ளல்களுக்கெதிராக எதிர்ப்புத் தெரிவிப்பதற்கான புதிய அறிவித்தலினையும் கால அவகாசத்தினையும் வழங்க வேண்டும்.

6. பின்வரும் வழிகாட்டலின் மூலமாக காணிகள் பற்றிய தகவல்கள் பகிரங்கமாக பரப்பப்படல் வேண்டும்.

   a. காணி உரிமைகள், நிர்வாகச் செயல்விதிகள், நிறுவனங்கள், காணிக் கொள்கைகள் மற்றும் அவற்றின் தாக்கங்கள் மற்றும் காணி தொடர்பான ஏதாவது தீர்மானங்கள் அல்லது திட்டங்கள் பற்றிய எளிமையான மற்றும் துல்லியமான தகவல்களை வழங்குவதற்காக நிகழ்ச்சித்திட்டங்களும் செயல்பாடுகளும் வடிவமைக்கப்பட்டு அமுல்படுத்தப்படல் வேண்டும்.

   b. பிணக்குத் தீர்தலுக்கான பொறிமுறைகள் பற்றிய தகவல்கள் வழங்கப்படல் வேண்டும்.

   c. வெளிப்படைத்தன்மையினை மேம்படுத்துவதற்காகவும் பொதுமக்கள் அதனை அணுகக்கூடிய மட்டத்தினை மதிப்பிடுவதற்காகவும் காணி பற்றிய தகவல்கள் மீளாய்வு செய்யப்படல் வேண்டும். இதனை எவ்வளவு சிறப்பாக அடைய முடியும் என்பது தொடர்பான உதவியானது அரசாங்க அமைப்புக்களில் ஒத்திசைவான தன்மையினை உறுதிப்படுத்துவதற்கான தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவிலிருந்து கோரப்படல் வேண்டும்.

7. இந்த செயன்முறைகள் தொடர்பாக மக்கள் உரிய காலத்தில் இற்றைப்படுத்தல்களை பெற்றுக்கொள்கின்றனர் என்பதை உறுதிப்படுத்துவதற்கு சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள காலவரம்புகளுக்கு இணைவாக காணி நிர்வாகத்திற்கு பொறுப்பாக இருக்கின்ற அரச அதிகாரிகள் இறுக்கமாகச் செயற்படவேண்டும். அனுமதிப் பத்திரங்களை புதுப்பித்தல், உரிமங்களைப் புதுப்பித்தல் போன்றவற்றினை மக்களுக்கு அறிவிப்பதில் அதிகாரிகள் முனைப்புடன் செயற்படவேண்டுமென்பதுடன் தங்களது ஆவணங்களைப் புதுப்பிப்பதற்கு பொதுமக்களுக்கு போதியளவு அறிவும் வாய்ப்பும் வழங்கப்பட்டுள்ளதென்பதையும் அவர்கள் உறுதிப்படுத்தவேண்டும்.

8. காணி நிர்வாக நிறுவனங்கள் பால்ரீதியாக வேறாக்கப்பட்ட தரவுகள் உள்ளடங்கலாக காணி தொடர்பான போதிய தகவல்கள் துல்லியமாகவும் பாதுகாப்பாகவும் பேணப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக பொருத்தமான தொழில்நுட்பம் நிறுவனங்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

9. காணி தொடர்பான விடயங்களைக் கையாளும் சகல அரச அதிகாரிகளும் காணிகள் தொடர்பான உத்தியோகபூர்வ தகவல்களை அணுகக்கூடியவர்களாக இருக்க வேண்டும். காணி விடயங்களில் சம்பந்தப்படுகின்ற பல்வேறு அரச அதிகாரிகள் மற்றும் அரச

நிறுவனங்களுக்கிடையில் செயற்திறன்மிகு ஒருங்கிணைப்பு காணப்படல் வேண்டும். பொதுப்பதிவுகள் அல்லது தகவல்களின் சான்றுப்படுத்தல்களை வழங்குவதற்கான அல்லது பொது அல்லது உத்தியோகபூர்வ தகவல்களை தெளிவுபடுத்துவதற்கான தேவைப்பாடு மக்களின் மீது சுமத்தப்படலாகாது. இவை பொதுமக்களுடன் தொடர்புபடுகின்ற அரசாங்க உத்தியோகத்தர்களின் பொறுப்பாக இருக்கும். அவர்களே பொதுப்பதிவுகளையும் தகவல்களையும் வழங்க வேண்டுமென்பதுடன் பிரச்சினைகளை தெளிவுபடுத்தி வேண்டுகோள் அல்லது விசாரணைகளை மேற்கொண்டு மக்களுக்கு உதவவேண்டும்.

10. பாதிக்கப்பட்ட தனிநபர்களும் குழுக்களும் இலஞ்சம், ஊழல், பரிவு மற்றும் புறக்கணிப்பு போன்ற விடயங்களை அரச அதிகாரிகள் தமது காணி விடயங்களில் மேற்கொள்வது தொடர்பாக முறைப்பாடு செய்வதற்குச் சுயாதீனமான பொறிமுறை ஒன்றினை அணுகக்கூடியதாக இருக்கவேண்டும். சுயாதீனமான நிறுவனங்கள் விசாரணைகளை நடத்துவதற்கும் தகவல்களைக் கோருவதற்கும் பரிகாரங்களை வழங்குவதற்கும் அதிகாரங்களைக் கொண்டிருக்கவேண்டும். இந்தப் பொறிமுறையானது தகைமை வாய்ந்த ஆளணியினரைக் கொண்டிருக்க வேண்டுமென்பதுடன் நேரம், மொழி, புவியியல் மற்றும் செலவு ஆகியவற்றின் அடிப்படையில் பொதுமக்களாலும் சமுதாயங்களினாலும் இலகுவாக அணுகப்படக் கூடியதாகவும் இருக்கவேண்டும். சிலர் எதிர்விளைவுகளைப் பற்றி பயப்படுகின்ற காரணத்தினால் முறைப்பாடுகளைப் பெயர் குறிப்பிடாமல் பாதுகாப்பாகச் செய்வதற்கான ஏற்பாடுகளையும் பொறிமுறைகள் கொண்டிருக்க வேண்டும்.

11. ஊழலில் ஈடுபட்டுள்ள அரசாங்க அதிகாரிகள் சட்டத்தினால் கடுமையான தண்டனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும். (குற்றவியல் மற்றும் ஒழுக்காற்று)

## 4. பிணக்குத் தீர்வுகளும் நட்டஈடுகளும்

1. நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள தனியார் காணி வழக்குகள் நியாயமான காலப்பகுதியினுள் தீர்க்கப்படல் வேண்டும். அரசாங்கம் காணி நீதிமன்றங்களை நிறுவுவதை கவனத்திற் கொள்ளவேண்டும். குறிப்பாக அதிக எண்ணிக்கையில் தனியார் காணிப் பிணக்குகள் காணப்படுகின்ற பிரதேசங்களில் காணி தொடர்பான பிரச்சினைகளைத் துரிதமாகத் தீர்ப்பதற்காக இது நிறைவேற்றப்படல் வேண்டும். பாதிக்கப்பட்டுள்ள சகல தரப்பினருக்கும் போதிய அறிவித்தலினை வழங்கி ஒரு வருடத்தினுள் வழக்குகளைத் தீர்ப்பதே நோக்கமாக இருக்கவேண்டும்.

2. சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு முன்னராக சிறிய அளவிலான தனியார் காணி பிணக்குகளுக்கு மத்தியஸ்தம் வழங்குவதை அரசாங்கம் கவனத்திற் கொள்ள வேண்டும்.

3. காணிப் பிணக்குகளுக்காக தரமான சட்ட உதவியினை அரசாங்கம் இலவசமாக வழங்கவேண்டும்.

4. காணிக் கொள்ளை தொடர்பான விடயங்களைக் கையாள்வதற்கு ஆணை பெற்ற ஒரு நிறுவனம் சுயாதீனமான, பொருத்தமான பொறிமுறையினூடாக நிறுவப்படல் வேண்டும். காணிக் கொள்கைப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பது துயரங்களைத் தீர்ப்பதற்கு அவசியமானது என்பதுடன் இது நியாயம் என்கின்ற ஒரு கலாசாரத்தினை போதிக்கின்றது. நல்லிணக்கத்தில் ஈடுபடுவதின் ஓர் அங்கமாகவும் மேலும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் சமாதானத்தை நோக்கிச் செயற்படுவதற்காகவும் இது அவசியமானதாகக் காணப்படுகின்றது.

   a. அநீதி மற்றும் சமூக மற்றும் பொருளாதாரத் தாக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் துயரங்களை மதிப்பிடுவதற்குப் பொறிமுறைகள் வலுப்படுத்தப்படவேண்டும். இது இனங்களுக்கிடையிலான சிக்கலான காணிப் பிணக்குகளைத் தீர்ப்பதற்கு ஆற்றலினையும் நிபுணத்துவத்தினையும் பிரதிநிதித்துவத்தினையும் கொண்டிருக்க வேண்டுமென்பதுடன் தீர்வுகளைப் பரிந்துரைப்பதற்கும் அதிகாரம் பெற்றிருக்கவேண்டும்.

   b. காணிக் கொள்ளைக்கு உட்பட்ட அனைவருக்கும் நட்டஈடு வழங்கப்படல் வேண்டும். நட்டஈடாக காணியினையோ அல்லது காணியுடன் சேர்த்து பணத்தினையோ வழங்குவதற்கு மாத்திரம் நட்டஈடு மட்டுப்படுத்தப்படாமல் அது இடப்பெயர்வின் போது இழக்கப்பட்ட வாழ்வாதாரத்தினையும் உள்ளடக்க வேண்டும். வாழ்வினை மீண்டும் தொடங்குவதற்கும் வாழ்வாதாரத்தினையும் கல்வியினையும் சமூக நலனோம்புகையினையும் மீளத் தொடங்குவதற்கும் உதவிகள் வழங்கப்படவேண்டுமென்பதுடன் உட்கட்டமைப்பு வசதிகளும் ஏனைய வசதிகளும் வழங்கப்படல் வேண்டும்.

   c. இவ்வாறான பொறிமுறைக்கான வடிவமைப்பு சமுதாயங்களுடன் சேர்ந்து கலந்தாலோசித்து மேற்கொள்ளப்படவேண்டும் என்பதுடன் துறைசார்ந்த நிபுணர்கள் இந்தக் கலந்தாலோசிப்பில் பங்குபற்றவேண்டும். மேலும் இறுதித் தீர்மானம் எடுக்கப்படுவதற்கு முன்னரும் சமுதாயங்களினால் இவை மீளாய்வு செய்யப்படல் வேண்டும்.

   d. இழப்பீடானது நட்டத்தை ஏற்றுக்கொண்டு அது கூட்டு மற்றும் அடையாள நட்டஈடாகவும், குறியீடான நட்டஈடாகவும் அமைய வேண்டும்.

“மழையை நம்பி குத்தகைக் காணியில் நெல்லினைப் பயிர்செய்யும் போது சில சந்தர்ப்பங்களில் எல்லாவற்றையும் இழந்து விடுகின்றோம். பசி வயிற்றுடன் எங்களது காணியைக் கடந்து செல்லும் போது எங்களது மனம் எப்படி இருக்கும் எனக் கற்பனை செய்து பாருங்கள். வருடத்திற்கு மூன்று தடவை நாங்கள் பயிர் செய்திருக்கின்றோம்.”

- கொக்குத்தொடுவாய், முல்லைத்தீவைச் சேர்ந்த பங்குபற்றுனர்



## 5. இடம்மாற்றிக் குடியேற்றுதல்

1. வேறு இடங்களில் குடியமர்த்துதல் கடைசித் தெரிவாகவே பயன்படுத்தப்படல் வேண்டும். அது காணியுடனான மக்களின் சிக்கலான தொடர்புகள் (அவர்களின் வாழ்வாதாரங்கள், பாடசாலைகளுக்கான அணுகல், சேவைகளுக்கான அணுகல், குடும்பம் மற்றும் சமுதாயத் தொடர்புகள், கலாசார மற்றும் சமயத் தலங்கள் உள்ளிட்ட) மதிக்கப்படுகின்ற ஒரு தெரிவாகும்.

2. வேறு இடங்களில் குடியமர்த்துவதற்கான மதிப்பீடுகள் எக்கருத்திட்டங்களையும் ஆரம்பிப்பதற்கு முன்னர் பொருத்தமான திட்டமிடலுடன் முன்னுரிமைப்படுத்தப்படல் வேண்டும். இவை வேறு இடங்களில் குடியமர்த்திய பின்னரும் கண்காணிக்கப்படல் வேண்டும். அத்துடன் இடைமாற்றமானது நன்கு பலனளித்துள்ளதென்பதும் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

3. அபிவிருத்தி அடிப்படையிலான வெளியேற்றல்கள் மற்றும் இடப்பெயர்வு பற்றிய ஐக்கிய நாடுகள் அடிப்படைக் கோட்பாடுகள், வழிகாட்டல்கள் மற்றும் தன்னிச்சையற்ற வேறு இடங்களில் குடியமர்தலுக்கான செயல்விதிகள்[14] உள்ளிட்ட சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தராதரங்கள் தொடர்பாகப் பாதிக்கப்பட்ட சமுதாயங்களுடன் கலந்தாலோசித்து உருவாக்கப்பட்ட சட்டத்தினால் வேறு இடங்களில் குடியமர்த்தப்படுதல் ஆளுகை செய்யப்படவேண்டும். தேசிய தன்னார்வமற்ற மீள்குடியேற்றக் கொள்கையானது எதன் அடிப்படையில் சட்டம் மாதிரியாக ஆக்கப்பட்டுள்ளதோ அதன் குறைவான தராதரமாகப் பயன்படுத்தப்படல் வேண்டும். பாகுபாடின்மை மற்றும் சமத்துவம் ஆகிய கோட்பாடுகள் இறுக்கமாக பின்பற்றப்படுவதை வலியுறுத்துவது முக்கியமானதாகும். பின்வருவன பற்றி விசேட கவனம் செலுத்தப்படவேண்டும்.

4. மீளக்குடியேற்றப்பட்ட மக்கள் தங்களது காணி இழப்பு, வீடு மற்றும் ஏனைய கட்டுமானங்களின் இழப்பு. ஏனைய சொத்துக்கள் மற்றும் வாழ்வாதாரம் போன்ற அனைத்திற்குமான நட்டஈட்டை முழுமையானதாகப் பெற்றுக்கொள்ள வேண்டும். NIRP யினால் பரிந்துரைக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச தரநிர்ணய வழிகாட்டல்களைப் பாவித்து நட்டஈட்டு செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தவும்.

5. வாழ்வாதாரங்கள் (முறைசார் மற்றும் முறைசாராத) - கலந்தாலோசிப்புக்கள் மூலமாகவும் வாழ்வாதாரங்களை வசதிப்படுத்தி விருத்தி செய்வதற்கு உருவாக்கப்பட்ட தளங்கள் மற்றும் வாய்ப்புக்களின் மூலமாகவும் சமுதாயங்களின் வாழ்வாதார விபரங்கள் புரிந்து கொள்ளப்படவேண்டும்.

- கல்வி, பிள்ளைப் பராமரிப்பு வாய்ப்புக்கள் மற்றும் தொழிலின்றி வீட்டு வேலைகளைப் பார்ப்பவர்களின் செயற்பாடுகளுக்கான அணுகல்.
- முதியவர்கள் மற்றும் அங்கவீனமானவர்களுக்குத் தேவையான வசதிகளுடன் கூடிய தொழில்ரீதியான மற்றும் ஓய்வுநேரச் செயற்பாடுகளுக்கான அவகாசமும் வாய்ப்புக்களும்
- மீளக்குடியேற்றப்பட்ட பிரதேசங்களில் ஈடுகொடுக்கத்தக்க போக்குவரத்து சேவைகள்

---

14. https://www.ohchr.org/Documents/Issues/Housing/Guidelines_en.pdf

6. அடுக்குமாடித் தொகுதிகளில் மீளக் குடியேற்றுதல் : தனித்துவமான வடிவமைப்பு அல்லது குறைந்த வருமானம் கொண்ட சமுதாயங்களின் அமைவிடத் தேவைகளையும் முறைசார் மற்றும் முறைசாரா வாழ்வாதாரங்களையும் பொதுவான இடங்கள் மற்றும் சௌகரியங்களையும் மற்றும் சமூக மற்றும் நலன்புரி அபிவிருத்தித் தேவைகளையும் வடிவமைப்பின் போது ஒருங்கிணைப்பதற்காக திட்டமிடுவேருக்கும் நிர்வாகிகளுக்கும் கலந்தாலோசிப்பின் அடிப்படையிலான அறிவுறுத்தல்கள் வழங்கப்படல் வேண்டும்.[15]

7. வேறு இடங்களில் குடியமர்த்துதலானது பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் சமுதாயங்களுடன் நடத்தப்படும் போதியளவிலான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள், கலந்துரையாடல்கள் மற்றும் கலந்தாலோசிப்புக்களுடன் அமுல்படுத்தப்படல் வேண்டும்.

8. மீளக் குடியமர்த்தப்படுபவர்கள் துப்பரவான சூழல் மற்றும் மேம்படுத்தப்பட்ட சுகாதார சேவைகளுக்கான அணுகுதலையும் கொண்டிருக்கவேண்டும்.

9. மீளக் குடியமர்த்தப்பட்டவர்கள் வேறு இடங்களில் குடிபெயர்வதற்கு போதிய நேரம் வழங்கப்படல் வேண்டும்.

10. வேறு இடங்களில் குடியமர்வதற்கு முன்னர் அல்லது மக்களின் வாழிடம் இடிக்கப்படுவதற்கு முன்னர் தமது வீடுகளிலிருந்து தமது பொருட்களைப் பாதுகாப்பாக அகற்றுவதற்கான மக்களின் உரிமை மதிக்கப்படல் வேண்டும் என்பதுடன் தம்மால் எடுத்துச்செல்ல முடியாமல் விடப்பட்ட வளங்களுக்கான நட்டஈடு வேறு இடங்களில் குடியமர்த்தப்படும் திட்டங்களில் உள்ளடக்கப்படவேண்டும் என்பதையும் உறுதிப்படுத்த வேண்டும். மேலும் பெற்றுக்கொள்ளப்பட்ட காணியில் கிடைக்கக்கூடியதாக உள்ள ஏதாவது பொது வளங்களை மீளப் பயன்படுத்துவதற்கான (உதாரணமாக மின்சாரக் கம்பங்களும், வயர்களும்) சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

11. ஒத்துழைப்புமிகு தீர்மானம் வகுத்தல் செயன்முறையினை வசதிப்படுத்துவதற்காக வேறு இடங்களில் குடியமர்ந்ததன் பின்னரான கண்காணிப்புக்கான பொறிமுறை வடிவமைக்கப்பட்டு அமுல்படுத்தப்படவேண்டும் என்பதுடன் பிரச்சினை தீர்த்தலுக்கான பொறிமுறைகளும் வேறு இடங்களில் குடியமர்ந்த பின்னர் நியாயமான காலப்பகுதிக்கு வடிவமைத்து அமுல்படுத்தப்படவேண்டும்.

---

15. தெமட்டகொடயில் உள்ள சிறிசற உயனவைச் சேர்ந்த சமுதாயத்தினர் குறிப்பிடுகையில் தங்களது குடியிருப்புத் தொகுதியில் வியாபாரங்களை நடத்துவதற்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் தங்களது வாழ்வாதாரம் தொடர்பான செயல்பாடுகளை சில சந்தர்ப்பங்களில் குற்றவியல் நடவடிக்கைகளைப் போல் ஆக்கியுள்ளன எனக் குறிப்பிட்டனர். (உதாரணமாக வாழும் இடத்திலேயே கடைகளை நடத்துவது)

## 6. இராணுவத்தினை அகற்றுதலும் மனிதப் பாதுகாப்பும்

இராணுவமயமாக்கல் உடைமை அகற்றலின் பிரதான காரணியாக இருந்து வருகின்றது. தனிநபர்களுக்குச் சொந்தமான பிரதேசங்களை ஆக்கிரமித்துள்ளதற்கு அப்பால் இராணுவ ஆக்கிரமிப்பானது மீன் பிடித்தலுக்கான இடங்கள் மற்றும் பனை மரங்கள் போன்ற வளங்களை அணுகுதலிலுள்ள தடை, காணிப்பாவனை மற்றும் வாழ்வாதாரங்களில் ஏற்பட்டுள்ள பாதிப்பு, உள்ளூர்ப் பொருளாதாரங்களில் ஏற்படுத்தியுள்ள பாதிப்பு என்பவை குறித்து இந்த அறிக்கை கலந்துரையாடுகின்றது. தாங்கள் பாதிப்புறும் நிலைக்கு ஆளாக்கப்பட்டிருப்பதாக பொதுமக்களும் சமுதாயங்களும் கருத்துத் தெரிவித்துள்ளனர். இன்னும் சிலர் காடுகளில் வாழ்வதற்குத் தாம் தள்ளப்பட்டிருப்பதாகவும் அங்கே தமக்கு குறைந்தபட்ச பாதுகாப்பே இருப்பதாகவும் இன்னும் பலர் தமது உறவினர்களுடன் வாழ்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர். குறிப்பாக தமிழ் பேசும் மக்களுக்கு எதிரான தன்னிச்சையான நடவடிக்கைகள் மக்கள் அவர்களின் நாளாந்த வாழ்க்கையில் ஈடுபடுவதில் அச்சத்தினை ஏற்படுத்தி வருவதுடன் அவர்கள் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதிலும் அச்சத்தினை ஏற்படுத்தி வருகின்றது. இராணுவத்தின் பிரசன்னமும் அவர்களின் கண்காணிப்பும் கட்டுப்படுத்தப்பட்ட நடமாட்டங்களை உருவாக்கியுள்ளதுடன் சிவில் சமூகத்துடனான கூட்டுச்செயற்பாடு மற்றும் ஈடுபாட்டினையும் கட்டுப்படுத்தியுள்ளது. இராணுவ அதிகாரிகளின் கரங்களினால் உருவாக்கப்பட்டுள்ள பாகுபாட்டுடன் கூடிய பகையுணர்வுமிகு நடவடிக்கைகளும் தன்னிச்சையான விதிகளின் திணிப்பும் அடக்குமுறை மிக்கவையாகவே இருக்கின்றன.

அரசு உடனடியாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை இராணுவமயமற்ற பிரதேசமாக மாற்றவேண்டும். இராணுவ மயமாக்கலின் எண்ணற்ற மோசமான தாக்கங்களும் உத்தேச பரிந்துரைகளும் கீழே கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

1. இராணுவம் எடுத்த காணிகளை மீண்டும் மக்களிடமும் சமூகங்கிடமும் வழங்குவதற்கு அரசாங்கம் உடனடியாக ஒரு நிகழ்ச்சித்திட்டத்தினை அமுல்படுத்த வேண்டும். இராணுவமயமாக்கம் பல வழிகளில் காணி உரிமைகளை பாதித்திருக்கின்றது : மக்களின் இடப்பெயர்வு, தனியார்களின் காணி அபகரிப்பு, சமுதாயம் மற்றும் பொதுக் காணிகள், பயிர்ச்செய்கை போன்ற மற்றும் காணிப் பாவனையில் கட்டுப்பாடு, நீர் போன்ற காணிப்பாவனையுடன் தொடர்பான வளக் கட்டுப்பாடுகள் போன்றவற்றைக் கூறமுடியும். இராணுவ ஆக்கிரமிப்பின் தாக்கத்தினை மீளாய்வு செய்வதற்கு வேறான ஒரு பொறிமுறையினை நிறுவுவது அவசியமானதென்பதுடன் மக்களின் குறைகளையும் கோரிக்கைகளையும் தீர்ப்பதற்கும் வேறான ஒரு பொறிமுறை நிறுவப்படல் வேண்டும். எனவே அரசாங்கம் அவ்வாறான ஒரு பொறிமுறையை நிறுவ வேண்டும்.

2. நட்டஈடு, மீளளிப்புப் போன்றவற்றிற்கென சமாந்தரமான ஆணைகள் இருக்க வேண்டும். இடப்பெயர்வின் போது மக்கள் எதிர்நோக்கிய வன்முறை மற்றும் அநீதி தொடர்பான குறைகளும் தீர்க்கப்படல் வேண்டும்

3. பாதுகாப்பு அச்சுறுத்தல் (அவர்களினால் வெளிப்படுத்தப்பட்ட வேறு நியாயமான காரணங்கள்) காரணமாக மக்களினால் அவர்களது சொந்த நிலங்களுக்கு மீண்டும் செல்ல முடியாமல் இருந்து அவர்கள் மாற்றுக்காணிகளையும் ஏற்றுக்கொள்ள விரும்பாவிட்டால் அவ்வாறான மாற்றுக்காணிகள் மக்களின் வாழ்வாதாரத் தேவைகள், கல்வி, பொதுப்போக்குவரத்து மற்றும் அடிப்படைச் சேவைகளுக்கான அணுகல் ஆகியவற்றினை கருத்திற் கொள்ளவேண்டும்.[16]

---

16. முரண்பாட்டினால் பாதிக்கப்பட்ட இடப்பெயர்வுக்கான நீடுறுதியான தீர்வுகள் பற்றிய தேசிய கொள்கையினையும் பார்க்கவும். http://nirmin.gov.lk/web/images/pdf/national-policy-on-durable-solutions.pdf

4. ஹோட்டல்கள், பண்ணைகள் மற்றும் ஏனைய வர்த்தக முயற்சிகள் போன்ற இராணுவத்தினரால் முன்னெடுக்கப்படுகின்ற வர்த்தக நடவடிக்கைகள் நிறுத்தப்படல் வேண்டும்.

5. மக்களுடனான எவ்விதமான இராணுவ இடையீடுகளும் உள்ளூர் சமுதாயங்களின் சமூக மற்றும் கலாசார விழுமியங்கள் தொடர்பாகக் கூருணர்வு மிக்கதாக இருக்கவேண்டும்.

6. ஓய்வுபெற்ற இராணுவத்தினரும் கடமையிலுள்ள இராணுவத்தினரும் சிவில் நிறுவனங்களான அரச நிறுவனங்களுக்கும் ஏனைய அமைப்புக்களுக்கும் நியமிக்கப்படலாகாது. நகர அபிவிருத்தி அதிகாரசபை போன்ற அரச நிறுவனங்களை இராணுவ மயமாக்கலிலிருந்து அகற்றவேண்டும்.

**“நாங்கள் பாதுகாப்பை உணர்வதற்கு எங்களுக்கு இராணுவம் தேவையில்லை. தேசிய பாதுகாப்பு என்பது இராணுவம் பற்றியது அல்ல. அது எங்களைப் பற்றியது. இலவசமாக கல்வியினைப் பெறுவது. எங்களது காணிகளை நாங்களே வைத்திருப்பது அதிலே பெண்கள் வாழ்ந்து அவர்கள் நினைத்த நேரம் சுதந்திரமாக நடமாடுவதே அதுவாகும். அது தான் தேசிய பாதுகாப்பு என்பதைக் குறிக்கின்றது.”**

- முல்லைத்தீவைச் சேர்ந்த பெண் பங்குபற்றுனர்



## 7. காணி மற்றும் அடையாளம்

1. சிறுபான்மைச் சமுதாயங்கள் வரலாற்று ரீதியாகப் பயன்படுத்தி வந்த காணிகளிலிருந்து அவர்கள் வேறாக்கப்படலாகாது. போலியான தொல்பொருள் சான்றுகளை அல்லது வனசீவராசிகளின் பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி, மேலும் வனப் போர்வையைக் காட்டி சமுதாயங்களை இடம்பெயரச் செய்வது நிறுத்தப்படல் வேண்டும்.

2. காணிகளின் மீதான பிரத்தியேகமான கோரிக்கையினை வலுப்படுத்துவதற்காக தொல்பொருள் மற்றும் வரலாறு என்கின்ற காரணங்களைத் துஷ்பிரயோகம் செய்வதை நிறுத்துவதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். இது இனத்துவ மற்றும் சமயப் பன்மைவாதத்தினை நிலைகுலையச் செய்கின்றது. ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் வாழ்கின்ற சிறுபான்மைச் சமுதாயத்தின் சமூக, கலாசார மற்றும் அரசியல் இருப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் தொல்பொருள் மற்றும் வரலாறு ஆகியவற்றினை சூழ்ச்சித்திறனுடன் கையாள்வது தடைசெய்யப்பட வேண்டும்.

3. பௌத்த மதம் தற்போது நடைமுறையில் இல்லாத பிரதேசங்களில் புத்தரின் சிலையினை வைத்தல் உள்ளடங்கலான பௌத்த சின்னங்களை தோற்றுவிப்பதும் திணிப்பதும் நிறுத்தப்பட வேண்டும்.

4. சிறுபான்மைச் சமுதாயங்களிடமிருந்து கடந்தகாலங்களில் எடுக்கப்பட்ட காணிகள் அம் மக்கள் அக்காணிகளை அணுகமுடியாமல் இருந்த காலப்பகுதிக்கான பொருத்தமான நட்டஈட்டுடன் மீண்டும் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

5. அரச குடியேற்றத்தின் காரணமாகத் தமது காணிகளை இழந்த அசலான உரிமையாளர்களுக்கும் அதே பெறுமதியினைக் கொண்ட மாற்றுக்காணிகள் ஒதுக்கப்பட வேண்டும். குறிப்பாக, குடியமர்த்தப்பட்ட மக்களை அரசினால் அவர்களுக்கு வழங்கப்பட்ட காணிகளிலிருந்து வெளியேற்ற முடியாது.

6. தெற்கில் வாழும்' சிங்கள மக்கள் மற்றும் பௌத்தர்களை எண்ணிக்கையளவில் சிறுபான்மையினர் கணிசமாக வாழும் பிரதேசங்களில் குறிப்பாக நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் குடியேற்றுவதன் மூலமாக அப்பிரதேசத்தின் குடிசனப் பரம்பலை மாற்றுவது நிறுத்தப்படல் வேண்டும்.

7. வெவ்வேறு இனத்துவ மற்றும் சமயப் பின்புலன்களைக் கொண்ட சமுதாயங்கள் பிராந்தியங்கள் மற்றும் நீர்மூலங்களின் மீது விடுக்கின்ற போட்டித்தன்மை மிகு உரித்தாண்மைக் கோரிக்கைகள் கலந்துரையாடல் மற்றும் பேச்சுவார்த்தைகள் மூலம் சுமூகமான முறையில் தீர்க்கப்பட்டு மேலதிக இனப்பதட்டத்தை பிரதேசத்தில் தணிக்கும் வகையில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**"என்னுடைய அடையாளத்திற்கு எனக்கு எவ்வாறு தேசிய அடையாள அட்டை முக்கியமானதோ அதேபோல் என்னுடைய காணியே எனது அடையாளமாகும். இதுவே நான்."**

- முல்லைத்தீவு வட்டுவால் பிரதேசத்தை சேர்ந்த பங்குபற்றுநர்

## 8. காணி மற்றும் வாழ்வாதாரம்

இலங்கையிலுள்ள 80% விவசாய காணிகள் சிறிய அளவில் பயிர்செய்யும் உற்பத்தியாளர்களினால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எனவே காணிக்கொள்கைகள் அவர்களின் வாழ்வாதாரங்களைப் பாதுகாத்து அவற்றின் நிலைபேறான தன்மையினை உறுதிப்படுத்த வேண்டும். எனவே, விவசாயம் மற்றும் கடற்றொழில் பற்றிய கொள்கைகள் காணிக் கொள்கைகளுக்குச் சார்பானதாகவும் அவற்றின் அமுல்படுத்தலுக்குச் சார்பானதாகவும் அமையவேண்டும். மேலும் இக்கொள்கைகள் பிரதான உற்பத்தியாளர்களாகப் பெண்களை அடையாளம் கண்டு காணிகளுடனான, நீர்மூலங்களுடனான அவர்களின் வாழ்வாதாரங்களின் வழியான நெருக்கமான தொடர்பினை அடையாளப்படுத்தி அவர்களின் தேவைகளை நிறைவேற்ற வேண்டும்.

1. சூழலியல் ரீதியாக உறுதியான மற்றும் நிலைபேறான முறைகளின் மூலமாக ஆரோக்கியமான மற்றும் கலாசார ரீதியாகப் பொருத்தமான முறையில் உற்பத்தி செய்யப்படும் உணவிற்கான மக்களின் உரிமையினை அங்கீகரித்து பின்வருவனவற்றினை வழங்கும் தேசிய விவசாய மற்றும் கடற்றொழில் கொள்கைகளை உருவாக்குதல்.
    - இரசாயன விவசாய உணவு உற்பத்தி முறைகளையும் மற்றும் சுற்றாடல் ரீதியாகத் தீங்கான உணவுற்பத்தி முறைகளையும் பயன்படுத்துவதை குறைத்தல்
    - விவசாயிகளுக்கும் கடற்றொழிலாளர்களுக்கும் போதிய உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் (களஞ்சிய வசதிகள், குளிரூட்டப்பட்ட களஞ்சிய வசதிகள், சிறந்த பாதைகள் மற்றும் நீர் மற்றும் மின்சாரம் போன்ற பயன்பாடுகள்)
    - விவசாயிகள் மற்றும் கடற்றொழிலாளர்களுக்காக ஒப்புரவான மற்றும் நீதியான சந்தைக்கான அணுகல்
    - விவசாயம் மற்றும் கடற்றொழிலுக்கான புத்தாக்கம் மிக்க மற்றும் சுற்றாடல் ரீதியில் நட்பான தொழில்நுட்பம், திறன்கள் மற்றும் அறிவு பற்றிய பொருத்தமான மற்றும் அறிவைப் பெற்றுக்கொள்வதற்கான உதவி
    - கலந்துரையாடல்கள் மற்றும் பாரம்பரிய அல்லது பூர்வீகமான விதை இனங்கள் மற்றும் உணவுப் பொருட்கள் தயாரிக்கும் பொறிமுறைகளை உருவாக்குவதை ஊக்குவித்தல் வேண்டும்.
    - விவசாயத்திலும் பண்ணைத்தொழிலும் ஈடுபடுவதன் மூலம் ஊதியங்கள் மற்றும் நன்மைகளைப் பெற்றுக்கொள்கின்ற சூழல் உருவாக்கப்படவேண்டும். இதன் மூலம் இளைஞர்களுக்கு அது உறுதியான வருமான ஈட்டல் வாய்ப்பாக அமையும்.
    - பெண்களின் வாழ்வாதாரங்களுக்காக ஆகக்குறைந்தது 30% வள ஒதுக்கீட்டை உறுதிப்படுத்துதலும், உட்கட்டமைப்பு மற்றும் தீர்மானம் வகுத்தல் அமைப்புக்களுக்கான அணுகலை உறுதிப்படுத்தலும் மற்றும் தீர்மானம் வகுக்கும் மட்டத்தினைக் கொண்ட சகல அமைப்புக்களிலும் குறைந்தது 30% பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்வதும் அவசியமாகும்.
2. அரசாங்கம் மற்றும் தனியார் நிறுவனங்களினால் வழங்கப்படுகின்ற விவசாயம் மற்றும் கடற்றொழில் தொடர்பான சேவைகள் பற்றிய தகவல்கள் மக்களுக்கு வழங்கப்படல் வேண்டும்.[17]

17. உதாரணமாக விவசாயிகளுக்கு தற்பொழுது அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் வழங்குகின்ற உதவி மற்றும் விரிவாக்கல் சேவைகள் பற்றி தாம் அறிந்திருக்கவில்லை என்பதை பொலன்னறுவையில் உள்ளவர்கள் சுட்டிக்காட்டினர்.

3. சிறிய அளவிலான உற்பத்தியாளர்கள் காணிக்கான உரிமை, நீர் மற்றும் ஏனைய பொதுவிடயங்களில் பாரிய அளவிலான பல்தேசியக் கம்பனிகளின் வேலைத்திட்டங்களைக் காட்டிலும் முன்னுரிமை வழங்கப்படவேண்டும்.

4. உள்ளூர் நீர் ஒழுங்குபடுத்தல், நீர்ப்பாசன முகாமைத்துவங்கள் மற்றும் எவ்வகையான பயிர்கள் பயிரிடப்பட வேண்டுமென்கின்ற தீர்மானங்கள் சமுதாயப் பங்கேற்புடன் மேற்கொள்ளப்படல் வேண்டும். கம்பெனிகளினதும் கைத்தொழில் வலயங்களினதும் வர்த்தகத் தொழில்முயற்சிகளினதும் நீர்த்தேவைகள் விவசாயிகளின் தேவைகளை விட முன்னுரிமையானதாக ஆக்கப்படலாகாது (உமா ஓயா மற்றும் மகாவலி கருத்திட்டங்கள் உதாரணங்களாகப் பார்க்கப்பட்டவை)

5. காலநிலை மாற்றங்களுக்குச் சிறந்த முறையில் தகவமைப்பதற்கு அவசியமான திறன்கள் விவசாயிகளுக்கு வழங்கப்படவேண்டுமென்பதுடன் தொடர்ச்சியான ஒற்றை இனப் பயிர்ச்செய்கையினை விட நிலைபேறான விவசாய நடைமுறையினை ஊக்குவிப்பதற்கு அவசியமான உதவிகளும் விவசாயிகளுக்கு வழங்கப்படல் வேண்டும்.

6. பெண்களின் பராமரிப்புப் பணிகளை அங்கீகரித்து பராமரிப்புப் பணிகளுக்கு உதவி வழங்குகின்ற புதிய சமூக பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களை உறுதிப்படுத்துகின்ற ஒரு கொள்கையினை அரசு வடிவமைக்கவேண்டும். இதில் பிரசவ உதவி, முதியவர்களைப் பராமரிப்பதற்கான உதவி மற்றும் வலதுகுறைந்த குடும்ப உறுப்பினர்களையும் சுகயீனமான குடும்ப உறுப்பினர்களையும் பராமரிப்பதற்கான உதவி உள்ளடக்கப்பட வேண்டும் (இவற்றிற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதல்ல).

7. முறைசாராப் பொருளாதாரத் துறையில் பணியாற்றுகின்ற ஊழியர்களின் தொழில் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு அரசு சட்டங்களை இயற்றவேண்டும். இதில் கௌரவமான வாழ்க்கை ஊதியம், பிரசவ நலன்கள், சுகாதாரக் காப்புறுதி மற்றும் பிள்ளைப் பராமரிப்பு உதவி மற்றும் ஓய்வூதியங்கள் ஆகியவை உள்ளடக்கப்பட வேண்டும்.

8. இலங்கையின் கிராமப்புறங்களில் வாழுகின்ற விவசாயிகள் மற்றும் ஏனைய மக்களின் உரிமைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் பிரகடனங்களை அரசு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொண்டு நடைமுறைப்படுத்த வேண்டும்.

9. வருடத்தின் ஒரு அரைப்பகுதியின் போது மாத்திரமே பயிர்செய்கையில் ஈடுபட்டு வரும் உலர்வலய விவசாயிகள் வருடத்தின் மற்றைய அரைப்பகுதியின் போது சமூக நலன்புரித் திட்டங்களுக்கான அணுகல் அல்லது அத்துடன் மாற்று வாழ்வாதாரங்கள் தேவைப்பட்டவர்களாக இருக்கின்றனர். பெண்களின் வாழ்வாதாரம் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்படவேண்டும். பழைமையான ஆணாதிக்க சட்டங்கள் மற்றும் பாகுபாடுமிகு சமூக, கலாசார விழுமியங்கள் மற்றும் நடைமுறைகளினால் தமது காணிகளின் உரித்தான்மையினை இழக்கும் ஆபத்துள்ள நிலையிலே பெண்கள் காணப்படுகின்றனர்.

   உதாரணமாக சிலாவத்துறையிலுள்ள பெண்கள் தங்களது வீடுகளிலிருந்து முன்னெடுக்கக்கூடிய வாழ்வாதாரத்திற்கான தேவையினை வெளிப்படுத்தினர். பெண்கள் தலைமைதாங்குகின்ற குடும்பங்களும் யுத்தத்தினால் விதவையாக்கப்பட்டவர்களும் சார்ந்திருக்கின்ற வாழ்வாதாரங்கள் ஏனையவற்றினை விட அதிக பாதிப்புறுநிலையில் உள்ளவையாக இருக்கின்றன. ஏனெனில் ஏனையவை பெண்கள் வீட்டு வேலையாட்களாக வெளிநாடுகளுக்கு பயணம் செய்வதற்கான ஊக்குவிப்புக்களை மேலும் மேலும் வழங்குகின்றன. பெண்களினால் தெரிவு செய்யப்படுகின்ற வேலைத்தளங்களில் போதிய பாதுகாப்பு மற்றும் சுகாதாரப் பாதுகாப்பினை அவர்களுக்கு வழங்குவதும் முக்கியமானதாகும்.

“நாங்கள் எப்போதுமே தன்னிறைவு பெற்றிருந்தோம். எங்களுடைய பிழைப்புக்காக நாங்கள் யாரிலும் தங்கியிருக்கவில்லை. இப்பொழுது அரசாங்கம் உமாஓய போன்ற பாரிய அபிவிருத்தித் திட்டங்களை நடத்தி எமது நீரினையும் மண்ணினையும் அழித்து விட்டது. நாங்கள் இடம்பெயர்க்கப்பட்டு எமது வாழ்வாதாரங்கள் எம்மிடமிருந்து பறிக்கப்பட்டுள்ளன.”

- பதுளையைச் சேர்ந்த பங்குபற்றுனர்

“எமக்கு தேவையான அபிவிருத்தி கிரிக்கெட் ஸ்டேடியங்களோ, மாநாட்டு மண்டபங்களோ அல்ல. நாங்கள் விவசாயிகள். எங்களது பிள்ளைகளும் விவசாயத்தில் ஈடுபடுகின்றனர். நாங்கள் இருபோகம் பயிர்செய்வதற்கு எங்களுக்கு தேவையானதோ ஒரு நீர்ப்பாசனததிட்டமே.”

- அம்பாந்தோட்டையைச் சேர்ந்த பங்குபற்றுனர்



“வட்டுவாக்காலில் பல ஏக்கர் காணிகளில் முன்னோர்களின் காணிகளும் அனுமதிப்பத்திரம் இருந்த காணிகளும் இப்பொழுது கடற்படையின் கட்டுப்பாட்டிற்குள் இருப்பதுடன் முன்பு கிராம மக்கள் மீன் பிடித்து வந்த நந்திக்கடல் களப்பிற்குச் செல்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. களப்பிற்குச் செல்வதற்கு அவர்கள் கடற்படையினரின் அனுமதியினைப் பெறவேண்டும்.”

- முல்லைத்தீவைச் சேர்ந்த பங்குபற்றுனர்



## 9. மக்களை மையப்படுத்தியதான பொருளாதார அபிவிருத்தி

பொருளாதார அபிவிருத்தியின் பிரதான விடயமாகக் காணி காணப்படுகின்றது. இதன் அர்த்தமானது காணிகளைப் பயன்படுத்துவதற்கான, உடைமையாகக் கொண்டிருப்பதற்கான மற்றும் சொந்தமாகக் கொண்டிருப்பதற்கான மக்களின் உரிமையானது அபிவிருத்தி வேலைத்திட்டங்களினால் நேரடியாகப் பாதிக்கப்பிற்குள்ளாகின்றதென்பதாகும். மக்களின் வாழ்க்கையினை, உடைமையினை, உரித்தாண்மையினை அபிவிருத்தி செயற்பாடுகள் பாதிக்கின்ற மறைமுகமான வழிகளும் காணப்படுகின்றன. மேலும் இதிலே நீர்மட்டங்களின் மீதான தாக்கம், தனிப்பட்ட வாழியல் சூழல்களின் மீதான தாக்கம், வாழ்க்கைப் பாங்குகளின் மீதான தாக்கம், வாழ்வாதாரங்கள் மற்றும் விவசாய நடவடிக்கைகள் மீதான தாக்கம் ஆகியவை உள்ளடங்குகின்றன. மேலும் சுற்றாடல் தாக்கங்கள் மனித - வனசீவராசிகளின் மோதலுக்கு இட்டுச்சென்று அது இறுதியில் மனிதப் பாதுகாப்பிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

அபிவிருத்தி தொடர்பான அதிகமான மக்களின் அனுபவம் அவர்கள் அதீதமான அளவிற்கு வேறாக்கப்படுகின்றமையாக இருப்பதைக் கருத்துக்கணிப்புகள் எடுத்துக்காட்டியது. விழிப்புணர்வின்மை, கலந்தாலோசிப்பின்மை, நட்டஈடின்மை, காணிகளுடனான மக்களின் உறவுகள் மற்றும் மக்களின் முதலீடுகள் பற்றிய புரிதல் இல்லாமை, உள்ளூர் சமூகங்களின் வாழ்க்கையின் மீதான தாக்கங்கள் பற்றிய கரிசனை இல்லாமை, உள்ளூர் சமூகங்கள் அபிவிருத்தித் திட்டங்களில் இருந்து பலன் பெறுவதற்கான வாய்ப்புக்களைக் கருத்திற்கொள்ளாமை போன்றவை பாதிக்கப்பட்ட தனி நபர்களினாலும் குழுக்களினாலும் கலந்துரையாடப்பட்ட விடயங்களாகக் காணப்பட்டன.

1. இலங்கை மக்கள் குறிப்பாக அபிவிருத்திக்காக முன்மொழியப்பட்டுள்ள புவியியல் பிரதேசங்களில் வாழ்கின்ற மக்கள் அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் முன்னுரிமைப்படுத்தப்பட்டு அதிலிருந்து நன்மையினைப் பெறவேண்டும். தனியார் கம்பெனிகள், கைத்தொழில் வலயங்கள் மற்றும் வர்த்தகத் தொழில்முயற்சிகள் (அரச/ தனியார் தொழில்முயற்சிகள் உள்ளடங்கலாக) போன்றோருக்கான பொருளாதார நலன்கள் மக்களுக்கான இந்த அடிப்படை நன்மைகளை விட அதிகரிக்கக்கூடாது. நாட்டிற்கான நலன்கள் என்ற பரந்த கருத்தியலும் மக்களுக்கு அதிலிருந்து கிடைக்கின்ற நன்மைகள் என்ற கருத்தியலும் உளளூர்ச் சமுதாயங்களுக்கும் உள்ளூர் மக்களுக்கும் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகின்ற உண்மையான நலன்களின் தகவல்களினைக் கொண்டு பதிலீடு செய்யப்படவேண்டும்.

2. அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு முன்னர் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் பொதுக்கள் விழிப்புணர்வு மற்றும் உள்ளூர் மக்களின் ஈடுபாடு இருப்பதனை அரசாங்கம் உறுதிப்படுத்தவேண்டும். கலந்தாலோசிப்புக்களை நடாத்துவதற்கும் கரிசனைகளைப் பகுப்பாய்வு செய்து பரிகாரமிகு பரிந்துரைகள் மற்றும் பதிற்செயற்பாடுகளை உருவாக்குவதற்கும் ஒத்துழைப்புமிகு பொறிமுறைகள் பாதிக்கப்பட்ட உள்ளூர் சமுதாயங்களுடன் நிலைநாட்டப்படல் வேண்டும். மேலும் உள்ளூர் சமுதாயங்களை ஈடுபடுத்துகின்ற பின்னூட்டல் பொறிமுறைகள் உருவாக்கப்பட வேண்டுமென்பதுடன் சமுதாயங்களுக்கு அர்த்தபூர்வமாக பதிற் செயற்பாடாற்றுவதற்குப் பல்துறைசார் நிபுணர்கள் மற்றும் உள்ளூர் சமுதாயங்கள் ஈடுபடுத்தப்பட்டு தேவைப்படுகின்ற மாற்றங்கள் அபிவிருத்தித் திட்டங்களுக்கு பரிந்துரைக்கப்படுவதும், இப்பொறிமுறையினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

3. அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காகக் காணி பெற்றுக்கொள்ளல்படல் பின்வருவனவற்றினால் ஆதரவளிக்கப்பட வேண்டும்.

   a. ஒரு பொருளாதார அபிவிருத்தி உபாயமார்க்கம்

   b. மனித மற்றும் சுற்றாடல்துறை முகாமைத்துவ உபாயமார்க்கம்

c. உறுதியான பால்நிலைக் கூறுடன் கூடிய மனித உரிமை தாக்க மதிப்பீடு[18]

d. மேற்குறிப்பிட்ட உபாயமார்க்கங்களைக் கையாளுகின்ற பௌதீக ரீதியான அபிவிருத்தித் திட்டமிடல் ஆவணம்.

e. அரசு அனுசரணை வழங்கும் சுயாதீன செயலாக்க ஆய்வு மற்றும் அறிக்கை

f. அரசு அனுசரணை வழங்கும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு

g. எதிர்ப்புகள், மாற்று அறிக்கைகளுக்கான கருதுகோள்கள், உபாயமார்க்கங்கள் மற்றும் கலந்தாலோசிப்புக்கள் ஆகியவற்றிற்கென போதியளவு காலம் வழங்கப்படல் வேண்டும்

4. இடமாற்றிக் குடியேற்றல் திட்டவட்டமாகவே அவசியமாக இருப்பின் மேலும் அர்த்தபூர்வமான கலந்தாலோசிப்புச் செயன்முறைகள் பூர்த்திசெய்யப்பட்டிருப்பின் மீளக் குடியேற்றும் திட்டங்கள் மற்றும் செயன்முறைகள் தனிநபர்களையும் சமுதாயங்களையும் பாதிக்கும் விதத்தில் இடப்பெயர்வுச் செயற்பாடுகளை ஏற்படுத்தும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் ஆரம்பிக்கப்படல் வேண்டும்.

5. சகல மீள்குடியேற்றப்பட்ட மக்களையும் அர்த்தபூர்வமான சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்குள் உள்வாங்குவதோடு அரசு உரிய காலத்தில் பதிந்து அந்தப் பிரதேசத்தில் அணுகக்கூடிய தரம்வாய்ந்த சுகாதார மற்றும் கல்வி வசதிகளை உறுதிப்படுத்த வேண்டும்.

6. இயற்கை வளங்களை வேறு திசைகளை நோக்கி திருப்பப்படல் அல்லது அகற்றல் ஆகியவற்றினை மேற்கொள்ளும் வேலைத்திட்டங்கள், செயற்பாடுகள், அக்காணிகளில் வாழ்பவர்களின் மீதான அவற்றின் தாக்கங்கள் தொடர்பாக மதிப்பிடப்பட்டு அப்பிரதேசங்களில் வாழ்பவர்களுக்கு ஏற்படும் சுற்றாடல் தாக்கங்கள் பற்றியும் கிடைக்கக்கூடியதான உள்ளூர் இயற்கை வளங்களின் மீதான தாக்கம் பற்றியும் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.[19]

7. உள்ளூர் நீர் வளங்களைப் பயன்படுத்துதல் மற்றும் கிராமங்களுக்குள் யானைகளின் நடமாட்டததைத் தடை செய்யும் வேலிகளை அடைத்தல் போன்ற பாரிய அளவிலான விவசாயக் கம்பெனிகளினால் நடாத்தப்படும் செயற்பாடுகள் மீளாய்வு செய்யப்பட்டு ஆவணப்படுத்தப்படல் வேண்டும்.[20] புத்தல மற்றும் பெல்வத்த பிரதேசங்களில் டோல் கம்பெனி மற்றும் சீனிக் கூட்டுத்தாபன பெருந்தோட்டக் காணிகளில் மனித யானை மோதல் அதிகரித்துள்ளமையைக் குறிப்பிடப்படலாம்.

8. உள்ளூர் சமுதாயங்கள், உள்ளூர் வளங்கள் மற்றும் சுற்றாடலைப் பாதுகாத்து அவற்றுக்கு நன்மையளிக்கும் விதத்தில் சுற்றுலாத்துறை மேம்படுத்தப்பட வேண்டும்.

---

18 பார்க்க.
https://www.ohchr.org/Documents/Issues/Development/DFI/MappingStudyontheHRRiskImplications_MegaInfrastructureInvestment.pdf

19 கரையோரப் பிரதேசத்தில் எண்ணற்ற சுற்றுலாத்துறை சார்ந்த கருத்திட்டங்களினால் இலாபம் பெறுபவர்கள் இந்தக் கருத்திட்டங்கள் இடம்பெறும் சமுதாய வாழிடத்திலிருந்து தூரத்தில் வாழ்கின்றார்கள். உதாரணமாக முசலியிருந்து மண்ணும் பதுளையிலிருந்து மரமும் எடுக்கப்பட்டு கொழும்புக்கு கொண்டு வரப்படுகின்றன.

20 உதாரணமாக உமா ஓய கருத்திட்டத்தினால் எடுக்கப்படும் நிலக்கீழ் நீரின் காரணமாக நிலக்கீழ் நீர்மட்டம் குறைவடைந்து நிலம் தாழிறங்கி உள்ளது. ஆய்வினை நடத்துவதற்காக CIC க்கு குத்தகைக்கு வழங்கப்பட்ட காணி அதீத அளவில் பீடைக்கொல்லிகளை பயன்படுத்தி பண்ணைச்செய்கைக்கு வர்த்தகப் பயிர்செய்கைக்காக பயன்படுத்தப்படுகின்றது

"உமா ஓய கருத்திட்டத்தினால் எனது வீடு முற்றுமுழுதாக அழிக்கப்பட்டது. நிலம் வெடித்து வயல்நிலமும் சுருங்கிவிட்டது. மூன்று வருடங்களாக நாங்கள் நெற்பயிர் செய்யவில்லை. தமிழரோ, சிங்களவரோ, முஸ்லிம்களோ நாம் அனைவரும் மனிதர்கள். இந்த அநீதி யாருக்கும் நடக்கக்கூடாது."

- பதுளையைச் சேர்ந்த ஆண்

"இந்தப் பெரிய கம்பெனிகள் வந்து தொழிற்சாலைகளைக் கட்டுவது தான் அபிவிருத்தி என்று கருதப்படுகின்றது ஆனால், நாங்களோ இவ்வாறான அபிவிருத்தியினால் பாதிப்படைந்து இருக்கின்றோம்."

- குச்சவெளியைச் சேர்ந்த பெண்



“நாங்கள் அபிவிருத்திக்கு எதிரானவர்கள் அல்ல. அது முக்கியமானது என்பதைப் புரிந்து கொள்கின்றோம். ஆனால் சுற்றாடலுக்கு அது குறைவான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும். இது நேரடியாகப் பாதிக்கப்படுபவர்களுடனான கலந்துரையாடல்கள் மூலம் தீர்மானிக்கப்படவேண்டும். அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு முன்னரே அரசாங்கம் மக்களைக் கலந்தாலோசிக்கும் பழக்கத்தை கொண்டிருக்கவில்லை.”

- பொலன்னறுவையைச் சேர்ந்த பங்குபற்றுனர்



## 10. பெருந்தோட்டக் காணிகள் - வரலாற்று ரீதியான குறைகளும் சுரண்டல் மிக்கதான தொழில் நடைமுறைகளும்

இலங்கையில் வெவ்வேறு பெருந்தோட்டங்களில் வேலை செய்யும் மக்களின் வாழ்வியல் அனுபவங்களை இந்த கருத்துக்கணிப்பு அறிக்கை குறிப்பிடுகின்றது.

மலையகத் தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட அநீதிகளின் வரலாற்று ரீதியான அனுபவமும் அது அவர்களின் வாழ்வின் மீதும் எதிர்காலத்தின் மீதும் ஏற்படுத்திய தாக்கங்களும் மறுக்க முடியாதவையாகும். அவர்களின் உழைப்பைத் தலைமுறை தலைமுறையாகச் சுரண்டி வருகின்றமையும் அதனுடன் சேர்த்து அவர்களின் வாக்குரிமையினை அகற்றி அதன் மூலமாக முறைமைவாய்ந்த வகையில் அவர்களைத் தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறையிலிருந்து விலக்கியதும் அவர்களுக்கு அரச சேவைகளுக்கான உதவியோ அணுகலோ இல்லாமலிருப்பதும் அவர்களுக்குப் பொதுவான பராமரிப்போ அல்லது உதவியோ அவர்களின் நலனோம்புகைக்கு வழங்கப்படாமலிருப்பதும் விசேடமாக உடனடிக் கவனத்தினை ஈர்க்கும் விடயங்களாகும்.

பெல்வத்த மற்றும் ஹிங்குரான பெருந்தோட்டங்களில் வேலை செய்யும் மக்கள் சுரண்டல் மிகு உழைப்பில் சிக்கியுள்ளதுடன் காணிப்பாவனை மற்றும் காணியுடைமை போன்றவற்றிலும் அவர்கள் சுரண்டலுடன் கூடிய முறையில் சிக்கியுள்ளனர். மேலும் அவர்கள் பொருளாதார, சமூக மற்றும் தலைமுறை ரீதியான பின்விளைவுகள் பற்றியும் பேசினர்.

1. 1பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு பெருந்தோட்டங்களில் வேலை செய்வதன் விளைவாகக் குறைந்தது இருபது ‘பேர்ச்’ காணி ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட வேண்டும். இது அவர்களுக்கு எழுத்து மூலமான உடன்படிக்கை மூலம் வழங்கப்படல் வேண்டும். இதன் மூலமாக அந்தக் காணியை எவ்வாறு பயன்படுத்துவது தொடர்பான தீர்மானத்தையும் எடுக்கும் சுதந்திரம் அவர்களுக்குக் கிடைக்கப்பெறவேண்டும்.

2. உள்ளூராட்சி சபைகளால் வழங்கப்படுகின்ற சேவைகள் ஏனைய கிராமங்களைப்போன்று பொருந்தோட்டங்களில் வாழ்கின்ற மக்களுக்கும் சென்றடைவதை உறுதி செய்யவேண்டும்.

3. பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்குக் கிடைக்கவேண்டிய நலன்களை மீள வழங்கும்போது வரலாற்று ரீதியான குறைகளும் கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

4. அனர்த்தங்கள் தொடர்பாகவும் காணிப்பாவனை மற்றும் தொழில் தொடர்பான அச்சுறுத்தல் தொடர்பாகவும் பெருந்தோட்ட முகாமையாளர்களும் ஏனைய சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் பாதிக்கப்பட்டுள்ள தனிநபர்களுக்குப் போதிய தகவல்களை வழங்கவேண்டும். மக்களின் நிரந்தர மற்றும் தற்காலிக நிவாரண நடவடிக்கைகளைத் திட்டமிடுகையில் பாதிக்கப்பட்டவருக்கான அனர்த்த முகாமைத்துவக் கொள்கைகள் வருநிலை நிகழ்வுகளையும் உள்ளடக்கவேண்டும். உதாரணமாக இயற்கை அனர்த்தங்கள் பற்றிய அச்சுறுத்தல்கள் எங்கே இருக்கின்றன மற்றும் பாதுகாப்பான இடங்களுக்கான வழிகள் என்ன என்பதைக் குறிப்பிடவேண்டும்.

**அனைத்துப் பெருந்தோட்டக் காணிகளில் ஈடுபட்டுள்ள மக்களுக்கான பரிந்துரைகள்**

1. ஒற்றைப் பயிர்களைக் கொண்ட பெருந்தோட்டங்களுக்காகத் தரப்படுத்தப்பட்ட கொள்கையினை உருவாக்கவேண்டும். இது குறிப்பாகத் தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் தராதரங்கள் உள்ளிட்ட தொழில் உரிமைகளைத் தீர்க்கவேண்டும். உதாரணமாகத் தொழிலாளர்களின் கூட்டுறவு மாதிரியினை ஏற்று நடைமுறைப்படுத்தி சுற்றுச்சூழல் கருதுகோள்களையும் கருத்திற்கொள்ள வேண்டும்.

2. குறைந்தது அரை ஏக்கர் காணிகளை தோட்டத் தொழிலாளர்களுக்கு ஒதுக்குவதன் மூலமாக சூழலியல் வீட்டுத் தோட்டங்களை உருவாக்கி உணவுப்பாதுகாப்பை உறுதி செய்வதற்கு வழிவகை செய்யவேண்டும்.

3. ஒற்றைப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் தோட்டங்களில் பல்வகைமைப்புடுத்தப்பட்ட விவசாய வனங்களாக மாற்றுவதற்கு பெருந்தோட்ட தொழிலாளிகளுக்கு உதவி அவர்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக உயர்த்துவதற்கு உதவ வேண்டும்.

4. பெருந்தோட்டத் தொழிலாளர்களின் தொழில் உரிமைகள் பாதுகாக்கப்பட்டு ஏனைய சமூக மற்றும் சுற்றுச்சூழல் புறக்காரணிகள் கருத்திற்கொள்ளப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவதற்காக பெருந்தோட்டங்களில் முகாமைத்துவம் தொடர்பாக கொள்கைள் மீளப் பரிசீலிக்கப்படவேண்டும்.

5. நுகர்வுக்காகப் பயிர்களை வளர்த்தல் அல்லது அவ்வாறான காணிகளின் வளங்களைப் பயன்படுத்துதல் போன்றவற்றிற்கு அனுமதியினைத் பெற்றுக்கொள்ளல் போன்ற வாழ்வாதாரம் மீதான பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை மீதான மற்றும் தங்குமிட வசதிகளின் மீதான கட்டுப்பாடுகளையும் அவர்களின் காணிகள் மீதான கட்டுப்பாடுகளையும் அகற்றுதல்


6. பெருந்தோட்டத் தொழிலாளர்கள் நீர், மின்சாரம் மற்றும் ஏனைய வசதிகளை அணுகுவதைக் கட்டுப்படுத்துவது போன்ற அவர்களின் பிரஜாவுரிமை மீது பெருந்தோட்டக் கம்பனிகளினால் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை அகற்றுதல்.

7. பெருந்தோட்ட சமுதாயம் முன்வந்து காணிகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில், காணிக்கச்சேரிகளில் பங்குபற்றுவதற்கு அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

“ஏன் எங்களது முன்னோர்கள் இங்கே வந்தனர்? இந்த இலட்சாதிபதிகள் எங்களால் தான் இவ்வாறு வாழ முடிகின்றது. நாங்கள் அவர்களது வீடுகளில் கூட வேலை செய்கின்றோம். ஆனால் நாங்களோ அவர்களுக்குப் பெறுமதியற்றவர்கள். நாங்கள் பறிக்கின்ற தேயிலைக்கொழுந்து அவர்களுக்குப் பெறுமதியானது. எங்களுக்கோ எந்தப் பெறுமதியுமில்லை.”

“எங்களுக்கு வேறெந்தத் தெரிவும் இருந்திருந்தால் நாங்கள் எமது பிள்ளைகளை கரும்புத்தோட்டங்களில் வேலை செய்வதற்கு அனுப்ப மாட்டோம்.”

- மொனராகலையைச் சேர்ந்த பெல்வத்த சீனித்தொழில்சாலையில் தொழில்புரியும் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தங்களது கஸ்டங்கள் மற்றும் சமூகப் பாகுபாட்டினைப் பற்றிக் குறிப்பிட்டனர்.



## 11. சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம்

பங்குபற்றியோரில் பெரும்பான்மையானோர் அவர்களின் வாழ்வாதாரங்கள் எவ்வாறு சுற்றுச்சூழலுடன் பின்னிப்பிணைந்துள்ளன என்பதையும் அவை எவ்வாறு தம்முடன் இடையீடு மேற்கொள்ளுகின்றன என்பதையும் மேலும் ஒன்றில் மற்றொன்று எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றன என்பது பற்றியும் அறிந்திருந்தனர். மனித வனவிலங்கு முரண்பாடுகள் தொடர்பான மற்றும் காலநிலை மாற்றங்கள் தொடர்பான கலந்துரையாடல்களின் போது இவை குறிப்பாக கோடிட்டுக் காட்டப்பட்டன. சுற்றுச்சூழலின் நிலைமையானது பங்குபற்றுனர்களின் வாழ்வாதாரங்களுக்கு ஆதரமாக இருந்ததென்பதும் பரந்தளவில் புரிந்து கொள்ளப்பட்டது. பாரிய அளவிலான வேலைத்திட்டங்களின் தாக்கங்கள் பற்றிக் கலந்துரையாடும் போது சுற்றுச்சூழல் மீதான அவற்றின் மோசமான தாக்கங்கள் விரிவாக விபரிக்கப்பட்டன.

இந்தக் கலந்துரையாடல்களின் போது சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்காக ஆணை வழங்கப் பட்டுள்ள நிறுவனங்கள் (வனத் திணைக்களம்) அவை பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களை எல்லை குறிக்கும்போது பயன்படுத்துகின்ற அடக்குமுறை அணுகுமுறை பற்றி விமர்சிக்கப்பட்டது. நிருவனங்களுக்கிடையிலான தொடர்பாடல் அடிப்படையில் இல்லாமல் இருப்பது இங்கு அவதானிக்கப்பட்டது. மேலும் வேண்டுமென்றே நிர்வாக நிறுவனங்களுக்கிடையில் தகவல்கள் வழங்கப்படாமையானது சமுதாயங்களைப் பாதித்துள்ளதுடன் ஊழலும் தனிநபர் நலன்களும் சுற்றுச்சூழல் கரிசனைகளை விட மேலோங்கி நிற்பதுடன் பாதிக்கப்பட்ட மக்களின் நலன்களை கருத்திற்கொள்வதற்கான நிறுவன ரீதியான ஊக்கம் இல்லாமல் இருப்பதும் அவதானிக்கப்பட்டது.

கீழே வழங்கப்பட்டுள்ள பல பரிந்துரைகள் தொடர்பாடலில் காணப்படுகின்ற குறைபாடுகள் காரணமாக தீர்மானம் வகுத்தல் செயன்முறையிலிருந்து சம்பந்தப்பட்ட சமுதாயங்களைத் தூ ரமாக்கி வைக்கின்றது. பரிந்துரைகள் மேலும் காணிப்பாவனைக் கொள்கைகளும் சட்டங்களும் இயற்றப்பட்டு அமுல்படுத்தப்படுகையில் குறைந்தபட்ச சுற்றுச்சூழல் தராதரங்கள் நிறுவப்படுதல் தொடர்பாகவும் கவனஞ் செலுத்துகின்றது.

பாதகமான காணிப் பயன்படுத்தல் நடைமுறைகளை குறிப்பாக மிதமிஞ்சிய மண் அகழ்வு, இயற்கை வளங்களைப் பெறல், மிகஅதிகளவிலான விவசாய இரசாயனப்பாவனை, அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காக உணர்திறன்மிக்க சுற்றுச்சூழல் அமைப்புக்களை அழித்தல் போன்றவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான இறுக்கமான ஒழுங்குவிதி முறைகள் பிரயோகிக்கப்பட வேண்டும்.

காலநிலை மாற்றத்தின் பாதகமான விளைவுகளை குறிப்பாக விவசாயிகள் மற்றும் ஏனைய உற்பத்தியாளர்களின் வாழ்வாதாரத்தில் காலநிலை மாற்றத்தால் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகளைக் நிவர்த்திசெய்வதெற்கென ஒரு பரந்துபட்ட ஒரு தேசிய பொறிமுறை உருவாக்கப்பட்வேண்டும்.

1. வனசீவராசிகளுக்கான ஒதுக்கங்கள், வன ஒதுக்கங்கள், தொல்பொருள் ஒதுக்கங்கள், மகாவலி அபிவிருத்திப் பிரதேசம் அல்லது சுற்றுலா அபிவிருத்திப் பிரதேசம் ஆகியவற்றினை பிரகடனப்படுத்துவதற்கு முன்னர் பின்வரும் செயல்விதிகள் கட்டாயம் பின்பற்றப்படல் வேண்டும்.

   a. சம்பந்தப்பட்ட காணியினைப் கையகப்படுத்திக்கொள்வதற்கான உண்மையான தேவை இருக்கின்றதா? என்பதை அடையாளம் காண்பதற்கு செயலாக்க ஆய்வு கட்டாயம் நடத்தப்படவேண்டும்.

b. செயற்றிட்டங்களுக்காக கையகப்படுத்திக்கொள்ளப்படவுள்ள காணியில் நிலஅளவை மேற்கொள்ளப்பட வேண்டும்.

c. செயற்றிட்டங்களுக்காக கையகப்படுத்திக்கொள்ளப்படவுள்ள காணியினைத் தெளிவாகச் சுட்டிக்காட்டி அதனுடன் சேர்த்து வர்த்தமானி அறிவித்தலையும் பகிரங்க இடங்களில் காட்சிப்படுத்தும் அறிவித்தல் வெளியிடப்பட வேண்டும்.

d. இந்த வர்த்தமான அறிவித்தலுக்கு எதிராக விண்ணப்பிப்பதற்கென மக்களுக்கு ஒரு மாத கால அவகாசம் வழங்கப்படல் வேண்டும்.

e. செயற்றிட்டங்களுக்காக பெற்றுக்கொள்ளப்படவுள்ள காணியின் உரித்தாண்மை மற்றும் பயன்பாடு தொடர்பில் போட்டித்தன்மை காணப்படுமாயின் அது தொடர்பில் மேன்முறையீட்டுச் சபை விசாரணைகளை நடாத்த வேண்டும். (இந்தக் குழுவானது கருத்திட்டத்தில் பணியாற்றும் சகல திணைக்களங்களின் உறுப்பினர்களையும் சிவில் சமூகத் அங்கத்தவர்களையும் பாதிக்கப்பட்ட சமூகங்களின் பிரதிநிதிகளையும் கொண்டிருக்கவேண்டும் என்பதுடன் இதன் மூலமாகத் தீர்மானம் வகுத்தல் செயன்முறையில் அரசியல் செல்வாக்குக் குறைக்கப்படவேண்டும்.

f. வர்த்தமானி கட்டாயம் பிரசுரிக்கப்பட தகவல்கள் மக்கள் பார்வைக்கு பகிரங்கப்படுத்தப்படவேண்டும்.

2. வனப் பாதுகாப்பிற்கான திட்டமிடலானது வனப்போர்வை விகிதாசாரத்தினைப் பேணுவதற்கான உண்மையான நியாயப்படுத்தக்கூடிய தராதரங்களை அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும். உதாரணமாக வனப்போர்வையின் விகிதாசாரமானது வெவ்வேறு அளவுகளில் தீர்மானிக்கப்படல் வேண்டும். தேசிய அளவீட்டில், பிராந்திய அளவீட்டில், குறிப்பிட்ட சுற்றுச்சூழல் அமைப்பின் அளவீட்டில். மேலும் வனங்களைப் பாதுகாப்பதற்கான திட்டங்கள் துண்டு துண்டாக மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு முயற்சிகளைத் தவிர்ப்பதற்காக வனமாக்கப்பட்ட பிரதேசங்களை இணைக்கும் தன்மையினை கருத்திற்கொள்ள வேண்டும்.

3. ஒதுக்கங்கள் உரிய செயன்முறையின்றி வர்த்தகப் பயன்பாட்டிற்காக வனத் திணைக்களத்தின் பாதுகாப்பின் கீழ் ஒப்படைக்கப்படக்கூடாது.

4. மனித வாழிடங்களுக்கு அண்மையில் இருக்கின்ற இயற்கையான வாழிடங்களைச் சுற்றியுள்ள பாதுகாப்பு வலயங்களுக்கான ஒரு புகலிடம் அல்லது கிராம வனப் பாதுகாப்புப் பிரதேசம் இருக்கவேண்டும்.

5. அபிவிருத்திக் கருத்திட்டங்களினால் பாதிக்கப்பட்ட பிரதேசம் சுற்றுச்சூழல் ரீதியாக மீளுருவாக்கப்படக்கூடியதாக இருக்கின்றதென்பதை உறுதிப்படுத்துவதற்கு திட்டமிடல் இருக்கவேண்டும். இத்திட்டமானது அபிவிருத்தி வேலைத்திட்ட வடிவமைப்பின் பாகுதியாக இருக்கவேண்டும்.

6. சிறிய அளவிலான மற்றும் சமுதாய அடிப்படையிலான சுற்றுலாத்துறை ஊக்கப்படுத்தப்படவேண்டும். குறிப்பாக, குச்சவெளி, நிலாவெளி மற்றும் கற்பிட்டி போன்ற உறுதியற்ற சுற்றுச்சூழல் அமைப்பைக்கொண்ட பிரதேசங்களில் இவை ஊக்கப்படுத்தப்பட வேண்டும் அத்துடன் பாரியளவிலான சுற்றுலாத்துறை கருத் திட்டங்கள் சுற்றுச்சூழலில் பாதிப்புமிகு தாக்கங்களை ஏற்படுத்துவது நிரூபிக்கப் பட்டுள்ளது.

7. வனத்தோட்டக் கருத்தியல் மற்றும் கலப்புப் பயிர்ச்செய்கை மேம்படுத்தப்பட வேண்டும் (குறிப்பாக பெருந்தோட்டங்களுக்காக). ஏனெனில் இது வனப்போர்வையினைப் பேணுவதுடனும் உயிரியல் பல்வகைமையினை மேம்படுத்துவதுடனும் நீரேந்தலையும் மேம்படுத்துகின்றது.

8. காடழிக்கப்பட்டுள்ள நீரேந்து பிரதேசங்கள், வன ஒதுக்கங்கள் மற்றும் கிராமக் காடுகள் ஆகியவற்றினை மீண்டும் வனமாக மாற்றுவதற்கு அரசாங்கம் காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

9. மத்திய மலை நாட்டிலே எண்ணெய்க்காக பாம்(முற்தேங்காய்) மரங்களை வளர்க்கின்ற வர்த்தகப் பயிர்ச்செய்கையின் விரிவாக்கத்தினைக் கட்டுப்படுத்துவதற்கு மேலும் நீரேந்து பிரதேசங்களில் இதனைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். ஏனெனில் இப்பயிர்ச்செய்கையானது நில மேற்பரப்பில் பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்துவதுடன் நிலக்கீழ் நீர் மட்டத்தினைக் குறைத்து மண்ணரிப்பிற்கும் மண் சரிவிற்கும் காரணமாக அமைவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

10. நீரேந்து பிரதேசங்கள் மற்றும் மண்ணரிப்பு, மண்சரிவினால் பாதிப்படையக்கூடிய ஆபத்துமிக்க பிரதேசங்கள் ஆகியன மத்திய மலைநாட்டிலே பாதுகாப்புக் கோட்பாடுகளுக்கு அமைவாக சரியான முறையில் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும்.

11. போத்தலில் நீர் அடைக்கும் வேலைத்திட்டங்கள் மற்றும் வர்த்தகப் பயிர்ச்செய்கைகள் போன்ற வர்த்தக நோக்கங்களுக்காக இயற்கை நீர் வளங்களைப் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்துவதற்கு ஒழுங்குவிதிகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

12. உதவிப் பொறிமுறைகள் மற்றும் பொருத்தமான சட்டக் கட்டமைப்புக்களை வழங்குவதன் மூலமாகத் திண்மக்கழிவு முகாமைத்துவக் கொள்கை செயற்படுத்தப்பட வேண்டும்.

13. பிரிக்கப்பட்டுள்ள சூற்றுச்சூழல் அமைப்புக்களை ஒன்றுசேர்ப்பதன் மூலமாகவும் வனப்பெருந் தோட்டங்கள் இயற்கை வனங்களாக மாறுகின்ற செயன்முறையை வசதிப்படுத்துவதன் மூலமாகவும் மனிதர்களுக்கும் வனவிலங்குகளுக்கும் இடையில் நிலைபேறான சகவாழ்வு வசதிப்படுத்தப்படல் வேண்டும்.

14. மனிதனுக்கும் வனவிலங்குகளுக்குமிடையிலான மோதலின் தாக்கங்களைத் தீர்ப்பதற்கு நட்டஈட்டுத் திட்டங்கள் செயற்திறன்மிகு முறையில் அமைந்துள்ளன என்பதை உறுதிப்படுத்துவதற்கு மானியமாக்கப்பட்ட காப்புறுதி நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட வேண்டும். மேலும் பாதிக்கப்பட்ட தனிநபர்கள் மற்றும் குழுக்களுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடல்களில் இருந்த தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டினை நட்டஈட்டுப் பொறிமுறைகள் அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும் (விவசாயிகள், சங்கங்கள் உள்ளடங்கலாக)

“எங்களது நீர் மிகவும் தூய்மையானதாக இருந்தது. அதனை எங்களால் அருந்தக்கூடியதாகவும் இருந்தது. எங்களது முகங்களைக் கழுவவும் முடியும். ஆனால் இப்பொழுது அதனை தொடுவதற்குக் கூட பயமாக இருக்கிறது. ஏனெனில் அது இப்போது முற்றாக நஞ்சாக மாறியுள்ளது. பலருக்கு அந்த நீரிலுள்ள கிருமிகளால் சொறிகளும் காயங்களும், ஏற்பட்டுள்ளன.”

- ரத்கம கழிவுகொட்டும் இடத்தின் விளைவுகளைப் பற்றி ஹிக்கடுவையைச் சேர்ந்த பெண் பங்குபற்றுனர்

“மக்களுக்கு வெறுமனே காணிகளை வழங்காமல் காணி என்பது வரையறுக்கப்பட்ட வளம் என்பதைப் புரிந்துகொள்கின்ற கொள்கைகளே எங்களுக்குத் தேவை. மேலும் அவை சுற்றாடலையும் விவசாயத்தையும் கவனத்திற் கொள்ளவேண்டும். இதனால் நாங்கள் எங்களது எதிர்காலத்திற்காக எமது சுற்றுச்சூழல் அமைப்பை பாதுகாக்க முடியும்.”

- காலியைச் சேர்ந்த பங்குபற்றுநர்



# இணைப்பு 1

## வெளியிடப்பட்ட ஆக்கங்களின் மீளாய்வின் மூலமான சூழமைவுப் பகுப்பாய்வு

காணிப் பாவனை மற்றும் அதன் உரித்தாண்மை பற்றி நோக்குகையில் இலங்கை எதிர்நோக்கும் சவால்களின் ஊடுபரவும் தன்மையானது வரலாற்று ரீதியானதாகவும் சிக்கலானதாகவும் உள்ளது. இது தொடர்ச்சியாக அரசை மையப்படுத்திய அரசாங்கங்களின் கட்டுப்பாட்டிலும் இனத்துவ விளிம்புநிலையாக்கத்தின் சர்ச்சைமிகு அரசியல் மற்றும் ஊழல் நடைமுறைகளின் கட்டுப்பாட்டிலும் புதைந்துள்ளது. காணிப் பிரச்சினைகள் என்பவை அடையாளம், வாழ்வாதாரம், மூலதனம், ஊழியம், நீர், காலநிலை மற்றும் சுற்றாடல் ஆகியவற்றுடன் தொடர்புபட்டுள்ளது. எனவே காணிப் பாவனை மற்றும் அதன் உரித்தாண்மை என்பது பல்வேறு வகையான சட்டங்கள், கொள்கைகள் மற்றும் நிர்வாக நடைமுறைகள் ஆகியவற்றில் சிக்குண்டுள்ள மிகப் பாரிய விடயப் பரப்பாகும்.

இந்தச் சூழமைவுப் பகுப்பாய்வு சேகரிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட ஆக்கங்களின் மீளாய்வின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. இந்த மீளாய்வு காணிப் பிரச்சினையுடன் தொடர்புபட்டுள்ள மிக முக்கியமான போக்குகளைப் பற்றிய சொல்லாடலைக் கொண்டுள்ளது. காணிப் பிரச்சினைகள் மிகவும் சிக்கலானவை என்பதனால் அவற்றினைச் சம்பந்தப்பட்டுள்ள பிரச்சினை, அதன் உள்ளூர் வரலாற்றுச் சூழமைவு மற்றும் நடப்புச் சூழமைவு ஆகியவற்றின் அடிப்படையிலேயே புரிந்துகொள்ள வேண்டும். வெவ்வேறு சமூக - பொருளாதார மற்றும் அரசியல் காரணிகள் ஒவ்வொரு உள்ளூர்ப் பிரதேசத்தின் காணிக் கோரிக்கைகளிலும் அங்கு நிலவும் பதற்றங்களிலும் வித்தியாசத்தினை உருவாக்கலாம் எனும் ஆழமான அங்கீகாரத்துடனேயே இந்த மீளாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தச் சூழமைவுகளையும் ஒன்றாகச் சேர்த்து நோக்க முயற்சிக்கையில் காணிப் பிரச்சினைகளின் நுண்மையான வேறுபாடுகளை அறிந்துகொள்ள முடியாது. எனவே சேகரிக்கப்பட்ட ஆக்கங்களின் மீளாய்வின் மூலமாக ஒட்டுமொத்தச் சூழமைவு ரீதியான புரிதலை முயற்சிப்பதன் பெறுமதி செயற்படுகின்ற அக்கறைகளைப் புரிந்துகொள்கின்றமையாக இருக்கும்.

இந்த மீளாய்வானது அரச அனுசரனையுடன் வழங்கப்பட்ட காணி ஆணைக்குழு அறிக்கைகள் மற்றும் சட்டங்களின் விமர்சனங்களையும் கடந்த 10 வருடங்களில் வெளியிடப்பட்ட காணிப் பிரச்சினைகள் பற்றிய அரசசார்பற்ற அறிக்கைகளையும் பரிசீலித்துள்ளது. காணிப் பிரச்சினைகள் தொடர்பாக மக்களுடன் நடத்தப்பட்ட பரந்த அடிப்படையிலான கலந்தாலோசிப்புக்களை அடிப்படையாகக் கொண்ட ஏறக்குறைய அனைத்து அறிக்கைகளும் யுத்தத்துடன் தொடர்புடையவை என்பதைக் கவனத்திற்கொள்வதும் முக்கியமானதாகும். இதில் அரசியலமைப்பு மறுசீரமைப்பு பற்றிய பொதுமக்கள் பிரதிநிதித்துவக் குழு விதிவிலக்கானதாகும்.

### அறிமுகம்

காணி என்பது ஒரு மிக முக்கியமான சமூகப் - பொருளாதாரச் சொத்தாகும். குறிப்பாக, காணியின் மீதுள்ள கட்டுப்பாட்டினைக் கொண்டு (காணிக்கான அணுகலினால்) செல்வமும் பிழைத்து வாழ்தலும் அளக்கப்படுகின்ற விவசாய ரீதியாகச் சார்ந்துள்ள பொருளாதரங்களில் இந்த நிலைமை காணப்படுகின்றது (கொர்ப் மற்றும் சில்வா, 2003). இதன் விளைவாக, காணி மீதான மோதல்கள் பொதுவாக உறுதியான பொருளாதார ரீதியான மற்றும் உணர்வு ரீதியான பெறுமதிகளை இணைத்ததாகக் காணப்படுகின்றது. குறியீட்டு ரீதியாக அல்லது உணர்வு ரீதியாக முக்கியத்துவம் பெறும் காணியோ அல்லது சொத்தோ பிரச்சினைக்கு உள்ளாகுகையில் மோதலுக்கான வாய்ப்பு அதிகரிக்கின்றது - காணி மீதான போட்டியின் மையமாகக் காணப்படுவது சமூக பொருளாதார அதிகாரமும் அரசியல் அதிகாரமுமாகும்.

காணி என்பது யுத்தத்திற்குப் பின்னரான மீளல் மற்றும் புனரமைப்பில் ஒரு முக்கியமான விடயமாகக் காணப்படுகின்றது. காணி தொடர்பான சிக்கலான குறைகளைத் தீர்க்கத் தவறுகின்ற எந்த நடவடிக்கைகளும் வரலாற்று ரீதியான குறைகளின் தொடர்ச்சிக்கே இட்டுச்செல்கின்றன. "காணி என்பது ஓர் அரிதான மற்றும் அசையாத சொத்தாக இருக்கின்றமையே வரலாறு நெடுகிலும் சமூகங்களில் மோதல் மற்றும் அதிகாரத்துக்கான மூலமாக அதனை ஆக்கியுள்ளது என்பதே உண்மையாகும்". சனத்தொகை வளர்ச்சி, நகர விரிவாக்கம், காணிக்கான உலகளாவிய அதிகரித்த கேள்வி மற்றும் மண்ணரிப்புப் போன்ற சுற்றாடல் பிரச்சினைகள் இவ்வாறான பல முரண்பாடுகளுக்குக் காரணமாகியுள்ளன" (*Lindberg and Herath,* 2014: 890). யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையில் குறிப்பாகக் காணி மீளளிப்பு விடயத்தினைத் தீர்ப்பதற்கான முயற்சிகள் பல வடிவங்களில் வந்துள்ளன. இதில் கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழு (LLRC), நல்லிணக்கப் பொறிமுறை அறிக்கைக்கான கலந்தாலோசிப்புச் செயலணி (CTF), CTF அறிக்கையில் சேர்க்கப்பட்ட குறிப்பிட்ட அமைவிடங்களைச் சேர்ந்த மக்களுடனான வலயச் செயலணி நேர்காணல் (ZTF), அரசியலமைப்பு மறுசீரமைப்புப் பற்றிய பொதுமக்கள் பிரதிநிதித்துவக் குழு மற்றும் கல்வியியலாளர்கள், சிவில் சமூகச் செயற்படுனர்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் உள்ளிட்ட சர்வதேச அமைப்புக்கள் ஆகியவற்றின் எண்ணற்ற பங்களிப்புக்கள் ஆகியவை உள்ளடங்குகின்றன.

எவ்வாறாயினும் காணியற்ற நிலைமை, ஆணாதிக்கக் காணி நடைமுறைகள் மற்றும் தனியாரின் அபிவிருத்தி அக்கறைகளில் முதலாளித்துவ cronyism, பல தசாப்த யுத்தத்தின் போது உச்சமடைந்து இன்றுவரை தொடர்ந்து காணப்படும் இனத்துவத் தேசியவாதத்தில் வேரூன்றியுள்ள வரலாற்று ரீதியான சமத்துவமின்மைகள் போன்றவற்றினைத் தீர்ப்பதற்கு நீண்ட தூரம் செல்லவேண்டியுள்ளது.

**காணி அரசியல்**

தொடர்ச்சியான காலனித்துவ அதிகாரங்கள் மாறுபடுகின்ற காணிக் கொள்கைக் குறிக்கோள்களைப் பயன்படுத்தின. பிரித்தானிய ஆட்சி இரண்டு மடிக் காணிக் கொள்கையினை அறிமுகப்படுத்தியது - அரச காணி முகாமைத்துவம் மற்றும் இற்றைவரை இலங்கையின் காணிப் பதிவிலும் காணியின் உரித்தாண்மை மற்றும் பெறுமதியினைக் காட்டுகின்ற பொதுப் பதிவேட்டு நிலஅளவை முறைமையிலும் செல்வாக்குச் செலுத்துகின்ற தனியார் காணிக் கொடுக்கல்வாங்கல்களுக்கான சட்டப் பொறிமுறையின் உருவாக்கம் (H Divithure & C Tang, 2013).

***அரச ஆணைக்குழுக்கள்***

1927, 1957 மற்றும் 1987 ஆம் ஆண்டுகளின் மூன்று காணி ஆணைக்குழுக்களின் அறிக்கைகளில் இருந்து கண்டறியப்பட்டவைகள் எஸ்.எம்.த.சில்வாவினால் தொகுக்கப்பட்டுள்ளன. 1927 ஆம் ஆண்டின் ஆணைக்குழு நெல்விவசாயத்தைப் பாதுகாப்பதில் கவனம் குவித்தது என்றும் இதனால் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழான அனுமதிப்பத்திரங்கள் மற்றும் கொடைகளின் பயன்பாடு மற்றும் வேறாக்கம் தொடர்பாக இன்று காணப்படுகின்ற நிபந்தனைகள் உருவாகின என்றும் அவர் குறிப்பிடுகின்றார். இது 1840 ஆம் ஆண்டின் முடிக்குரிய காணி அத்துமீறல் கட்டளைச் சட்டம் போன்ற காலனித்துவ பிரித்தானியக் கொள்கைகளுக்கு அமைவானதாகும். இக்கட்டளைச் சட்டத்தின் படி சகல தரிசு நிலங்களும் காட்டுக் காணிகளும் மக்கள் வதியாத காணிகளும் பயிர்செய்யப்படாத காணிகளும் அரசுக்குச் சொந்தமானவை எனக் கருதப்படும். இச்சட்டத்தினால் நாட்டிலுள்ள காணிகளில் 82% மானவை அரச காணிகள் எனச் செயற்திறனுடன் நிலைநாட்டப்பட்டது. பராமரிப்பு அரசு ஒன்று தொழிலாளர்களுக்காகப் பாரிய நிலப்பரப்பினை முகாமைத்துவம் செய்வதனையும் (கட்டுப்படுத்துவதையும்) காணியினைக்

கூட்டுறவு நடுத்தர வகுப்பு மற்றும் உயர் வகுப்பு மக்களுக்கு நன்மையளிப்பதற்காகப் பயன்படுத்துவதனையும் தேவைப்படுத்துவதை நோக்கியதாக இக்கொள்கை காணப்பட்டது (Whaley Eager, 2008). காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் நிர்வாகத்தில் பிரச்சினைகள் இருப்பதனை 1957 ஆம் ஆண்டின் ஆணைக்குழு அடையாளம் கண்டது என்பதையும் எஸ். எம்.த.சில்வா குறிப்பிடுகின்றார். குடியேற்றத் திட்டங்களில் காணிகளை ஒதுக்குவதில் சொற்பமான கட்டுப்பாடுகளை ஏனைய விடயங்களின் மத்தியில் அது பரிந்துரைத்தது. மேலும் கட்டளைச் சட்டத்தின் கீழ் வேறாக்கப்பட்ட காணிகளின் உயர் விகிதாசாரம் திருப்திகரமான முறையில் உருவாக்கப்படவில்லை என்பதையும் உடைமையுரிமையின் அம்சங்கள் மற்றும் பயிர்ச்செய்கைக்குக் காணியின் பொருத்தமின்மை, வீதிகளின்மை மற்றும் சந்தைப்படுத்தல் வசதிகள் போன்ற ஏனைய காரணங்களையும் அது அதனுடன் தொடர்புபடுத்திக் கூறியிருந்தது. 1987 ஆம் ஆண்டின் காணி ஆணைக்குழு காணியில்லாமை பற்றிய பரந்த பிரச்சினைகளை அடையாளம் கண்டதாகவும் அரச காணிகளின் பாரிய அளவிலான அத்துமீறல்களை அடையாளம் கண்டதாகவும் காணிச் சந்தையின் அடக்குமுறைமிக்க தன்மையினை அடையாளம் கண்டாதகவும் கூறப்படுகின்றது. காணிக் கொள்கையானது பரந்த தேசிய அபிவிருத்தி உபாயமார்க்கத்தின் இன்றியமையாததும் அடிப்படையானதுமான ஆக்கக்கூறாக இருக்கவேண்டும் என 1987 ஆம் ஆண்டின் காணி ஆணைக்குழு முன்மொழிந்தது. “கொள்கையினை மட்டும் தனியே கையாளக் கூடாது அல்லது அது அரச காணிக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படக் கூடாது. மாறாக அது தேசிய மட்டத்தில் பரிபூரணமான மீளாய்வாக இருக்கவேண்டும்” என ஆணைக்குழு பரிந்துரைத்தது. 1987 அறிக்கையில் இருந்து காணி ஆணைக்குழு நடத்தப்படவில்லை.

*குடியேற்றத் திட்டங்களின் கொள்கை*

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் சிங்களவர்கள் குடியேற்றப்படுவது பற்றிய முறைப்பாடுகளைத் தமிழ் அரசியல்வாதிகள் சோல்பரி ஆணைக்குழுவிடம் முன்வைத்தனர். தமிழ் பெடரல் கட்சி குடியேற்றத்தினை ஒரு அரசியல் பிரச்சினையாக முன்வைத்தது. பிரிவினைவாதத் தளத்தில் போட்டியிட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி வரலாற்று ரீதியாகத் தமிழர் பிரதேசங்களாக இருந்துவரும் பிராந்தியங்களில் சிங்களவர்கள் குடியேறுவதனைத் தனித் தமிழீழத்திற்கான (வட்டுக்கோட்டைத் தீர்மானம், 14 மே 1976) ஒன்பது நியாயப்படுத்தல்களில் ஒன்றாகப் பட்டியலிட்டது. வேலைவாய்ப்பின்மையினைக் குறைப்பதன் மூலம் உலர் வலயக் குடியேற்றங்கள் இனப் பதற்றத்தினைத் குறைக்கும் என 1982 இல் துரித மஹாவலி அபிவிருத்தித் திட்டம் குறிப்பிட்டது. எவ்வாறாயினும் “உலர் வலயங்கள் செழுமையான பௌத்த வரலாற்றினைக் கொண்டவை. அங்கே தமிழ் இந்துப் படையெடுப்பாளர்களே வெறுக்கப்பட்ட பகைவர்கள்” என்று முன்னைய உலர் வலயக் குடியேற்றங்களில் ஐக்கிய தேசியக் கட்சியினால் கட்டமைக்கப்பட்ட பிம்பத்துடன் துரித மஹாவலி அபிவிருத்தித் திட்டம் பொருந்தியது (Peebles, 1990). வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழர் தாயகம் எனும் பிம்பத்துடன் தமிழ் தேசியக் குழுக்களினால் இது எதிர்க்கப்பட்டது. எனவே, காணிகள், குறிப்பாகத் தமது பாரம்பரியத் தாயகம் எனத் தமிழர்களும் சிங்களவர்களும் கருதுகின்ற உலர் வலயப் பிராந்தியம் நல்லிணக்கம் காண முடியாத இனத்துவத் தேசியவாதத்தின் ஒரு பிரச்சினையாகக் கட்டமைக்கப்பட்டது. உலர் வலயத்தின் குடியேற்றத் திட்டங்கள் காணிப் பாவனை மற்றும் சமத்துவமின்மை பற்றிய அரசாங்கக் கொள்கையின் பாதகமான விளைவுகள் சிலவற்றினைப் பிரதிபலிப்பதுடன் இலங்கையில் வன்முறைமிக்க மோதலின் எழுச்சியுடனும் தொடர்புபடுகின்றது. உலர் வலயத்திற்கான உள்நாட்டுப் புலப்பெயர்வு எவ்வாறு தென்மேற்கின் சிங்களப் பயிர்ச்செய்கையாளர்களுடனும் (குருணாகல் மற்றும் புத்தளத்திற்கு இடையில்) கிழக்கிலே மட்டக்களப்பு மற்றும் திருகோணமலைக்கு இடையில் உள்ள இந்து மற்றும் முஸ்லிம் நெல் விவசாயிகளுடனும் கலந்திருந்தது என 19 ஆம் நூற்றாண்டின் பதிவுகள் காட்டுகின்றன என பீபிள்ஸ் (1990) குறிப்பிடுகின்றார். உலர்வலய மீள்குடியேற்றங்கள் 20 ஆம்

நூற்றாண்டில் அதிகரித்து, வாக்குகளுக்காகச் சிங்கள அரசியல்வாதிகள் போட்டிபோடக்கூடிய முக்கியமான ஒரு விடயமாக மாறியது.

காணியற்ற சிறுபான்மைச் சமுதாயங்களை உருவாக்கிய கொள்கையும் நடைமுறையும் அரசாங்கத்தின் கொள்கைப் பத்திரங்களில் குறிப்பிடப்படாத ஆனால் காணி மற்றும் காணியின்மையுடன் தொடர்புடைய அரசாங்கத்தின் அல்லது அரசாங்க நிறுவனங்களின் எடுத்துக்காட்டக்கூடிய செயற்பாடுகளாக அல்லது செயற்படாமைகளாகக் 'கொள்கைகள்' எவ்வாறு இருந்துள்ளன என்பதற்குப் பல உதாரணங்கள் உள்ளன.

**மலையகத் தமிழர்கள்** காணிகளுக்கு உரிமையாளர்களாக இருப்பதனை எதிர்க்கும் கொள்கையினை 1920 ஆம் ஆண்டே தேசியவாதிகளின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் காணக்கூடியதாக இருந்தது (சமரவீர, "காணி, ஊழியம், மூலதனம் மற்றும் இலங்கையின் தேசிய அரசியலில் பிரிவுரீதியான நலன்கள்"). காணி உரித்தாண்மையில் இருந்து விலக்கிவைக்கப்பட்ட இந்த இனக்குழுமத்தினர் 1948 ஆம் ஆண்டு வாக்குரிமையில் இருந்தும் விலக்கிவைக்கப்பட்டனர். *"காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் இயற்றப்பட்டதுடன் காணிக் கொள்கையினைப் பொறுத்த அளவில் சகல நடைமுறை நோக்கங்களுக்காகவும் இந்தியத் தமிழர்கள் என்பவர்களின் இருப்பு முடிந்த ஒன்றாக ஆகிவிடுகின்றது"* எனவும் சமரவீர குறிப்பிடுகின்றார். 1989 இல் ஆரம்பித்து 2009 இல் முடிவடைந்த இந்தச் செயன்முறையினால் இலங்கையின் அனைத்து 'இந்திய வம்சாவழித் தமிழர்களுக்கும்' இறுதியில் பிரசாவுரிமை வழங்கப்பட்டது. எவ்வாறாயினும் காணி உரிமை என்பது தொடர்ந்தும் சர்ச்சைக்குரிய ஒரு விடயமாக இருந்து வருவதுடன் இச்சிறுபான்மை இனத்துவச் சமுதாயத்தினைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கும் அச்சமூகத்தின் வறுமையினைப் பேணுவதற்குமான ஒரு வழியாகவும் இருந்து வருகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளினால் **வடக்கில் இருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் மீள்குடியேற்றம்** பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது "1995 ஆம் ஆண்டு அரசாங்கத்தின் கொள்கைகளில் ஏற்பட்ட மாற்றத்தில் நாடு முழுவதும் உள்ள உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் பற்றிய கொள்கை தொடர்பான மாற்றமும் உள்ளடங்கியிருந்தது. இதனால் சிலர் முகாம்களில் இருந்து வெளியேறி நிரந்தரக் குடியேற்றங்களுக்குச் செல்வது இயலுமாக்கப்பட்டது. புத்தளத்தினைப் பொறுத்த அளவில் புதிதாகக் காணப்பட்ட விடயம் என்னவென்றால் காணிகளை வாங்கி அவற்றில் குடியேற்றங்களை அமைப்பதில் மக்கள் தங்களை ஒழுங்கமைப்பதில் வகித்த முனைப்பான வகிபாத்திரமாகும். அதேவேளை ஏனைய வீடமைப்புத் திட்டங்களின் கீழ் அரசாங்கம் காணிகளை வழங்கியது. ஆனால் புத்தளத்தினைப் பொறுத்த அளவில் மக்களே காணிகளை வாங்கவேண்டியிருந்தது. ஏனெனில் வடக்கில் இருந்து முஸ்லிம்கள் நிரந்தரமாக வெளியேற அரசாங்கம் ஆதரவு வழங்கவில்லை. அதிகமான மக்கள் மிகச் சிறிய காணித்துண்டுகளையே, அதாவது 10 பேர்ச்கள் (250 சதுர மீற்றர்கள்), வாங்கினர். இக்காணித் துண்டுகளின் அளவின் காரணமாக இம்மக்களினால் பயிர்ச்செய்கை எதனையும் மேற்கொள்ள முடியவில்லை. மேலும் தமது பிள்ளைகளுக்கு விட்டுச்செல்ல இம்மக்களிடம் காணிகளும் இருக்கவில்லை. இக்காரணங்கள் இத்திட்டத்தின் நீடுறுதித்தன்மையினைக் குறைத்தன." (*Brun and Lund,* "இலங்கையில் தேசிய வீடமைப்புக் கொள்கை பற்றிய கதையின் விளக்கம்")

இதேபோன்று, சுனாமி வீடமைப்புத் திட்டத்திலும் சமமாக நடத்தப்படல் மற்றும் சிறுபான்மையினரின் நலன்களைப் பாதுகாத்தல் ஆகிய விடயங்களை உறுதிப்படுத்துவதில் அரசாங்கம் தவறியிருந்தது. **சுனாமி வீடமைப்புப்** பிரச்சினையின் மதிப்பீட்டின்படி இந்த வீடமைப்பானது சில சந்தர்ப்பங்களில் காணி ஒதுக்கீட்டுடன் பிணைக்கப்பட்டிருந்தது, குறிப்பாக பாதுகாப்புப் பிரதேசங்கள் எனக்

குறிப்பிடப்பட்ட இடங்களில் இருந்து வேறு இடங்களுக்குச் செல்ல விரும்பியவர்களுடன் தொடர்புற்றிருந்தது என்கின்ற காரணத்தினால் அரசாங்கத்தின் செயற்பாடின்மை இதில் எடுத்துக்காட்டப்பட்டது. "சுனாமியின் பின்னர், வீடமைப்பு நடைமுறைகளில் பலவும் ... மோதலினால் பாதிக்கப்பட்ட மற்றும் விளிம்புநிலையாக்கப்பட்ட பிரதேசங்களின் மீள்நிர்மாணத்தில் அரசாங்கம் எவ்வளவு பலவீனமாக இருந்தது அல்லது ஆர்வமற்று இருந்தது என்பதை தெளிவாக எடுத்துக்காட்டின. இலங்கை அரசாங்கம் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களுடன் சேர்ந்து தெற்கினை மீளக்கட்டியெழுப்புவதில் அதன் முயற்சியினையும் தொழில்வாண்மை ஆற்றலையும் திடப்படுத்திய அதேவேளை சுனாமியினால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட மற்றும் தனிமையாக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கின் பிராந்தியங்களை எண்ணற்ற கொடையாளர் நிறுவனங்களிடமும் அல்லது தமிழ் அல்லது முஸ்லிம் மக்கள் செறிந்த உள்ளூராட்சி அதிகாரசபைகளிடமும் விட்டிருந்தது. இச்சூழ்நிலையினால் வீடமைப்புக் கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்களிலும் அவற்றின் அமுல்படுத்தலிலும் தொழில்முறையான, இனத்துவ ரீதியான மற்றும் கலாசார ரீதியான பக்கச்சார்புகள் உருவாக்கப்பட்டன." (Brun and Lund, "இலங்கையில் தேசிய வீடமைப்புக் கொள்கை பற்றிய கதையின் விளக்கம்")

*அபிவிருத்திக் கொள்கைகள்*

யுத்தத்திற்குப் பின்னர் அபிவிருத்தி தொடர்பான அரசாங்கத்தின் கொள்கைகள் துரிதமாக்கப்பட்டன. இந்த நிகழ்ச்சிநிரலில் காணி என்பது ஒரு முக்கியமான கரிசனையாக மாறியது. 2011 – 2030 இற்கான தேசிய பௌதிகத் திட்டத்தில் மேற்கு, வடக்கு, வடகிழக்கு, கிழக்கு மற்றும் தென் பிராந்தியங்களில் மெட்ரோ நகரங்களை அபிவிருத்தி செய்வதில் கவனம் குவிக்கப்பட்டது. கொழும்பில் நடைபெற்றுவரும் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் நகரத்து வறியமக்கள் இடம்பெயரக் காரணமாகியதுடன் இவர்கள் பல நியாயமற்ற மற்றும் நீதியற்ற நடைமுறைகளுக்கு முகங்கொடுப்பதற்கும் காரணமாகியது. ஏனைய மெட்ரோ பிராந்தியங்களுக்கான இதேபோன்ற திட்டங்கள் கலந்தாலோசிப்பின்மை பற்றிய கரிசனைகளையும் நியாயமற்ற நடைமுறைகள் பற்றிய கரிசனைகளையும் இடப்பெயர்வு மற்றும் அதிகரித்த சமத்துவமின்மை மற்றும் வறுமை பற்றிய கரிசனைகளை உருவாக்கியுள்ளது.

*தேசியக் கொள்கையின்மை*

இலங்கைக்கான தேசிய காணிக் கொள்கையினைப் பொறுத்த அளவில் அவ்வாறான ஒரு கொள்கையினை உருவாக்குவதற்கான பல முயற்சிகள் தோல்வியுற்றிருக்கின்றன. 1979 ஆம் ஆண்டில் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் காணிப் பாவனைக் கொள்கைத் திட்டமிடல் பிரிவு உருவாக்கப்பட்டது. ஆனால் குறிப்பிடத்தக்க எந்த முன்னேற்றமும் எட்டப்படவில்லை.[21] 1990 ஆம் ஆண்டில் காணி விநியோகம் மற்றும் பயன்பாடு பற்றிய ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. மேலும் 1995 ஆம் ஆண்டில் காணி மற்றும் விவசாயம் பற்றிய கொள்கைச் சட்டகத்தினை உருவாக்குவதற்காக நிபுணர் குழாம் ஒன்று நியமிக்கப்பட்டது. தேசிய காணிப் பாவனைக் கொள்கை மற்றும் தேசிய காணிக் கொள்கை ஆகியவற்றின் வரைபுகள் வரையப்பட்டபோதிலும் இற்றைவரையில் தேசிய கொள்கைகள் எவையுமே அமுலில் இல்லாமல் இருக்கின்றன. எவ்வாறாயினும் 2000 ஆம் ஆண்டு அமைச்சரவை அங்கீகரித்த தேசிய தன்னார்வமற்ற மீள்குடியேற்றக் கொள்கை ஒன்று உள்ளது. அரச மற்றும் தனியார் துறை அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காக காணி கொள்ளப்பட்டமையினால் பாதிக்கப்பட்டவர்களின்

---

21. சுனாமிக்குப் பின்னரான இலங்கையில் காணியற்ற நிலையும் காணி உரிமைகளும் (கொழும்பு: மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் 2005).

மீள்குடியேற்றத்தினைத் திட்டமிட்டு அமுல்படுத்துவதற்கான சட்டகத்தினை இக்கொள்கை வழங்குகின்றது. காணி பற்றிய கொள்கைகளை உருவாக்குவதற்கான பொறுப்பு தேசிய காணி ஆணைக்குழுவினைச் சார்ந்ததாகும் என்பதுடன் இந்த ஆணைக்குழு மாகாண சபைப் பிரதிநிதித்துவத்தினைக் கொண்டுள்ளது. எவ்வாறாயினும், தேசிய காணி ஆணைக்குழு கூட்டப்படவில்லை என்பதுடன் இந்த வெற்றிடத்தினால் மத்திய அரசாங்கம் அதன் சொந்தப் பெரும்பான்மைவாத நலன்களினால் ஊக்கம்பெற்ற கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் தீர்மானித்து அமுல்படுத்துவது நிகழ்ந்துவருகின்றது.

**காணிச் சட்டங்கள்**

அரசியலமைப்பிற்கான பதின்மூன்றாவது திருத்தம் காணி அதிகாரங்கள் பற்றியதாகும். காணி எனும் விடயப் பரப்பின் அர்த்தம் என்னவென்றால், 'காணியில் உள்ள உரிமை அல்லது காணியின் மீதான உரிமை, காணி உடைமையுரிமை, காணி மாற்றம் மற்றும் காணி வேறாக்கம், காணிப் பாவனை, காணிக் குடியேற்றம் மற்றும் காணியினை மேம்படுத்தல் ஆகியவற்றிற்கான அதிகாரங்கள் மாகாண சபைகளுக்குப் பரவலாக்கப்பட்டுள்ளன என்பதாகும். இக்காணி அதிகாரங்கள் இரண்டு வரையறைகளைக் கொண்டுள்ளன: 1) சம்பந்தப்பட்ட மாகாண சபைகளின் ஆலோசனையின் பேரில் சகல அரச காணிகளையும் வேறாக்குவதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கே உண்டு 2) ஒன்றிற்கு மேற்பட்ட மாகாணங்களினூடு பாயும் ஆறுகள் அல்லது மாகாணங்களுக்கிடையிலான நீர்ப்பாசனம் மற்றும் காணி அபிவிருத்தித் திட்டங்கள் சம்பந்தப்படும் நீர்ப்பாசனத் திட்டங்கள் தொடர்பில் மாகாணத்திலுள்ள காணிகளை அரசாங்கம் பயன்படுத்தலாம். அரச காணிகள் தொடர்பில் மாகாண சபைகளின் காணி அதிகாரங்களின் வரையறைகள் ஒரு முக்கியமான வரையறையாகும். ஏனெனில் காணிகளில் 82% மானவை அரசுக்குச் சொந்தமானவையாகும்.

காணியினைக் கொள்வதற்கான மற்றும் காணிக்காக வேண்டுகோள் விடுப்பதற்கான அதிகாரம் அரசியலமைப்பின் ஒத்திசைவுப் பட்டியலில் காணப்படுகின்றது. எனவே மத்திய அரசாங்கத்தினாலும் மாகாண அரசாங்கங்களினாலும் இந்த அதிகாரங்களைப் பயன்படுத்த முடியும். மத்திய அரசாங்கத்திற்கு இந்த அதிகாரங்களை இயலுமாக்குகின்ற பல சட்டங்கள் காணப்படுகின்றன - காணி கொள்ளல் சட்டம், அரச காணிகள் (உடைமையினை மீளப் பெறல்) சட்டம், காணிக்கான வேண்டுகோள் சட்டம் மற்றும் காணிப் புதுப்பிப்புக் கட்டளைச் சட்டம். எவ்வாறாயினும் மாகாண சபைகள் நடைமுறையில் இந்த அதிகாரத்தினைப் பயன்படுத்துவதாகத் தெரியவில்லை.

காணி நிர்வாகத்திற்கான அத்திவாரத்தினை சட்டச் சட்டகங்கள் உருவாக்குகின்றன. மாகாண சபைக் காணி அதிகாரங்களின் மீது மத்திய அரசாங்கம் நேரடியான மற்றும் மறைமுகமான கட்டுப்பாட்டினைக் கொண்டிருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. காணி அபிவிருத்தித் திட்டங்கள் மத்திய அரசாங்கத்தின் விடயப் பரப்பாக இருப்பதுடன் இவை காணி ஆணையாளரினால் நிர்வகிக்கப்படுகின்றன. அரச காணிகள் தொடர்பாக அதிகாரங்களைப் பயன்படுத்துவதற்கு 1992 ஆம் ஆண்டில் பிரதேச செயலாளர்கள் வலுவூட்டப்பட்டனர்.[22] இதன் விளைவாக, அரச காணிகள் எனும் விடயப் பரப்பு காணி ஆணையாளர் நாயகத்தினதும் பிரதேச செயலாளர்களினதும் ஆளுகையினுள்ளும் (இரு தரப்பினரும் மத்திய அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப்படுகின்றனர்), மாகாணக் காணி ஆணையாளரின் ஆளுகையினுள்ளும் வருகின்றன (ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் மாகாண ஆளுநரினால் நியமிக்கப்படுகின்றார்).

22. 1992 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க அதிகாரங்களை மாற்றல் சட்டம் (பிரதேச செயலகங்கள்)

அரசியலமைப்பு ரீதியான சட்டச் சட்டகத்தின் அரசியல் சிக்கல்கள் பற்றிக் கருத்துக் கூறும் பஸ்தியன் (1997 மற்றும் 2013) மோதலுக்கு இட்டுச் சென்ற இனப்பதற்றங்களுக்கும் குறிப்பாகக் கிழக்கு மாகாணத்தில் இனத்துவ ஆக்கக்கூறினை மாற்றிய குடியேற்றத் திட்டங்களுக்கும் காணி அதிகாரங்களுக்கும் இடையில் ஒரு தொடர்பினைக் காட்டுகின்றார். பரவலாக்கப்பட்ட காணி அதிகாரங்களில் மத்திய அரசாங்கம் தலையிட்டமை மற்றும் அரச காணி விநியோகத்தின் மூலம் விவசாய ஊழியத்தினைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்ட சட்டங்கள் மற்றும் கொள்கைகளின் பயன்பாடு ஆகியவை இனத்துவ ரீதியில் மோதல்களுக்கு இட்டுச் சென்றன என்ற கருத்து முன்வைக்கப்படுகின்றது.

இலங்கையில் செயற்பாட்டில் உள்ள 39 இற்கும் மேற்பட்ட சட்டங்களினால் காணிகள் நிர்வகிக்கப்பட்டு முகாமைத்துவம் செய்யப்படுகின்றன. (Mapa et al., "இலங்கையில் காணிப் பாவனை.") காணிப் பிணக்குகளின் மீது அதிக தாக்கத்தினை ஏற்படுத்திய இரண்டு பிரதான சட்டங்கள் பற்றிய சுருக்கமான கருத்து கீழே விபரிக்கப்பட்டுள்ளது:

1927 ஆம் ஆண்டின் காணி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்காக 1935 ஆம் ஆண்டின் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் வடிவமைக்கப்பட்டது. 1947 ஆம் ஆண்டின் முடிக்குரிய காணிகள் கட்டளைச் சட்டத்துடன் சேர்த்து இக்கட்டளைச் சட்டம் அரச காணிகள் வேறாக்கல் மற்றும் குடியேற்றத் திட்டங்களின் பிரதான சட்ட ஏற்பாடுகளில் ஒன்றாகத் தொடர்ந்து காணப்படுவதுடன் தனிப்பட்ட பாவனைக்காக அரச காணிகள் என்ன விதிகளின் கீழ் மீள்விநியோகிக்கப்படக்கூடியவையாக உள்ளனவோ அவற்றினை வரைவிலக்கணம் செய்கின்றன (Lindberg & Herath, 2014). உலர்வலயத்தில் மிகவும் மறுமலர்ச்சிமிக்க குடியேற்றங்களை உருவாக்கி ஈரவலயங்களில் வறுமையினையும் தொழில்வாய்ப்பின்மையினையும் அகற்றுவதற்காக குடியேற்றத் திட்டங்களுக்கான பொறிமுறைகளையும் 1935 ஆம் ஆண்டின் கட்டளைச் சட்டம் உருவாக்கியது (Peebles, 1990). 1935 ஆம் ஆண்டின் கட்டளைச் சட்டமும் 1947 ஆம் ஆண்டின் கட்டளைச் சட்டமும் காணி அனுமதிப் பத்திரங்களின் விநியோகத்தினைத் தீர்மானித்தன. இந்த அனுமதிப் பத்திரங்கள் பொதுவாகத் தற்காலிக அனுமதிப் பத்திரங்களாகக் காணப்பட்டதுடன் பின்னைய காலப்பகுதியில் நிரந்தர உரித்தாண்மை வழங்கப்படும் எனும் ஊகம் காணப்பட்டது - இருப்பினும் காணியில் உள்ள எக்கட்டிடங்களையும் மாற்றுவதில் இருந்தும் அல்லது இந்த அனுமதிப் பத்திரங்களின் பேரில் அவற்றினை விற்பனை செய்வதில் இருந்தும் விவசாயிகள் தடைசெய்யப்பட்டனர். நடைமுறையில் விவசாயிகளின் காணிப் பயன்பாடு அதீதமாகக் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. காணிப் பாவனை மீதான கட்டுப்பாடுகள் பல பிரச்சினைகளை உருவாக்கின. காணிக் கொள்வனவுகளுக்கான கறுப்புச் சந்தைகளின் வளர்ச்சி இதில் உள்ளடங்குகின்றது (Lindberg & Herath, 2014).

1950 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்கக் காணி கொள்ளல் சட்டம் அடையாளம் காணப்பட்ட பொது நோக்கத்திற்காக அரச காணிகள் எவ்வாறு அரசாங்கத்தினால் எடுக்கப்படலாம் என்பதைக் கூறுகின்றது. "காணி கொள்ளல் சட்டத்தில் காணப்படுவது போன்ற நிலைநாட்டப்பட்ட சட்டச் செயன்முறைகளுக்கு அமைவாகவே பொது நோக்கங்களுக்காகத் தேவைப்படும் காணி கொள்ளப்படவேண்டும்" என பொன்சேகாவும் அப்துல் ரஹீமும் எழுதுகின்றனர். "இருப்பினும், நடைமுறையில் திட்டமிடப்படாத முறையிலேயே செயன்முறைகள் பின்பற்றப்படுகின்றன. இதனால் தமது காணிகள் கொள்ளப்பட்டுள்ளனவா மேலும் என்ன நோக்கத்திற்காகக் கொள்ளப்பட்டுள்ளது என்பதை உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் அறியாமலுள்ளனர். அதிகமான சம்பவங்களில், கொள்ளப்பட்ட காணிகளுக்கான நட்டயீடு வழங்கப்படுவதில்லை அல்லது அவ்வாறு வழங்கப்பட்டாலும் அவை மிகக் குறைவான அளவிலேயே வழங்கப்படுகின்றன" (பொன்சேகா மற்றும் அப்துல் ரஹீம், 2011). காணிப் பாவனை மற்றும் உரித்தாண்மை தொடர்பாக

தனிநபர்களுக்கு என்ன வாக்குறுதி வழங்கப்பட்டுள்ளது (அரசியல்வாதிகளினால்) என்பதற்கும் உண்மையான காணிப் பாவனைச் சட்டங்கள், அனுமதிப்பத்திரங்கள் மற்றும் கொள்கைகளுக்கும் இடையிலான புரிதலில் இடைவெளி காணப்படுவதாகவும் இவை அனைத்தினாலும் மேலதிக முரண்பாடுகள் ஏற்படலாம் என்றும் அவர்கள் மேலும் குறிப்பிடுகின்றனர்.

சுதந்திரச் சந்தைப் பொருளாதாரத்திற்குக் காணியினைத் திறப்பதை நோக்கிய நகர்வினையே மிக அண்மைய சட்டங்களும் உத்தேச சட்டங்களும் எடுத்துக்காட்டுகின்றன. 2017 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்கக் காணிச் சட்டம் (வேறாக்கல் மீதான கட்டுப்பாடுகள்) (திருத்தம்) வெளிநாட்டவர்களுக்கும் வெளிநாட்டுக் கம்பனிகளுக்கும் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள காணிகள் மீதான காணிக் குத்தகை வரிகள் மீதான கட்டுப்பாடுகளை அகற்றியுள்ளது. அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காகக் காணிகளை விடுவிப்பதனை வசதிப்படுத்துவதற்காக 1935 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கக் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தினைத் திருத்துவதற்கு அமைச்சரவை 2017 நவம்பர் 14 ஆம் திகதி இணக்கம் தெரிவித்தது. நெற்காணிகளை விவசாயம் சாராத நோக்கங்களுக்காகப் பயன்படுத்த அனுமதிப்பதற்காக 1958 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நெற்காணிகள் சட்டத்தினையும் 1973 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க விவசாயக் காணிகள் சட்டத்தினையும் திருத்துவதற்கான திட்டங்களை 2018 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் வரவுசெலவுத் திட்டம் வெளிக்காட்டியது (சமிகார, S). வெளிநாட்டவர்களுக்கும் வெளிநாட்டுக் கம்பனிகளுக்கும் காணிகளை விற்பனை செய்வதை அனுமதிக்கும் முயற்சியாக காணிச் சட்டத்திற்கு (வேறாக்கல் பற்றிய கட்டுப்பாடுகள்) மற்றுமொரு திருத்தம் முன்மொழியப்பட்டது. அரச காணிகளை விநியோகிப்பதற்கான அதிகாரத்தினைக் கொண்ட காணி வங்கி ஒன்றினை நிறுவுவதற்கு சட்டவாக்கம் ஒன்று வரையப்படவேண்டும் எனப் பொருளாதார முகாமைத்துவம் பற்றிய அமைச்சரவைக் குழு 2016 ஆம் ஆண்டு முன்மொழிந்தது. அரச காணிகளை வேறாக்கும்போது பல்வேறு அரச நிறுவனங்களைக் கையாளுவதில் சம்பந்தப்படும் சிக்கற்தன்மையினை இது நீக்கும் என்ற நியாயப்படுத்தல் இந்த முன்மொழிவுக்கு வழங்கப்பட்டிருந்தது.

**யுத்தத்திற்குப் பின்னரான இலங்கை**

Unruh மற்றும் வில்லியம்ஸ் (2013) குறிப்பிடுவது போல், ஆயுத மோதலின் முடிவு பொதுவாக வேறு ஒரு வகையான முரண்பாட்டிற்கு இட்டுச்செல்கின்றது: பாதிக்கப்பட்ட மக்கள் துரிதமாக காணி அல்லது காணியினை மையப்படுத்திய வளங்களை நாடத் தொடங்குவர். உலகம் முழுவதிலும் சண்டைகள் முடிவடைந்த உடனேயே இது நடைபெறுவதற்கான எண்ணற்ற உதாரணங்கள் உள்ளன. சமாதான உடன்படிக்கைகளின் போது காணப்படும் நிச்சயமற்ற நிபந்தனைகள் அல்லது காணி உரித்தாண்மை தொடர்பான கோரிக்கைகள் பற்றித் தொடர்ந்து காணப்படும் பாதுகாப்பின்மை ஆகியவை எவ்வாறு சிவில் மோதலைப் புதுப்பிக்கலாம் அல்லது புதிய மோதலைத் தொடக்கலாம் என்பதற்கான சமாந்தரமான உதாரணங்களாக இவை காணப்படுகின்றன.

ராஜபக்ச ஆட்சியின்போது இடம்பெற்ற யுத்தத்திற்குப் பின்னரான புனர்நிர்மாணப் பணிகள் அரசாங்கத்திற்குப் பல்வேறு நன்மைகளை பதிலாக வழங்கும் வாய்ப்புக்களுடனேயே இடம்பெற்றன (Goodhand, 2012). மிகப்பெரும்பான்மையாகத் தமிழர்கள் வாழும் பிரதேசங்கள் மீது அரசாங்கம் அதன் கட்டுப்பாட்டினைத் திடப்படுத்தி அதன் மூலம் தமிழ்ப் போராளிகள் இராணுவ ரீதியாக எழுச்சி பெறுவதை அடக்குவதற்கு (வாதிட்டவாறு) இது அனுமதித்தது.

காணியினை மீள வழங்கல் உள்ளிட்ட நட்டயீடு வழங்கும் செயற்பாடுகள் நீண்டகாலத்தில் சமாதானத்தினை உருவாக்கும் முயற்சிகளுக்குச் சாதகமான முறையில் பங்களிப்பு வழங்கலாம் என்றும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சமுதாயங்கள் மேலும் மேலும் விளிம்புநிலைக்குத்

தள்ளப்படுவதைத் தவிர்க்கலாம் என்றும் பொன்சேகாவும் அப்துல் ரஹீமும் கருத்துத் தெரிவிக்கின்றனர். துரதிர்ஸ்டவசமாக இது இலங்கையில் நடப்பதில்லை. மூன்று தசாப்த கால யுத்தத்தின்போதும் அதற்குப் பின்னரும் தேசிய மற்றும் உள்ளூர் அரசியல் நிகழ்ச்சிநிரலில் காணி என்பது மிக முக்கியமான வகிபாத்திரத்தினை வகித்துள்ளது. காணி மீளளிப்பு மூலம் வரலாற்று ரீதியான துயரங்களுக்குச் சமாதானமான சகவாழ்வு, நல்லிணக்கம் மற்றும் நீடுறுதியான தீர்வுகளை வசதிப்படுத்துவதற்கான தேவையினை எண்ணற்ற ஆணைக்குழுக்கள் மற்றும் சிவில் சமூகக் குழுக்கள் கோடிட்டுக் காட்டியுள்ளன. இருப்பினும் இடப்பெயர்வு என்பது மோதலின் குறிப்பிட்ட தொனிப்பொருளாக இருந்துள்ளது. வடக்கு கிழக்கில் எண்ணற்ற இடங்களிலும் உயர் பாதுகாப்பு வலயங்களிலும் ஏனைய சுதந்திர வர்த்தக வலயங்களிலும் அல்லது சுற்றுலா அபிவிருத்தி வலயங்களிலும் யுத்தம் நடைபெற்றதன் காரணமாக தமது வாழ்வாதாரங்களுக்காகத் தாம் சார்ந்திருந்த வீடுகளில் இருந்தும் காணிகளில் இருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். திரும்பி வருவதற்கான மற்றும் இழப்புக்களுக்காக நட்டஈடு வழங்குவதற்கான வாய்ப்புக்கள் நேரடியற்றவையாகவே இருந்து வருகின்றன.

மாறுபடுகின்ற சமூக பொருளாதார மற்றும் கலாசார சூழமைவுகளில் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களின் திரும்பல் மற்றும் மீள்குடியேற்றம் பற்றி சாரா பண்டுலியானோ எழுதுகின்றார். இது கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது: "காணிப் பிரச்சினைகள் பொதுவாக மோதலுக்குப் பின்னரான காலப்பகுதியிலேயே உருவாகுகின்றன. ஏனெனில் இக்காலப்பகுதியில் மக்கள் காணிகளை கோரவும் மீண்டும் கோரவும் நாடுகின்றனர். மோதலுக்குப் பின்னரான சூழலில் கூட, அகதிகள் வீடு திரும்புவது எளிமையான செயன்முறையாக இல்லை. இது ஒரு சிக்கலான செயன்முறையாகும் என்பதுடன் ஒவ்வொரு சூழ்நிலையும் வித்தியாசமானது. மோதல் என்பது உயர் நிலைமாற்றமிக்க செயன்முறையாகும் என்பதுடன் யுத்தத்திற்கு முன்னர் நிலவிய நிலைமையினை, விரும்பினால் கூட, முற்றுமுழுவதுமாக ஒருபோதும் நிலைநாட்ட முடியாது". (பண்டுலியானோ, 2009).

2015 ஒக்டோபரிலே யுஎன்எச்சிஆரினாலும் இலங்கை அரசாங்கத்தினாலும் இணை அனுசரனை வழங்கப்பட்ட ஐக்கிய நாடுகள் பிரகடனம் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்கு நீடுறுதியான தீர்வுகளுக்கான தேவையினைக் குறிப்பாகத் தீர்ப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது. இதில் நல்லிணக்கம், வகைப்பொறுப்பு மற்றும் மனித உரிமைகள் ஆகியவற்றினை மேம்படுத்தும் வெளிப்படையான நோக்கம் இருந்தது. இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள உயர் பாதுகாப்பு வலயத்தினால் சுமார் 12500 ஏக்கர்கள் காணி வடமாகாணத்தில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன - ஆனால் இடப்பெயர்வு என்பது சில குழுவினரைப் பொறுத்த அளவில் பல தசாப்தங்களாக இடம்பெறுவதாக அமைந்துள்ளது. இது சமுதாய அடையாளம், உதவி முறைமைகள் மற்றும் குடும்பக் கட்டமைப்புக்கள் ஆகியவற்றின் மீதும் குறிப்பாகப் பெண்களைத் தலைமையாகக் கொண்ட குடும்பங்களை அதிகமாகக் கொண்ட சமுதாயங்களில் பால்நிலை வகிபாத்திரங்களின் மீதும் நீண்டகால விளைவுகளை ஏற்படுத்துகின்றது.

**காணி மற்றும் நட்டயீட்டிற்கான உரிமை**

"ஒவ்வொரு பிரசையும் இலங்கையினுள் நடமாட்ட சுதந்திரத்திற்கான உரித்தினையும் தனது வதிவிடத்தினைத் தெரிவுசெய்வதற்கான உரித்தினையும் இலங்கைக்குத் திரும்பிவருவதற்கான உரித்தினையும் கொண்டுள்ளார்" என இலங்கையின் அரசியலமைப்பின் உறுப்புரை 14 எடுத்தியம்புகின்றது. இடம்பெயர்ந்த நபர்கள் அவர்கள் இழந்த வாழ்வாதாரங்களை மீண்டும் நிலைநாட்டிக்கொள்ளும் வாய்ப்பினையும் இறுதியில் அவர்களின் வாழ்வுக்கான வாய்ப்பினையும் வழங்குவதன் மூலம் அவர்கள் வறுமையில் இருந்து தப்புவதற்கான ஒரு வழியாகவே உரித்தாண்மை

நோக்கப்படுகின்றது. அனைவரையும் போல அதே உரிமைகள் மற்றும் உரித்துக்களுடன் சட்டத்தின் முன்னர் சமமான பிரசைகளாகத் தாம் அங்கீகரிக்கப்பட்டதாக மக்கள் உணர்ந்தால் அதுவே அவர்கள் அரசு மீது புதுநம்பிக்கையினை வைக்க வழிவகுக்கலாம். எவ்வாறாயினும் இவ்வாறான நடைமுறை ரீதியான மற்றும் அரசியல் ரீதியான கரிசனைகளைத் தாண்டி காணி என்பது பாரிய பெறுமதியினைக் கொண்டுள்ளது: ஒருவரின் அடையாளம் மற்றும் சொத்துக்கள் பற்றிய உணர்வுகளில் இது முக்கியமான வகிபாத்திரத்தினை வகிக்கின்றது. காணியுடனான பல தொடர்புகள் ஒருவரின் சமுதாயத்துடனான தொடர்புகளுடன் இடைமாற்றத்தக்கதாக இருக்கின்றன. இத்தொடர்புகளை எண்ணிக்கை கொண்டு அளந்துவிட முடியாது (Brun, 2003). இவ்வாறான சமூக உறவுகளும் உதவி வலையமைப்புக்களும் சீர்குலைவதற்கு இடப்பெயர்வு காரணமாக அமைகின்றது என்பதுடன் இப்பிரச்சினை நல்லிணக்கத்தின் ஒவ்வொரு மட்டத்திலும் நிறுவன ரீதியான மறுசீரமைப்பிலும் தீர்க்கப்படவேண்டும்.

காணிகளை மீள வழங்குதல், குறிப்பாக நட்டஈடு செலுத்துவதன் முக்கியமான பாகமாகும். நட்டஈட்டிற்கான உரிமைகளின் வெளிப்பாட்டில் இது குறிப்பிடப்பட்டுப் பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது: “சுதந்திரம், சட்ட உரிமைகள், சமூக அந்தஸ்து, குடும்ப வாழ்க்கை, மற்றும் பிரசாவுரிமை ஆகியவற்றினை மீண்டும் வழங்கல் ஒருவர் தன்னுடைய வாழ்விடத்திற்கு மீண்டும் திரும்புதல் மற்றும் தொழில்வாய்ப்பினை மீண்டும் வழங்கல் மேலும் சொத்துக்களைத் திரும்ப ஒப்படைத்தல்” (CPA அறிக்கை, வடமாகாணத்தில் காணி, 2016). எவ்வாறாயினும் நீண்டகாலச் சமாதான உருவாக்கம் மற்றும் நல்லிணக்க முயற்சிகளில் காணிப் பாவனையும் உரிமைகளும் முக்கியமான வகிபாத்திரத்தினைக் கொண்டுள்ளன என்பது முக்கியமானதாகும். இடம்பெயர்ந்த நபர்களுக்காக நீடுறுதியான தீர்வுகளை உருவாக்குவது எந்தவொரு நம்பத்தகுந்த நல்லிணக்கக் கொள்கையினதும் பாகமாக நிறைவேற்றப்படவேண்டும்.

மீளளிப்பு என்பது யுத்தத்திற்குப் பின்னர் மிகவும் இன்றியமையாததாகும். ஏனெனில் அது வன்முறையின் அனுபவத்தினை ஏற்றுக்கொள்வதுடன் பாதிக்கப்பட்ட தனிநபர்களின் அல்லது தனிநபர் குழுமங்களின் உரிமைகளை மீளளிக்கின்றது. இந்த உரிமைகள் நடமாட்ட சுதந்திரம், சுயநிர்ணயத்திற்கான உரிமை (தனிப்பட்ட மற்றும் கூட்டு), சொத்திற்கான உரிமை, போதிய வாழக்கைத் தரத்திற்கான உரிமை மற்றும் வேலை செய்வதற்கான உரிமை ஆகியவற்றினை உள்ளடக்குகின்றது.

யுத்தத்திற்குப் பின்னரான வலயங்களில் இடப்பெயர்ச்சியும் உடைமையிழப்புக்களும் அதிகமான பெண்களைப் பாதிக்கின்ற அதேவேளை காணி அணுகல் அல்லது உரித்தாண்மைப் பாதுகாப்பின்மை தொடர்பான பிரச்சினைகள் புலப்படத்தக்க கூறுகளாகக் காணப்படுவதுடன் இவை நீடுறுதியான சமாதானத்திற்கான பரந்த வாய்ப்புக்களை எடுத்து விளக்கலாம். சமாதான உருவாக்கத்தில் காணிக்கான அணுகல் எவ்வாறு பாரதூரமான பின்விளைவுகளைக் கொண்டிருக்கலாம் என்பது பற்றி Unruh மற்றும் வில்லியம்ஸ் ஆகியோர் குறிப்பிடுகின்றனர்: மிக மோசமான நிலையில், காணி தொடர்பான பதற்றங்களைத் தீர்ப்பதற்குத் தவறுகின்றமை கீழறுக்கச் செய்யும் குறைபாடுகளை உருவாக்கலாம் அல்லது அவற்றினைத் தொடர்ந்து நிலைக்கச் செய்யலாம். எவ்வாறாயினும் காணிப் பிரச்சினைகளுக்கான வெற்றிகரமான அணுகுமுறைகள் நீடுறுதியான சமாதானத்தினை நோக்கிய முன்னேற்றத்தினைத் திடப்படுத்தலாம் என்பதுடன் நீண்ட காலத்தில் சமாதானத்தினை நிலைபெறச் செய்வதற்கும் உதவலாம் (2013:1).

**காணி மற்றும் பால்நிலை**

காணிப் பிரச்சினைகள் பால்நிலை உறவுகளில் கணிசமான பாதிப்பினை ஏற்படுத்தலாம். குறிப்பாக, யுத்தத்திற்குப் பின்னரான பிரதேசங்களில் வாழும் பாதிப்புறு நிலையிலுள்ள பெண்களை ஆணாதிக்கச் சம்பிரதாயங்கள் வேறாக்குவதால் அல்லது இடம்பெயர்ப்பதால் நிதிப் பாதுகாப்புச் சீர்குலைந்து, குடும்பங்கள் சீர்குலைந்து, தற்கொலைகளும் இடம்பெறுகின்றன. இப்பிரச்சினைகளின் மையமான காணி மற்றும் பால்நிலைப் பிரச்சினைகளில் அதிகமானவை அதிகாரத்துடன் தொடர்புடையவையாகக் காணப்படுகின்றன: ஆளுகைப் பிரச்சினைகளிலும் சட்ட மறுசீராக்கல் பிரச்சினைகளிலும் பெண்களுக்குத் தீர்மானம் வகுக்கும் அதிகாரம் இல்லாமையும் சமாதான உருவாக்கச் செயன்முறைகளில் பங்குபற்றுவதற்கு அதிகாரம் இல்லாமையும் புனர்நிர்மான மற்றும் புனர்வாழ்வு முயற்சிகளில் பாதிப்பினை ஏற்படுத்துகின்றன.

காணிப் பிரச்சினைகள் தொடர்பான அதிகாரங்கள் ஓரிடத்தில் செறிந்திருப்பது இலங்கை அரசியலில் நீண்ட காலமாக ஒரு பாதகமான விடயமாகக் காணப்படுகின்றது. வடமாகாணத்தில் காணிப் பாவனை தொடர்பான சவால்களை நோக்குகையில் “முக்கியமான அரசாங்கச் செயற்பாடுகளில் பெரும்பாலானவற்றிலும் பிரசைகளின் காணி உரிமைகள் மீது பாதிப்பினை ஏற்படுத்தும் நிதிகளிலும் சில முக்கியமான தனிநபர்களின் கைகளில் அதிகாரம் குவிக்கப்பட்டிருப்பதனை” பொன்சேகா மற்றும் அப்துல் ரஹீம் ஆகியோர் குறிப்பிடுகின்றனர். (பொன்சேகா மற்றும் அப்துல் ரஹீம், 2011: 38).

எனவே காணிக் கொள்கை மறுசீராக்கலைக் கட்டமைத்து அதற்குப் பங்களிப்பு வழங்குவதிலும் உடைமையகற்றப்பட்டவர்களின் குறைகளைத் தீர்ப்பதிலும் மத்தியமயப்படுத்தப்பட்ட அரசும் சர்வதேச செயற்படுனர்களும் ஆற்றலைக் கொண்டுள்ளனர். ஆனால் பாதிப்புறுநிலையிலுள்ள பெண்கள் (விடுதலைப் புலிகளினால் வட இலங்கையில் இருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம் சிறுபான்மையினர் போன்ற உடைமையகற்றப்பட்ட ஏனைய குழுமங்களுடன்) விவாதங்களில் அற்பமான கட்டுபாட்டினையே கொண்டுள்ளனர். எனவே தமது எதிர்கால வாழ்வாதாரங்களிலும் இவர்கள் அற்பமான கட்டுப்பாட்டினையே கொண்டுள்ளனர். ஆணாதிக்க விதிகளும் சட்டங்களும் இம்மக்களுக்கு உரித்தான காணிகளை மீளக் கோருவதை மிகக் கடினமானதாக ஆக்கி இவர்களின் காணாமற்போன கணவன்மார்கள், தந்தைமார்கள் அல்லது சகோதரர்களின் விடயத்தில் இவர்களுக்குப் பொருளாதாரப் பரிமாணத்தினையும் சேர்க்கின்றன (ICG அறிக்கை, 2011).

2016 ஆம் ஆண்டில் டெய்லி மிரர் பத்திரிகையில் எழுதிய காமந்தி விக்ரமசிங்க, இலங்கையின் காணிச் சட்டங்கள் தொடர்பில் பால்நிலைச் சமத்துவத்தினை உருவாக்குவதில் எண்ணற்ற சவால்கள் இருப்பதை அடையாளம் காண்கின்றார். அதன் முன்னேற்றம் அரசியலமைப்புக் கடப்பாட்டுடனோ அல்லது சர்வதேசச் சட்டங்களின் கீழான கடப்பாடுகளுடனோ பொருந்தவில்லை என்பதை அவர் குறிப்பிடுகின்றார். உதாரணமாக, காணி உரிமைகளைப் பெற்றுக்கொள்ளல். “தனிநபர் ஒருவர் காணியினைச் சொந்தமாகக் கொண்டிருப்பதில், காணியினைக் கட்டுப்படுத்துவதில் மற்றும் காணியினை அணுகுவதில் முகங்கொடுக்கும் சவால்களில் பால்நிலை முக்கியமான வகிபாத்திரத்தினை வகிக்கமுடியும்” என பொன்சேகாவும் அப்துல் ரஹீமும் கோடிட்டுக் காட்டுகின்றனர். ஏனெனில் பாரம்பரியப் பார்வையில் பெண்கள் குடும்பத் தலைவிகளாகக் கருதப்படுவதில்லை என்பதுடன் ஆணாதிக்க மனப்பாங்கினையும் நடைமுறைகளையும் வழமையாகக் காட்டுகின்ற அரசாங்க நிர்வாகிகள் மற்றும் இராணுவத்தினருக்கு எதிராகப் போராடக்கூடியவர்களாகவும் இவர்கள் கருதப்படுவதில்லை(2011: 108).

**யுத்தத்திற்குப் பின்னரான ஆணைக்குழுக்களினால் வழங்கப்பட்ட பரிந்துரைகளின் தொகுப்பு**

யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையில் காணி மீளளிப்பு மற்றும் மீள்குடியேற்றம் பற்றிய மிக விரிவான பரிந்துரைகளில் பல, கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையின் காணிப் பிரச்சினைகள் பற்றிய அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகள்: மீளத்திரும்புதலும் மீள்குடியேற்றமும் எனும் தலைப்பிடப்பட்ட 6 ஆம் அத்தியாயத்தில் இருந்தே வருகின்றன. இவற்றினைப் பின்வருமாறு சில பிரதான தொனிப்பொருட்களாகத் தொகுக்க முடியும்:

1. காணி அடிப்படையிலான பிணக்குகளைத் தீர்க்கும் உறுதியான நோக்கம் மற்றும் குறிக்கோளாக இனத்துவ நல்லிணக்கத்தின் வகிபாத்திரம். "மிக நீண்ட காலம் நடைபெற்ற மோதலைத் தொடர்ந்து, உடனடியாக, மோதலுக்கு முன்னர் நாட்டில் நிலவிய நிலைமையினை மீண்டும் உருவாக்குவது என்பது அவ்வளவு எளிதான காரியமல்ல என்றாலும் வன்முறை, அச்சுறுத்தல் மற்றும் இனச்சுத்திகரிப்பு ஆகியவற்றினால் தூண்டப்பட்ட சட்டவிரோத காணி மாற்றங்கள் மற்றும் காணி வேறாக்கல்கள் தொடர்ந்தும் இடம்பெறுவதற்கோ அல்லது நிறுவனமயமாக்கப்படுவதற்கோ அனுமதி வழங்கப்படவில்லை என்பதை உறுதிப்படுத்துவது முக்கியமானது என்பதை ஆணைக்குழு அங்கீகரிக்கின்றது. இனநல்லுறவினையும் தேசிய நல்லுறவினையும் பேணிக்காப்பது இன்றியமையாததாகும். ஏனெனில் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் விடப்படுகையில் அவை எதிர்கால மோதலுக்கான காரணிகளாக நிலைமாறலாம்" (9.121).

2. காணிக் கோரிக்கைகளைத் தீர்ப்பதிலுள்ள நிர்வாக ரீதியான மற்றும் பௌதிகவள அடிப்படையிலான சவால்கள் அரசாங்கத்தின் காணிக் கொள்கையுடனும் அதன் மீள்குடியேற்ற நிகழ்ச்சித்திட்டங்களுடனும் இணைக்கப்பட்டுள்ளன என்பதுடன் தீர்விற்காக மாற்று முறைகள் பரிந்துரைக்கப்படுகின்றன (உ.தா: நீதி முறை சாராதவை). "இடம்பெயர்ந்த நபர்களின் மீள்திரும்பல் மற்றும் மீள்குடியேற்றம் ஆகியவற்றினைக் கருத்திற்கொண்ட அரசாங்கத்தின் காணிக் கொள்கையினை ஆணைக்குழு பாராட்டுவதுடன் இடம்பெயர்ந்த நபர்களின் காணி ஆவணப்படுத்தல் தொடர்பான பிரச்சினைகளையும் உரித்தாண்மை மற்றும் பயனாளர் உரிமைகளில் உள்ள பிணக்குகளையும் தீர்ப்பதற்காக வடிவமைக்கப்பட்டு 2011 ஜூலையில் முன்மொழியப்பட்ட இணைந்த நிகழ்ச்சித்திட்டங்களையும் ஆணைக்குழு மெச்சுகின்றது. நிகழ்ச்சித்திட்டம் புத்தாக்கமிக்கது என்பதையும் பொருத்தமானவிடத்து அது நிர்வாகக் கெடுபிடிகளற்ற பொறிமுறையினை, அதாவது பிரதானமாக சிக்கல்மிக்கதும் நேரத்தினை அதிகம் எடுப்பதும் வழக்குத் தொடுத்துள்ளவர்களுக்கு அதிக செலவினை ஏற்படுத்தக்கூடியதுமான முறைசார் நீதிமன்ற முறைமையினைப் பயன்படுத்தவேண்டியிருப்பதில் இருந்தும் மிகப்பெரும்பான்மையான இடம்பெயர்ந்த நபர்களை விடுவிப்பதற்கென வடிவமைக்கப்பட்டுள்ளதுமான முறைசாராப் பொறிமுறையினைப் பயன்படுத்த நாடுகின்றது என்பதையும் ஆணைக்குழு அவதானிக்கின்றது" (9.125).

3. இராணுவத்தினால் அரச காணிகள் வேறாக்கப்படல், மற்றும்/தனியார் காணிகள் தொடர்ச்சியாகக் கட்டுப்படுத்தப்படல் எனும் விடயம் தீர்க்கப்படுகின்றது. உதாரணமாக, உத்தேச நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படும் வரையில், ஏனைய அங்கீகரிக்கப்பட்ட நோக்கங்களுக்காக அரச காணிகள் தேவைப்படும் சந்தர்ப்பங்கள் தவிர்ந்த வேறு எச்சந்தர்ப்பத்திலும் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் தவிர்ந்த ஏனையோருக்காக அரச காணிகள் வேறாக்கப்படுவதைத் தடுப்பதற்கு இறுக்கமான கட்டுப்பாடுகள் பிரயோகிக்கப்படவேண்டும்" என ஆலோசனை முன்வைக்கப்படுகின்றது... உயர்பாதுகாப்பு

வலயங்கள் காரணமாக அல்லது ஏனைய உத்தியோகபூர்வமற்ற அல்லது முறையாகத் திட்டமிடப்படாத பாதுகாப்புடன் தொடர்புடைய தேவைகளின் காரணமாக தமது காணிகளை அல்லது வீடுகளை இழந்த சகல குடும்பங்களுக்கும் மாற்றுக் காணிகள் வழங்கப்படவேண்டும் அல்லது பிரயோகிக்கத்தக்க சட்டங்களுக்கு அமைவாக நட்டயீடு வழங்கப்படவேண்டும் எனவும் ஆணைக்குழு விதந்துரைக்கின்றது. மாற்றுக் காணிகளை வழங்கல் அல்லது நட்டயீட்டினை வழங்கல் குறித்துரைக்கப்பட்டுள்ள காலப்பகுதியினுள் பூர்த்திசெய்யப்படவேண்டும் என ஆணைக்குழு மேலும் விதந்துரைக்கின்றது" (9.140-9.142)

வடக்கு மற்றும் கிழக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மெதுவானதும் கடினமானதுமான ஒரு செயன்முறையின் இந்த அங்கீகாரமானது பாதிக்கப்பட்ட தனிநபர்கள் வாழ்வில் தொடர்ந்து முன்செல்வதற்காக மீள்திரும்புகை மற்றும் மீளளிப்புப் பொறிமுறையினைத் துரிதப்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளினால் 1990 இல் வடக்கில் இருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் உள்ளிட்ட சில குறிப்பிட்ட குழுவினரும் குறிப்பிடப்படுகின்றனர். ஆனால் மீள்குடியேற்றப்பட்ட காணிகளில் இனரீதியான பிரிவுகளாகப் பிரிக்கப்படாது சகல குழுமங்களும் உண்மையாக மீள்திரும்புவதை உறுதிப்படுத்துவதற்காக வட மாகாணத்தில் சிறுபான்மையாக உள்ள சிங்களச் சமுதாயத்தினைச் சேர்ந்தவர்களும் குறிப்பிடப்பட்டுள்ளனர். எனவே கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழு பின்வருமாறு விதந்துரைக்கின்றது "யாழ்ப்பாணத்தில் இருந்தும் வடக்கின் ஏனைய பிரதேசங்களில் இருந்தும் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட சிங்களக் குடும்பங்கள் தன்னிச்சையாக மீளத்திரும்ப விரும்புகையில் அவர்கள் தங்களின் சொந்தக் காணிகளுக்கு விரைவாக அனுப்பிவைக்கப்படவேண்டும் அல்லது வேறாக்கப்பட்ட காணிகளில் மீளக்குடியேற்றப்படவேண்டும். ஏனெனில் இது தொடர்பிலான முன்னேற்றம் திருப்தியற்றதாகவே இருந்து வருகின்றது." (9.145)

இறுதியாக, அரச காணிகளின் ஒப்புரவான விநியோகம் மற்றும் காணிக் கொள்கையின் மாகாணப் பரவலாக்கம் பற்றிய வழிகாட்டல்களை உள்ளடக்குவதற்காக தேசிய காணி ஆணைக்குழு நியமிக்கப்படவேண்டும் எனக் குழு விதந்துரைக்கின்றது (9.150). மாவட்ட நிர்வாகத்திற்கு வழிகாட்டுவதற்காக வடக்கு கிழக்கிலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திற்காகவும் ஒரு காணிப் பாவனைத் திட்டம் இருக்கவேண்டுமெனவும் (9.151) சகல இடம்பெயர்ந்த நபர்களுக்காகவும் காணிகள் மீளவழங்கப்படுகின்றன அல்லது மாற்றுக் காணிகள் வழங்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்த இருதரப்பு அணுகுமுறையினைச் சகல அரசியல் கட்சிகளும் பின்பற்றவேண்டும் எனவும் தேசிய நல்லிணக்கத்தில் கவனம் குவிப்பதற்காகச் சாத்தியமானபோது நட்டயீடு வழங்கப்படவேண்டும் எனவும் மேலும் ஆலோசனை வழங்கப்படுகின்றது.(9.152)

அரசியலமைப்பு மறுசீரமைப்புப் பற்றிய நாடளாவிய மக்கள் கலந்தாலோசிப்பினை அடிப்படையாகக் கொண்ட **அரசியலமைப்பு மறுசீரமைப்பு பற்றிய பொதுமக்கள் பிரதிநிதித்துவங்களின் குழுவின்** 2016 மே அறிக்கையும் மக்கள் எதிர்நோக்கும் காணிப் பிரச்சினைகளின் சிக்கற்தன்மையினை ஏற்றுக்கொண்டுள்ளது. குழுவின் பரிந்துரைகள் பின்வருவனவாகும்:

1. இயற்கை வளங்கள், உள்நாட்டுத் தாவரவகைகள் மற்றும் உயிரின வகைகள் ஆகியவற்றினைப் பயன்படுத்துவது தொடர்பில் அரசிலயமைப்பு ரீதியான வழிகாட்டல்கள் இருக்கவேண்டும்..

2. காணி, சுற்றாடல் மற்றும் அபிவிருத்தி ஆகியவை அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தில் உள்ளடக்கப்படவேண்டும். சுற்றாடல் தொடர்பான அடிப்படை உரிமைகள் பற்றிய பிரிவு விலங்குகளின் உரிமைகளையும் விலங்குகளின் நலனினையும் கவனத்திற்கொள்ளவேண்டும். ஏனெனில் விலங்குகளும் காட்டுயிர்களும் சுற்றாடல் மற்றும் சூழியல் முறைமையின்

அங்கமாகக் கருதப்படவேண்டும்.

3. இந்த உரிமைகளை எவ்வாறு செயற்படுத்தலாம் என்பது பற்றி விபரிக்கும் காணி, சுற்றாடல் மற்றும் அபிவிருத்தி பற்றிய வேறான அத்தியாயங்கள் அரசியலமைப்புடன் சேர்க்கப்படவேண்டும். வரைபுச் செயன்முறையில் கென்ய மற்றும் ஈகுவடோர் நாடுகளின் அரசியலமைப்புக்களின் உதாரணங்கள் கருத்திற்கொள்ளப்படவேண்டும் என நாம் ஆலோசனை வழங்குகின்றோம். உதாரணமாக, பின்வருவனவற்றிற்கான ஏற்பாடுகளை இந்த அத்தியாயங்கள் கட்டாயம் உள்ளடக்கவேண்டும்:

- சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்களின் நிலைபேறான பாவனை, பயன்பாடு, முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றினை உறுதிப்படுத்தலும் திரளும் நன்மைகளின் ஒப்புரவான பகிர்வினை உறுதிப்படுத்தலும்
- சுற்றாடல் துறை நிபுணர்களுடனான கலந்தாலோசிப்புடன் ஆகக்குறைவான வனப்போர்வையினைத் தீர்மானித்து, அதனை அடைந்து, அதனைப் பேணுவதற்காகப் பணியாற்றல்

4. உயிரியல் பல்வகைமை மற்றும் சமுதாயங்களின் மரபணு வளங்கள் ஆகியவற்றினைப் பாதுகாத்து அவற்றின் சட்டப் பாதுகாப்பினை அதிகரித்தலும் அவை பற்றிய சுதேச அறிவினை அதிகரித்தலும்

- சுற்றாடல் முகாமைத்துவத்திலும் பாதுகாப்பிலும் பேணலிலும் பொதுமக்கள் பங்கேற்பினை ஊக்குவித்தல்
- மரபணு வளங்கள் மற்றும் உயிரியல் பல்வகைமை ஆகியவற்றினைப் பாதுகாத்தல்
- சுற்றாடல் தாக்க மதிப்பீட்டிற்கான முறைமையினை உருவாக்கல்.

5. சுற்றாடல் ஆய்வும் சுற்றாடல் கண்காணிப்பும்

6. சுற்றாடலில் தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய செயன்முறைகளையும் செயற்பாடுகளையும் அகற்றல் மேலும் இலங்கை மக்களின் நன்மைக்காகவே சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்களைப் பயன்படுத்தல்

7. சுற்றாடலைப் பாதுகாத்துப் பேணி உயிரியல் ரீதியாக நீடுறுதியான அபிவிருத்தி மற்றும் இயற்கை வளங்களின் பாவனை ஆகியவற்றினை உறுதிப்படுத்த அரச அமைப்புக்களுடனும் ஏனைய நபர்களுடனும் ஒத்துழைப்பதற்கான கடமையினை ஒவ்வொருவரும் கொண்டுள்ளனர்.

8. அபிவிருத்தி சார் சுரண்டல்கள் மற்றும் இடப்பெயர்வு ஆகியவற்றினைத் தடுப்பதற்குப் போதிய பொறிமுறைகள் உள்ளன என்பதை உறுதிப்படுத்துவதற்காகப் பொருளாதார அபிவிருத்திக் குறைகளைத் தீர்ப்பதற்கு ஆணைக்குழு ஒன்றினை உருவாக்கல்.

9. காணி, சுற்றாடல் மற்றும் அபிவிருத்தி தொடர்பான அடிப்படை உரிமைகளின் மீறல்களினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்காகப் பரிகாரம் மற்றும் நட்டஈட்டிற்கான முறைமை.

10. சுற்றாடலுக்குத் தீங்கு விளைவிக்கின்ற அல்லது அபிவிருத்தி எனும் பெயரில் மக்களைச் சுரண்டுகின்ற எந்த ஒரு தனிநபருக்கு எதிராகவும் அல்லது நிறுவனத்திற்கு எதிராகவும் நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரத்தினைக் கொண்டிருப்பதற்காக அரசு மற்றும் அரச அதிகாரிகளைப் பொறுப்புடையவர்களாக ஆக்க ஏற்பாடுகளை மேற்கொள்ளல்.

11. நாட்டின் மொத்த நிலப்பரப்பின் ஏற்றுக்கொள்ளக்கூடிய சதவிகிதத்தில் ஆகக்குறைவான வனப் போர்வையினைப் பேணுவதற்கான ஒரு முறைமையினை அடையாளம் காணல். நாட்டிற்காக நீடுறுதியான, ஒப்புரவான மற்றும் சமூக ரீதியாக நியாயமான சமூக - பொருளாதார அபிவிருத்தித் தீர்வுகளை நாடுவதற்காக அரசியலமைப்பில் கடப்பாடுகள்

**நல்லிணக்கப் பொறிமுறைக்கான கலந்தாலோசிப்புச் செயலணியின் அறிக்கையில் ஒப்பீட்டளவில்** நாடு முழுவதில் இருந்தும் "காணி தொடர்பான பல்வேறுபட்டதும் மீண்டும் மீண்டும் குறிப்பிடப்படுகின்றதுமான" கரிசனைகள் சமர்ப்பணங்களாக எழுப்பப்பட்டன (143).

பிரிவு 3.6 (107) இல் குறிப்பிடப்பட்டுள்ளது போல: "காணி என்பது ஒவ்வொரு வலயத்திலும் எழுப்பப்பட்ட மீண்டெழும் பிரச்சினையாக இருந்தது. காணியினை இராணுவம் ஆக்கிரமித்திருத்தல் அல்லது காணிகளைக் குடிமக்கள் இரண்டாம் உரிமையாளர்களாக வைத்திருத்தல் முதற்கொண்டு, தொலைந்துபோன ஆவணங்கள், ஆவணங்கள் இல்லாமை அல்லது உரித்தாண்மைக்குப் போதிய உரிமைகள் இல்லாமை மற்றும் காணி மீதான அபிவிருத்தி போன்ற மோதலுடன் தொடர்பற்ற காணிப் பிரச்சினைகள் வரை பிரச்சினைகளின் தன்மை பரந்து காணப்பட்டது".

இராணுவத்தினால் அல்லது வேறு தரப்பினால் ஏற்படுத்தப்பட்ட இடப்பெயர்வினால் இழக்கப்பட்ட காணிகளுக்கான கோரிக்கைகளில் இருந்து எழும் மிகப் பொதுவான கேள்வியாக மீளளிப்புக் காணப்படுவதுடன் தம்புள்ள புனிதப் பிரதேசம் தொடர்பான இலக்குக் குழுக் கலந்துரையாடலில் கோடிட்டுக்காட்டப்பட்டவாறு புனிதப் பிரதேசங்களை அமைப்பதற்காகவும் இக்கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. முன்பு குறிப்பிடப்பட்டவாறு விடுதலைப் புலிகளினால் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட வடபுல முஸ்லிம்களும் குறிப்பிட்ட விசேட தேவையினையுடைய (உதாரணமாக, யாரின் வாழ்வாதாரங்கள் விவசாய ரீதியாக வளமான காணிகளைச் சார்ந்திருந்தனவோ அவ்வாறானவர்களுக்கு நட்டஈட்டுடன் சேர்த்து அக்காணிகளை மீள வழங்கப்படுவதன் முக்கியத்துவத்தினைப் பெண்கள் அமைப்புக்களின் ஒரு குழுவினர் கோடிட்டுக்காட்டினர்) சில குழுக்களும் உள்ளிட்ட சில குறிப்பிட்ட குழுக்கள் கோடிட்டுக் காட்டப்பட்டன. அறிக்கைகளில் தமிழ் மற்றும் முஸ்லிம் முறைப்பாடுகளே நிறைந்திருந்தன எனும் பிரபலமான அபிப்பிராயத்தினைத் தாண்டி சிங்களக் குழுக்களும் முறைப்பாடுகளையும் கரிசனைகளையும் எழுப்பியிருந்தன. அதாவது, கிழக்கு மாகாணத்தில் இருந்து வடமத்திய மாகாணத்திற்கு இடம்பெயர்க்கப்பட்ட சிங்களச் சமுதாயத்தினர் இழக்கப்பட்ட காணிகளுக்காக நட்டயீட்டினைக் கோரியிருந்தனர் (145).

எவ்வாறாயினும் இந்த மீள்குடியேற்றச் செயல்விதிகளும் மீளளிப்புச் செயல்விதிகளும் தேவைப்படுகின்றன எனச் சிவில் சமூக நிறுவனங்கள் சுட்டிக்காட்டத் தவறவில்லை. மேலும் நாடு முழுவதும் உள்ள காணியற்றவர்களின் தேவைகள் மற்றும் குறிப்பிட்ட பாதிப்புறுநிலைமைகள் பற்றியும் கவனம் எடுக்கப்படவேண்டும் என அவை சுட்டிக்காட்டின. மேற்கொள்ளப்பட்ட சமர்ப்பணங்கள் அரச மட்டத்திலும் நிறுவன மட்டத்திலும் சமூக மட்டத்திலும் இலங்கையில் தொடர்ந்தும் பாதிப்பினை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றதும் இடையீடு தேவைப்படுகின்றதுமான பல்வேறு தவறுகளைச் சுட்டிக்காட்டின. தனித்தனியாகப் பிரச்சினைகளைக் கையாளும் அணுகுமுறை பின்பற்றப்பட்டால் சமுதாயங்களுக்கு இடையில் பாகுபாடு காட்டப்படும் ஆபத்து ஏற்படலாம் என்கின்ற காரணத்தினால் காணி விநியோகம் தொடர்பில் தரப்படுத்தப்பட்ட அணுகுமுறை கைக்கொள்ளப்படலாம் எனும் ஆலோசனை சர்வதேச நிறுவனம் ஒன்றினால் முன்வைக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்புக்கான 13வது திருத்தத்தின் அமுலாக்கம் உள்ளிட்ட அதிகாரப் பரவலாக்கம் பற்றிக் கலந்துரையாடப்பட்டது. ஏனெனில் இது மாகாணங்களில் காணி நிர்வாகத்தில் பாரிய விளைவுகளைக் கொண்டுள்ளது. அதிகமான காணிகள் இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள

காரணத்தினால் நாடு முழுவதும், குறிப்பாக வடக்கு கிழக்கில் இராணுவமயமாக்கத்தினை அகற்றலானது காணிப் பிரச்சினையினைத் தீர்க்கும். பாதுகாப்புக் காரணங்களுக்காகக் காணிகள் தேவைப்படாதபோது அவை உரிய உரிமையாளர்களிடம் விடுவிக்கப்படும் என்கின்ற வாக்குறுதி அடிக்கடி வழங்கப்படுகின்ற போதிலும் காணிகள் விடுவிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

பிரிவு 3.2.2: இராணுவமயமாக்கத்தினால் ஏற்படும் பிரச்சினைகளின் மீது கவனம் குவிக்கின்றது. “உரிமைகளை மீண்டும் வழங்குவதிலும் இயல்புநிலையினை மீண்டும் உருவாக்குவதிலும் எவ்வாறு பாதிப்பினை ஏற்படுத்துகின்றது என்பதற்கான உதாரணங்களை காணி ஆக்கிரமிப்பு விடயங்களில் காணக்கூடியதாக இருக்கின்றது(33)”. இதில் கேப்பாபிலவு, முல்லைத்தீவு மற்றும் கொக்கிளாய் உள்ளிட்ட குறிப்பிட்ட பிரதேசங்களைச் சேர்ந்த குழுவினரை அறிக்கை மேற்கோள் காட்டுகின்றது. இனங்களுக்கிடையிலான காணிப் பிணக்குகளிலும் குடியேற்றங்களிலும் இராணுவம் தலையிடுவதும் இராணுவம் அதன் சொந்த வர்த்தக நோக்கங்களுக்காகத் தனியாரின் காணிகளைப் பயன்படுத்துவதும் உள்ளூர் மக்களின் வாழ்வாதார முயற்சிகளுக்கும் நல்லிணக்க முயற்சிகளுக்கும் பாதகமானதாக இருந்துவருகின்றது என்பதும் அறிக்கையில் எடுத்து விளக்கப்பட்டுள்ளது.(297-300). நீதி என்பது கட்டமைப்புக்களின் நிலைமாற்றத்தினால் மட்டுமே வருகின்றது - நிலைமாற்ற நீதியின் மூலமாக நீண்டகால, அடிப்படையான மாற்றங்கள். இதன்போது பொருளாதார, சமூக மற்றும் கலாசார நிலைமாற்றங்கள் முன்னெடுக்கப்படும்(316).

பிரிவு 3.6 வேறு இடத்தில் உள்ளடக்கப்படாத காணிப் பிரச்சினையில் கவனம் குவிக்கின்றது. (உதா: 3.2.2), தாம் மீளக் குடியேறிய இடத்துக்கான உரித்தாண்மை உரிமைகள் இன்றித் தமது புதிய வீடுகளில் தமது வாழ்வினை மீளக் கட்டியெழுப்ப முயற்சிக்கும் இடம்பெயர்ந்த நபர்கள் உள்ளிட்ட இராணுவம் சாராத முகவர்களுடனான காணிப் பிணக்குகள் (வனத் திணைக்களம் அல்லது புனிதப் பிரதேசங்கள் உள்ளிட்ட) (111) தெற்குச் சமுதாயங்கள் அரச கொள்கைகளினால் காணியற்றவர்களாக ஆக்கப்பட்டுள்ளனர், உதாரணமாக நியாயமான நட்டஈட்டினை வழங்காமல் நகர அபிவிருத்தி அதிகாரசபை காணிகளைப் பறித்தல் (112).

நாடு முழுவதிலுமுள்ள சமுதாயங்களில் காணப்படும் இவ்வாறான பாரிய போராட்டங்களின் சூழமைவில் நோக்குகையில், குறிப்பிட்ட சில சமுதாயங்களின் தனித்துவமான உதாரணங்கள் மூலம் இப்பிரச்சினைகளில் சில நன்கு விளக்கப்படுகின்றன. இச்சமுதாயங்கள் தமது வாழ்வாதாரங்களை மீட்டிக்கொள்வதற்காகவும் இயல்புநிலையினை ஓரளவாவது திரும்பப் பெறுவதற்காகவும் தமது கரிசனைகளைத் துணிச்சலுடன் எழுப்பியதுடன் அரசின் செயலின்மைக்கு எதிராகவும் ஊழல்மிக்க பணித்துறை அதிகாரத்திற்கு எதிராகவும் போராடியுள்ளன. இக்குறைகளின் பல உதாரணங்களை வலயச் செயலணி அறிக்கை கொண்டுள்ளது (ZTF).

# இணைப்பு 2




# கேப்பாப்பிலவு

(மக்கள் காணி ஆணைக்குழு முன் அளிக்கப்பட்ட சாட்சியங்கள் மற்றும் சிவில் சமூக நிறுவனங்களின் அறிக்கை ஆகியவற்றில் இருந்து தயாரிக்கப்பட்டவை)

| | | |
|---|---|---|
| • | **அமைவிடம்** | கேப்பாப்பிலவு கிராமசேவையாளர் பிரிவு, ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம், முல்லைத்தீவு மாவட்டம் |
| • | **பாதிக்கப்பட்ட குடும்பங்கள் / மக்களின் எண்ணிக்கை** | 104 குடும்பங்கள் (2020 ஏப்ரலில் உள்ளாவாறாக) |
| • | **பிணக்கிலுள்ள காணியின் விஸ்தீரணம்** | 2009 ஆம் ஆண்டு ஏறக்குறைய 520 ஏக்கர் காணி இராணுவத்தினால் எடுக்கப்பட்டது.<br><br>2020 ஏப்ரலில் உள்ளவாறாக இராணுவ ஆக்கிரமிப்பில் 171 ஏக்கர்கள் தொடர்ந்தும் உள்ளன |
| • | **காணிப் பிணக்கு ஆரம்பித்த வருடம்** | 2009 |

2009 ஆம் ஆண்டு, யுத்தத்தின் கடைசிக் கட்டத்தின் போது முல்லைத்தீவு மாவட்டத்தின் சூரியபுரம், சீனியாமோட்டை, கேப்பாப்பிலவு மற்றும் பிலாக்குடியிருப்பு ஆகிய கிராமங்களின் குடியிருப்பாளர்களை இராணுவம் பலவந்தமாக வெளியேற்றியது. வெளியேற்றப்பட்ட குடும்பங்கள் வவுனியாவில் உள்ள மெனிக் பாம் முகாமிற்கு அனுப்பிவைக்கப்பட்டன.

கையகப்படுத்தப்பட்ட காணியில் (171 ஏக்கர்கள்) முல்லைத்தீவு கேப்பாப்பிலவு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையும் ஒரு கோயிலும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமும் சனசமூக நிலையமும் ஐந்து பொதுக் கிணறுகளும் ஒரு விளையாட்டு மைதானமும் கிறிஸ்தவ மயானமும் இந்து மயானமும் அமைந்திருந்தன. காணி பலவந்தமாக எடுக்கப்பட்ட பின்னர் முல்லைத்தீவு பாதுகாப்புப் படை தலைமை அலுவலகமும் விமானப் படைத் தலைமை அலுவலகமும் ஏனைய முகாம்களும் அதில் நிறுவப்பட்டன.

வெளியேற்றப்பட்ட குடும்பங்களின் மத்தியில் சில 'மாவீரர் குடும்பங்களும்' இருந்தன. இக்குடும்ப உறுப்பினர்கள் சிலர் யுத்தத்தில் கொல்லப்பட்ட பின்னர் இக்குடும்பத்தினர்களை விடுதலைப் புலிகள் இக்காணிகளில் குடியேற்றினர். ஏனைய குடும்பங்கள் இக்காணியின் பூர்வீகக் குடிகளாக அடையாளப்படுத்தப்படுவதுடன் இவர்களின் குடும்பங்கள் இப்பிரதேசத்தில் 100 வருடங்களுக்கும் மேல் வாழ்ந்து வருகின்றன.

2010 ஆம் ஆண்டு காணியின் பூர்வீகக் குடிகளை அழைத்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, காணிகள் மாவீரர் குடும்பங்களுக்கு வழங்கப்படும் எனத் தெரிவித்தார். குடியிருப்பாளர்கள் தங்களின் காணிகளுக்கான ஆதாரங்களாக 60 உறுதிகளையும் 20 அனுமதிப் பத்திரங்களையும் சமர்ப்பித்தனர். இதன் பின்னர் இக்காணி மக்களுக்காகத் தொடர்ந்திருக்கும் என்ற கடிதம் செயலகத்தினால் அனுப்பப்பட்டது. ஆனால் இதனைத் தொடர்ந்து எதுவும் நடைபெறவில்லை. 2011 ஆம் ஆண்டில் குடியிருப்பாளர்களினால் நீதிமன்றத்தில் மேன்முறையீடு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது.

2012 ஆம் ஆண்டில் மெனிக் முகாம் மூடப்பட்டு மக்கள் அவசர அவசரமாக மீள்குடியேற்றப்பட்டனர். 2012 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 150 குடும்பங்கள் அவற்றின் பூர்வீகக் கிராமங்களுக்கு அண்மையில் அமைந்துள்ள சூரியபுரம் என முன்பு அறியப்பட்ட கேப்பாப்பிலவு மாதிரிக் கிராமத்தில் விடப்பட்டனர். இது துப்பரவு செய்யப்படாத ஒரு காணி என்பதுடன் தம்மை ஒரு "அத்துவானக் காட்டில் விட்டுவிட்டதாக" மக்கள் முறைப்பாடு செய்தனர். இவ்வாறு விடப்பட்ட மக்களுக்கு வதிவிடங்களை அமைக்க உதவிகள் வழங்கப்படவில்லை. மெனிக் முகாமில் இருந்து கொண்டுவந்த கழிவுப் பொருட்களைக் கொண்டே இம்மக்கள் கொட்டில்களை அமைத்தனர்.

முன்னாள் முல்லைத்தீவு அரசாங்க அதிபரினால் 150 குடும்பங்களும் தாம் புதிய காணிகளை ஏற்றுக்கொண்டதாக படிவம் ஒன்றில் கைச்சாத்திடுமாறு வேண்டப்பட்டனர்.

2013 ஜனவரி மாதத்தில் மேலும் 146 குடும்பங்கள் சூரியபுரத்தில் குடியேற்றப்பட்டனர். இவர்கள் பிரதேசத்தில் தமக்குத் தெரிந்த குடும்பங்களுடனும் உறவினர்களுடனும் வசித்துவந்தனர். 2013 மார்ச் மாதத்தில் 16 குடும்பங்கள் சீனியாமோட்டையிலுள்ள தமது பூர்வீகக் காணிகளுக்கு மீளத்திரும்ப அனுமதிக்கப்பட்டனர்.

2017 ஜனவரி 30 ஆம் திகதி எஞ்சிய காணிகள் விடுவிக்கப்படும் என அரசு அறிவித்தது. எவ்வாறாயினும் இவ்வாறு காணிகள் விடுவிக்கப்படாத காரணத்தினால் கேப்பாப்பிலவினைச் சேர்ந்த 138 குடும்பங்கள் பாதுகாப்புப் படையினரின் தலைமை அலுவலகத்திற்கு முன்னால், அவர்களின் காணிகளின் நுழைவாயிலில், தொடர்ச்சியான தர்ணா போராட்டத்தினை ஆரம்பித்தனர். இக்குடும்பங்கள் தமது சமுதாயக் கட்டிடங்கள் உள்ளடங்கலாக 428 ஏக்கர் காணிகளை விடுவிக்கவேண்டும் எனக் கோரினர்.

2017 ஏப்ரில் மாதத்தில் ஆர்ப்பாட்டக்காரர்களுடன் தமிழ் அரசியல்வாதிகளும் சேர்ந்துகொண்டனர். இதனைத் தொடர்ந்து இவர்களைச் சந்தித்த இராணுவம் 100 ஏக்கர் காணியினை விடுவிப்பதாக வாய்மூல இணக்கத்திற்கு வந்தது. விடுவிப்புத் திகதி மீண்டும் பிற்போடப்பட்டது.

2017 ஆகஸ்டில், கேப்பாப்பிலவில் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த 243 ஏக்கர் காணியினை அதன் உரிமையாளர்களுக்கு இராணுவம் விடுவித்தது. பின்னர் அதே மாதம் விடுவிக்கப்படவுள்ள 111 ஏக்கர் காணியில் அமைந்துள்ள இராணுவக் கட்டிடங்களையும் உபகரணங்களையும் வேறு இடத்திற்குக் கொண்டுசெல்வதற்காக இராணுவத் தளபதிக்கு 148 மில்லியன் ரூபாவினைத் தனது அமைச்சினால் செலுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அப்போதைய மீள்குடியேற்ற அமைச்சரான டி. எம். சுவாமிநாதன் மக்களிடம் குறிப்பிட்டார். மக்களின் மீள்குடியேற்றத்திற்காக ஒதுக்கப்பட்ட மக்களின் பணமான 148 மில்லியன் ரூபா எதற்காக மக்களிடம் காணிகளை மீள ஒப்படைப்பதற்காக இராணுவத்திற்கு நன்கொடையாக வழங்கப்படுகின்றது என மக்கள் கேள்வி எழுப்பினர்.

ஜீன் 2018 இல் கேப்பாப்பிலவினைச் சேர்ந்த 55 தனியார் காணி (சுமார் 60 ஏக்கர்கள்) உரிமையாளர்களுடன் கரைத்துறைப்பற்று பிரதேச செயலகத்தில் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இவர்களின் காணிகளைச் சட்டபூர்வமாகப் பெற்று நட்டஈடு வழங்குவதற்காகவே இப்பேச்சுவார்த்தை நடைபெற்றது. இக்குடும்பங்களில் பெரும்பான்மையானோர் நட்டஈட்டினை ஏற்க மறுத்து தமது காணிகளுக்குத் திரும்பவேண்டும் என்ற கோரிக்கையினை முன்வைத்து வந்தாலும் ஐந்து குடும்பங்கள் தமது காணிகளுக்குப் பதிலாக பண நட்டஈட்டினைப் பெற இணங்கினர். ஏனையோர் தொடர்ந்தும் தமது காணிகள் விடுவிக்கப்படவேண்டும் எனப் போராடி வருகின்றனர்.

ஜனவரி 26 ஆம் திகதி கேப்பாப்பிலவு மக்கள், பிரதானமாகப் பெண்கள், இராணுவம் ஆக்கிரமித்துள்ள தமது காணிகளை விடுவிக்கக் கோரி அக்காணிகளை நோக்கி இரண்டு கிலோ மீற்றர்கள் நடக்கத் தொடங்கினர். இராணுவ முகாமின் பிரதான நுழைவாயிலை நோக்கி அவர்கள் நடக்கத் தொடங்கியதும் முகாமின் வாயிலின் முன் பெருமளவு பொலிசார் (சுமார் 45 பேர்) காணப்பட்டதுடன் குறைந்தது ஐந்து பொலிஸ் வாகனங்களும் (பஸ், லொறி, ஜீப், கார்) அங்கே காணப்பட்டன. இப்பெண்களுடன் மேலும் பல இடம்பெயர்ந்த கிராமத்தவர்கள் இணைந்துகொண்டு இவர்களின் பாதையினை வேண்டுமென்று மறிப்பதற்காக நிறுத்தப்பட்டிருந்த பொலிஸ் வாகனங்களின் முன்னே நின்றனர். தமது காணி விடுவிப்புத் தொடர்பாக திட்டவட்டமான உத்தரவாத்தினை அதிகாரிகள் வழங்கும் வரையில் முகாமின் முன்னால் அமர்ந்துகொள்வது

என்பதே ஆர்ப்பாட்டக்காரர்களின் நோக்கமாக இருந்தது. ஜனவரி 27 ஆம் திகதி, இராணுவ முகாம் அமைந்துள்ள வளவிற்கும் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் இடத்திற்கும் இடையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் 75 மீற்றர்கள் தூரத்தினைப் பேணவேண்டும் என்று நீதிமன்றக் கட்டளை பிறப்பித்தது. இதனை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏற்றுக்கொண்டனர்.

10 வருடங்களுக்கு முன் தங்களிடமிருந்து பறிக்கப்பட்ட காணிகளுக்காக இந்த மக்கள் தொடர்ந்தும் போராடி வருகின்றனர். அர்த்தபூர்வமான பேச்சுவார்த்தைகளில் அரசாங்கம் இம்மக்களை ஈடுபடுத்தத் தவறிவருகின்றது. மேலும் இம்மக்களின் எதிர்காலம் நிச்சயமற்றதாக உள்ளது. இம்மக்களின் வாழ்வு அவர்கள் அனுபவிக்கும் அநீதிகளினால் நிறைந்துள்ளது. ஆர்ப்பாட்டக்காரர்களாகப் பிரதானமாகப் பெண்களே காணப்படுகின்றனர். கொளுத்தும் வெயிலிலும் கொட்டும் மழையிலும் ஆர்ப்பாட்டம் இடம்பெறும் கொட்டில்களினுள் அமர்ந்திருப்பது இப்பெண்களே. உலர்வலயங்களில் இரவு நேரங்களில் நிலவும் கடும் குளிரினையும் இப்பெண்கள் தாங்கியவாறு தம் போராட்டத்தினை நடத்திவருகின்றனர். கொடுப்பனவுடன் இப்பெண்கள் செய்யும் ஊழியம் மற்றும் கொடுப்பனவு இன்றி இப்பெண்கள் ஆற்றிவரும் பராமரிப்புப் பணிகள் ஆகியவை இப்பெண்கள் கழிக்கும் நாட்களினுள் அடங்குகின்றன. இப்பெண்கள் நடத்தும் போராட்டம் இவர்களின் ஆரோக்கியத்திலும் நலனோம்புகையிலும் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது.





# உடமா ஓய பல்நோக்குக் கருத்திட்டம்

(சமுதாய உறுப்பினர்களுடனான நேர்காணல்களைப் பிரதானமாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட சிவில் சமூக அறிக்கைகளில் இருந்து தயாரிக்கப்பட்டது)

- **அமைவிடம்** ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்தின் பண்டாரவளை, ஹாலியெல, வெலிமட, ஊவாபரணகம மற்றும் எல்ல பிரதேச செயலகங்கள் மற்றும் மொனராகல மாவட்டத்தின் வெள்ளவாய
- **பாதிக்கப்பட்ட குடும்பங்கள் / மக்களின் எண்ணிக்கை** சுமார் 7500 குடும்பங்களுக்கு மேல் (ஏப்ரல் 2020 இல் உள்ளவாறாக)
- **பிணக்கிலுள்ள காணியின் விஸ்தீரணம்** கிட்டத்தட்ட 2200 ஏக்கர் பண்ணை நிலங்கள் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளன

  கிட்டத்தட்ட 7100 வீடுகள் முழுவதுமாக அல்லது பகுதியாகச் சேதமடைந்துள்ளன

  கிட்டத்தட்ட 3090 கிணறுகள் வற்றிவிட்டன

  கிட்டத்தட்ட 45 இயற்கை நீர் மூலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன
- **காணிப் பிணக்கு ஆரம்பித்த வருடம்** 2008 முதல் இற்றைவரை

உமா ஓய கருத்திட்டம் 1950 களில் இருந்து தொடங்கும் நீண்ட வரலாற்றினைக் கொண்டுள்ளது. நிதியிடல் காரணமாக அல்லது சுற்றுச் சூழல் பிரச்சினை காரணமாகக் காலத்திற்குக் காலம் பல்வேறு முன்மொழிவுகள் கைவிடப்பட்டன. 1991 இல் இலங்கையின் தெற்குப் பகுதிக்கு நீரினைத் திசைதிருப்பும் முன்மொழிவிற்கான முன் சாத்தியவள ஆய்வினை மத்திய பொறியியல் ஆலோசனைப் பணியகம் (CECB) மேற்கொண்டது. ஆனால் மக்களின் நீர் உரிமைகள் மீறப்படுகின்றன என்கின்ற காரணத்தினால் முன்மொழிவினை ஆசிய அபிவிருத்தி வங்கி நிராகரித்தது. 2000 ஆம் ஆண்டு கருத்திட்டம் மீண்டும் முன்மொழியப்பட்டு 2008 ஆம் ஆண்டில் உமா ஓய பல்நோக்குக் கருத்திட்டத்திற்கு ஈரான் அரசாங்கம் நிதியுதவி வழங்கியது. நிர்மாண ஒப்பந்தமும் ஈரானிய நிர்மானக் கம்பனியான குயுசுயுடீ இற்கு வழங்கப்பட்டது. கருத்திட்டமானது பிரதானமாக நீர்மின்சாரத்தினை அதிகரித்து ஹம்பாந்தோட்டையின் உலர்வலயத்தின் நீர்ப்பாசன ஆற்றலை அதிகரிக்கும் எனக் கூறப்பட்டது. எவ்வாறாயினும் கருத்திட்டமானது மத்தள விமானநிலையம், ஹம்பாந்தோட்டை கைத்தொழில் வலயம் மற்றும் ஹம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை ஆகியவற்றிற்கு நீர் விநியோகிப்பதை முன்னுரிமைப்படுத்தும் என்கின்ற கரிசணைகள் எழுப்பப்பட்டன.

கருத்திட்டத்துடன் தொடர்புடைய பல்வேறு நிர்மாண நோக்கங்களுக்காக அரசாங்கத்தினால் வெலிமட, ஊவா பரணகம, எல்ல மற்றும் வெள்ளவாய பிரதேச செயலகப் பிரிவுகளில் இருந்து சுமார் 5022 ஏக்கர் காணிகள் கொள்ளப்பட்டன. கருத்திட்டத்தின் மொத்த நிர்மாணச் செலவு 60842 மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டது. இந்த நிதியில் 85% இனை ஈரான் ஏற்றுமதி அபிவிருத்தி வங்கி 20 வருடக் கடனாக வழங்கியது. எஞ்சிய 15% நிர்மாணச் செலவினை இலங்கை ஏற்றுக்கொண்டது. இதற்கு மேலதிகமாக காணி கொள்ளல், மீள்குடியேற்றம், சுற்றாடல் தாக்கத் தணிப்பு, நீர்ப்பாசன வலையமைப்பினை மீளமைத்தல், கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் மதியுரைச் சேவை ஆகியவற்றுக்கு ஏற்படும் என மதிப்பிடப்பட்ட 15475 மில்லியன் ரூபா செலவினையும் அரசாங்கம் ஏற்றுக்கொண்டது.

ஆரம்பத்தில் இருந்தே பாதிக்கப்பட்ட மக்களும் நிபுணர்களும் கருத்திட்டத்திற்கு பாரிய எதிர்ப்பினை வெளியிட்டனர். கருத்திட்டம் 2008 ஏப்ரலில் ஆரம்பிக்கப்பட்டது. முன்சாத்திய வள ஆய்வு 2008 ஜூலையில் மேற்கொள்ளப்பட்டது. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றாடல் தாக்க மதிப்பீட்டின் 3 அத்தியாயங்கள் 2010 டிசம்பரில்

பொதுமக்களின் கருத்துக்களைப் பெறுவதற்காக 30 நாட்களுக்கு கிடைக்கச் செய்யப்பட்டது. சுற்றாடல் தாக்க மதிப்பீட்டிற்கு பொதுமக்கள் ஆகக்கூடுதலான சமர்ப்பணங்களை வழங்கினர். சுற்றாடல் அமைப்புக்கள், விவசாயிகளின் சங்கங்கள், சமுதாயக் குழுக்கள் மற்றும் பாதிக்கப்பட்ட தனிநபர்கள் எதிர்ப்புக்களைப் பதிவுசெய்தனர். மத்திய சுற்றாடல் அதிகாரசபை நிபந்தனையுடன் அறிக்கையினை 2012 ஏப்ரலில் அங்கீகரித்தது. சுற்றாடல் தாக்க மதிப்பீடு மண்ணினை மீள்வலுப்படுத்துவது தொடர்பிலும் நிலக்கீழ் நீருக்கு ஏற்படும் தாக்கம் தொடர்பிலும் நீர் மூலங்களுக்கு ஏற்படும் தாக்கங்கள் தொடர்பிலும் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்தத் தவறியுள்ளது என்றும் நிலத்துக்குக் கீழே சுரங்கம் தோண்டுவதனால் ஏற்படும் மண்ணரிப்பு தொடர்பிலும் ஏற்படக்கூடிய மண்சரிவு தொடர்பிலும் நிலக்கீழ் நீர் அற்றுப்போவது தொடர்பிலும் அறிக்கை கவனம் செலுத்தத் தவறியுள்ளது என்றும் சர்ச்சைகள் வெடித்தன. அதிகரித்து வந்த கண்டனங்களைத் தொடர்ந்து 2017 ஆம் ஆண்டில நிபுணர்கள் அடங்கிய குழாம் ஊடகங்களுக்கு அறிக்கையிடுகையில் நிர்மாணக் கட்டத்தின்போது நிலக்கீழ் நீர்மட்டம் குறைவடையும் சாத்தியத்தினை சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை சுட்டிக்காட்டியது என்றும் நிலக்கீழ் நீர்மட்டத்தில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களை மத்திய சுற்றாடல் அதிகாரசபை கண்காணிக்கும் பொறுப்பினைக் கொண்டிருந்தது என்றும் பாதுகாப்பு மற்றும் அவசரநிலை நடவடிக்கைகளுக்கான பொறுப்பினையும் கண்காணிப்புத் திட்டத்தினையும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை நீர்ப்பாசன மற்றும் நீர்வளங்கள் அமைச்சிடம் கையளித்துள்ளது என்றும் குறிப்பிட்டது. கருத்திட்டத்தினை அங்கீகரித்த அமைச்சரவைப் பத்திரம், 1995 ஜூன் 15 இற்கு முன்பிருந்து அரச காணிகளில் வாழ்ந்துவருபவர்களும் வாடகை வீடுகளில் வசித்து வருபவர்களும் வாடகை செலுத்தும் விவசாயிகளும் ஜீவனோபாயம் நடத்தும் குடும்பங்களும் ஒரு வீட்டினையும் காணியினையும் **நட்டஈடாகப்** பெறுவதற்கான தகுதியினைக் கொண்டுள்ளன எனக் குறிப்பிட்டதாகக் குறிப்பிடப்படுகின்றது. இத்திட்டமானது வெற்றிகரமாக அமுல்படுத்தப்படவில்லை. கருத்திட்டத்திற்காகக் காணிகள் எடுக்கப்பட்ட பின்னர் அதற்காக எவ்வித நட்டஈட்டினையும் பெற்றுக்கொள்ளாதவர்கள் முறைப்பாடுகளைச் செய்துள்ளனர். 2013 இல் காணிகளை இழந்தவர்களுக்கு ஓர் அறுவடைக் காலத்திற்காக மட்டுமே நட்டஈடு வழங்கப்பட்டது. ஆனால் இவர்கள் 12 அறுவடைக் காலங்களை இழந்துள்ளனர். பண்ணை நிலங்களை வைத்திருந்தவர்களுக்கு மாற்று நிலங்கள் வழங்கப்படவில்லை. மேலும் சிலர் முன்பு தேயிலைத் தோட்டங்களாக இருந்த காணிகளில் குடியேற்றப்பட்டுள்ளனர். இக்காணிகள் ஆழமான சரிவினைக் கொண்ட காணிகளாகும் என்பதுடன் இக்காணிகளில் புதிய வீடுகளை நிர்மாணிப்பது சாத்தியமற்றதாகும். காணி உரித்தாண்மை சந்தேகத்துக்குரியதாகவுள்ள பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள நட்டஈடு நீதிமன்றில் கையளிக்கப்படும் எனப் பிரதேச செயலாளர்கள் இக்குடும்பங்களுக்கு அறிவித்துள்ளனர். எவ்வாறாயினும் நட்டஈட்டினை எவ்வாறு கோருவது என்பது பற்றிய மேலதிக தகவல்கள் எவையும் மக்களுக்கு வழங்கப்படவில்லை. உரித்தாண்மையினை நிரூபிக்கக்கூடிய மக்கள் அவர்களின் நட்டஈட்டினைப் பெற்றுக்கொள்வதில் தாமதம் நிலவுவதாக முறைப்பாடு செய்துள்ளதுடன் சில அதிகாரிகளின் தனிப்பட்ட பகைமையே இதற்கான காரணம் எனத் தாம் நம்புவதாகவும் குறிப்பிட்டுள்ளனர். நட்டஈட்டினைச் செலுத்துவதிலும் பெறுமதி கணித்தலிலும் குறைபாடுகள் இடம்பெற்றுள்ளன. சில வியாபாரிகளுக்குப் பல லட்சக்கணக்கான ரூபாய்கள் நட்டஈடு வழங்கப்பட்டுள்ள அதேவேளை பயிர்செய் விவசாயிகளுக்கு மிகக்குறைவான நட்டஈடே வழங்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, தவறான நடைமுறைகளை விசாரித்து நீதியினை உறுதிப்படுத்துவதற்காகவும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவும் ஒரு சுயாதீனமான ஆணைக்குழு அமைக்கப்படவேண்டும் என்ற உறுதியான மற்றும் அவசரமான கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

**நீர்க்கசிவு:** கருத்திட்டத்தின் பாரதூரமான பிரச்சினை நீர்க்கசிவாகும். 2015 ஆம் ஆண்டில் நீர்க்கசிவு ஒன்று தொடர்பாக முறைப்பாடு செய்யப்பட்டது. 2019 ஏப்ரல் மாதத்தில் நீர்க்கசிவு நிமிடத்திற்கு 800 லீற்றர்கள் என அறிக்கையிடப்பட்டது. விவசாயத்திற்கு அவசியமான நீர் மூலங்களும் சிறு கிராமங்கள் பயன்படுத்திய நீர் மூலங்களும் நீர்க்கசிவினால் வற்றிவிட்டன.

நூற்றுக்கணக்கான கிணறுகள் வற்றிவிட்டன. மேலும் நூற்றுக்கணக்கான விவசாயக் காணிகள் பயனற்றதாகிவிட்டன. சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கான நீர் விநியோகத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளமையே இதற்கான காரணமாகும். மக்கள் எதிர்நோக்கிய நீர்ப்பற்றாக்குறைக்கான நட்டஈடாக மக்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. ஒரு போகப் பயிர்ச்செய்கைக்காக மட்டுமே உதவி வழங்கப்பட்டது என்றும் அதுவும் பாதிக்கப்பட்டவர்களுள் மிகச் சொற்பமானவர்களுக்கு மாத்திரமே வழங்கப்பட்டது என்றும் முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாசாக்கப்பட்ட நீர்நிலைகளுக்கு அருகில் மீளக் குடியேற்றப்பட்டவர்களுக்கு நீர்த்துப்பரவாக்க வசதிகள் வழங்கப்படவில்லை. இற்றைவரையில் முறைமைவாய்ந்த வகையில் நீர் விநியோகம் மேற்கொள்ளப்படவில்லை. பாதிக்கப்பட்ட சமுதாயங்களில் வாழும் பெண்கள் தமது வீடுகளின் நீர்த்தேவைக்காக நீண்ட தூரம் சென்று நீரைப் பெறும் மேலதிக சுமையினையும் சுமக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

**துளையிடலினால் நிலத்தின் உறுதித்தன்மை பாதிக்கப்பட்டுள்ளது.** துளையிடலால் ஆயிரக்கணக்கான கட்டிடங்களுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளது. கருத்திட்டத்தினால் 7500 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. 7100 வீடுகள் வசிக்க முடியாதவையாக மாறியுள்ளன. பண்டாரவளை பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 12 வீடுகளும் எல்ல பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 15 வீடுகளும் முற்றுமுழுவதுமாக அழிக்கப்பட்டுள்ளன. முற்றுமுழுவதும் வீடுகள் அழிக்கப்பட்டவர்களுக்கு வாடகையாகப் பயன்படுத்த நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் கருத்திட்டத்தினால் பாதிக்கப்பட்ட பலருக்கும் எவ்விதத்திலும் நட்டஈடு வழங்கப்படவில்லை. ஆயிரக்கணக்கான மக்கள் தங்களின் வீடுகளுக்கு ஏற்பட்ட சேதங்களுக்காகத் தொடர்ந்தும் நட்டஈடு கோரிவருகின்றனர். சிலருக்கு நட்டஈடு கிடைத்துள்ளது. அரசியல் தொடர்புகளும் ஏனைய தொடர்புகளும் இதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவே அறியக்கிடக்கின்றது.

2017 ஜூன் 27 ஆம் திகதி, **பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான நபர்கள் ஆர்ப்பாட்டம் நடத்திய பின்னர்** அப்போதைய ஜனாதிபதி சிறிசேனவினைச் சந்திக்கும் வாய்ப்பினைப் பெற்றனர். விளைவாகக் கருத்திட்டம் நிறுத்தப்பட்டு சுரங்கங்களின் நிர்மாணிப்புக் காரணமாக குடியிருப்பாளர்கள் எதிரநோக்குகின்ற சிரமங்களை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக அமைச்சரவை உபகுழு ஒன்று அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டது. குழுவின் அறிக்கை 2017 ஜூலை 18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது. அறிக்கையானது குடிநீர் விநியோகத்திற்கான பரிந்துரைகளையும் வீடுகள், பாடசாலைகள், கோயில்கள் மற்றும் ஏனைய இடங்கள் உள்ளிட்ட வெடிப்புக்கள் ஏற்பட்டுள்ள இடங்கள் பற்றிய தகவல்களையும் மீள்குடியேற்றம், நட்டஈடு பற்றிய தகவல்களையும் மக்களைக் குடியேற்றுவதற்காக கிரெய்க் தோட்டத்திடமிருந்து 50 ஏக்கர் காணியினை அரசு எடுக்கவேண்டும் என்கின்ற பரிந்துரையினையும் கொண்டிருந்தது.

கருத்திட்டமானது மக்களின் வாழ்வாதாரங்கள் மீதும் மக்களின் வீடுகளின் மீதும் தனிப்பட்ட நிதிகளின் மீதும் பரந்துபட்ட மோசமான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளதுடன் சுகாதாரத்திற்கும் நலனோம்புகைக்கும் கருத்திட்டத்தினால் ஏற்படுத்தப்பட்ட ஆபத்துக்கள் காரணமாக மக்களின் வாழ்க்கைப் பாங்கே மாறியுள்ளது. மேலும் நீரினைப் பெற முடியாத காரணத்தினால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்கள் பாதுகாப்பான மற்றும் செழிப்பான எதிர்காலத்தினை உருவாக்குவதும் கடினமானதாக மாறியுள்ளது. கருத்திட்டத்தினால் சுற்றாடலுக்கும் கணிசமான தாக்கம் ஏற்பட்டுள்ளது. பிராந்தியத்தின் எதிர்காலத் திட்டமிடலிலும் இது பின்விளைவுகளைக் கொண்டிருக்கும். பாதிக்கப்பட்ட மக்கள் பரிகாரத்திற்காகவும் போதிய நட்டஈட்டிற்காகவும் தங்களின் பிரச்சினைகளுக்கான தீர்விற்காகவும் நீதிக்காகவும் காத்திருக்கின்றார்கள்.



# பரண்ட தோட்டம்

(மக்கள் காணி ஆணைக்குழு முன் நடந்த விசாரணைகளின்போது சமர்ப்பிக்கப்பட்டவற்றில் இருந்து தயாரிக்கப்பட்டது)

- **அமைவிடம்** மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தின் கடியன்லேன, பஸ்பகே கோரலே பிரதேச செயலகம்
- **பாதிக்கப்பட்ட குடும்பங்கள் / மக்களின் எண்ணிக்கை** 139 குடும்பங்கள்
- **பிணக்கிலுள்ள காணியின் விஸ்தீரணம்** 100 ஏக்கர்கள்
- **காணிப் பிணக்கு ஆரம்பித்த வருடம்** 2012

2006 ஆம் ஆண்டு 384982.36 ரூபாவிற்கு காணி மீட்பு ஆணைக்குழுவிடமிருந்து (LRC) 100 ஏக்கர்கள் தேயிலைத் தோட்டத்தினைக் கொள்வனவு செய்ததாக இல்லப்பெரும குடும்பம் குறிப்பிடுகின்றது. அக்காலகட்டத்திலே, கொள்வனவு செய்ததாகக் கூறப்படும் தேயிலைத் தோட்டத்தில் சுமார் 100 லைன் வீடுகளும் பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்திடமிருந்து பெற்ற கடனினால் கட்டப்பட்ட 25 வீடுகளைக் கொண்ட வீடமைப்புத் திட்டமும் - இக்கடன் தொழிலாளர்களின் மாதச் சம்பளத்தில் இருந்து கழிக்கப்படுகின்றது – ஒரு கோயிலும் ஒரு கூட்டுறவுச் சங்கமும் ஒரு விளையாட்டு மைதானமும் இருந்தன. இத்தோட்டத்தில் 760 பேர் கொண்ட 115 குடும்பங்கள் உள்ளன. இவர்களுள் பாடசாலை செல்லும் வயதுடைய 450 சிறார்களும் உள்ளனர். இத்தோட்டத்தில் வாழும் குடும்பத்தினர் தாங்கள் 150 வருடங்களாகப் பரம்பரை பரம்பரையாக இந்தக் காணியிலேயே வாழ்ந்து வருவதாகக் குறிப்பிடுகின்றனர்.

2006 ஆம் ஆண்டு இல்லப்பெரும நீதிமன்றத்தில வழக்குத் தாக்கல் செய்த காரணத்தினால் தாம் வாழ்ந்துவரும் காணி இல்லப்பெருமவுக்குச் சொந்தமானது எனத் தீர்ப்பு வழங்கப்பட்டுவிட்டது என இம்மக்கள் 2012 ஆம் ஆண்டிலே அறிந்துகொள்கின்றனர். பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் வழக்கின் தரப்பாக ஆக்கப்படவில்லை. அல்லது நீதிமன்றத்தில் இப்படி ஒரு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை பற்றி இம்மக்களுக்கு ஒருபோதும் அறிவிக்கப்படவில்லை. வழக்கின் தரப்புக்களாக காணி மீட்பு ஆணைக்குழுவும் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையும் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் தொழில் வழங்குனரும் இல்லப்பெரும குடும்பமும் உள்ளனர் என இம்மக்கள் இதன் பின்னரே அறிந்துகொள்கின்றனர். நீதிமன்றத்தின் முன் சமர்ப்பிக்கப்பட்ட பத்திரங்களில் இல்லப்பெரும குடும்பம் கொள்வனவு செய்த தோட்டத்தில் 8 குடும்பங்கள் வசித்த 5 லைன் வீடுகள் மாத்திரமே இருந்ததாக இல்லப்பெரும குடும்பம் குறிப்பிட்டுள்ளது என இம்மக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

கிராமசேவையாளரும் நீதிமன்ற உத்தியோகத்தரும் அரசாங்க அதிபரின் அலுவலகத்தினைச் சேர்ந்த அதிகாரி ஒருவரும் குடியிருப்பாளர்களை வெளியேறுமாறு கூறும் நீதிமன்றத்தின் சான்றுப்படுத்தப்பட்ட நீதிமன்ற உத்தரவுடன் தோட்டத்திற்கு 2012 ஆம் ஆண்டு வந்தபோதே நீதிமன்ற வழக்கினைப் பற்றி இந்த மக்கள் அறிந்துகொண்டனர். பாதிக்கப்பட்ட 86 குடும்பங்கள் இல்லப்பெரும குடும்பத்திற்கு எதிராக ஒரு வழக்கினைத் தாக்கல் செய்தனர். ஆனால் முன்னைய நீதிமன்றக் கட்டளையினை மீளாய்வு செய்ய முடியாது என இவர்களுக்குக் கூறப்பட்டது. ஆனால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு 5 வருடங்கள் கடந்த பின்னரும் பிரதிவாதிகளில் 4 பேர் இறந்த பின்னருமே தீர்ப்பு 2019 ஆகஸ்டில் வழங்கப்பட்டது. பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் இந்த விடயத்தினை இல்லப்பெரும குடும்பத்துக்கு விளக்கி பேச்சுவார்த்தை நடத்த விரும்பினர். ஆனால் அவர்களுக்குச் சந்திப்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. தமக்குச் சார்பாக வழங்கப்பட்ட நீதிமன்றத் தீர்மானத்தினை அடிப்படையாகக் கொண்டு குடும்பங்களை வெளியேற்றுவதற்கான

கட்டளையினைப் பெறுவதற்கே இல்லப்பெரும குடும்பம் தொடர்ந்து முயற்சித்துவருகின்றது.

தோட்டத்தில் உள்ள தமது வீடுகளில் இருந்து இக்குடும்பங்கள் வெளியேறாத காரணத்தினால் இக்குடும்பங்களின் தொழில்வழங்குனரான மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையினால் (JEDB) இல்லப்பெரும குடும்பத்திற்கு மாதாந்தம் 500000 ரூபா செலுத்தப்பட்டுவருவதாக இக்குடும்பங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு, ஹரித்ர பூமி எனும் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு காணி உரித்தாண்மையினை வழங்குவதற்கான அரச நிகழ்ச்சித்திட்டத்தின் ஓரங்கமாக அப்போதைய அரச தொழில்முயற்சியாண்மை மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சரான லக்ஷ்மன் கிரிஎல்லவினால் வழக்குத் தாக்கல் செய்த 86 குடும்பங்களுக்கு "ஹரித பூமி கொடைகள்" வழங்கப்பட்டன. "கொடை" ஆவணமானது காணிப் பாவனை தொடர்பாக பல விதிகளைக் குறித்துரைப்பதுடன் காணியின் எல்லைகள் பற்றியோ அல்லது விஸ்தீரணம் பற்றியோ எதனையும் குறிப்பிடவில்லை.

தங்களை வெளியேற்றுவதற்கான நீதிமன்றச் செயன்முறையில் 2020 மார்ச் 12 ஆம் திகதிய விசாரணையின் பின்னர் பரண்டா தோட்டம் சொந்தமாக வருகின்ற போஹில் தோட்டத்தினுள் ஜோஈடிபிக்குச் சொந்தமான வேறு 100 ஏக்கர்களை இல்லப்பெரும குடும்பத்திற்கு வழங்குவதற்காகக் காணியினைத் தெரிவுசெய்வதற்கு ஜோஈடிபிக்கு இரண்டு மாதங்கள் வழங்கப்பட்டுள்ளதை பாதிக்கப்பட்ட குடும்பங்கள் 2020 ஆம் ஆண்டில் அறிந்துகொண்டன. அடுத்த நீதிமன்ற விசாரணை 2020 மே 28 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பல தலைமுறைகளாகத் தமது உடைமையாக இருந்து வரும் வீடு மற்றும் காணி ஆகியவற்றினையே தமது கோரிக்கை அடிப்படையாகக் கொண்டுள்ளது என்றும் இந்த உடைமை மதிக்கப்பட்டு சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்படவேண்டும் என்றும் இக்குடும்பங்கள் கூறுகின்றன. யதார்த்தத்தில் இம்மக்கள் அவர்களிடம் தற்போது இருக்கும் காணித் துண்டுகளையே அவர்களின் பிள்ளைகளுக்காகப் பிரித்துள்ளனர். ஏனெனில் தங்களின் பிள்ளைகளுக்கு இவர்களினால் வழங்கப்படக்கூடிய ஒரே சொத்து இக்காணித் துண்டுகள்தான். இம்மக்களின் வாழ்வினை நிச்சயமின்மை சூழ்ந்துள்ளது. தமக்குத் தெரிந்த ஒரே காணியிலும் வீடுகளிலும் வாழ்வது சட்டவிரோதமானது எனத் தமக்கு அறிவிக்காமலும் அல்லது தமது நிலைப்பாட்டினை எடுத்து விளக்க எவ்வித வாய்ப்பினையும் வழங்காமலும் சட்ட முறைமை முடிவெடுத்திருப்பது அநீதியானது என்கின்ற ஓர் ஆழமான உணர்வு இம்மக்களின் மனதில் தோன்றியுள்ளது. இம்மக்களில் சிலருக்கு ஏதோ ஒரு வகையில் அவர்களின் காணிகளின் மீது உரித்தாண்மையினை வழங்கி அரசு பதிற்செயற்பாடாற்றியிருந்தாலும் அந்த உரித்தாண்மை நிபந்தனையுடன் கூடியதாகவும் தெளிவற்றதாகவும் உள்ளது.



# பெல்வத்த

(மக்கள் காணி ஆணைக்குழு முன் அளிக்கப்பட்ட சாட்சியங்கள் மற்றும் சிவில் சமூக நிறுவனங்களின் அறிக்கை ஆகியவற்றில் இருந்து தயாரிக்கப்பட்டவை)

- **அமைவிடம்** மொனராகல மாவட்டம்
- **பாதிக்கப்பட்ட குடும்பங்கள் / மக்களின் எண்ணிக்கை** 2700 குடும்பங்களுக்கு மேல்
- **பிணக்கிலுள்ள காணியின் விஸ்தீரணம்** சுமார் 8400 ஏக்கர்கள்
- **காணிப் பிணக்கு ஆரம்பித்த வருடம்** 1980 களில்

பல தலைமுறைகளாக பெல்வத்த பிரதேசத்தில் விவசாயத்தில் ஈடுபட்டுவந்த பாரம்பரிய விவசாயிகளின் காணிகளை இலங்கை அரசு எடுத்துக்கொண்டது. 1980 களின் ஆரம்பப் பகுதியில் பெல்வத்த சீனிக் கம்பனிக்கு 84000 ஏக்கர் விஸ்தீரணமான காணி 30 வருடக் குத்தகைக்கு வழங்கப்பட்டது. சில தடவைகள் உரிமையாளர்களை மாற்றிய கம்பனியினை 2011 ஆம் ஆண்டில் 'செயலூக்கமற்ற தொழில்முயற்சியாண்மைகள் மற்றும் செயலூக்கமற்ற சொத்துக்கள்' எனும் சட்டத்தின் கீழ் அரசாங்கம் தன்வசம் எடுத்துக்கொண்டது.

கரும்பு பயிர்செய்து அதனைக் கம்பனிக்கு விற்கவேண்டும் எனும் நிபந்தனையினை ஏற்றுக்கொண்ட பூர்வீகமான பாரம்பரிய விவசாயிகளில் சிலர் காணியில் தொடர்ந்து வாழ அனுமதிக்கப்பட்டனர். நாட்டின் ஏனைய பகுதிகளைச் சேர்ந்த ஏனைய பயிர்ச்செய்கையாளர்கள் கரும்பு பயிர் செய்வதற்காக பெல்வத்தயில் மீள்குடியேற்றப்பட்டனர். ஒவ்வொரு பயிர்ச்செய்கையாளருக்கும் சுமார் 4.5 ஏக்கர் காணி வழங்கப்பட்டது. இதில் அரை ஏக்கர் காணித் துண்டு வதிவிடப் பாவனைக்காக ஒதுக்கப்பட்டது. குடியிருப்பாளர்கள் காணித் துண்டில் வீடு கட்ட முடியும் ஆனால் காணிக்கு அல்லது சொத்திற்கு அவர்களினால் அனுமதிப் பத்திரத்தினையோ அல்லது உரித்தாண்மையினையோ பெறமுடியவில்லை. கம்பனியுடன் பயிர்ச்செய்கையாளர்கள் செய்த ஒப்பந்தம் ஆங்கில மொழியில் அமைந்திருந்தது. குடியேற்றங்களின் நிர்வாகம் கம்பனியினால் நிர்வகிக்கப்படுவதுடன் இக்காணிகளில் வாழும் குடும்பங்கள் உள்ளூர் நிர்வாகச் சேவைகளைப் பெற முடியாதாவர்களாக உள்ளனர். பெருந்தோட்டத்தில் 2700 குடும்பங்கள் வாழ்வதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

காணியில் பயிர்ச்செய்கையாளர்களைக் கம்பனி குடியேற்றியபோது அது ஒழுங்கமைக்கப்பட்ட குடியேற்றமாக இருந்ததுடன் இப்போது 16 குடியேற்றங்கள் காணப்படுகின்றன. வதிவிடக் காணிகளில் பல வருடங்கள் வாழ்ந்த போதிலும் - சிலர் 30 வருடங்களுக்கும் மேல் வாழ்ந்துவருகின்றனர் - பயிர்ச்செய்கையாளர்கள் காணி மீது எவ்விதமான உரித்தாண்மையும் அற்றவர்களாக உள்ளனர். இதன் அர்த்தமாவது அவர்கள் தமது வதிவிடக் காணிகளில் மேற்கொள்ளும் எவ்வித முதலீடும் அவர்களின் பிள்ளைகளுக்கோ அல்லது பேரப்பிள்ளைகளுக்கோ போய்ச்சேராது என்பதாகும். இம்மக்கள் தமது வீடுகளை இழந்துவிடும் அச்சத்தினை வெளிப்படுத்தினர். ஏனெனில் தமது வீட்டினைத் தக்கவைத்திருப்பது அவர்கள் தொடர்ந்தும் பயிர்செய்யும் ஆற்றலிலேயே தங்கியுள்ளது. வயது முதிர்ந்த சில பயிர்ச்செய்கையாளர்கள் தமது குடும்பங்கள் எதிர்நோக்கும் இந்த நட்டாற்றுநிலையில் இருந்து குடும்பத்தினைக் காக்கும் பொறுப்பு தம்முடையது என நினைக்கின்றனர். ஏனெனில் சுகவீனம் காரணமாகத் தம்மால் பயிர்செய்ய முடியாது போனால் அல்லது மூப்பின் காரணமாக அல்லது வேறு காரணங்களினால் ஒழுங்காக வேலை செய்ய முடியாது போனால் தமது ஒட்டுமொத்தக் குடும்பமும் வருமானத்தினை இழந்துவிடும் என்பது அவர்களுக்குத் தெரியும்.

அரசுக்கும் கம்பனிக்கும் இடையிலான குத்தகை உடன்படிக்கை முடிவடைந்துள்ளதைப்

பயிர்ச்செய்கையாளர்கள் 2017 ஆம் ஆண்டில் அறிந்துகொண்டனர். இம்மக்கள் வீடுகளைக் கட்டியுள்ள காணிகள் உள்ளடங்கிய காணிகளை அரசு நிலஅளவை செய்ய ஆரம்பித்துள்ளது. இதற்கான காரணம் குத்தகை தொடர்பாக மீள்பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இருக்கலாம். தாம் தமது வீடுகள் என அழைத்த அரை ஏக்கர் காணியையாவது தமக்குச் சொந்தமாகத் தரவேண்டும் எனப் பயிர்ச்செய்கையாளர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இவர்களின் கோரிக்கைக்குப் பதிலாக புத்தள மற்றும் வெள்ளவாய பிரதேச செயலாளர்கள் ஜனவச அல்லது கொலனிகள் எனக் குறிப்பிடப்படும் 4 குடியேற்றங்களில் குடியிருப்பாளர் கணிப்பீட்டினை மேற்கொண்டனர். குடியேற்றங்களில் ஒன்றில் காணிக் கச்சேரி ஒன்று நடத்தப்பட்டு பயிர்ச்செய்கையாளர் குடும்பங்களில் இருந்து 90 விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்பட்டன. விண்ணப்பதாரர்களில் 84 பேருக்கு அவர்கள் உரித்தாண்மைக்குத் தகுதியானவர்கள் என்று பதில் வழங்கப்பட்டு விண்ணப்பித்து இரண்டு வருடங்களின் பின்னர் 2019 இல் உறுதிகள் வழங்கப்பட்டன. தாம் பெற்றுக்கொண்ட ஆவணங்களில் காணி உரித்தாண்மை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளமையில் தெளிவின்மை இருப்பதாகச் சில குடியிருப்பாளர்கள் கரிசனை எழுப்பியுள்ளனர். உரித்தாண்மைக்கான தமது விண்ணப்பங்களுக்கு உரிய கருதுகோள் வழங்கப்படவில்லை என்று பெண் தலைமைக் குடும்பங்கள் முறைப்பாடு செய்துள்ளன. மேலும் உயிர் வாழும் வாழ்க்கைத் துணை காணிக்கான உரித்தாண்மையினைத் தொடர்ந்து அனுபவிக்கலாம் என்பதை உறுதிப்படுத்தும் கூட்டு உரித்தாண்மை அங்கீகரிக்கப்படவில்லை. 9 மற்றும் 11 ஆம் கொலனியின் குடியிருப்பாளர்களிடம் அவர்கள் வதியும் காணி கதிர்காமக் கோவிலுக்குச் சொந்தமானது என்பதால் அக்காணிகளுக்கு உறுதி வழங்கப்படமுடியாது எனக் கூறப்பட்டுள்ளது. 3 ஆம் கொலனிக் குடியிருப்பாளர்கள் தங்களின் காணிகளுக்காக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளதாகவும் ஆனால் சாதகமான பதில் இன்னும் வழங்கப்படவில்லை என்றும் கூறுகின்றனர். கிராமசேவையாளர் கிட்டத்தட்ட 174 விண்ணப்பங்களைச் செயன்முறைப்படுத்த வேண்டியிருப்பதனால் இதற்கு நேரம் எடுக்கும் என இவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. 16 ஆம் கொலனியில் 67 குடும்பங்கள் அவற்றின் காணிகளுக்கான அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுள்ளன. இதன் அர்த்தம் என்னவெனில் காணி அபிவிருத்தி செய்யப்படவில்லை என்ற அடிப்படையில் அரசினால் காணியினை மீள எடுத்துக்கொள்ள முடியும் என்பதாகும். அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டவர்களில் சிலர் கம்பனியின் அங்கீகாரக் கடிதம் இன்றித் தங்களால் வங்கிக் கடன் பெற முடியவில்லை எனக் குறிப்பிட்டனர். ஒரு குடும்பத்தின் நிதித் தீர்மானத்தின் மீது கம்பனி எந்த அளவிற்குக் கட்டுப்பாட்டினைக் கொண்டுள்ளது என்பதை இது காட்டுகின்றது. மேலும் தமது குடும்பத்திற்குப் பாரதூரமான விளைவுகள் ஏற்படும் எனத் தெரிந்துகொண்டு சிறந்த வாழ்க்கை நிலைமைகளுக்கான கரிசனைகளை எழுப்பி கோரிக்கைகளை எழுப்புவது பயிர்ச்செய்கையாளர்களுக்கு எவ்வளவு கடினமான விடயமாக இருக்கலாம் என்பதையும் இது சுட்டிக் காட்டுகின்றது.


பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்குக் கம்பனி விதைகளையும் இயந்திரங்களையும் பூச்சிக்கொல்லிகளையும் வழங்கும் மேலும் அறுவடை விற்கப்பட்ட பின்னர் இச்செலவுகளைப் பயிர்ச்செய்கையாளருக்கு வழங்கும் பணத்தில் இருந்து கம்பனி கழித்துக்கொள்ளும் எனும் ஏற்பாட்டிற்கு இணங்குமாறு பயிர்ச்செய்கையாளர்கள் பலவந்தப்படுத்தப்பட்டனர். ஆரம்ப காலங்களில் அறுவடை சிறப்பானதாக இருந்ததாகவும் செலவுகளைக் கழித்த பின்னர் கூட தங்களுக்குப் போதிய ஊதியம் கிடைத்ததாகவும் சில பயிர்ச்செய்கையாளர்கள் குறிப்பிட்டனர். எவ்வாறாயினும் காலப்போக்கில் விளைச்சல் குறைவடைந்து செலவுகளும் ஒப்பீட்டளவில் அதிகரித்துள்ளமையால் வாழ்வாதாரம் மிகவும் கடினமானதாக மாறியுள்ளதாகப் பயிர்ச்செய்கையாளர்கள் குறிப்பிடுகின்றனர். தாம் முன்பு 200 தொன் விளைச்சலைப் பெற்றுக்கொண்டதாகவும் ஆனால் இப்போது 50 தொன் விளைச்சல் கூடக் கிடைப்பதில்லை என்றும் இதற்குக் காரணம் ஏகவினப் பயிர்ச்செய்கையின் காரணமாக மன் சுழற்சி நடைபெறாமையே என்றும் இதனாலேயே விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது

என்றும் பயிர்ச்செய்கையாளர்கள் குறிப்பிடுகின்றனர். காலநிலை மாற்றமும் நிலத்தினைப் பாதித்து வருவதால் இப்பிரச்சினையும் தீர்க்கப்படவேண்டும் என இவர்கள் கூறுகின்றனர். காணியில் வேறு எந்தப் பயிரையும் வளர்ப்பதற்குக் குடியிருப்பாளர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. இவர்கள் வசிக்கும் காணியில் கூட இதே நிலைதான். இவர்கள் வசிக்கும் காணித் துண்டில் தென்னை மரமோ அல்லது தங்களின் சொந்த நுகர்விற்காக மரக்கறிகளோ அல்லது வேறு பயிர்களோ வளர்க்கக் கூடாது எனும் எச்சரிக்கைக் கடிதத்தினை கம்பனி இம்மக்களுக்கு அனுப்பியுள்ளது. இதற்கு இணங்காவிட்டால் இவர்கள் தங்களின் வீடுகளை இழப்பர் என்றும் சில எச்சரிக்கைக் கடிதங்கள் இம்மக்களை அச்சுறுத்தியுள்ளன.

கம்பனியினால் இம்மக்கள் மீது மேலதிக நிதிச் சுமைகளும் சுமத்தப்பட்டுள்ளன. உதாரணமாக, காட்டுத் தீயினால் பயிர்கள் சேதமடைந்தால், சேதத்திற்கான செலவினைப் பயிர்ச்செய்கையாளர்களே ஏற்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதுடன் பயிர்களை 3 நாட்களினுள் கையளிக்காவிட்டால் அதற்கு அபராதமும் விதிக்கப்படுகின்றது. கதிர்காமக் கோவிலுக்குச் சொந்தமானது என இப்போது குறிப்பிடப்படும் காணிகளில் வாழ்பவர்களிடமிருந்து சிறு வரியும் அறவிடப்படுகின்றது. இதேபோன்று 2016 ஆம் ஆண்டில் சில குடும்பங்கள் தங்களின் காணிகளுக்கான அனுமதிப் பத்திரங்கைளக் கோரியபோது “ஆவணங்களின் தயார்படுத்தலுக்கு” என்று இம்மக்களில் சிலரிடமிருந்து கட்டணம் அறவிடப்பட்டுள்ளது. இது எந்த அடிப்படையும் அற்றது என்பதை இம்மக்கள் பின்னர் அறிந்துகொண்டனர். அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்டவர்களில் உள்ளடங்காத ரந்தெனியவைச் சேர்ந்த 30 குடும்பங்கள் தாம் வசிக்கின்ற வீட்டிற்காகவும் காணிக்காகவும் தாம் வரி செலுத்தவேண்டும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் இது மிகவும் அநீதியானது எனவும் குறிப்பிட்டனர்.

பயிர்ச்செய்கையாளர்கள் முதலில் குடியேற்றத்திற்கு வந்தபோது அவர்களுக்குச் சுகாதார முகாம்கள், நீர், மின்சாரம் மற்றும் போக்குவரத்து வசதிகள் ஆகியவை வழங்கப்படும் எனக் கம்பனி வாக்குறுதியளித்தது. எவ்வாறாயினும் 1990களில் இருந்து சேவைகளின் பராமரிப்பில் வீழ்ச்சி ஏற்படத் தொடங்கியது. ஆனால் 2000 ஆம் ஆண்டு கம்பனியின் உரித்தாண்மையில் மாற்றம் ஏற்பட்ட பின்னரே சேவைகள் நின்றுபோயின எனச் சிலர் குறிப்பிடுகின்றனர். போக்குவரத்து வசதிகள் மிக மோசமானவையாகக் காணப்படுவதுடன் ஒரு கொலனியில் இருந்து மற்றொரு கொலனிக்குச் செல்வது கூடக் கடினமானதாகவுள்ளது என இம்மக்கள் குறிப்பிடுகின்றனர். இதனால் இம்மக்கள் கூடுதல் கட்டணம் செலுத்தி முச்சக்கரவண்டியில் செல்லவேண்டியுள்ளது. நீர்ப்பற்றாக்குறையும் இக்குடும்பங்களின் ஆரோக்கியத்தினைப் பாதித்துள்ளது. கிடைக்கும் குடிநீர் பிளாஸ்திக் கொள்கலன்களில் கடும் வெயிலில் களஞ்சியப்படுத்தப்படுகின்றது. இதனால் ஏற்படக்கூடிய ஆரோக்கியப் பிரச்சினை பற்றிக் குடும்பங்கள் கரிசனை கொண்டுள்ளன. கொலனியிலுள்ள மக்களில் மிக அதிகமானவர்கள் நாட்பட்ட சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் பல இறப்புக்கள் சம்பவித்து விளைவாகப் பெண் தலைமைக் குடும்பங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

கொலனியில் வசித்து வருகின்ற காரணத்தினால் பயிர்ச்செய்கையாளர்களின் குடும்பங்கள் சமூக வேறாக்கலை அனுபவித்துவருகின்றன என்பது தெளிவான விடயமாக உள்ளது. இக்குடும்பங்கள் அரச நிர்வாக சேவைகளில் இருந்து துண்டிக்கப்பட்டுள்ளதாக உணர்கின்றன. இக்குடும்பங்கள் தமது காணிகளின் மீதும் வீடுகளின் மீதும் அற்பமான கட்டுப்பாட்டினையே கொண்டுள்ளன. பெருந்தோட்டங்களினுள் கரும்புச் செய்கையின் மீது விதிக்கப்படும் சுரண்டல்மிக்க நிபந்தனைகளின் காரணமாக இம்மக்கள் தங்களின் நிதி நலனோம்புகை தொடர்பாகத் தொடர்ச்சியாகக் கரிசனை கொண்டுள்ளனர். மேலும் இவர்களினால் தங்களின் பிள்ளைகளுக்கான எதிர்காலத்தினைத் திட்டமிட முடியாமலுள்ளது. தாம் அடிமைகளாக வாழ்வதாகத் தமது நிலையினை ஒரு பயிர்ச்செய்கையாளர் இரத்தினச் சுருக்கமாகக் குறிப்பிட்டார்.




# சிறிசர உயன, தெமடகொட

(மக்கள் காணி ஆணைக்குழு முன் அளிக்கப்பட்ட சாட்சியங்கள் மற்றும் சிவில் சமூக நிறுவனங்களின் அறிக்கை ஆகியவற்றில் இருந்து தயாரிக்கப்பட்டவை)

- **அமைவிடம்** கொழும்பு மாவட்டம்
- **பாதிக்கப்பட்ட குடும்பங்கள் / மக்களின் எண்ணிக்கை** 700 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள்
- **பிணக்கிலுள்ள காணியின் விஸ்தீரணம்** 700 மனைத்தொகுதிகளுக்கு மேல்
- **காணிப் பிணக்கு ஆரம்பித்த வருடம்** 2014

நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நகர மீளுருவாக்கக் கருத்திட்டத்தின் காரணமாகப் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட அல்லது மீள்குடியேற்றப்பட்ட கொழும்பு நகரத்து வறிய மக்களுக்காக நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் நிர்மாணிக்கப்பட்ட மாடிக்கட்டிடத் தொகுதிகளில் ஒன்றுதான் சிறிசர உயன. கொழும்பு நகரத்தினை 'உலகத் தரம்வாய்ந்த நகரங்களில்' ஒன்றாக மாற்றுவதற்கான பெரும் திட்டத்தின் பகுதியே இக்கருத்திட்டமாகும். இந்த உயர் மாடிக் கட்டிடத் தொகுதி 2014 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது. இதில் 700 மனைத் தொகுதிகள் கொண்ட 12 மாடிகள் உள்ளன. இது தெமட்டகொடவில் அமைந்துள்ளது. இற்றைவரையில் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் வடகொழும்பில் பல்வேறு இடங்களில் நிர்மாணிக்கப்பட்ட பல்வேறு உயர் மாடிக் கட்டிடத் தொகுதிகளில் சுமார் 15000 குடும்பங்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளன. சிசிற உயனவில் வாழும் மக்கள் அவர்களின் வாழ்விடங்களாக இருந்த கொட்டா வீதி, 168 தோட்டம், அப்பிள்தோட்டம், மாளிகாவத்தை, 43 தோட்டம் மற்றும் பேக்கரித் தோட்டம் ஆகியவற்றில் இருந்து விருப்பமில்லாமல் மீள்குடியேற்றப்பட்டவர்களாவர் அல்லது பலவந்தமாக வெளியேற்றப்பட்டவர்களாவர். இக்குடும்பங்களில் சில அவர்களின் வீடுகளில் பல தசாப்தங்களாக வாழ்ந்து வந்தவர்கள். குடியிருப்பாளர்களில் பெரும்பான்மையானவர்கள் நாட்கூலி வேலை செய்பவர்களாகக் கொழும்பின் பல இடங்களிலும் முச்சக்கரவண்டிச் சாரதிகளாகவும் தோட்டக்காரர்களாகவும் துப்பரவுத் தொழிலாளர்களாகவும் வீட்டு வேலையாட்களாகவும் தொழிற்சாலைகளில் வேலை செய்வோராகவும் வாழ்ந்து வந்தனர். சிலர் கொழும்பு மாநகர சபை, துறைமுக அதிகாரசபை ஆகியவற்றில் பணியாற்றி வந்தனர் அல்லது தனியார் அலுவலகங்களில் பணியாற்றிவந்தனர்.

நகர மீளுருவாக்கக் கருத்திட்டத்தின் மீள்குடியேற்றக் கொள்கை 'வீட்டுக்கு வீடு' என இருந்ததேயன்றி குடும்பத்திற்கு வீடு என இருக்கவில்லை. பாதிக்கப்பட்ட குடும்பங்களைக் கலந்தாலோசிக்காது இக்கொள்கை உருவாக்கப்பட்டது. இம்மக்கள் முன்பு வாழ்ந்த வீடுகளின் அளவினையோ அல்லது அவ்வீட்டில் வாழ்ந்த குடும்பங்களின் எண்ணிக்கையினையோ இக்கொள்கை கருத்திற்கொள்ளவில்லை. அதாவது, பல குடும்பங்கள் ஒன்றாக வாழ்ந்த 500 சதுர அடிக்கும் மேற்பட்ட பெரிய வீடுகளைக் கொண்ட அல்லது பல தட்டுக்களைக் கொண்ட வீடுகளைக் கொண்ட குடும்பங்களுக்கு – பொதுவாக இவ்வாறுதான் இம்மக்கள் வாழ்ந்துவந்தனர் - ஒரு வீட்டுத் தொகுதிக்கு மாத்திரமே உரித்து வழங்கப்பட்டது. எனவே, பெரிய வீடுகளில் வாழ்ந்த குடும்பங்கள் இப்போது வெறும் 400 சதுர அடிகளைக் கொண்ட – ஒவ்வொரு வீட்டுத் தொகுதியின் அளவும் இதுதான் - ஒரு வீட்டில் ஒன்றாக வாழும் நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு வீடுகளில் இடமின்மை காணப்படுவதும் ஒட்டுமொத்தக் கட்டிடத் தொகுதியின் வடிவமைப்பும் உணவுப் பொருட்களைத் தயாரித்து விற்பனை செய்தல், சைக்கிள் கடை நடத்தல் மற்றும் சில்லறைக் கடை நடத்தல் போன்ற முறைசாரா வாழ்வாதாரங்களில் ஈடுபட்டவர்கள் இவ்வீடுகளில் குடியேற்றப்பட்ட பின்னர் இவ்வாறான வாழ்வாதார நடவடிக்கைகளைக் கொண்டு நடத்தமுடியாத நிலைமைக்குக் காரணமாகியுள்ளது.

இம்மனைத் தொகுதிகளின் வரையறுக்கப்பட்ட இடவசதி மற்றும் நெரிசல் காரணமாகவும் அவை உயர்மாடித் தொகுதிகளாக இருக்கின்ற காரணத்தினாலும் குடும்பத்தினுள்ளும் குடும்பங்களுக்கிடையிலும் அந்தரங்கம் என்பது பாதிக்கப்பட்டுள்ளதுடன் குடும்ப உறுப்பினர்களுக்கிடையிலும் அயலவர்களுக்கிடையிலும் இதனால் பிரச்சினைகளும் ஏற்படுகின்றன. இந்தப் புதிய அமைப்பில் கொழும்பின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்த மக்கள் இடம்பெயர்க்கப்பட்டு அவர்களின் முன்னைய சமூக வலையமைப்புக்கு வெளியே அவர்கள் முன்னர் அறிந்திராத மக்களுடன் நெருக்கமாக வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். இதனால் முன்பு சமூகங்களின் மத்தியில் காணப்பட்ட சமூகப் பாதுகாப்பு, அன்னியோன்யமான உறவு மற்றும் நட்புமிக்க சூழல் சீர்குலைந்துள்ளதுடன் பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் பாதுகாப்பற்ற சூழல் இந்தச் சுற்றாடலில் உருவாக்கப்பட்டுள்ளது.

சிறிசர உயனவில் வாழும் மக்களுக்கிருக்கும் பிரதான பிரச்சினைகளில் ஒன்று இவர்களின் மனைத்தொகுதிகளுக்கு எவ்விதமான உரித்தாண்மையும் இல்லாமல் இருப்பதும் இவர்களுக்கு எவ்விதமான சட்டரீதியான ஆவணங்களும் வழங்கப்படாமல் இருப்பதுமாகும். குடியிருப்பாளர்களில் சிலருக்கு அவர்களின் முன்னைய சொத்திற்கு உறுதிகள் இருந்துள்ளன. ஆனால் இவர்களுக்கு நட்டஈடு வழங்கப்படவில்லை. இவர்கள் தமது வீடுகள் மீது கொண்டிருந்த உரித்தாண்மை வகை எதுவாக இருந்தபோதிலும் தமது புதிய மனைத்தொகுதிக்கான உறுதியினைப் பெற்றுக்கொள்வதற்கு ஒவ்வொரு குடும்பமும் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு பத்துலட்சம் ரூபா செலுத்தவேண்டியுள்ளது. இதற்கான மாதாந்தத் தவணைக் கட்டணமும் ஏனைய பயன்பாட்டுக் கட்டணங்களும் இக்குடும்பங்களுக்குப் பாரிய நிதி நெருக்கடியினை ஏற்படுத்தியுள்ளன. குறிப்பாக இம்மக்கள் இவ்வாறு மீளக் குடியேற்றப்பட்டதில் இருந்து இவர்களின் வருமானங்களும் கணிசமாகக் குறைவடைந்துள்ளன.

சிறிசர உயனவிலுள்ள குடும்பங்கள் நகர அபிவிருத்தி அதிகாரசபை பாதுகாப்பு அமைச்சின் கீழ் இருந்த போதே மீளக் குடியேற்றப்பட்டனர். எனவே இவர்களை இவர்களின் முன்னைய வீடுகளில் இருந்து: வெளியேற்றியது இராணுவமேயன்றி வேறு அரசாங்க அதிகாரிகளோ அல்லது வீடமைப்பு அதிகாரசபைகளோ அல்ல. இராணுவமயமாக்கப்பட்ட நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் இம்மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டபோது தொல்லைகளுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் பயமுறுத்தல்களுக்கும் உள்ளானார்கள். இவ்விடயத்தில் இராணுவம் தலையிட்டமையால் இம்மக்கள் தங்களின் அபிப்பிராயங்களை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பினை இழந்துள்ளதுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில் தமது பிரச்சினைகளைச் சமர்ப்பிக்கும் வாய்ப்பினையும் இழந்துள்ளனர்.

உயர் மாடிக் கட்டிடத் தொகுதி 2014 ஆம் ஆண்டில் திறக்கப்பட்டதில் இருந்து தொகுதியின் பௌதிக நிலைமை துரிதமாகச் சீர்குலைந்து வருகின்றது. பொதுப் பிரதேசங்கள் அழுக்கடைந்து பேணப்படாமல் காணப்படுவதாகவும் வீடுகளின் சுவர்களில் வெடிப்புக்கள் தோன்றுவதாகவும் கட்டடிடங்களில் புறாக்கள் பெருகிக் காணப்படுவதாகவும் 12 மாடிகளைக் கொண்ட இத்தொகுதியின் மின்தூக்கிகள் செயலிழந்துள்ளமையினால் மக்கள் படிகளில் ஏறிச் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாகவும் குடியிருப்பாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். கடந்த சில வருடங்களில் குற்றச்செயல்கள், போதைப் பொருள் துஷ்பிரயோகம் மற்றும் போதைப் பொருள் விற்பனை ஆகியவை இப்பிரதேசத்தில் இடம்பெற்றுவருவதாகவும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அலுவலகம் ஒன்று சிறிசர உயனவில் அமைந்துள்ள போதிலும் நகர அபிவிருத்தி அதிகாரசபை போதிய முறையில் கட்டிடத்தினைப் பராமரிப்பதில்லை என்பதுடன் வசதிகளின் செயலிழப்புத் தொடர்பாக அல்லது உட்கட்டமைப்புப் பிரச்சினை தொடர்பாக முறைப்பாடுகள் செய்யப்படுகையில் அரிதாகவே நடவடிக்கை எடுப்பதாகவும் குடியிருப்பாளர்கள் முறைப்பாடு செய்கின்றனர்.

## References

Abeywickrama, U.G.P.C. 2015. "Human Settlement Strategy of Mahaweli Development Project", p222, First National Symposium on Real Estate Management and Valuation, 5th November 2015, University of Sri Jayawardenepura.

Agarwal, Bina. 1994. A Field of One's Own: Gender and Land Rights in South Asia. Cambridge: University of Cambridge.

Bastian, Sunil. 2009. "The politics of land reform and land settlement in Sri Lanka".

http://www.sunilbastian.com/content_images/1401161701Politics%20of%20Land%20Reform%20in%20Sri%20Lanka.pdf

Bhavani Fonseka & Mirak Raheem, "Land in the Northern Province: Post-War Politics, Policy and Practices," Centre for Policy Alternatives, December 2011.

Centre for Policy Alternatives. "Landlessness and Land Rights in Post-Tsunami Sri Lanka" (Colombo, 2005).

Chamikara, Sajeewa. "The government must stop pursuing destructive land policies that would affects millions", MONLAR (https://monlar.lk/landbankenglish.html)

Cittiralēkā, Mau, and Sarala Emmanuel. Penkalin Nilam: A Study on Women's Land Rights in the Post-Tsunami Resettlement Process in Batticaloa. Batticaloa: Suriya Women's Development Centre, 2010.

De Silva, Sarath Mathilal, 2016. "Legal and Policy Issues in the Alienation of State Land for Peasantry in Sri Lanka" (2nd National Symposium on Real Estate Management and Valuation, 2016 Research and Professional Development Center (EMV-RPDC), University of Sri Jayewardenepura, Sri Lanka.)

Divithure, H and C Tang (2013) Evolution of land registration and cadastral survey systems in Sri Lanka, Survey Review, 45:329, 126-135

Fonseka, Bhavani and Mirak Raheem. "Land in the Northern Province: Post-war politics, policy and practices." (Centre for Policy Alternatives, December 2011).

Goodhand, Jonathan. "Stabilising a victor's peace? Humanitarian action and reconstruction in eastern Sri Lanka" (Disasters: 2010, 34(S3): S342–S367).

Wickramasinghe, Kamanthi. 2016. "Deeds pertaining to property rights, gender inequality and discrimination", Daily Mirror Newspaper, 2nd November 2016. http://www.dailymirror.lk/article/Deeds-pertaining-to-property-rights-gender-inequality-and-discrimination-118537.html

Herath, Janaranjana. 2006. Distributional Impacts of Land Policies in Sri Lanka. Sri Lankan Agricultural Economics Association (SAEA) Movement for National Land and Agricultural Reform (MONLAR).

Herath, K. 2010. Reform of Law of State land (Proposals) – Law Relating to State Land 2010

Human Rights Watch. 2018. “Why can’t we go home?: Military occupation of land in Sri Lanka”.

International Crisis Group, “Sri Lanka’s North I: The Denial of Minority Rights.” Asia Report no. 219 – 16 March 2012: http://www.crisisgroup.org/en/regions/asia/south-asia/sri-lanka/219-sri-lankas-north-i-the-denial-of-minority-rights.aspx

International Crisis Group. 2012. “Sri Lanka’s North I: The Denial of Minority Rights” (Asia Report no. 219, 16 March 2012).

Jayawardena, Kishali Pinto and Jayantha de Almeida Guneratne. 2010. (ed), “Is Land Just for Men” Published by Law and Society Trust, September 2010.

Jayaweera, Swarna. 2002. “Fifty Years Since Political Independence: An Overview” in book titled Women in Post Independent Sri Lanka, Center for Women’s Research.

Perera, Yohan. 2012. Land is formally a devolved power, though not in practice: “PCs [Provincial Councils] likely to give land powers to Govt.”, Daily Mirror Newspaper, 1 February 2012.

Maddumabandara, C. M. (2000). Land Resources: Conditions and Trends. Natural Resources of Sri Lanka, National Science Foundation, 47/5 , Maitland Place, Colombo 7, Sri Lanka

Mapa, Ranjith & Kumaragamage, Darshani & WDL, Gunerathne & Dassanayake, A.R.. 2002. “Land use in Sri Lanka: past, present and the future”. Conference paper presented at the 17th World Congress of Soil Science, 14-21 August 2002 in Thailand organized by Land Development, Ministry of Agriculture and Cooperatives (LDD), The Soil and Fertilizer Society of Thailand (SFST), The International Union of Soil Science (IUSS).

Perera, Iromi, Deanne Uyangoda and Ermiza Tegal. 2017. The Making of a World Class City: Displacement and Land Acquisition in Colombo. Colombo: Centre for Policy Alternatives

Korf, Benedikt and K T Silva. “Poverty, Ethnicity and Conflict in Sri Lanka.” Staying Poor: Chronic Poverty and Development Policy, 7 to 9 April 2003, unpublished conference paper, University of Manchester.

Kulasinghe, K.V.P.P. 2015. “An Analysis of the Satisfaction Level of Resettled People: A Case at Mihindu Senpura Housing Program”, p236, First National Symposium On Real Estate Management and Valuation, 5th November 2015, University of Sri Jayawardenepura.

Pons-Vignon, N. and H. Solignac Lecomte (2004), "Land, Violent Conflict and Development", OECD Development Centre Working Papers, No. 233, OECD Publishing, Paris.

Law and Society Trust, Mahaweli Authority of Sri Lanka: Applicable Law. 2015

Lederach, John Paul. Building Peace: Sustainable Reconciliation in Divided Societies (Washington: United States Institute of Peace, 1997).

Lindberg, Jonas and Dhammika Herath. 2014. Land and grievances in post conflict Sri Lanka: exploring the role of corruption complaints, Third World Quarterly, 35:5 888-904.

Eager, Paige Whaley 2008: From Freedom Fighters to terrorists: women and political violence, Routledge, NY.

Paranage, Kavindra. 2018. The consequences of restricting rights to land:understanding the impact of state-land tenure policies in Sri Lanka, Sustainability: Science, Practice and Policy, 14:1, 46-54.

Paranage, Kavindra. 2018. "Constructing the 'legalities' of encroachments in dam, canal, and stream reservations in the north-central province of Sri Lanka", Development Studies Research, 5:1, p59-68.

Peebles, Patrick. 1990. Colonization and Ethnic Conflict in the Dry Zone of Sri Lanka, The Journal of Asian Studies, Vol. 49, No. 1 (Feb. 1990), pp. 30-55.

Samaraweera, Vijaya. 1981. Land, Labor, Capital and Sectional Interests in the National Politics of Sri Lanka. Modern Asian Studies, 15(1), 127-162.

Unruh, J., and R. C. Williams. 2013. Land: A foundation for peacebuilding. In Land and post-conflict peacebuilding, ed. J. Unruh and R. C. Williams. London: Earthscan.

வெளியீடு:

PARL
People's Alliance for Right to Land

காணி உரிமைக்கான மக்கள் கூட்டணி என்பது 2011 ம் ஆண்டு தொடக்கம் இலங்கையில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் வீடு, காணி, சொத்துரிமை தொடர்பாகவும் காணிக் கொள்ளையடிப்புக்கு எதிராகவும் ஒன்றிணைந்து செயற்படும் சிவில் அமைப்புக்கள் மற்றும் நபர்களின் சுயாதீனமான கூட்டாகும். அது ஒடுக்கப்பட்ட மக்களுக்கு தமது காணி, மீன்பிடிப் பிரதேசங்கள் உட்பட அவர்களது வீட்டுக்கான உரிமையை இல்லாதொழிப்பதற்கு எதிராக மற்றும் இடம் பெயர்ந்து வாழும் மக்களின் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கிச் செயற்படும் சுற்றாடல் அமைப்புக்கள் சமூக நீதி, மனித உரிமை தொடர்பாக செயற்படும் பெண்கள், சிறு உணவு உற்பத்தியாளர்கள், தோட்டத் தொழிலாலர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் என்பவற்றை மேடைக்கு அழைத்து வருகிறது

*facebook.com/parlsl*
*twitter.com/ParlSl*
*parlsl.com*